
# ஆத்ம நிவேதனம்



வெளியீடு
சாயி இல்லம், தாவடி.

[redacted]

(J. [illegible])


# ஆத்ம நிவேதனம்

வெளியீடு

"சாயி இல்லம்",

தாவடி.

01/06/2003



ஓம் ஸ்ரீ சாயிராம்

# முகவுரை

காலையிலே சூரியோதயக்காட்சி, மாலையிலே சூரியஸ்தமனம், இரவில் சந்திரனின் ஒளி சமுத்திர அலைகளின் மேல் தெறிக்கின்ற அழகு, ஜில்லென்று குளிரும் சிற்றருவி ஆறாக வடிவெடுத்து ஓடுகின்ற ஒழுங்கு, வயல் வெளியிலே வளர்ந்து வருகின்ற நெற்பயிரின் பச்சைப்பசேலென்ற காட்சி, அதைச் சூழவுள்ள பூந்தோட்டங்கள். அங்கே மலர்ந்துள்ள பூக்களின் அழகு, ஓர் பட்ட மரத்திலே குருவியொன்று தனது குஞ்சுகளுக்காக பொந்து ஒன்றை அமைக்கும் காட்சி, தோட்டங்களில் எடுக்கப்பட்ட காய்கனிகளை சுறுசுறுப்போடு சந்தைக்கு கொண்டு செல்கின்ற கமக்காரர்களுடைய முகங்களிலே காணப்படுகின்ற செந்தளிப்பு, கிடைத்த ஊதியத்தைக் கொண்டு கிராமத்திலே சிக்கனமாக வாழும் குடும்பத்திலே காணப்படுகின்ற சுதந்திர உணர்வு. இந்தக்காட்சிகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பவர், தன்னுள்ளும், இந்தக்காட்சிகளுள்ளும் இருந்து இயங்குகின்ற அந்த ஆதாரப்பொருள் எது? என்ற கேள்விக்கு, பஞ்சபூதங்களான ப்ருதிவி, அதிலும் சூட்சுமமான நீர், அதிலும் சூட்சுமமான அக்கினி, அதிலும் சூட்சுமமான காற்று, அதிலும் சூட்சுமத்தன்மையுள்ள ஆகாசம் ஆகிய பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்டதே நாமத்தையும் ரூபத்தையும் கொண்ட இந்தப் பிரபஞ்சம். ஆகவே ஆகாசத்திலும் சூட்சுமமான ஒன்று எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருந்து இயங்கவேண்டும். அது எது?

ஆலயங்களிலும் வழிபாட்டுஸ்தலங்களிலும் சென்று எமக்கெமக்குரிய இஷ்டதெய்வங் களை வணங்குகின்றோம். அந்த வழிபாட்டு வழிமுறை மகோற்சவ காலங்களில் உற்சவ மூர்த்தி வீதியுலா புறப்படுமுன் வசந்த மண்டபப்பூசை நடைபெறுகின்றது. தெய்வீக அதிர்வை உற்பவிக்கும் அட்சகரின் மந்திர உச்சாடனம், தியாகராஜரின் பஞ்சரத்தின கீர்த்தனைகளை லயமாக வாசிக்கும் நாதஸ்வர இசை உற்சவமூர்த்தி அலங்கரிக்கப்பட்டுள்ள கண்கொள்ளாக்காட்சி, வாசனைத்திரவியங்களின் நறுமணம், இவற்றினூடாக அங்கே வெளிப்படுகின்ற தெய்வீக அருள் வழிப்பட்டுக்கொண்டிருக்கின்ற பக்தரை மெய்சிலிர்க்க வைக்கிறது. அந்த நேரத்தில் உற்சவமூர்த்தியின் நாமத்தை உச்சரிக்க பக்திப்பரவசம், தன்னையும் அறியாமலே பக்தி மேலீட்டால், இந்தக்காட்சிகளுக்கப்பால் எங்கேயோ ஏதோ ஒன்றைத் தேடுகின்ற நோக்கு, பக்தரின் கண்களை மூடவைக்கிறது. கண்களைமூடியதும் பார்வை உள்முகமாகத்திரும்புகிறது.

இந்தப்பிரபஞ்ச இயக்கத்திற்கு எது ஆதாரமோ, அதுதான் தன்னுள்ளும் இருந்து இயங்குகின்றதென்ற தெளிவு பக்தருக்கு ஏற்படுகின்றது. அந்தத்தெளிவு மனித உருத்தாங்கி

அவதாரமாக வந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினுடைய அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ள வைக்கிறது.

நான் கடவுள்.
நான் கடவுளுக்கு வேறல்லன்.
நான் பாகுபடாத அகண்ட பரப்பிரம்மமான முழு முதலே.
நான் சத்சித் ஆனந்தம்.
கவலை பயம் அங்கலாய்ப்பு என்னைத் தீண்டமாட்டாது.
நான் என்றும் திருப்தியுள்ளவன்.
ஓம் தத் சத்.

என்ற அவதாரத்தினுடைய மகாமந்திரமான சொற்கள் பக்தரை தன்னை யார்? என்று தேடவைக்கிறது. 'இந்தத்தாகம்', குருவடிவம் தாங்கி ஆட்கொள்கிறது. இதன் பயனாக உயரிய சத்சங்கம் உருவாகிறது.

விடுதலை என்ற இலட்சியத்துக்கு தன்னை அர்ப்பணித்து, எண்ணம் சொல் செயல் ஒன்றுபட தானும் வாழ்ந்து, தனது குடும்பத்தினரையும் வாழ வழிநடத்தி, குடும்பம் குடும்பமாக பல சாதகர்களை சாதனைகளில் ஈடுபடுத்தி, பகவான் அவரது தர்மவாஹினியில் 'எந்த வீட்டில் கணவனும் மனைவியும் உயர்ந்த நோக்கங்களின் நிழலில் வாழ்கின்றார் களோ, எந்த இல்லத்தில் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு நற்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்களோ, சத்தியத்தைக்கடைப்பிடித்து, அன்பும் அருளும் கொண்டு சாந்தி நிறைந்தவர்களாய், தர்ம நூல்களைப்படித்து, புலன்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு, சகல உயிரினங்களிடத்தும், சமநோக்கோடு அன்பு செலுத்துகிறார்களோ, அந்தவீட்டில் லக்ஷ்மி வாசம் செய்வாள். அந்த இல்லம் அமரர் வாழும் உலகமாக இருக்கும்.' என்று கூறியிருப்பதற்கு அமைய குடும்பங்களை உருவாக்கி, உயர்ந்த சிந்தனையோடு எளிமையான வாழ்வு வாழ்ந்து உண்மையான பக்தனாக, உத்தம ஞானியாக வாழ்ந்து வந்தவர், சாயி ஞானசேகரம் ஐயா.

'ஒருமைப்பாடே தெய்வீகம்' என்ற பகவானது கூற்றுக்கு அமைய, எப்போ சரணாகதி ஏற்படுகிறதோ அப்போ தெய்வீகத்தினுடைய செயற்பாடு மேலோங்குகிறது. சுகமுனிவரால் பரீட்சித்துக்கு ஏழு நாட்கள் ஸ்ரீமத்பாகவதம் சப்தகமாக உபதேசிக்கப்பட்டதும், சிருஷ்ணபரமாத்மாவால் அரிச்சுனனுக்கு பகவத்கீதை உபதேசிக்கப்பட்டதும் பெரும் சான்றுகளாகும். விடுதலை அல்லது மோட்ஷம் என்ற இலட்சியத்தை இந்த ஆத்மநிவேதனம் (சரனாகதி) கூட்டிவைக்கிறது.

இன்று வெளியிடப்படுகின்ற இந்த **'ஆத்மநிவேதனம்'** என்ற புத்தகம் அவதாரத்தினதும், குருவினதும், குருகுலத்தினதும் மகிமைகளைத் தாங்கிநிற்கிறது. ஆத்மநாட்டம் மேலோங்கிய ஆத்ம நண்பர்கள், பிள்ளைகள், சாதகர்கள், கருவிகளாக இருந்து ஆத்ம அனுபவங்களை வழிநடத்தலுக்குரிய ஒழுங்கில் பரமாத்ம தத்துவம் அந்த, அந்தக்

கருவிகளின் ஊடாக வெளிப்படுத்தியிருக்கிறது. பகவானின் பெரும் கருணையோடு இந்தப்புத்தகத்திற்கு சாதகர்கள் பொருளுதவியளித்து, ஆக்கமும், ஊக்கமும், நல்கி உயர்ந்த ஆத்மசேவையாக இலவசமாகவே வெளியிடுகிறார்கள். இந்தப்புத்தகத்தை உங்கள் உங்களுடைய வீடுகளிலுள்ள வழிபாட்டறையில் வைத்து அதற்குரிய மதிப்பைக் கொடுத்து அந்த அறையிலேயே இருந்து இதில்பொதிந்துள்ள விடயங்களைப் படிப்பதனால் அவதாரத்தின் துணை எப்படி 'நாங்கள் தெய்வம்' [illegible] என்பதையும் இதிலே காட்டியுள்ள சாதனைகளைச் செய்து 'ஒன்றுதான் உள்ளது' என்ற ஒருமை உணர்வை அனுபவமாகவும் உணரலாம். இந்நூலில் சொல்லியுள்ள தேவையான வழிகாட்டி நூல்களையும் சாதனைக்குரிய பயிற்சிநெறிகளையும் **தாவடி சாயி இல்லத்திலும், சித்தன்கேணி சக்தி நிலையத்திலும்** பெற்றுக்கொள்ளலாம்.

அந்த அந்தக் காலங்களிலே சுவாமியின் அருளுரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட புத்தகங்களுக்கு ஐயா கொடுத்த முகவுரைகள் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த முகவுரைகள் அவதாரத்தைப்பற்றி நன்கு அறிந்துகொள்ள வழிகாட்டும் பாதைகளாகும். சாயி ஞா.குகஞானி அவர்கள் சாயி இல்ல சத்சங்கங்களில் ஐயா விடுதலைப்பட்ட காலம் தொட்டு 1995 ஐப்பசி மாதம் வரை ஒழுங்காகப் பங்குபற்றி 'கீதைப்பேருரைகள்', 'பிருந்தாவனத்தில் பாகவதம்' போன்ற சுவாமியின் ஆங்கில நூல்களை மொழிபெயர்த்து சத்சங்கமாக செய்தார். அவர் 1996இலிருந்து உயர்ந்த ஆத்ம ஈடேற்றத்திற்கு புறப்படும் வரை புட்டபத்தியில் தங்கியிருந்த காலங்களில் பல ஆங்கில தமிழ் நூல்களை திருமதி. குமாரயோகினி ரவீந்திரனின் பங்களிப்போடு சாயி இல்ல நூல்நிலையத்திற்கு அனுப்பிவந்தார். பூரணமாக ஆத்ம விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த அவரின் சேவை சாயி இல்ல சாதகர்களுக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் கிடைத்த பகவானின் பெரும் கருணையும் ஆசீர்வாதமும் ஆகும்.

அனுபவபூர்வமாக ஒருமைப்பாட்டை உணர்வதே உண்மையான சத்சங்கம். ஆத்ம தத்துவம் எல்லா ஜீவராசிகளுள்ளும் ஒன்றாக இருப்பதை உணர்ந்துகொள்ள மிகவும் அவசியம் சத்சங்கம்(ஆதாரம்:- பகவானின் சிவராத்திரி அருளுரை 2003) தமது கவலைகளை இல்லாமல் செய்வதுவும், சந்தோஷத்தை அனுபவிப்பதுவுமே ஒவ்வொருவருடைய விருப்பமாகவும் இருக்கவேண்டும். அதற்கு சத்சங்கம் மிக முக்கியமானது. மனிதன் தெய்வீக நிலைக்கு உயரவும் சத்சங்கம் மிகவும் அவசியமானது. உண்மையில் சத்சங்கம் இல்லாத வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். (அதாரம்:- சுவாமியின் ஆருளுரை 16.03.2003).

**சஜ்ஜன சங்கத்தில் பற்றுக்கள் நீங்கும்**
**பற்றுக்கள் நீங்க மோஹம் அகலும்**
**மோஹம் அகல சாந்தி நிலவும்**
**சாந்தி நிலவ விடுதலை உறுதியே.**
**(ஸ்ரீ சங்கராச்சாரியார்)**


ஜெய் சாயிராம்

**'சாயி இல்லம்'**

ஓம் சாயி சாயிராம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1) உத்தமஞானி உயர் திரு. ஞானசேகரம் ஐயாவின் வாழ்க்கை வரலாறு | 01-14 |
| 2) "நல்லசேகரம்" ஆனார் ஞானசேகரம் -சிவயோகசுவாமிகளின் பட்டமளிப்பு | 15-22 |
| 3) ஸ்ரீ ஞானசேகரம் அவர்கள் | 23-27 |
| 4) சரியை, கிரியை, யோகம், ஞானம் | 28-30 |
| 5) திரு.ஞானசேகரம் குகஞானி அவர்கள் 01.06.1993அன்று சாயி இல்லத்தில் நிகழ்த்திய சத்சங்க உரை | 31-35 |
| 6) எங்களை எங்களுக்கு அறிவித்தான் | 36-40 |
| 7) என் வாழ்வில் குருஜி ஸ்ரீ சாயி ஞானசேகரம் ஐயா | 41-43 |
| 8) "சத்தியம்" சற்குரு சாயி ஞானசேகரம் ஐயா வடிவில் வழிகாட்ட வந்தது | 44-46 |
| 9) ஸ்ரீ ஞானசேகரம் ஐயாவினால் எழுதப்பட்ட முகவுரைகள் மற்றும் சத்சங்கம், ஓங்கார சாதனை விளக்கங்கள் | 47-70 |
| 10) யார் இந்த ஐயா? | 71-75 |
| 11) ஓர் அன்னையின் கடிதம் | 76 |
| 12) நல்ல மருந்து ஞானசேகரம் ஐயா | 77-80 |
| 13) என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன் | 81-85 |
| 14) 06-04-2003 ஞாயிற்றுக்கிழமை சாயி இல்லத்தில் நடைபெற்ற சத்சங்கம் | 86-92 |
| 15) திரு.ஞானசேகரம் ஐயா அவர்களின் ஆன்மீக போதனை | 93-100 |
| 16) சாதனை, போதனை, அனுபூதி என்பன ஆத்ம இலட்சியத்திற்கான படிகள் ஆகும் | 101-104 |
| 17) குரு மகிமை | 105-109 |
| 18) தெய்வீகம் மிளிர சத்சங்கம் சாதனா | 110-113 |
| 19) காயத்திரி மந்திரம் | 114-117 |
| 20) ஆத்ம சாதனைகளினூடாக மேன்மையான இறப்பை சந்தித்தவர்கள் வரிசையில்... | 118-121 |
| 21) ஸ்ரீ ஞானசேகரம் ஐயா அவர்கள் எழுதிவந்த தினசரி நாட்குறிப்பிலிருந்து (Diary) எடுக்கப்பட்ட சில முக்கியமான அனுபவங்கள் | 122-123 |



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தமது பிரேம வாஹினி என்ற நூலில் (பக்கம் 71) கூறியிருக்கிறார்.

"பவசாகரம் என்னும் நோயைக் குணப்படுத்தவும், சிகிச்சையளிக்கவும் பக்திமிக்க சாதுக்களின் ஆச்சிரமங்களை அமைப்பின் அறியாமை, அசத்தியம், ஒழுக்கவீனம், தற்புகழ் என்னும் நோய்களிலிருந்து மக்களைக் குணப்படுத்தலாம்" இதை நடைமுறையில் அனுபவமாக்கியவர் ஸ்ரீ ஞானசேகரம் ஐயா.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# உத்தம ஞானி
# உயர் திரு. ஞானசேகரம் ஐயாவின் வாழ்க்கை வரலாறு

திருவாளர் செல்லத்துரை ஞானசேகரம் எனும் மகானின் வரலாறு மிகவும் அற்புதமானது.

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மயில்வாகனம் செல்லத்துரைக்கும் கிழக்குக் கொக்குவில் தலையாழியைச் சேர்ந்த நாகரத்தினத்திற்கும் மூத்த புதல்வராகப் பிறந்தவரே திருவாளர் ஞானசேகரம் ஆவார்.

திருவாளர் ஞானசேகரத்தின் தந்தையார் மயில்வாகனம் செல்லத்துரை. இவரை M.S. துரை என செல்லமாக அழைப்பர். செல்லத்துரை மயில்வாகனத்தின் தந்தை சோமசுந்தரம்பிள்ளை. திருவாளர் சோமசுந்தரம்பிள்ளை சுங்கவரி இலாகாவில் "கலக்டர்" உத்தியோகத்தில் இருந்தார். சோமசுந்தரம்பிள்ளை வானசாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். திருவாளர் மயில்வாகனம் செல்லத்துரை சோதிடக் கலையில் துறைதேர்ந்த நிபுணராக இருந்தார். இவர் வண்ணார்பண்ணையில் ஒரு புத்தக சாலையையும், ஒரு மின்சார உபகரணக் கடையையும் வைத்திருந்தார்.

திருவாளர் M.S. துரை கம்பீரமான தோற்றத்தையுடையவர். நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையும், செல்வத்தின் மிடுக்கும் சிங்காரிப்பதில் விருப்பும் உடையவர். ஊர் மக்களிடையே உயர்ந்த மதிப்பையும் பெற்று விளங்கினார். நாள்தோறும் குதிரை வண்டியில் தன் சக நண்பர்களை நாடிச் செல்வார். இத்தகைய திருவாளர் மயில்வாகனம் செல்லத்துரைக்குக் கடையிற்சுவாமிகளுடைய அருள்கிட்டியது. ஒரு நாள் கடையிற் சுவாமிகள் M.S. துரையின் வீட்டு வாயிலில் நின்று M.S. துரைக்கு ஒரு இறைச்சித்துண்டை உவந்து அளித்தார். அதன் பின்னர் முதற் குழந்தை திருவாளர் ஞானசேகரம் பிறந்தார்.

1918ம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் திகதி சதய நட்சத்திரத்திலே துலா ராசியில் M.S. துரை தம்பதியினருக்கு அரும்புத்ல்வ னாக திருவாளர் ஞானசேகரம் பிறந்தார். குழந்தைக்கு தாய் தந்தை சூட்ட விரும்பிய நாமம் சோமசுந்தரம் ஆகும். ஆனால் அக்காலத்தில் இணுவில் வைத்திய சாலையில் கிறிஸ்தவப் பெயர்களை அவ் வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகள் அனைத்திற்கும் வைக்கும் வழக்கம் இருந்தது. அதன்படி குழந்தைக்கு ஞானசேகரம் என்ற பெயரை வைத்திய சாலையினர் வைத்தனர். அதன் பின்னர் பாலசுப்பிரமணியம், அருட்பிரகாசம் ஞானாம்பிகை எனும் குழந்தைகள் M.S. துரை தம்பதியினருக்குக் குழந்தைகளாக வந்துதித்தனர்.

திருவாளர் ஞானசேகரத்தின் பிள்ளைப் பருவம் மிகவும் பக்திமயமானது. நான்கு, ஐந்துவயதுப் பாலகனாக இருந்த

போது அவரது மாமனார் ஞானசேகரத்தின் கையில் தீப்பந்தத்தைக் கொடுத்து, குழந்தையை தன் தோளில் சுமந்தவாறு அதிகாலை பூசைக்கு நல்லூர்க்கந்தனிடம் நாள்தோறும் செல்வார். நல்லூர்கந்தனின் நாளாந்த தரிசனம் முருகனை இஷ்டதெய்வ மாக்கியது. குழந்தை ஞானசேகரம் தனது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும், பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். "மெற்றிக் குலேஷன்" வரை தனது கல்வியைக் கற்று செல்வன் ஞானசேகரம் 17வது வயதில் கச்சேரியில் Fiscals office இல் எழுதுவினையராக உத்தியோகத்தில் அமர்ந்தார். அவரது முதலாவது இளைய சகோதரர் பாலசுப்பிரமணியம் இலங்கை மின்சாரசபையில் உத்தியோகத்தில் இருந்தார். தம்பி அருட்பிரகாசம் இலங்கை துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றினார். இரண்டாவது இளைய அருட்பிரகாசம் ஜோதிட சாஸ்திர நிபுணரும் கூட. தங்கை ஞானாம்பிகை நவாலியைச் சேர்ந்த அப்போதிக்கரி மயில்வாகனத்தை மணஞ் செய்தார்.

சிறுவயதில் புலாலுண்ணலை மறுத்தார். செல்வன் ஞானசேகரம், யாவரும் அந்நிய நாகரிகத்தை ஏற்று மாறிவரும் காலத்தில் இவர் வேட்டியும் நீளக்கை நஷனலும், சால்வையும் அணிந்து தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணிப் போற்றி வந்தார். தந்தை M.S. துரை தன் பிள்ளைகளின் சீரான சிறப்பான வாழ்க்கைக்கு வித்திட்டார். தம்பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும், சகல வசதிகளையும் அளித்து சமய கலாசார விழுமியங்களை பின்பற்ற வழிகாட்டியவர் M.S. துரையவர்களே.

திருவாளர் ஞானசேகரத்தின் இளமைப் பருவம் சுவாரசியமானது. சிறுவனாக இருந்த ஞானசேகரம் 5' 8"க்கு என்ற உயரமும், மெல்லிய தேகமும் கொண்ட இளைஞனாக உருப்பெற்றார். அகன்ற நெற்றியும், கரிய நீண்ட கூர்மையான, சாந்தமான கண்களும், எடுப்பான நீண்ட நாசியும், தேஜசும் கூடிய அழகிய முகமும், நீண்ட கழுத்தும், முழங்கால்வரை நீண்ட கைகளும், நீண்ட கால்களும் கொண்ட ஆஜானுபாகுவான தோற்றத்துடன் திகழ்ந் தார். அவருடைய சுயநலமற்ற ஈரவிழிக ளும், ஞான ஒளிவீசும் நீறுபூசிய நெற்றியும், சிறிது முகஞ்சாய்த்து முன்முறுவல் செய்யும் அழகும், நிமிர்ந்த மிடுக்கான நடையும் பார்ப்பவர்கள், பழகுபவர்கள் யாவரையும் கவர்ந்தது. இத்தகைய ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட இளைஞன் ஞானசேகரம், தானே பேணி வளர்த்துக் கொண்ட நற்குண நல்லியல்புகளாலும், இலட்சியமாகக்கொண்ட நல்ல ஆன்மீக விழுமியங்களாலும் எல்லோர் மனிதிலும் மிக உன்னத இடத்தை வகித்து வந்தார்.

இளைஞன் ஞானசேகரம் முத்தமிழி லும் மிகுந்த ஈடுபாடுடையவர். யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் சிவதாண்டவ மாடினார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாடகங்களில் நடித்துத் தன் திறமையை வெளிப்படுத்தினார். இசையிலும் நடனத்திலும் முறைசார்ந்த கல்வி கற்காமலே கேள்வி ஞானத்தால் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். இசையிலும் நடனத்திலும் ஆன்மீக சுகத்தையும் அனுபவித்து அதனால் அவற்றில் மிகுந்த ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டார். நடனத் துறையைப் பொறுத்தவரை தானும் சிவனைப்போல் நடனமாட விரும்பினார். 23, 24 வயதில் இந்தியா சென்று நாட்டியமேதை வழுவூர் இராமையா பிள்ளையிடம் நடன அறிவையும், நல்ல நட்பையும் பெற்று வந்தார். கதகளி, பரதம் ஆகியவற்றைக் கற்றும் பயிற்றுவித்தும் வந்தார். கொக்குவில் இந்துக்கல்லூரியில்

நடனத்தை பயிற்றுவித்தார். பல்வேறு நடன நிகழ்ச்சிகளை அக்காலத்தில் தானே நட்டுவாங்கம் செய்து அரங்கேற்றினார். சிறப்பான நடனத்திற்காக ஒருமுறை நீலக்கல் பதித்த தங்கமோதிரத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார். இவ்வேளையில் W.M. குமாரசாமி என்னும் பெரியவரின் நட்பும் கிடைத்தது. அவர் தனது நண்பனைப் போல இளைஞன் ஞானசேகரத்தை நடத்தினார். கலையார்வம் மிக்க இவ்விருவரும் கலையை பொருளாகக் கொண்டு அளவளாவி தம் நட்பை வளர்த்துக் கொண்டனர்.

திருவாளர் W.M. குமாரசாமியின் கடைசி மகள் திரிபுரசுந்தரிக்கு நாட்டியக் கலையை முதன் முதலில் கற்றுக் கொடுத்தவர் இளைஞன் ஞானசேகரம் ஆவார். இன்று அவர்கள் திருமதி. திரிபுரசுந்தரி யோகானந்தம் எனும் பிரபல நடன ஆசிரியை. அவரின் புதல்விகளும் அவ்வாறே பிரபல நடன ஆசிரியைகளாகத் திகழ்கின்றனர்.

இளைஞன் ஞானசேகரம் 28 வயதை அடைந்தார். வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டி பரம்பரையைச் சேர்ந்த பொறியியலாளர் செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வி ராஜலஷ்மியை மணஞ் செய்தார். W.M. குமாரசாமி திருவாளர் ஞானசேகரத்தின் மேற்கொண்ட அன்பின் மேலீட்டால் திருவாளர் ஞானசேகரத்தின் திருமண எழுத்தைத் தனது வீட்டிலேயே வைத்தார்.

திரு. திருமதி. ஞானசேகரத்தின் வாழ்க்கை யாழ்ப்பாணம் கலட்டியில் ஆரம்பமானது. திருமணமாகிய இளைஞன் ஞானசேகரம் ஆறு குழந்தைகட்குத் தந்தையானார். மூத்த புதல்வன் 1947ல் பிறந்தார். இவர் பிறப்பதற்கு முன் ஒரு நாகபாம்பு நாகரத்தினங்களைத் தன் முன் உமிழ்ந்ததாக இளைஞன் ஞானசேகரம் கனவு கண்டார். தனது மூத்த புதல்வன் இரத்தினத்திற்குச் சமமானவன் ஆக வருவான் என எண்ணி மகிழ்ந்தார். கந்தனது பக்தனாகையால் கந்தத்தியானி என புதல்வனுக்குப் பெயரிட விழைந்தார். பின்னர் ஒரு ஞானியின் பெயர் மனதிலெழவே "கந்தஞானி" எனத் தன் மூத்த மகனிற்குப் பெயரிட்டார். அடுத்து 1948ல் ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பனானார். அதற்கு முருகனின் ஆறு அட்சரங்களையும் ஞாபகப்படுத்தும் வகையில் "சடாட்சர யோகினி" எனப் பெயரிட்டார்.

இப்படி இருக்கும் வேளையில் இறைவன் செயலால் ஞானசேகரம் குடும்பத்தினர் இந்தியா செல்ல அரும் வாய்ப்பு ஏற்பட்டது. அன்பர் ஒருவர் தாமே இவர்களை அழைத்துச் சென்று பழனிமுதல் ஆறுபடை வீடுகட்கும் அழைத்துச் சென்றார். அதன் பின் பிறந்த ஆண்மகவிற்கு குகத்தியானி என பெயரிட விரும்பி "குகஞானி" என்ற அருமையான நாமத்தை சூட்டினார். தந்தை திருவாளர் ஞானசேகரம்.

கடையிற் சுவாமியின் அருளால் அவதரித்த திருவாளர் ஞானசேகரத்திற்கு ஆன்மீக நாட்டம் என்பது இயல்பானது. இவ்வியல்பான ஆன்ம விசாரமுள்ள அவ்விளம்ஞானி, அக்காலத்தில் சிறுவயதிலிருந்தே எம்மதமும் சம்மதம் எனும் நோக்கோடு வாழ்ந்தார். யாழ்ப்பாணத்தில் வசித்த "குருபாபா" எனும் சுவாமிகளை தரிசித்தார். இரத்மலானையில் தாழையான் சுவாமி எனும் இஸ்லாம் சுவாமியை தரிசித்தார். கிறிஸ்தவ பாதிரிமார்களின் நட்புமுண்டு. புத்தசமயம் பற்றி சிங்கள நண்பர்களுடன் அளவளாவி புத்தரை போற்றுவார்.

1950களில் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் மேல் கொண்ட அபரிமிதமான பக்தியின் காரணமாக சுவாமியின் வீட்டிற்கு அயல்வீட்டை தான் வசிக்கும் வீடாக எடுத்து வசித்தார். மனைவி மீண்டும் கர்ப்பவதியானாள். தாங்கொணாத வாந்தியினால் அல்லலுற்றாள். யோகரைத் தஞ்சமுற்றார். அடியவளுக்கு சிவயோகசுவாமிகள் பெரிய மாதுளம் பழத்தை உண்ணும்படி உவந்தளித்தார். இன்னல் கொடுத்த வாந்தியும் அத்துடன் நின்று சுகமடைந்தார். அதன் பின் 1951ல் ஒரு பெண்மகவிற்குத் தந்தையானார். பாலமுருகனின் உருவை நினைத்து அம்மகவிற்கு பாலயோகினி என்ற பெயரை சூட்டினார். பின்னர் பிறந்த மகளிற்கு குமாரயோகினி எனப் பெயரிட்டார்.

1955ல் கொழும்பில் மட்டக்குளியில் வசித்து வந்தார். அப்போது இரத்மலானையில் காணி வாங்கி வீடு கட்டினார். தனது தங்கை ஞானாம்பிகைக்கும் அயலில் அதேபோல் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்தார். 1956ல் வீடு குடிபுகுந்தனர். கடைசி மகள் பிறந்தாள். அம்மகளுக்கு "சண்முகயோகினி" எனப் பெயரிட்டார். 1957வரை இரத்மலானையில் பல சமூக முன்னேற்றங்களைச் செய்தார். அப்போது இந்து அவை (Hindu Board) உறுப்பினர்களுடன் சேர்ந்து இரத்மலானையில் ஒரு பாடசாலையை நிர்மாணித்தார். தளபாடம் தேடுதல் முதற்கொண்டு ஆசிரியர் நியமனங்கள் செய்வதற்கு மிகவும் அரும்பாடுபட்டார். அவ்வேளை தமது பிள்ளைகளையும் அப்பாடசாலைக்கே அனுப்பினார். 1957ல் இனக்கலவரம் வெடித்தது. அப்போது அங்கு வாழ்ந்த தமிழர்களை எல்லாம் ஓடி ஓடி ஒன்று திரட்டி முள்ளுவேலிகள் பாய்ந்து இரத்தமலானை விமான நிலையத்திற்கு குடும்பங்களுடன் வந்து விமானத்திலேற்றி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். பின்னர் சில காலம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி திருகோணமலைக்கு மாற்றலாகி அங்கு வசித்தார். 1960ம் ஆண்டிலிருந்து 1968ம் ஆண்டுவரை திருகோணமலையில் இருந்தார். அங்கிருந்து பொலநறுவை, கொழும்பு போன்ற இடங்களில் சில காலம் வேலை செய்தார்.

திருகோணமலை என்னும் புண்ணிய பூமியில் பல உன்னத ஆன்மீகத் தொடர்புகள் ஏற்பட்டன. உலகப் பிரசித்தி பெற்ற சுவாமி சச்சிதானந்தயோகி போன்றவர்கள் திருவாளர் ஞானசேகரத்தின் வீட்டில் வந்து விருந்துண்டு ஆன்ம விடயங்களை உரையாடிச் செல்வதுண்டு. திருகோணமலையில் என்றும் விருந்தினர்களோ, உறவினர்களோ, சிவனடியார்களோ விருந்திற்கு வந்தபடி இருப்பார்கள். திரு. திருமதி. ஞானசேகரம் குடும்பம் அவர்களை எல்லாம் இன்முகத்துடன் வரவேற்று இனிதே விருந்தளித்து மகிழ்வுறுவர். எங்காவது சிவனடியார் வந்தாலும் அவர், திருவாளர் ஞானசேகரத்தின் விருந்துணவு உண்ணாது சென்றதில்லை. இதனால் திருவாளர் ஞானசேகரம் "ஐயா" என அன்புடன் அழைக்கப்படலானார்.

ஐயாவிற்கு இசை, நடனத்துறையில் இருந்த நாட்டத்தை உணர்ந்து நாட்டிய, இசை மேதைகளும் அவரது இல்லத்தில் தங்கி தமது அரங்கேற்றங்களை நிகழ்ச்சிகளை மேடையேற்றினர். இவ்வாறு குமாரி பத்மினி, வைஜயந்திமாலா, வழுவூர் இராமையாபிள்ளை போன்றவர்களைப் போஷித்து அவர்கட்காக திருகோணமலை முற்றவெளியில் நகரமண்டபத்திற்கு முன்பாக ஒரு சீமேந்தாலான மேடை அமைத்துக் கொடுத்தார் ஐயா. ஈழத்து இசை வேந்தர் சண்முகரத்தினமும் அவரது

புதல்வர்களும் தங்கி நின்று இசைக்கச்சேரி நடத்த வழிவகுத்தார். திருவாளர் சண்முக ரத்தினம் திருவாளர் ஞானசேகரத்தின் இரு புதல்விகளுக்கு யோகர்சுவாமியின் பாடல் களைப் பாடி கற்பித்து தன் அன்பை பரிமாறினார். சுவாமிநாத தம்பிரான் என்றழைக்கப்பட்ட மணிஐயர் எனும் தோழன் வரவே அவருக்கும் தன் வீட்டில் ஒரு அறை தனியாகக் கொடுத்து தங்கவைத்து அரும்பணியாற்றினார் ஐயா.

திருகோணமலையில் இருந்த காலத்தில் தினந்தோறும் திருக்கோணேச் சரம் செல்வது ஐயாவின் ஆன்மீக செயற்பாடாகும். நாற்பத்தேழு வயதேயான அவரை ஐயா, அண்ணை என வயதிற்கும் மூத்தவரும் அழைக்கும் பெருமைக்குரி யவராக இருந்தார். நாளாந்தம் மலரும் ரோஜா நிறமுடைய றோஜாவைப் பறித்து தன் கையால் சந்தனக்கட்டையால் அரைத்து மனங்கமிழ் சந்தணத்தை வாழையிலையில் மடித்து தனது நஷனல் பையில் வைத்து நடந்து மலையேறி கோணேஸ்வரரை வழிபடுவார் ஐயா. நாள் தோறும் வழியில் இருக்கும் பத்திரகாளியை தரிசிப்பார். கடைசி மகளையும் கூட்டிச் சென்று மலையில் உள்ள அம்மனின் முன் பலமணிநேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பார் இப்படி பல வருடங்கள் தியான சாதனையில் ஈடுபட்டிருந்தார். இதுமட்டுமன்றி திவ்யஜீவன சங்கம், சிவயோகசமாஜம் என்னும் ஆன்மீக நிகழ்வுகள் நடாத்தப்பெறும் இடங்களுக்கும் செல்வார். வேலை ஸ்தலத்திலும் யாவராலும் "அண்ணன்" என்றும் "ஐயா" எனவும் அழைக்கப்பட்டார். ஒழுக்கம், நல்ல விழுமியங்கள், ஆன்மீகம் இவைகளையே தான் சந்திப்பவர்களுடன் ஐயா கதைக்கும் விடயமாகும். குடும்பத்தினரை, நல்ல கடவுள் பற்றிய திரைப்படங்களுக்கு மட்டுமே கூட்டிச் செல்வார். பெண்களை பரி.மேரி கல்லூரியிலும் ஆண்பிள்ளைகளை திருமலை இந்துக்கல்லூரியிலும் படிப்பித் தார். திருகோணமலையில் இன்னர் ஹாபர் லேனில் வசித்து வந்தார். அவ்வேளை 1966ம் ஆண்டு கடும்புயல் வீசியது. கடல் கொந்தளித்தது. பெரும் அலைகள் "ஓ" வென்ற இரைச்சலுடன் தெருவிலே நீரை அள்ளிக் கொட்டின. காற்றும் மழையும் பலத்தன. ஊழிக்காலம் போல் புயல் வீசலாயிற்று. மரங்கள் முறிந்தன, வேருடன் சாய்ந்தன. வீட்டுக் கூரைகள் உடைந்தன, தகரக் கூரைகள் பறந்தன, வீட்டிற்குள் வெள்ளம் புகுந்தது. குடும்பத்தினர் ஒன்றாக வரவேற்பறையில் கூடினர். "உலகம் அழியப்போகுதா" என குழந்தைகள் ஐயாவை கேட்டனர். ஞானசேகரம் ஐயாவும் மூத்த மகனும் சிவபுராணம் பாட ஆரம்பித்தனர். "பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்று சிவபுராணம் முடிக்கும் போது ஐயாவினதும் ஏனையோரது குரல்களும் கேட்டது. மழை தூமித்துக் கொண்டு இருந்தது. ஆம்! புயலடங்கி கடலலையின் ஓசை மட்டுமே கேட்டது.

1966ஐ ஐயா தனது வாழ்க்கையில் மிகமுக்கியமான ஆண்டு எனக் கூறுவார். அவரது காட்டுக்கந்தோர் நண்பர்கள் அவருக்கு தியானம் செய்வதற்கென ஒரு நீண்ட வேப்பங் கட்டில் போன்ற வாங்கை தனி வேம்பினாற் செய்து பரிசாக அளித்தனர். அதே ஆண்டு திருப்புகள் சுவாமிகள் திருமலையில் ஐயா வீட்டில் தங்கினார். குடும்பமாக கூட்டுப்பிரார்த்தனை செய்யும் வழியை சுவாமிகள் காட்டிக் கொடுத்தார். ஒரு கிழமை வரை அவர் தங்கினார். அன்பர்கள் அளித்த வேப்பம் வாங்கை சுவாமிகள் இருப்பதற்கும், தியானிப்பதற்கும், சயனிப்பதற்கும் ஐயா உவந்தளித்தார். 1965, 1966ஆம் ஆண்டுகளில் பகவான் ஸ்ரீ சத்ய பாபாவின்

படம் வைத்து பிரசாதம் படைத்து வழிபட உந்துதல் அளித்தார் ஐயாவின் மூத்த புதல்வன் கந்தஞானி.

திருகோணமலையில் 1967, 1968ம் ஆண்டுகளில் இன்னொரு காட்டுக்கந்தோர் குவாட்டர்ஸ் இல் வாடகைக்கு இருந்தனர் ஞானசேகரம் குடும்பத்தினர். அவ்வேளை கந்தஞானி "அக்வைனாஸில்" பயின்று கொண்டிருந்தார். குகஞானி கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றுக் கொண்டி ருந்தார். திருமலையில் வீட்டில் பஜனை நடக்கும். அப்போது மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய திருவாளர் சிவஞானம் ஐயா (தற்போது அகில இலங்கை சத்யசாயி சேவா சங்க இணைப்பாளர்) அவரது மருமகன் D.R.O. சிவதாசன், சேவையராக இருந்த வே. சிவஞானம், திருகோணமலையைச் சேர்ந்த திருவாளர் குலவீரசிங்கம் தம்பதியினர் போன்றோர் ஐயாவின் வீட்டில் நடைபெறும் இல்ல பஜனையில் வியாழன் தோறும் வந்து கலந்து கொண்டு செல்வார்கள். திருவாளர் வே. சிவஞானம் தனது வீட்டிலும் இல்ல பஜனை செய்வதுண்டு. இத்தகைய சூழலில் 1966ல் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் நாற்பதாவது பிறந்ததின விழா திருமலை யில் திருவாளர் ஞானசேகரம் ஐயாவின் வீட்டில் பெரும் எடுப்புடன் சிறப்பாக நடைபெற்றது. காலையில் பஜனையுடன் ஆரம்பித்து மதிய உணவும் அடியார்கட்கு வழங்கப்பட்டது. வந்த அனைத்து அடியார்களுக்கும் பூந்திலட்டும் அளித்து மகிழ்வித்து அனுப்பினார் ஐயா.

எழில்மிகு இயற்கைக் கோலங்களைக் கொண்ட திருமலையில் ஞானசேகரம் ஐயா கோயில் வழிபாடு, தியானம், ஜபம், பஜனையில் ஆன்மீக குழாமுடன் அளவளாவுதல் போன்ற ஆன்மீக வாழ்க்கையில் நன்கு ஈடுபட்டு இருந்தார். அக்காலத்தில் துரைராஜன் என அழைக் கப்படும் யோகசுவாமிகளின் பக்தன் ஐயாவுடன் வந்து அடிக்கடி தன் அனுபவங்களை பரிமாறுவார். திருவாளர் துரைராஜன் சிவயோக சுவாமிகளுடன் பல்லாண்டு காலம் ஒன்றாக இருந்து ஆன்ம ஈடுபாடு உள்ளவர். அதே போல் திருவாளர் கணபதிப்பிள்ளை எனும் உத்தியோகத்தர் ஐயாவின் குடும்பத்தினரின் படப்பிடிப்பாளர் இன்னும் இவர்கள் போன்ற பலர் ஐயாவின் உற்ற நண்பர்களாக இருந்தனர்.

1969ல் திருமலையிலிருந்து கொழும்புக்கு வேலை மாற்றம் கிடைத்தது. தெகிவளை யில் குடும்பத்தினருடன் தங்கி இருந்தார். அங்கும் அவரது ஆன்மீக நாட்டத்திற்கான இராமகிருஷ்ண மிஷன், சத்யசாயி நிலையம், சிந்தி கம்யூனிட்டி சென்ரர் போன்ற ஆன்மீக ஸ்தாபனங்கள் விளங்கின. பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகை தந்து ஆன்மீக உரைகள் நிகழ்த்துவர். அவற்றை எல்லாம் ஐயா தன் பிள்ளை களுடன் சென்று கேட்பார். வீட்டில் தவறாது பஜனை நடைபெறும். தனது அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி இலக்கியங்களை வாசிப் பதிலும் ஏனைய சமய நூல்களை வாசிப் பதிலும் ஈடுபட்டிருந்தார். அக்காலத்தில் மூத்த புதல்வன் வாழைச்சேனைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உத்தியோகம் பெற்றார்.

1975ல் தனது சொந்தவீடான இரத்மலானையில் குடும்பத்தினருடன் குடியிருந்தார். இரண்டாவது மகன் ஹட்டன் நஷனல் வங்கியில் வேலை பார்த்தார். மூன்றாவது மகளும் உத்தியோகத்தில் இணைந்தார். இரண்டாவது மகள் பாலயோகினி கெலனியா வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ், ஆங்கில சிறப்பு பட்டப்பிடிப்பு படித்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் சிந்தி கம்யூனிட்டி சென்ரரில்

திரு. கந்தசாமி, திரு. இரத்தினவடிவேல் போன்றவர்கள் சிவஹோமங்கள் செய்வதுண்டு. ஐயா சிவஹோமத்தை 41 நாட்கள் தொடர்ந்து செய்வதுமுண்டு.

அன்று 1977ம் ஆண்டு மதியம் 11.30 மணி இருக்கும். இரத்மலானை வீட்டில் சிவஹோமம் நடந்து கொண்டிருந்தது. அப்போ இரத்மலானையில் இனக்கலவரம் வெடிக்கலாயிற்று. கண்ணாடிகள் நொருங்கும் சத்தம் கேட்டது. ஆனால் எவ்வித மனச்சலனமும் இன்றி இறைவன் சித்தத்தால் ஐயாவும் அவரது குடும்பத்தினரும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

1977ல் திருநெல்வேலியில் தனது மனைவி மூத்தமகள், கடைசிமகள் ஆகியோருடன் வசித்தார். 1978ல் கடைசி மகள் யாழ் பல்பலைக்கழக கலைமானி பட்டப்படிப்பிற்கு அனுமதி பெற்றார். 1979ல் மூத்த மகளுக்கு திருமணம் நடைபெற்றது. 1977ல் இருந்து திருநெல்வேலியில் சிறு கட்டடத்தில் இயங்கி வந்த சத்தியசாயி நிலையத்தில் தனது நேரத்தின் பெரும் பங்கை ஐயா செலவிட்டார். அப்போதுதான் பெரிய சமித்தி கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. திருவாளர் சிவஞானம் ஐயா, திருவாளர் சபாரட்ணம், புரொக்டர் சிவசுப்பிரமணியம்,திருவாளர் விஜயரட்ணம், பல்வைத்தியர் முத்துக்குமாரசுவாமி, கந்தசாமி ஐயா போன்ற பெரியவர்கள் மிக ஆர்வமாக பணியாற்றினார்கள். எல்லாவற்றிலும் ஐயா சமித்தியின் மேடை அமைப்பில் மிகச்சிறந்த கவனம் செலுத்தினார். கட்டடத்தின் பக்கச் சுவர்களுக்கு ஓங்கார வடிவில் “கிறில்” பொருத்தும் படி ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் ஆரம்பித்த சாயிசேவா செயற்பாடுகளை இங்கும் தொடர்ந்தார். அப்போ திரு. சிவஞானம் ஐயா சத்திய சாயி சேவா இணைப்பாளர். சபாரட்ணம் வீட்டில் சத்சங்கம் நடைபெற்று வந்தது. அதில் பலர் கலந்து கொள்வர். ஐயாவின் அரியசத்சங்கத்திற்காக பலரும் காத்திருப்பர். சத்சங்கத்தில் பங்கு பற்றுபவர்களுக்கும் ஏனையயோருக்கும் ஐயா வழிகாட்டியாக இருந்தார். சாயி நடவடிக்கைகளை சீர் செய்து வந்தார். சமித்திக் கட்டடம் பூர்த்தியானதும் பல அரிய வாசகங்களை தொங்கவிட ஆலோசனை வழங்கினார். இன்று சமித்தி மண்டபத்தில் இருபுறமும் ஆங்கிலத்திலும், தமிழிலும் பகவானின் வாசகங்களான “ஒன்றே குலம் அது மனிதகுலம்” போன்ற அரிய வாசகங்கள் காணப்படுகின்றன. ஐயா தனது தினக்குறிப்பில் பதித்துவைத்த பகவானின் வாசகங்களுள் ஒரு சிலவே அவை.

திருநெல்வேலி சமித்தி ஆரம்பித்த காலத்தில் இருந்து பல ஆண்டுகளாக பாலவிகாஷ் பிரதம குருவாக விளங்கினார். 1981ல் புட்டபத்திக்கு பாலவிகாஷ் மாணவ மாணவியர்களுடனுன் பெற்றோர் சிலருடனும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவை நேரில் தரிசிக்கச் சென்றார். பகவானின் ஆசீர்வாதம் யாவருக்கும் கிடைத்தது. புட்டபத்தியிலிருந்து ஆன்மீக இணைப்பாளருக்கு கிடைக்கும் அறிக்கைகளை திரு.சிவஞானம் ஐயாவுடன் கலந்துரையாடி அவற்றை அமுல் பண்ணுவதில் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். பாலவிகாஷ் குருவாகக் கடமையாற்றும் போது மிகப் பொறுப்புடன் நடந்து கொண்டார். பாலவிகாஷ் வகுப்புக்கள் பின்னேரம் 2.30க்கு சமித்தியில் நடைபெறும். அவ்வேளை பிரதம பாலவிகாஷ் குருவாக ஐயா இருந்தார். பட்டம்பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த கடைசி மகளையும் பாலவிகாஷ் குருவாக தேர்ந்தெடுத்தார். பாலவிகாஷ் மாணவர் வருவதற்கு முன்னரே

சத்தியசாயி சமித்தியில் ஐயா நிற்பார். பாலவிகாஷ் மாணவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள், பாட்டுக்கள், பஜனைகளை ஐயா பழக்குவார். அப்போது, தான் பொறுப்பாக நின்று மாணவர்கள் வீடுகளுக்கு சென்ற பின்னரே தான் வீடு திரும்புவார். ஒவ்வொரு மாணவரினதும் பெற்றோருக்கு அவர்கள் வீடுகளுக்குச் சென்று அறிவுரை வழங்குவார். இதுமட்டு மன்றி "பாலவிகாஷ்" என்பது "மனித மேம்பாட்டுக்கல்வி" யாக மாற்றம் பெற்ற போது தனது அனுபவ ஞானத்தால் பல விடயங்களைப் பாடத்திட்டத்துடன் சேர்த்துக் கொண்டார்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினது மனிதமேம்பாட்டுக் கல்வியை உரிய முறையில் பூரணப்படுத்த நல்ல தகுதி வாய்ந்த குருமார்களைத் தெரிந்தெடுத்தார். அதில் திருமதி. சியாமளா இரவீந்திரனும் ஒருவராவர். குருவாக இருப்பவர்கள் குருவிற்குரிய தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். பகவான் கூறிய வழியில் நடந்து காட்ட வேண்டும் என்று ஐயா எடுத்துக்கூறுவார். மனித மேம்பாட்டுக் கல்வி பற்றிய பாடநூல்களை அறிமுகம் செய்து வைத்தார். இலங்கையில் மனித மேம்பாட்டுக்கல்வி பாடத்திட்டத்தை அமுல் செய்ததுடன் பரீட்சை நடத்துவதும் ஐயாவின் பணியாக இருந்தது. பரீட்சையில் பரீட்சிப்பது எல்லாம் உயர்ந்த தத்துவங்கள் சார்ந்ததாகவே அமைந்தது. "நான் யார்?" "தர்மம் என்றால் என்ன?" என்பன போன்ற விடயங்களை ஐயா சிறுவர் முதல் பெரியோர் வரை விளங்கப்படுத்தி விழிப்படையச்செய்தார். மனித மேம்பாட்டுக் கல்வி பயில்வோருக்கான சிறப்புத்திறன்களில் போட்டி வைத்து மாணவர்களுக்கு பரிசும், சான்றிதழும் வழங்க ஆவன செய்தார். சிறுவர், சிறுமியர் தனித்தனியே மேடைக்கு இருபுறமும் அமர வைத்தார். நாடகங்களில் பெண்கள் தனியாக, ஆண்கள் தனியாக நடிக்க வைத்தார். இறைவனைப் பூக்களால் பூஜிக்கும் போது பூவை எந்த பாவனையுடன் பகவானுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று தானும் செய்து காட்டி மாணவர்களை வழிநடத்தினார். மாணவர்களின் ஆன்மீக பாதைக்கு குறுக்கே நின்ற பெற்றோரை அவரவர் வீட்டிற்குச் சென்று புத்திகூறி எவ்வழி சிறந்ததென எடுத்தியம்பி வழி காட்டினார்.

1981ல் கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கையில் ஐயாவும் அவரது குடும்பத்தி னரும் வசிக்கலாயினர். 1981ல் மூத்த மகன் திருமணமானார். 1983ல் இரண்டாவது மகள் திருமணமானார். அவர்களின் பிள்ளைகளின் மூலம் ஐயா தனிப்பட்ட வகையில் நாளாந்தம் ஓங்காரம் 21 தடவை பஜனை தியானம் என ஆன்மீக சாதனை செய்து வருவார். ஓய்வாக இருந்தால் பகவானது இலக்கியங்கள் கையில் இருக்கும். ஒருபோதும் நோயுற்று படுக்கையில் இருந்ததில்லை. என்றும் எப்போதும் ஏதோ ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். சேவையே யாவற்றிலும் மேலானது என்று பாபா பிரகடனப்படுத்தியதும் பலரையும் கூட்டி ஆலோசனை செய்து யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அடிக்கடி சென்று நோயாளிகளுக்கு சேவை செய்ய ஆரம்பித்தார். சாயிசேவா சங்கம் முழு மூச்சுடன் சேவா நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. அன்று ஐயாவினால் தொடங் கிய இந்த சேவையானது இன்று இன்னும் விரிவடைந்து திருவாளர் ராஜரட்ணம், திருவாளர் கணேசலிங்கம், திருவாளர் கேதீஸ்வரன், திருவாளர் ஈஸ்வரலிங்கம் போன்ற நாளாந்தம் திருநெல்வேலி சமித்தியில் சேவா சாதனை புரிபவர்களுடன் மேலும் பல அன்பர்கள் சேர்ந்து சேவையில் ஈடுபடுகின்றனர். இன்று சேவை நடவடிக்கை களில் இளைஞர்களும், யுவதிகளும்

இணைந்து மிகவும் உன்னதமாக சேவை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது.

பல்வேறு சத்தியசாயி மண்டலியினரும் ஐயாவைத் தமது மண்டலிகளில் உரையாற்றவோ, சாதனைகளை செய்து சிறப்பிக்கவோ, சத்சங்கங்கள் வைக்கவோ அழைப்பதுண்டு. 1981ஆம் ஆண்டு முற்பகுதியில் ஐயாவுடன் நீண்ட நாட்கள் பழகிய திருவாளர் இரத்தினவடிவேல் தமது நல்லூர் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சியில் திரு. ஞானசேகரம் ஐயாவிற்கு திருவாளர் க. மகேஸ்வரனை அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த நேரத்தில் அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சியில் "இந்த ஆன்மா நித்தியம் என்ற அந்த வாக்கும் பொய்த்துப் போமோ" என்ற யோகர்சுவாமிகள் நற்சிந்தனைப் பாடலை திருவாளர் ஜீவரத்தினம் பாடிக்கொண்டிருக்கிறார். அப்போது ஐயா, மகேஸ்வரனைக் கேட்கின்றார் பாடல் எப்படி விளங்குகிறதா என்று "இந்த ஆன்மா நித்தியம்" என்ற வரிகளினூடாக, அன்றிலிருந்து திருவாளர் மகேஸ்வரனுக்கு ஐயாவின் தொடர்பு கிடைத்தது. தாவடியில் சத்சங்கம் வைக்க ஐயாவை பல தடவைகள் அணுகியதன் பயனாக ஏற்கனவே அறிமுகமாயிருந்த மாவட்ட பெரும் பகுதி பதிவுகாரர் திரு.பி.எம். இராசரத்தினம் அவர்கள் வீட்டில் ஐயாவின் சத்சங்கம் ஆரம்பமானது. தொடர்ந்தும் ஒவ்வொரு நாளும் சத்சங்கத்திற்கு திருவாளர் இராசரத்தினம் அழைக்கலானார். ஐயாவும் பலவகையான சாதனைகளை அங்கு செய்து அவர்களுக்கு வழிகாட்டினார். அங்கு திருவாளர் இராசரத்தினம், இராசரத்தினத்தின் மனைவி, மகள், மருமகனான திரு. எஸ். ஆர்.சரவணபவான், திருவாளர் மகேஸ்வரன் அவரது மனைவி ஆகியோர் பங்குபற்று வதுண்டு. அதேபோல் அயற் கிராமங்களில் உள்ளவர்களும் கலந்து கொள்வார்கள். அந்தக் காலங்களில் இலங்கையில் தாவடியிலேயே முதலாவது குண்டு போடப்பட்டது. அவ் வேளையில் ஓங்காரம், திருநீற்றுப்பதிக சாதனையில் ஈடுபட்டிருந்த ஐயாவும் அவரது ஆன்மீக குழாமும் ஒரு சலனமும் அடையவில்லை. ஐயாவின் தலைமையில் மனித மேம்பாட்டுக் கல்வி கற்பிக்கும் குருமார்களுக்கான பயிற்சிப் பட்டறையும் தாவடியில் நடைபெற்றது. அதில் பலரும் கலந்து நற்பயன் பெற்றனர். பாலவிகாஷ் மாணவர்களுக்கு "நசிகேத" நாடகம் நடிக்க பயிற்சி கொடுத்து மேடையேற்றினார். குழந்தையைப் பெற்று பேணிவளர்த்து உரியவரின் கையில் கொடுக்கும் தந்தைக்குச் சமமாக திரு. ஞானசேகரம் ஐயா முழுமையாக செயற்பட்டு தாவடியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவா சமித்தியை முழுமையுறச் செய்தார். இன்றும் அது பரிணமித்து விளங்க நாளாந்தம் செய்த சாதனைகளே அத்திவாரமாயின.

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா சமித்தியில் பாலவிகாஷ் பிரதம குருவாயிருந்து வழிநடத்திய ஐயா, ஆத்ம ஈடேற்றத்திற்குரிய சாதனைகளை திருவாளர் மகேஸ்வரன் வீட்டில் (சாயி இல்லம்) அவர்களது பூரண ஒத்துழைப்போடு செயல்படுத்தினார். அந்நன்நாள் முதல் இறைபதம் அடையும் வரை ஐயாவின் ஆன்மீக உரைகள், சாதனைகள் திருவாளர் மகேஸ்வரன் வீட்டில் நடைபெறலாயிற்று. திருவாளர் மகேஸ்வரனது இல்லத்தில் காலையிலும், மாலையிலும் தினந்தோறும் சாதனை நடைபெறும். சாதனை ஆரம்பிக்கும் நேரம் ஒரு போதும் பிசகாது. மகேஸ்வரன் தம்பதியினர் எல்லா ஆயத்தங்களையும் அமைதியாக, பக்குவமாக செய்துவிட்டு ஆவலுடன் காத்திருப்பார்கள். தினமும் ஓங்காரத்துடன் ஆரம்பிக்கும் சாதனை சர்வலோகத்திற்கும் சாந்தி

கிடைக்கட்டும் எனும் பிரார்த்தனையுடன் முடிவடையும்.

நாளாந்த சாதனைகளை விட திருநீற்றுப் பதிகசாதனை, கோளறுபதிகம், கீதை வாசித்தல், சிவஹோமம், சீரடி சாயி சப்தகம் வாசித்தல், பாகவத சப்தகம் படித்தல், பகவானது பிறந்தநாள் விழா சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாராயணம் போன்ற பல்வேறு ஆன்மீக சாதனைகள் நடைபெறுவதுண்டு. எல்லாச் சாதனைகளும் உயர்ந்த, உன்னதமான ஆன்மீக சாதனைகளாகச் செய்யப்பட்டன. நாளாந்த சாதனைகளால் சாதகர்களின் எண்ணம், சொல், செயல் எல்லாமே சாயி பற்றியதாக அமையலாயிற்று. ஞாயிற்றுக் கிழமைகளில் விசேட சாதனைகள் நடைபெறலாயின. அன்று போல் இன்றும் திரு. மகேஸ்வரனது இல்லத்தில் ஞாயிறு தோறும் சாதனைகள் நடைபெறுகின்றன.

தாவடி திருவாளர் மகேஸ்வரனது இல்லத்தில் ஐயா பாலவிகாஷ் மனித மேம்பாடுகளை கற்பிக்கும் குருவாக விளங்கினார். அங்கும் பல அரிய ஆன்மீக நாடகங்களான "ஞாக்கிய வல்கியர்" "பக்த பிரகலாதன்" போன்ற நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றினார். அன்று மனித மேம்பாட்டுக் கல்வியை ஐயாவிடம் கற்ற மாணவர்கள் இன்று வைத்தியர்களாக பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்களாக, நல்லொழுக்க சீலர்களாக, பிறர் பின்பற்றி நடக்கக்கூடிய மனித விழுமியங்களை நன்கு கடைப்பிடிப்பவர்களாக, உயர் ஆன்மீகக் கல்விச் சிந்தனையாளர்களாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தம் பிள்ளைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவதானித்த பெற்றோரும், அயலவரும், உற்றாரும், நண்பர்களும் மனித மேம்பாட்டுக்கல்வியை தம்பிள்ளைகளுக்கும் ஊட்ட விரும்பி திரு. மகேஸ்வர னது இல்லத்திற்கு அழைத்து வரலாயினர்.

ஐயாவின் சத்சங்கம், சாதனைகள் சித்தன்கேணியிலும் திருவாளர் நவரட்ண ராஜா குடும்பத்தினரின் ஊக்கத்தோடு ஐயாவினால் ஆரம்பிக்கப்பட்டு மனித மேம்பாடுகள் கற்பிக்கும் இடமாக அவர்களது இல்லம் திகழ்கின்றது.

திருவாளர் மகேஸ்வரனது இல்லத்திற்கு பலர் குடும்ப சமேதரராக வருகை தருவர். தற்போது மக்கள் வங்கியின் பிரதேசமுகாமையாளராக இருக்கும் திருவாளர் சிவபாதவிருதையர், பிரதம தபாலதிபர் சேதுகாவலர், சித்தன்கேணி திருவாளர் நவரட்ணராஜா, திருவாளர் நகுலேஸ்வரன், திருவாளர் இந்திரன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஒரு நாள் திருவாளர் சோதுகாவலரது மகனுக்கு திடீரென கால் நடக்கமுடியாமல் போயிற்று அவர்களது மகனை வைத்தியசாலையில் அனுமதிக்கும்படி கூறினர். ஆனால் அவரது பாரரியார் அன்று மானிப்பாய் சமித்தியில் பஜனை இருக்கிறது இதற்குபோவோம் என்று மகனையும் தூக்கிச் சென்றார். மகனை ஓரிடத்தில் இருத்தினர். அன்று ஐயா முதன் முதலில் மானிப்பாய் சமித்திக்கு வந்திருந்தார். திருநீற்றுப்பதிக சாதனையை தொடங்கினர் எல்லோரது கைகளிலும் வீபூதி கொடுக்கப்பட்டது. "ஆலவாயான் திருநீறே" என்று கடைசி வரிகளை பாடும் ஒவ்வொரு தடவையும் திருநீற்றை ஒவ்வொருவரும் நெற்றியில் பக்குவமாக பூசுவர். இவ்வாறு பாடி முடிந்து பஜனையும் முடிய யாவரும் எழுந்து வந்து ஐயாவை வீழ்ந்து வணங்கி விபூதி வாங்கிச் சென்றனர். என்னே அதிசயம்! நடக்க கஷ்டப்பட்ட திருவாளர் சோதுகாவலரின் மைந்தன் எழுந்த நடந்து ஐயாவில் கால்களில் வீழ்ந்து விபூதி பெற்று

சாதாரணமாக நடக்கலாயினார். அன்று முதல் ஐயாவை சரணடைந்தவராக தனது மனைவி, மக்களுடன் வந்து சாதனைகளில் கலந்து கொள்வார். ஐயாவின் அமரத் துவத்தின் பின் ஐயாவின் பாதணிகளை பீடத்தில் வைத்து சேதுகாவலரும் அவரது குடும்பத்தினரும் தொழுது வருகின்றனர். ஐயாவின் பிள்ளைகளான குமாரயோகினி, சண்முகயோகினி என்போரும் சாதனைகளில் கலந்து கொள்வார்கள். திரு. சிவபாத விருதையர் வியர்க்க விறுவிறுக்க ஐயாவின் அருகில் அமர்ந்திருந்து பனை விசிறி கொண்டு ஐயாவிற்கு காற்று வீசுவார். மருந்துக்கடை சுந்தரம் எனப் புகழ்பெற்ற வயதுமுதிர்ந்த ஐயா ஒருவர் அடிக்கடி ஐயாவிற்கு காற்று வீசும் பணியில் தன்னை உட்படுத்துவார். ஒவ்வொருவரும் மிகவும் விநயத்துடனும், விசுவாசத்துடனும் சாதனை களில் கலந்து ஆன்மீக ஞானமும், ஐயாவின் ஆசீர்வாதமும் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் கிருபாகடாட்சமும் பெற்றுச்சென்றனர்.

ஐயாவின் ஆன்மீக உரைகள் மிகவும் மனத்தை தொடுபவையாக இருக்கும். மிகவும் ஆணித்தரமானவையாகவும் இருக் கும்.

"பாவற்கொட்டையைப் போட்டால் பாவற்காய் தான் வரும்" என ஆழமான பொருளுடன் உதாரணங்கள் கூறுவார். சிறுவர் முதல் முதியோர் வரை தத்தம் நிலைகளுக்கேற்ப ஐயாவின் சத்சங்கத்தை இரசித்துச் செல்வர். ஆன்மாவானது பிரம்மத் துடன் சங்கமித்தால் உண்டாகும் சுகானு பவத்தை ஐயாவின் ஆன்மீக குழாம் நாள்தோறும் உணர்வதுண்டு. சாதனை முடியும் வேளையில் தத்தம் வேலைகளை செய்ய வேண்டுமே எனும் கடமையுணர் வால் ஐயாவின் சாதகர்கள் அந்த ஆன்ம லயத்திலிருந்தும் விடுபட மனமின்றி மனங்கலங்கி எழுந்து செல்வார்கள்.

பிரபஞ்சத்திலே Black hole எனப்படும் ஒரு விடயமுண்டு. எந்த ஒரு பொருளும் அதன் சமீபத்தில் சென்றால் அது பெரும் சூரியனாகவோ கிரகமாகவோ இருப்பினும் அதனை Black hole உள்ளிழுத்து விடும். உலகின் அமைப்பும் அப்படியானதே. தீய விடயங்கள் எல்லாம் மனிதன் அதன் சமீபமாக சென்றால் அவனை அதற்கு அடிமையாக்கிவிடும். அத்தகைய உலகா யுத இன்பங்கள் துன்பங்களே என சிறுவர் முதல் முதியோர் வரை உணரும்படி தனது உரைகள், சத்சங்கங்கள், போன்ற ஆன்மீக உரையாடல்களில் குறிப்பிடுவார். ஒவ்வொ ருவரும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஐம்பெரும் கோட்பாடுகளை பின்பற்ற அரும்பாடுபட்டார் ஐயா. பகவானின் அவதார நோக்கத்தை தாம் பேசும் இடமெங்கும் ஐயா வலியுறுத்திக் கூறுவார். பகவானின் ஒன்பது கோட்பாடுகளையும், அன்றாடச் சாதனையாக்க முயன்றார். புற இன்பத் தையும், புலனின்பத்தையும் நாடும் மக்க ளுக்கு மனிதனின் ஆன்ம தத்துவத்தை உணரவைத்தார். மனித மேம்பாட்டுக் கல்வியின் இலட்சியமான மனிதனுள் இருக்கும் தெய்வீகத்தை உணரச் செய் தலை மீண்டும் மீண்டும் பலவகையிலும் கூறுவார்.

ஐயாவின் சாதனைகள் விரிவடைய லாயிற்று தாவடி சாயி இலத்தில் ஐயாவின் ஆத்மீக சாதனைகளை தவறாது செய்து அச்சாதனையால் புடம்போட்டுத் துலங்கும் சாதனையாளர்களை திருநெல்வேலி சத்திய சாயி சமித்தியில் உரையாற்றப் பணிப்பித் தார். திருமதி. நிர்மலா நவரட்ணராஜா

ஐயாவின் கடைசிமகள் சண்முகயோகினி என்போர் உரையாற்றினர். ஐயாவின் சாதனைகளும் நிகழ்ந்தன. இவற்றை விட திருநெல்வேலி சத்திய சாயி சமித்தியில் சீரடி சப்தகம், பாகவத சப்தகம், கோளறு பதிக சாதனை போன்றவைகளையும் ஐயா தானே முன்னின்று நடத்தினார்.

பகவான் சத்திய சாயிபாபாவை 'ஸ்வாமி', 'ஸ்வாமி' என அழைக்கும் ஐயா மனிதருள் ஒரு மாணிக்கம். குன்றில் வைத்த விளக்கு! யாழ்ப்பாணம் ஏன் இலங்கை வாழ் மக்களுக்கு ஓர் ஆன்மீக வழிகாட்டி! தன் அன்றாட - மூன்றுவேளை உணவில் காலை மதிய உணவு எனும் இருநேரம் மட்டும் உண்டு இரவு உணவை இருபது வருடங்களுக்கு மேல் துறந்து இருந்தார். ஆடம்பர வாழ்க்கையால் சுமையும், துன்ப முமே என்று அனுபவ ஞானத்தால் தானும் நடந்து காட்டி மற்றவர்களையும் விழிப்புறச் செய்தார். ஐயாவின் பேச்சில் அன்பும், உற்சாகமும், நகைப்பு உணர்ச்சியும் காணப்படும். பஜனையானாலும் ஆன்மீக உரையானாலும் அது உற்சாகமான தாகவே இருக்கும். எவருக்கும் எதற்கும் அஞ்சாது உண்மைகளை உள்ளபடி எடுத்து இயம்பு வார். பழகியவர், படிக்காதவர், இன ஜனம் என்ற வேறுபாடு காட்டாது எது தர்மமானதோ எது சிறந்ததோ எதனால் எல்லோரும் நற்பயனடையலாமோ அதற்கே அவர் முன்னுரிமை கொடுத்தார்.

1987ல் யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கை நிகழ்ந்தது. மக்கள் எல்லோரும் கோயில் களையும், பாடசாலைகளையும் தஞ்சம் அடைந்தனர். ஐயாவும் அவரது குடும்பத் தினரும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சென்றனர். அவ்வாறு இருந்த வேளையில் ஒரு நாள் மிகவும் கோரமான சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் காலை நிகழ்ந்த அசம்பாவிதத்தில் பாடசாலைக்குள் இருந்த 33 பேர் அவ்விடத்தில் காயப்பட்டோ, உடல் சிதறியோ பலியானார்கள். அச்சமயம் ஐயாவும் அவரது மகன் குகஞானியும் இறக்கப் போகும் ஆத்மாக்களின் வாயில் விபூதி இட்டு பஞ்சாட்சரத்தை உச்சரித்தனர். தாகம் என இரந்த மரணிக்கும் தறுவாயில் இருந்தவர்க்கு நீர் பருக்கினர். பின்னர் இரு நாட்களாக பிணவாடை வீச ஆரம்பித்தது. சிலரின் உதவியுடன் தடிகளை சேகரித்து பாடை கட்டி பிணங்களை மைதானத்தின் ஓரமாக புதைத்தனர். ஐயாவின் தலைமை யில் அபாயகரமான சூழலில் குகஞானியும் ஒரு சில பேரும் சேர்ந்து பிணங்களைப் புதைத்தனர். அவ்வேளை சிவபுராணம் பாடி அவ்வுடல்களின் மேல் விபூதி சொரிந்து அடக்கம் செய்தனர். ஒவ்வொருவரும் அகதியாக இருந்த வேளையில் ஒவ்வொரு வரும் தத்தம் அன்றாட உணவு, மாற்ற உடை இல்லாத நிலையில் தம் தேக சுகம், மனத்தைரியம், இழந்திருந்த அபாயகரமான அச்சூழலில் ஐயாவின் துணிச்சலும், ஆன்மபலமும் பற்பல நற்காரியங்களை அங்கு தங்கிய அகதிகளுக்கும் கிடைக்கச் செய்தது. படைத்தளபதியை சந்தித்து மக்களுக்கு அரிசி, பருப்பு பெற்றுத்தந்தார். முகாமிலிருந்து யாரும் வெளியே செல்ல முடியாத ஒரு சிலவேளை இந்திய ஆமியுடன் ஐயா அரிசிமூட்டை சுமக்க நேரிட்டது. மக்கள் பயமும் பீதியும் உற்று மீட்சியற்ற நிலையில் இருந்த வேளையில் புதுக்கோயிலில் ஓரிரவு ஆன்மீக உரை யாற்றினார்.

1988ல் கடைசி மகளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. "எப்பவோ முடிந்த காரியம்" என்னும் யோகர்சுவாமியின் வாக்கின்படி தனது சாயி அன்பர் திருருவாளர் குலேந்திரனின் மைந்தன் நோயுற்றிருந்த வேளையில் மிகுந்த கரிசனையுடனும்,

ஆதரவுடனும் ஐயா நடந்து கொண்டார். ஏதோ பூர்வஜென்மத் தொடர்போ என வியக்கும் வண்ணம் அந்த சுகயீனமுற்ற தம்பியும் ஐயாவின் மேல் அபரிமிதமான விநயத்துடன் ஆன்ம ஈடுபாட்டுடன் நடந்தார். சூழ உள்ள சாயி அன்பர்களும் ஐயாவின் ஆன்மீக குடும்பமும் அந்த அனுபவங்களை அனுபவித்து அறிந்து விழிப்புடன் நடந்தனர். சித்தன்கேணிக்கு தனது துவிச்சக்கர வண்டியில் சென்று தம்பியை ஐயா பார்ப்பார். தம்பிக்குத் தென்பு உண்டாகும். இப்படிப் பற்பல தனிநபர் சம்பந்தமான விடயங்களில் ஐயா தனித்து நின்று அன்பர்களுடனும் சேர்ந்து பல அரிய சேவைகளைச் செய்தார்.

1984ற்குப்பின் ஐயாவின் இரண்டாவது மகன் குகஞானி ஐயாவின் ஆன்மீக சேவைகளுக்கு உதவியாகவும், ஊன்றுகோலாகவும், உற்சாகம் ஊட்டுபவருமாக வந்து இணைந்தார். இதன் விழைவாக ஐயா பல அரிய நூல்களை வெளியிட்டார். "Towards Divinity" "முத்துக்கள்" போன்ற நூல்கள் புட்டபர்த்தியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் திருப்பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்பட்டு பகவானால் ஆசீர்வதிக்கப் பட்டவையாகும். கீதவாஹினியை தமிழில் மொழி பெயர்த்தார். "பஜகோவிந்தம்" எனும் ஆதி சங்கராச்சாரியாரின் பாசுரத்தை மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டார். பஜகோவிந்தத்தைப் பாடி சாதகர்களுக்கு அர்த்தத்தை அழகாக ஐயா எடுத்துக் காட்டுவார். திருமதி. ரஞ்சனா மகேஸ்வரனுக்கும் இந்தப் பாடல்களை சொல்லிக் கொடுத்து அவர்களுக்கும் ஆத்மலயத்தில் பாடும் பக்குவத்தை அமைத்துக் கொடுத்தார்.

1989ஆம் ஆண்டு மாசிமாதம் திரு.மகேஸ்வரன், தன் தாயார், சகோதரியுடன் இளைய சகோதரியின் திருமணத்திற்காக இந்தியா சென்று திருமணம் முடிய புட்டபத்தி சென்றார். புட்டபத்தியில் காலை தரிசனம் முடிய பஜனை தொடங்கமுன், மந்திருக்கு வெளியே திரு. மகேஸ்வரனை பகவான் அழைத்தார். தன்னைத் தான் என்பதை அறியாததால், மீண்டும் சுவாமி அழைக்க எழுந்து சென்றார். விழுந்து பாதத்தை வணங்கினார். எழுந்தவுடன் சுவாமி முதுகிலே தட்டி சாதனா, சாதனா Carry on என்ற வாசகத்தை சொல்லி விட்டு அப்பாலே சென்றார். ஆனந்தப்பரவசத்தில் தன்னைக் கட்டுப்படுத்த முடியாத சொல்லொணா உணர்வில் லயப்பட்டுவிட்டார். திருவாளர் மகேஸ்வரன். ஊருக்கு திரும்பி நடந்த விடயத்தை ஐயாவிற்கு கூறினார்.. "சாதனா மார்க்கத்திற்கு சுவாமி காட்டிய ஊக்கம்" என்று சொல்லிவிட்டு சாதாரணமாகவே ஐயா இருந்தார்.

இப்படியாக, ஐயாவின் சாதனைகள், சத்சங்கங்கள் உண்மையை வெளிப்படுத்துவனவாகவே அமைந்தவை.

ஐயாவினுடைய அமரத்துவத்தின் பின் அவரது தினசரி நாட்குறிப்பைப் பார்க்கும் சந்தர்ப்பத்தில் 12.02.1989ஆம் நாள்:

சாயீஸ்வரா! அவதாரா! உம்முடைய அன்புத் தத்துவத்தை சிறிது வெளிப்படுத்தி இந்த அடியார்களை ஊக்குவிப்பீர். எல்லாம் அறிபவரே உமது பக்தன் மகேஸ்வரன் உங்கு வருகின்றார். உம்முடைய கருத்தில் அவர் மூலமாய் இங்குள்ள அடியார்கட்கு உம்முடைய கடாட்சமுண்டு. அவர்களுடைய உண்மையை நீர் கண்டிருக்கின்றீர் என்பதற்கு ஏதாவது காட்டுவீர்.

1990ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி அதிகாலை ஐயா அமரத்துவம் அடைந்தார். இந்த உடல் ஒரு சட்டை போன்றது. பழைய சட்டை கிழிந்தால் மாற்றிவிடுவது போன்றதே ஒவ்வொருவரது பிறப்பும் என்று ஐயா கூறுவார். யோகர் சுவாமிகளின் அரும்பெரும் மந்திரமாகிய "எப்பவோ முடிந்த காரியம்" என்னும் வாக்கை ஐயா அடிக்கடி கூறுவார். இந்த தத்துவங்களை விளங்கியவர்களுக்கு ஐயாவின் பிரிவைத் தாங்கும் சக்தி கிடைத்தது.

"ஆன்மா நித்தியமான பொருள்"

"ஆன்மா ஒரு போதும் அழியாதது"

என்று யோகர்சுவாமிகள் கூறுவார். நான் செத்தால் செத்துப்போனவன் என்று நினைக்காதை "ஆன்மா நித்தியமானது" என யோகர் சுவாமிகள் கூறுவார். இவ்வரும் பெரும் தத்துவங்களை ஐயா அடிக்கடி கூறுவார். அவரது அமரத்துவத்தின் பின்பும் ஐயா நித்தியமாய் சூட்சுமமாக எங்கள் மத்தியில் இருக்கின்றார்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

"தீதும் நன்றும்பிறர்தர வாரா"

எல்லாம் எமது ஊரே, எல்லோரும் எமது நண்பர்களே. நன்மையும் தீமையும் ஒவ்வொருவரும் செய்த வினைக்கேற்ப வருவதே என்று ஐயா நன்கு விளங்கி ஏனையோருக்கும் எடுத்துக் கூறினார். திருகோணமலையில் இருக்கும் போது மண்ணை ஆழமாக வெட்டி புல்லில் ஆணி வேர்களை இழுத்தெடுப்பார். அப்பொழுது அங்கு வந்த நண்பருக்கு எம்முள் இருக்கும் கர்ம வேரையும், ஆத்ம சாதனையால் நாம் கழைந்தெறிய வேண்டும் என்றார். தன் வாழ்நாளை ஆத்ம சாதனையிலேயே கழித்து ஏனையோரையும் அதன் வழியே நடத்தி சாதனையாளர்களையும் சாதனையையும் மிகவும் சிறப்பாக நிலைநாட்டிச் சென்ற பெருமை ஐயா ஒருவருக்கே உரித்தான மகத்தான செயலாகும்!

ஐயாவின் ஆத்ம ஈடுபாடும் அர்ப்பணமும் அவருக்கு சந்தனக் கட்டைகளால் சிதைமூட்டி சிறப்பான வழியனுப்புதலைச் செய்ய வைத்தது. ஐயா அமரத்துவம் ஆன நாளில் இருந்து ஐந்து நாட்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளை யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா என பல இடங்களிலிருந்தும் சாயி அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள், அயலவர் எனப் பல்வேறு தரப்பினரும் வந்து செய்தனர்.

"ஞானசேகரம் ஐயா" என்னும் இம்மகான் தன் குடும்பத்தின் சொத்து மட்டுமல்ல. அவரை நாடிய, அணுகிய, பழகிய சகலருக்கும் ஐயா! அனைவருக்கும் குரு! அனைவருக்கும் வழிகாட்டி! அனைவருக்கும் தன் ஆன்மீக அனுபவங்களை வாரிவழங்கிய அருள் வள்ளல்! ஐயா இம்மைக்கும் மறுமைக்கும் யாவருக்கும் ஆன்ம ஈடேற்றம் கிடைப்பதற்காக அல்லும், பகலும், அயராது உழைத்த உத்தம ஞானி!

திருவாளர் ஞானசேகரம் என்னும் மகானின் பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் யாவற்றிலும் புனிதமான இறையருட் கடாட்சம் இருந்துள்ளது. புகழ்மணம் பரப்பிய அம்மகானின் சரிதத்தை ஒரு புத்தகத்தில் அடக்கலாம். ஆனால் அவர் சிறுபிராயம் முதல் அமரத்துவம் அடையும் வரை அன்றாடம் பெற்ற, அனுபவித்த, அதியசமான ஆத்மசாதனைகளும் அதிசயமான ஆன்மீக அனுபவங்களும் சொற்களால் எழுத முடியாதவை.

ஐயாவின் ஆத்மசாதனை வித்துக்கள் தாவடியில் முளைத்து விருட்சமாகி, விழுதுகள்விட்டு பரவுகின்றது. தாவடி திருவாளர் மகேஸ்வரன் ஐயாவின் சாதனைகளை அவரது போதனை வழி நின்று மிகவும் அவதானமாகவும் பக்குவமாகவும் பரிசுத்தமாகவும் ஐயாவின் அமரத்துவத்தின் பின் பதின்நான்கு வருடகாலமாக நடாத்தி வருகின்றார். அதுவும் ஐயாவின் சிறப்பே. ஐயா பாடுபட்டது பயன் பெற்று விட்டது!

திருவாளர் ஞானசேகரம் என்னும் மகானின் வாழ்க்கைச் சரித்திரத்தை அவரே உள்நின்று எழுத அருள்பாலித்தமையினால் ஐயாவின் அருளினாலே ஐயாவின் சரித்திரத்தை யாவரும் படித்துப் பயனுறுவாராக.

**சாயிராம்**

**திருமதி. சண்முகயோகினி ரவீந்திரன்.**

# 'நல்ல சேகரம்' ஆனார் ஞானசேகரம்
## சிவயோக சுவாமிகளின் பட்டமளிப்பு!

கொழும்புத்துறையில் வாழ்ந்த திரிகாலமும் உணர்ந்த ஞானி சிவயோக சுவாமிகள். அவரது குரு செல்லப்பர். செல்லப்பரின் குரு கடையிற்சுவாமிகள். இவ்வாறு மூன்று தலைமுறைகளுக்கு முன் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத் திற்கு வந்தவர் கடையிற்சுவாமிகள். நீதவானாக இருந்த சுவாமிகள், ஒருவருக்கு தூக்குத் தண்டனையை தீர்ப்பாக வழங்க வேண்டிய நிலை வந்தது. அப்போ "இவனார்?" "நானார்?" "இவனுக்குத் தூக்குத் தண்டனை வழங்க நானார்?" எனச் சிந்தித்தார். எல்லாவற்றையும் துறந்து புறப்பட்டார். கடையிற்சுவாமிகள் இந்தியா வில் இருந்த ஒரு குரு பரம்பரையில் இருந்து வந்தவரே. இலங்கையில் மண்டை தீவில் தங்கிப் பின்னர் வண்ணார்பண்ணை யில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலித்தார்.

கடையிற்சுவாமியின் காலத்தில் வாழ்வதற்குப் பெரும் பேறு பெற்றவர்களுள் திருவாளர் ஞானசேகரத்தின் தாய், தந்தையரும் அடங்குவர். திருமணமாகி குழந்தைப்பேறு இல்லாத நிலையில் இருந்த போது கடையிற்சுவாமியார் M.S. துரை எனப்படும் திருவாளர் ஞானசேகரத்தின் தந்தையாரிடம் சென்றார். கடையிற்சுவாமி எம். எஸ். துரையை அழைத்து இறைச்சித் துண்டொன்றைக் கடித்துக் கொடுத்து அதை உண்ணும்படி பணித்தார். அவ்வரிய அமிர்தத்தை உண்ட அத்தம்பதியர்களுக்கு மூத்த புத்திரராக வந்துதித்தவரே திருவாளர் ஞானசேகரம்.

கடையிற் சுவாமியின் அருளினால் உலக நலனிற்காகவும் ஆத்மீக ஈடேற்றத்திற் காகவும் என அவனியில் வந்துதித்தவர் திருவாளர் ஞானசேகரம் (ஐயா). சிறு பிராயத்திலிருந்தே இஷ்ட தெய்வமாகிய முருகனை வழிபட்டு வந்தார். மனைவி இராஜலக்ஷ்மியும் ஆன்மீக ஈடுபாடும், சைவ சமய விரதங்கள், விழாக்களைக் கடைப் பிடிக்கும் வண்ணார் பண்ணையில் பசுபதிச் செட்டியார் தெருவிலே செட்டியார் குடும்பத்திலே வந்து பிறந்தவர். அவரது தந்தை செல்லத்துரை ஒரு பொறியிய லாளர்.

அக்காலத்தில் சிவயோக சுவாமிகள் காலாற நடந்து செல்வதுண்டு. அவ்வேளை குறிப்பிட்ட வீடுகளுக்கு அவர் செல்வார். சுவாமியின் காலடிபட்ட அவ்வீட்டு அன்பர்கள் எவ்வளவு பாக்கிய வான்க ளாவர்! அவ்வாறு இப்பிறவியின் பயனை அடைந்தவர்களுள் திருமதி. இராஜலக்ஷ்மி யும் ஒருவர்.

இராஜலக்ஷ்மி சிறுவயதினராக இருக்கும் போது யோகசுவாமிகள் அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி செல்வார். இராஜலக்ஷ்மி யின் தந்தை செல்லத்துரை தன் இறுதி மூச்சுள்ளவரை சுவாமியிடம் போய் வருவார். ஒருமுறை திருவாளர் செல்லத்துரை காய்ச்சலால் அல்லலுற்று இருந்தார். பல நாட்களாக காய்ச்சல் தொடர்ந்து இருந்தது. அவ்வேளை சுவாமி திருவாளர் செல்லத்துரையின் வீட்டிற்குச் சென்றார். திருவாளர் செல்லத்துரையிடம் "சோடா வாங்கிக் கொண்டா" என்று

கேட்டார். கொண்டு வந்த சோடாவை முழுமையாக அருந்தினார். அத்துடன் திருவாளர் செல்லத்துரையின் காய்ச்சலும் மாறி விட்டது. சுவாமிகள் ஒருமுறை இவர்களின் வீட்டிற்கு வந்த போது இராஜலக்ஷ்மிக்கு வயது பதினொன்று இருக்கும். இன்ன இன்ன திருக்குறளைப் பாடமாக்கு என அச்சிறுமிக்கு சுவாமி அன்புக் கட்டளையிட்டார். இவ்வாறு சுவாமியை தரிசிக்கவும், அவருடன் பேசவும் அவரை உபசரிக்கவும் அவருக்கு அன்புப் பணி செய்யவும் இராஜலக்ஷ்மிக்கு பெரும் பாக்கியம் கிடைத்தது. சிவயோகசுவாமிகள் முக்காலமும் உணர்ந்த மாமுனிவர். சிவயோக சுவாமிகளை அறியாதவர் ஒருவரும் இலர்.

சிவயோக சுவாமிகளை எவரும் அணுகமுடியாது. உடல் சுத்தமாக இருந்தாலும், உள்ளம் பரிசுத்தமாக இல்லாவிடின் கடுமையான வார்த்தைகளால், வந்தவரை பேசிக் கலைத்து விடுவார்.

**"இவனை ஏன் உள்ள விட்டனீ**
**.............. இங்க என்ன நடக்குதென்று**
**விடுப்புப் பார்க்க வாறான்"**

என்று சுவாமிகள் உரத்துக் கூறுவார். படலைக்கு வெளியே வருபவரையே தடுத்து நிறுத்திவிடுவார். சுவாமியின் வீட்டுக் கதவருகே வந்த பிரமுகர்களை பேசிக் கலைப்பார். யாராவது வர முன்னரே இன்னார் வரப்போகிறார் பார்! என்பார். படித்தவர், பாமரர், செல்வந்தர், வறியவர், சிறுவர், பெரியோர் எல்லோருமே சுவாமிக்கு ஒரே மாதிரியாகத்தான் தெரியும். பலரை உட்காரவைத்து சிவபுராணம் பாட வைப்பார். பாடி முடித்ததும் அர்த்தம் கேட்பார். சிலருடன் சேர்ந்து உணவுண்பார். அவர்களது உணவுப் பழக்கத்தை பார்த்து "எழும்படா இவனுக்கு சாப்பிடத் தெரியாது" என்று கலைப்பார். பலர் பிரசாதங்கள் கொண்டு வருவார்கள். சுவாமி ஏற்க மறுப்பார். வேறு சிலரது பிரசாதங்கள் ஏற்கப்பட்டு எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும்.

இவ்வாறான சிவயோக சுவாமிகளினால் முழுமையாக வரவேற்கப்பட்டு பெரும் சிறப்புக்களைப் பெற்று, குருவருளும், திருவருளும் ஒருங்கேபெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். ஐயாவும் அவரது குடும்பத்தினரும்.

ஐயாவுக்கு அப்போது வயது முப்பத்திரெண்டு. யாழ்ப்பாணத்தில் வேலை கிடைத்தது. யோகசுவாமிகளின் மேல் ஏற்பட்ட தீராத குருபக்தியால் தன் மனைவியுடனும், முதல் மூன்று குழந்தைகளுடனும் கலட்டியில் சொந்த வீடு இருந்தும் சிவயோகசுவாமிகளின் வீட்டிற்குப் பக்கத்திலே வாடகைக்கு ஒரு வீடு எடுத்து வசித்து வந்தார்.

யோகர்சுவாமிகளை நாள்தோறும், எவ்வேளைகளிலும் தரிசிக்க விரும்பினர் ஞானகேசரம் குடும்பத்தினர். யோகர் சுவாமிகள் பாடும் குரலை, பேசும் எழிலை, ஈசன் போல் ஆடும் அழகை அனுபவிக்கவே அயலில் குடியமர்ந்தார். யோகர்சுவாமிகள் சிலவேளைகளில் முற்றத்தைக் கூட்டி அழகுபடுத்துவார். அப்போதெல்லாம் தில்லைக்கூத்தனோ என எண்ணும்படி கூத்தாடுவார். திருவாளர் ஞானசேகரம் தனது மனைவி சமைக்கும் அறுசுவை உண்டியை தன் மனைவி எடுத்துக் கொடுக்க அதை அன்புப் பிரசாதமாக சுவாமியாரிடம் கொடுப்பார்.

சுவாமி பலருக்கும் பல்வேறு விதமாக நடந்து கொள்வார். சிலரை வரவேற்பார். பலரை பேசி அனுப்புவார். வந்தவர்கள் சென்ற பின் ஏதாவது கூறுவார். இவைகள் எல்லாம் வீண் வார்த்தைகள் அல்ல! ஒவ்வொன்றும் அருள் வார்த்தைகளே! அங்கு வந்தவர்களுக்கும் அதைக் கேட்பவர்களுக்கும் சுவாமிகளின் வார்த்தை

களில் பொதிந்துள்ள சிலேடை அர்த்தங்கள் விளங்க பல வருட காலங்கள் எடுக்கும். மனிதரை மனித மேம்பாடுடன் வாழ வைக்க யோகர்சுவாமிகள் கையாண்டயுக்திகள் அவை. வாழ்க்கையில் என்றும் சத்தியமாக, நித்தியமாக, நிலையாக அவ்வார்த்தைகள் இன்றும் ஒலிக்கின்றன.

ஒரு முறை சுவாமியின் பக்கத்து வீட்டில் வசித்து வந்த வேளையில் சுவாமி ஐயாவைப் பார்த்து "ஐயோ கொண்டோடு றான் பிடி" என்றார். இன்னொரு நாள் "கவனமாயிரு" என்று திருவாளர் ஞானசேகரத்திற்கு கூறினார். அடுத்த நாள் யன்னலருகே வீட்டிற்குள் காயப்போட்ட பட்டுவேட்டி களவு போயிற்று. அப்போது தான் சுவாமி கூறிய வார்த்தைகளின் பொருள் விளங்கலாயிற்று.

இன்னொருமுறை ஐயாவின் மூத்த தம்பி பாலசுப்பிரமணியம் கொழும்புத்துறை யில் மணம்முடித்து இருந்தார். பல மாத காலங்களின் பின் தயங்கித் தயங்கி சுவாமியிடம் வந்தார். அப்போ சுவாமி அவரைப் பார்த்து "மாமியார் வீடு மஹாசௌக்கியம்" என்றார்.

ஐயா தன் பிள்ளைகள் பிறந்த போதிலெல்லாம் மனைவியுடன் நல்லூர்க் கந்தனிடம் குழந்தைகளை எடுத்துச் சென்று கிடத்தி கந்தனின் அருட்கவசத்தை வேண்டி வருவார். அதன்பின் ஐயாவும் மனைவியும் குழந்தைகளை யோகரின் சந்நிதியில் கிடத்துவர். அப்படி ஒருமுறை ஒரு மகவை கிடத்தியபோது இராஜலக்ஷ்மியிடம் "பிள்ளையை நல்லூருக்கு கொண்டு போனனீயா? என சுவாமி கேட்டார். "ஓம் சுவாமி என கூற "ஒவ்வொரு கடவுளும் அந்த அந்த தொழிலைச் செய்யும்" என சுவாமி கூறினார்.

வேலை மாற்றம் கிடைத்தாலும் ஐயா தனது குடும்பத்தினருடன் வந்து சுவாமி களின் அருளாசியைப்பெற சுவாமியின் திருவருளால் நிறைய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஐயா சந்திப்பவர்களிட மெல்லாம் யோகர்சுவாமிகளின் மகிமையை எடுத்துரைப்பார். இதனால் யோகர் சுவாமிகளிடம் மேலும் பலர் சென்று அன்பும் அருளும் பெற வாய்ப்பேற்பட்டது. தனது குடும்பத்தினருடன் சுவாமியை தரிசிக்க வரும்போது சுவாமிக்குப் பிரசாதமாக உள்ளக் கமலத்தையே கொடுப்பார் ஐயா. குழந்தைகளையும் வீண்வார்த்தைகள் பேசாது கோவிலுக்குச் செல்வது போன்ற உடல், உள மனத்தூய்மையுடன் செல்லப் பணிப்பார்.

ஒரு முறை ஐயாவின் புதல்வர்களை "மூவிரு முகங்கள்" பாடுமாறு சுவாமி பணிப்பித்தார். மூத்த புதல்வர் ராகத்துடன் விரைவாகப் பாடி முடித்தார். இரண்டாவது புதல்வன் குகஞானி சொற்களை தெளிவாக உச்சரித்துப் பிரித்து அழுத்திப் பாடினார். சுவாமி அப்போது குகஞானி பாடியதை குறிப்பிட்டு இவன் பொருள் விளங்கப் பாடுறான் என்றாராம். சுவாமி அன்று கூறினார் இன்று குகஞானி உலக வாழ்விற்கு அர்த்தம் இல்லை என்று முடிவு கட்டி பொருள் உள்ள வாழ்க்கையை பிரித்து எடுத்து வாழ்கின்றார். சுவாமியின் ஒவ்வொரு வாக்கும் சத்தியமானதே.

இன்னொரு முறை குழந்தைகளுடன் ஐயா சென்ற போது "உனக்கு ஆறுமுகமும் பன்னிரு கையும் இருக்கு என்ன குறை?" என்றார் சுவாமி. ஆறு பிள்ளைகளும் ஐயாவின் சொற்கேட்டு, கல்வி, ஒழுக்கம், ஆன்மீகம் யாவற்றிலும் சிறந்து விளங்கு கின்றனர். ஐயாவிற்கு பிள்ளைகளால் நிறைந்த வாழ்வே கிட்டியது.

மேலும் ஒரு தடவை குடும்பத்துடன் சுவாமிகளிடம் சென்ற போது கடைசிக் குழந்தையைப் பார்த்து இவள் எல்லாருக் கும் மூத்தவள் என்றாராம். பின்னர் "இவள்

ராசாத்தியாயிருப்பாள்" என்றார். இவ்வாறு ஐயாவுக்கு வேண்டிய சகல நிலைகளிலும் சிவயோக சுவாமிகள் வெளிப்படையா கவோ, உட்பொருள்படவோ பல தத்துவங் களை உணர்த்தியுள்ளார்.

வருடந்தோறும் நல்லூர்க்கந்தசுவாமி வருடாந்த மஹோற்சவத்தைக் காண ஐயாவும் அவரது குடும்பத்தினரும் வருவதுண்டு. சப்பறம், தேர் என்னும் இரு மஹோற்சவங்களையாவது தவறாமல் ஐயாவின் குடும்பத்தினர் பார்ப்பர். தேருக்கு முதல் நாள் பல்வேறு குளங்களில் இருந்து வெண்டாமரை, செந்தாமரை மலர்களை ஐயா சேகரிப்பார். இரவிரவாக ஐயாவின் குடும்பத்தினரும் அவரது தம்பி பாலசுப்பிரமணியமும் அவரது குடும்பத்தி னரும் சேர்ந்து தாமரை மலர்களை ஒடித்து புதுக்கடகங்களில் சேகரிப்பார்கள். நல்லூர்க்கந்தன் ஆறுமுகவன் வசந்த மண்டபப் பூஜை முடித்து உள்வீதி சுற்றும் வேளைமுதல் தேரேறும் வரை ஐயா அவர்கள் பெருந்திரளான மக்கள் வெள்ளத்தின் மத்தியில் தலைக்கு மேலும் தோளிலும் என்று மாறிமாறி கடகத்தை வைத்திருந்து ஆறுமுக சுவாமிக்கு தாமரை மலரால் அர்ச்சிப்பார். இப்பணி முடிந்ததும் அடுத்து சிவயோகசுவாமிகளிடம் தன் குடும்பத்தினரை அழைத்துச் செல்வார். அப்போது சுவாமிகள் நிறைந்த அருளை வழங்குவார். கற்கண்டு, பிரசாதங்களை வழங்கி இனிமையாக உபசரிப்பார். சுவாமியின் திருநோக்கும், அருள் வார்த்தைகளும், தன் ஆத்மீக அதிர்வலை களுக்குள் அமர்த்தித் தேநீர் வழங்குவதும் ஒவ்வொரு வருடமும் ஐயாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கிடைத்தது. நல்லைக் கந்தனருள் பெற்று வெறுங்கால்களுடன் குடையுமின்றி ஐயா தன் குடும்பத்தினருடன் சுவாமியிடம் செல்வார். இன, சனம், உறவினர் என்று கொண்டாடி வீண் வார்த்தைகளால் பொழுது போக்குவதில் நம்பிக்கையற்றவர் ஐயா. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் சடையம்மா எனும் பெரும் ஆன்ம ஈடுபாடு கொண்ட அம்மையாரையும் அவர் சந்திப்பதுண்டு. மனித மேம்பாடுகளை கடைப்பிடிப்பதற்கும், இறை மார்க்கத்தில் செல்வதற்கும், ஆன்மீக தத்துவங்களை உணர்வதற்கும் யோகர் சுவாமிகளின் தொடர்பு, ஈடுபாடு, அருள் வார்த்தைகள் ஐயாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறுதுணையாக இருந்தன.

***யோகர் சுவாமிகளின் சன்னதியில் துரைராஜனின் அறிமுகம்***

அப்பொழுது திருவாளர் ஞானசேகரத் திற்கு 32 வயது. சுவாமிகளைத் தரிசிக்க தினமும் செல்வார். யோகர்சுவாமி களுக்கருகே ஒரு சிறுவன் தினமும் கற்பூரம் கொளுத்திக்கொண்டிருப்பதை அவர் அவதானிப்பார். திருவாளர் ஞானசேகரம் அச்சிறுவனைப் பார்த்து முறுவலிப்பார். ஒருநாள் திருவாளர் ஞானசேகரம் சுவாமியிடம் சென்றிருந்தவேளை சுவாமி தனக்கருகே அமர்ந்திருந்த துரைராஜன் என்னும் பெயருடைய அச்சிறுவனுக்கு திருவாளர் ஞானசேகரத்தைக் காட்டி "இவரை உனக்குத் தெரியுமா?" எனக் கேட்டார். அதற்கு சிறுவன் "ஆம்" எனக் கூறினார். "இவனை உன்ரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போ" என்று சுவாமி திருவாளர் ஞானகேசரத்திடம் கூறினார்.

இன்னொரு நாள் "நீ அங்கு போனனீயோ" என்று துரைராஜனிடம் சுவாமி கேட்டார். "எங்கே?" "யார் வீட்டிற்கு?" என துரைராஜன் யோசித்துக் கொண்டிருந்த வேளை படலைக்குள்ளே வெள்ளை வேட்டி, நஷனல், சால்வையுடன் மிகக் கம்பீரமான தோற்றங் கொண்ட திருவாளர் ஞானசேகரம் வந்து கொண்டிப்பதை சிறுவன் துரைராஜன் அவதானித்தார். "இவர் தான் சுவாமி கேட்ட ஆளோ?" என நினைத்தார். அவ்வேளை திருவாளர் ஞானசேகரம் சுவாமியை வீழ்ந்து

வணங்கினார். "இவனை உன்ர வீட்ட கூட்டிப்போவன்" என சுவாமி சிறுவன் துரைராஜனைக் காட்டி ஞானசேகரத்திற்கு அன்புக் கட்டளையிட்டார். அதன் பின் சிறுவன் துரைராஜன் திருவாளர் ஞானசேகரத்தின் வீட்டிற்குச் சென்றார். அப்போது அச்சிறுவனை சுவாமிகளை வரவேற்பது போல் வரவேற்றார் திருமதி ஞானசேகரம். அன்று முதல் சிறுவன் துரைராஜன் அடிக்கடி திருவாளர் ஞானசேகரத்தின் விருந்தினரானார்.

ஒரு முறை சுவாமியிடம் திருவாளர் நல்லநாதன் திருமதி. ரட்ணா நவரட்ணம் வேறும் பலர் வந்திருந்தனர். அப்போது சுவாமி அங்கிருந்தவர்களை ஒவ்வொரு வராகப் பார்த்து "உன்ர பெயர் என்ன?" "உன்ர பெயர் என்ன?" என்று கேட்டார். திருவாளர் நல்லநாதன் தன் பெயரைக் கூறினார். ஏனையோரும் கூறினர். திருவாளர் ஞானசேகரமும் தன் பெயரைக் கூறினார். யோகர் சுவாமிகள் உடனே "நல்லநாதன்" ஞானசேகரம் என்று கூறிவிட்டு ஐயாவைப் காட்டி "நல்ல சேகரம்" என்று கூறி "நல்ல" என்பதை அழுத்தி "நல்லசேகரம்" என்றார். சுவாமி அன்று திருவாளர் ஞானசேகரத்திற்கு எவர்க்கும் கிடைத்தற்கரிய மிகப்பெரிய பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பட்டமளிப்பை வழங்கினார். இது மேடையேற்றி மாலையிட்டு பலரது கரகோஷத்தின் மத்தியில் கொடுக்கப் பட்டதல்ல. அருள் அலைகளும் சிவனரு ளும் புனிதத்தத்துவமும் நிறைந்த சிவசன்னதியில் சிவனுக்கு நிகரான முக்காலமுணர்ந்த மாமுனிவனால் அளிக் கப்பட்டபட்டம்.

"ஒரு சொல்லால் உளந்தூய்மையாச்சே" என்ற சுவாமி வாக்கின்படி "நல்ல சேகரம்" என்ற பெயர் சூட்டலினால் திருவாளர் ஞானசேகரம் புளகாங்கிதமடைந்தார். அவரது புனித உள்ளம் என்றும் எங்கும் எப்பிறவியிலும் எவராலும் பெறற்கரிய பாக்கியத்தை பெற்று ஆனந்தங் கொண்டது. அப்பேரானந்தத்தால் அவர்கள் கண்கள் சிவந்தன. சுவாமியை முழுமையாக மனம் சரணடைந்து ஆன்மா பரமாத்மாவுடன் சங்கமித்த சொல்லொணா அனுபவத்தை அவர் உணர்ந்தார். சூழ இருந்தவர்கள் திருவாளர் ஞானசேகரத்தின் உயர்ந்த நிலையை உணர்ந்தனர். திருவாளர் ஞானசேகரம் நல்லவை எல்லாம் சேகரிக் கப்பட்ட, நல்லவற்றை எல்லாம் நாடிச் சேகரிக்கும், நல்ல புண்ணியங் களைச் சேகரித்திருக்கும், நல்ல ஆத்மா எனப் பல பொருள்பட சுவாமியால் பட்டமளிக்கப் பட்டிருக்கலாம் என எண்ணி வியந்தனர்.

**"மர்மம் இது பெரும் மர்மம்**
**மகத்துக்களாலும் சொல்லொணா மர்மம்"**

என்ற யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை அடிகளுக்கிணங்க சுவாமிகள் "நல்ல சேகரம்" என அளித்த பட்டத்தின் மர்மம் மகத்துக்களாலும் சொல்லொணா மர்மம் ஆகும்.

சுவாமிகளின் முன்னிலையில் பெரிய உத்தியோகத்தர்கள், பணக்காரர்கள். சமூக சேவையாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர் கள் என்று பல்வேறு துறைகளைச் சாதி, சமயங்களைச் சார்ந்தவர்கள் வருவார்கள். சுவாமி என்ன சொல்வாரோ என்ற பயத்துடனேயே பெரும்பான்மை யானோர் வருவர். சுவாமியின் அன்பான வரவேற்பு கிடைப்பதே அபூர்வம். பாக்கியம் நிறைந்த ஒரு சிலருக்கும் ஒரு சில குடும்பத்தவர் களுக்கும் மட்டுமே சுவாமியுடன் சரி நிகரா கப்பழக வாய்ப்பு ஏற்பட்டது. அத்தகைய பெரும் பாக்கியத்தைப் பெற்றவர்களுள் திருவாளர் ஞானசேகரமும் ஒருவராவர்.

திருவாளர் நல்ல சேகரத்திற்கு கொழும்பிற்கு வேலை மாற்றம் கிடைத்தது. சிவயோக சுவாமிகளை பிரியமுடியாத நிலையில் பிரிந்து சென்றார். மட்டக்குளி யாவில் தங்கினார். அங்கிருந்து இரத்மலானையில் ஒரு இரணை வீட்டைக் கட்டினார். பின்னர் அங்கு குடியிருந்தார். 1957 இனக்கலவரத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணம் வந்து யோகசுவாமி களைத் தரிசித்தார். யோகசுவாமிகள் ஒரு புத்தகத்தை கொடுத்து வாசிக்கும்படி ஐயாவிடம் கூறினார். அது புத்தபெருமானின் போதனைகள். வாசித்து முடிந்ததும் சுவாமிகள் திருவாளர் நல்லசேகரத்திடம் "இப்போ நடந்தது என்ன? நாங்கள் சாந்திப்படுத்தியிருக்கிறோம் அது இங்கி ருந்து எங்கும் பரவி எங்கும் சாந்தியை கிட்டச்செய்யும்." என்றாராம். அதன்பின் திருகோணமலைக்கு வேலைமாற்றம் கிடைத்தது. எது எப்படி இருப்பினும் யோகர் சுவாமிகளின் தொடர்பும் ஈடுபாடும் மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது.

சிறுவன் துரைராஜன் இளைஞனாகினார். அவ்விளைஞன் திருவாளர் நல்லசேகரத்தை நல்லாரிணக்கத்திற்கோர் நல்லிலக்கணமாகக் கொண்டார். திருவாளர் நல்லசேகரம் சென்ற இடமெல்லாம் துரைராஜன் சந்தித்து உரையாட வாய்ப்புக்களேற்பட்டது.

1960 முதல் 1969 வரை திருவாளர் நல்லசேகரம் தன் குடும்பத்தினருடன் திருகோணமலையில் இருந்தார். அவ் வேளை திருவாளர் துரைராஜன் தன் வயலை மேற்பார்வை செய்வதற்காக திருகோணமலையில் இருந்தார். திருகோண மலையில் சிவயோக சமாஜ வழிபாடுகளில் திருவாளர் நல்லசேகரமும், திருவாளர் துரைராஜனும் ஈடுபடுவதுண்டு. ஒரு முறை ஒரு குழுவினருடன் இணைந்து திருவாளர் நல்லசேகரமும், திருவாளர் துரைராஜனும் கதிர்காமத்திற்குக் காலால் நடந்து யாத்திரை சென்றனர்.

திருவாளர் துரைராஜன் சுவாமி சிவானந்தரின் சிஷ்யராவர். இந்தியாவில் யோகப்பயிற்சி பெற்றவர். இறைவன் சிவனை நாடி இந்தியாவில் ஸ்தலயாத்திரை சென்றவர். அவர் இலங்கை வந்து திருவாளர் நல்லசேகரத்தை சந்தித்து தன்னனுபவங்களைக் கூறினார். இருந்தும் இவர்கள் பேசுவதெல்லாம் யோகர் சுவாமிகளை பற்றியதாக இருக்கும்.

**"காசிக்குச் சென்று கண்டேன்**

**விஸ்வநாதனை என்னுள்"**

எனும் சுவாமியின் பாடலை இவர்களிருவரும் அடிக்கடி கூறி வியந்தனர்.

1977ல் திருவாளர் நல்லசேகரம் இனக் கலவரத்துடன் ஓய்வு பெற்று திருநெல்வேலி யில் வசித்து வந்தார். திருவாளர் துராராஜனும் யாழ்ப்பாணத்தில் குடும்பத்தி னருடன் இருந்தார். எனவே இவ்விருவரது சந்திப்புக்களும் தொடரலாயிற்று.

இவ்விருவரும் பொதுவிழாக்களில் பேசுவதுண்டு. திருவாளர் துரைராஜன் யோகர் சுவாமிகளுடன் தனக்கேற்பட்ட ஆத்மீக அனுபவங்களை அப்படியே மனம்லயிக்கும் வண்ணம் அழகாக எடுத்துரைப்பார். இவரது பேச்சில் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் அடிக்கடி எடுத்தியம்பப்படும். ஒருமுறை யோகர்சுவாமிகளின் சிஷ்யர் மார்க்கண்டு சுவாமிகளிடம் திருவாளர் துராராஜன் திருவாளர் நல்லசேகரத்தை அழைத்துச் சென்றார். திருவாளர் துரைராஜன் திருவாளர் நல்லசேகரத்தின் இறுதி மூச்சுள்ளவரை அவரைச் சந்தித்து உரையாடி முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்று

திருவாளர் நல்லசேகரத்தின் கடைசி மகளின் கல்யாணத்தை தானே முன்னெடுத் துரைத்து மகிழ்வுடன் தன் இளம் நண்பன் கையில் ஒப்படைத்தார். மேலும் திருவாளர் நல்லசேகரத்தின் விருப்பப்படி தாவடி திருவாளர் மகேஸ்வரனது இல்லத்தில் நடைபெறும் விசேட நிகழ்வு களில் எல்லாம் பேச்சாளனாகப் பங்கேற்றார். திருவாளர் நல்லசேகரம், தாவடி திருவாளர் மகேஸ்வரன் குடும்பத்தினர் ஏனைய ஐயாவின் சாதனையாளர்கள் எல்லோரை யும் கொழும்புத்துறைக்கு அழைத்துச் சென்று யோகர் சுவாமிகளின் அருவுருவத் திருமேனியை தரிசிக்க வைத் தார். 1982ல் பாலவிகாஷ் மாணவர்களை உள்ளூர் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்ற வேளையில் திருவாளர் நல்லசேகரம் முதலில் நல்லைக் கந்தனைத் தரிசித்து பின் செல்லப்பா மடத்திற்கும், மூன்றாவதாக கொழும்புத்துறைக்குச் சென்று அங்கு அமர்ந்து சுவாமியின் அற்புதமான பாடலை இசைத்து சுவாமியை நினைவு கூர்ந்து அதன் பின்னே சுற்றுலாவை தொடர்ந்தனர்.

சிவயோக சுவாமிகளுடனான ஆன்மீக குருசிஷ்ய பக்தியானது திருவாளர் நல்லசேகரம் சென்ற இடமெங்கும் பரவலா யிற்று. சாதுக்கள் கூடும் போதும், அன்பர்கள் அளவளாவும் போதும் சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களைப் பாடியோ, மேற்கோளாகக் கூறியோ ஐயா உரையாற்றுவார். திருமலையில் தனது வீட்டில் வந்து தங்கி திருமலையில் இசைக்கச்சேரி நிகழ்த்திய திருவாளர் சண்முகரத்தினத்திடம் நற்சிந்தனைப் பாடல்கள் முழுவதையும் மெட்டுடன் பாட தம் அரும் புதல்விகள் பாலயோகினிக்கும், குமாரயோகினிக்கும் பயிற்றுவித்தார். அதன் விளைவாக நாள்தோறும் நற்சிந்தனைப் பாடல்களும் நாளாந்தக் கூட்டுப் பிரார்த்த னையில் ஐயாவின் குடும்பத்தினரால் பாராயணம் செய்யப்பட்டது. மாலை 6 மணி முதல் 8 மணிவரை ஐயாவின் இறுதி மூச்சுவரை குடும்பமாக பஜனை செய்யப்பட்டது.

கொழும்பில் இருக்கும் போது கதிரேசன் மண்டபத்தில் யோகர் சுவாமி களின் குருபூசையில் ஐயாவின் புதல்விகள் நற்சிந்தனைப் பாடல்களைப் பாடுவார்கள்.

யாழ்ப்பாணம் வந்ததும் ஐயா திருமுருகனின் தேர்த்திருவிழா அன்று மாலை தேரடியில் அமர்ந்து நற்சிந்தனைப் பாடல்கள் பாடப் பலரை ஊக்குவித்தார். தானும், தன்புத்திரர்களுடனும், யோகிராஜ னுடனும் வேறு சிலருடனும் ஆரம்பத்தில் நற்சிந்தனைப் பாராயணம் செய்ய ஆரம்பித்தார். அது இன்றும் யோகரின் பக்தர்களால் தொடரப்படுகின்றது.

சிவயோக சுவாமிகளால் நல்லூரில் தனது குருநாதன் செல்லப்பனிடம் சரண டைந்து சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இடத்தினை துரைராஜனே முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கக் கூடியவர் என்ற நம்பிக்கையுடன் திருவாளர் துரைராஜனுடன் சென்று நல்லூரில் தேடுவார். இவர்கள் இருவரும் சுவாமி அமர்ந்த இடத்தில் தாமும் பலமணிநேரம் அமர்ந்து யோகரின் அருள் அலைகளைப் பெற்று வீடு திரும்புவர். முருகனை சிறுபிராயம் முதல் வழிபட்ட திருவாளர் நல்லசேகரம் சிவயோக சுவாமிகளின்:

**"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்**

**எல்லாம் மறப்பேனடி கிளியே"** என தன்னை மறந்து பாடுவார்.

"ஆன்மா ஒரு போதும் அழியாது" எனும் பாடல் அவரை அத்துவித மார்க்கத்தில் ஒன்றச் செய்தது. அதன்

விளைவாக சுவாமிகளின் "என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்" என்ற யோகரின் அனுபவத்தை திருவாளர் ஞானசேகரம் தன் குருவாகி நின்ற "நல்ல சேகரம்" என பட்டமளித்த அரிய அன்புக் குருவின் திருவருளால் பெற்றுக்கொண்டார். அதனால் எல்லோருக்கும்

"எப்பவோ முடிந்த காரியம்"

"ஒரு பொல்லாப்பும் இல்லை"

"சும்மாயிரு"

எனும் ரத்தினங்கள் போன்ற யோகரின் அருள் வார்த்தைகளை ஐயா எல்லோருக்கும் பொருளாழத்துடன் எடுத்தியம்புவார்.

ஐயாவின் இறுதி மூச்சு 1990 மே 16ல் நின்றது. அப்போ அன்பர்கள், குடும்பத்தினர், நண்பர்கள், இனசனங்கள் ஐயாவின் விசேட சாதனைக் குழுவினர் யாவரும் ஐயாவின் நிறைந்த ஆத்மீக அனுபவங்கள், வழிநடத்தல்களினாலும் ஐயாவே கூறுவது போல்

"எப்பவோ முடிந்த காரியம்"

"ஒரு சட்டையை கழற்றி வேறு சட்டை போடுவதில்லையா" என ஐயா அடிக்கடி கூறும் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து

"இந்த ஆத்மா நித்தியம் என்ற

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ"

என்ற சுவாமிகளின் அடியை நினைத்து நித்தியமான ஐயாவின் ஆத்மாவை அழியாதது என்று ஏற்று மனத்துயரடங்கி நின்றனர் யாவரும்.

**திருமதி. சண்முகயோகினி ரவீந்திரன்**

## குருவின் மகத்துவம்

குழந்தாய்! உன் குருவினிடத்தே அளவற்ற நம்பிக்கைவை. அவருடைய கருணையால், அவருடைய பிரகாசத்தினால், உன்னுடைய அந்தராத்மா மீள உயிர்க்கப் பெற்றது. அவர் உன்னைத் தேடிக் கண்டு கொண்டார். அவரால் நீ சுகப்படுத்தப் பட்டாய். குருவின் அநுபூதி தாரை தாரையாக உன்மேற் சொரிகின்றது. அது ஒழியாதது. யாதொன்றும் அதை எதிர்க்கமாட்டாது. உன்மேல் அவர் பூண்டிருக்கும் அன்பு அளவற்றது. அவர் உனக்காக எவ்வளவும் பிரயாசப்படுவார். அவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார். அவர் அன்பே அவர் தெய்வத் தன்மைக்குச் சான்று. அவர் சாபந்தானும் ஆசீர்வாதமாகும்.

உன் குருவின் அநுபூதி உனக்கொரு உண்மையான பிரத்தியட்சப் பொருள். உனக்கு மார்க்கம் வேறில்லை. உன்னை அவருக்கு முற்றாய் ஒப்புக் கொடு. தன்னைத் தான் அறிந்தவனே மிகப்பெரிய தெய்வம்.

குரு தற்போதத்திற்கு மேலானவர். அவர் வழியாகத் தெய்வ தத்துவத்தின் அம்சங்களெல்லாம் பிரகாசிக்கின்றன. அவர் சிவனல்லவா? சிவன் தானும் பரமகுருவின் ஓர் அம்சமே. உன்னுடைய குருவே சிவமென்றும், இஷ்ட தெய்வமென்றுந் தியானஞ் செய்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஸ்ரீ ஞானசேகரம் அவர்கள்

எம்முடன் இருந்து மறைந்துபோன நல்லோர்களின் வாழ்க்கையினை இடையிடையே சிந்தித்துப் பார்ப்பது எமக்கு நன்மை பயக்கும். இந்தச் சிந்தனையின் பயனாக எங்களின் சொந்த வாழ்க்கையை முன்னேற்றுவதற்குப் பல வழிகாட்டல்களையும் முன்னுதாரணங்களையும் நாம் அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளமுடியும். யாழ்ப்பாணத்தில் இருந்த சத்யசாயி பக்தர்களுள் ஸ்ரீ ஞானசேகரம் அவர்கள் தலைசிறந்தவர் என்று கூறின் மிகையாகாது. யாழ்குடா நாட்டிலுள்ள சத்ய சாயி நிலையங்களின் சரித்திரத்தில் ஸ்ரீ ஞானசேகரம் அவர்களின் காலம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பல வருடங்களுக்கு முன்பு (1940 களில்) பழைய யாழ்ப்பாணக்கச்சேரி விறாந்தையில் சக D.R.O ஆக இருந்த திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள், உருவத்தில் உயரமான மனிதர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அவ்வழியே சென்று கொண்டிருந்த என்னை மறித்து "இவரைத் தெரியுமா" என்று கேட்டு "இவருடைய பெயர் ஞானசேகரம் இவரை நன்கு அறிந்தவர்கள் "கண்ட கோயிலெல்லாம் நின்று கும்பிடும் ஞானசேகரவள்ளல்" என்று, சொல்வார்கள்", என்று கூறி அவரை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். இந்த அடைமொழிச் சொற்களுக்கு நான் விளக்கம் கேட்டு அறிந்துகொண்டேன். பல சந்தர்ப்பங்களில் நல்லூர்க்கோயில் ஆறுமுகசாமியின் தெற்கு வாசலில் ஞானசேகரம் அவர்களை பழையறோட் அருகில் நின்று வணங்கிக்கொண்டிருப்பதை அவதானித்திருக்கிறேன். இது அவர் யாழ்ப்பாணம் பிஸ்கால் காரியாலயத்தில் வேலை செய்த காலம்.

அவர் கலைகளில் ஆர்வம் உள்ளவர் என்பதை அறிந்துகொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. சென் ஜோன்ஸ் கல்லூரி மேடையில் பல மக்கள் முன்னிலையில் ஞானசேகரம் அவர்கள் சிவதாண்டவம் ஆடிய காட்சி எனக்கு இப்போதும் நன்கு நினைவில் பதிந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1976ம் ஆண்டு சத்தியசாயி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பாலவிகாஸ் கல்வித்திட்டம் இந்த நிலையங்களில் ஒரு அம்சமாக இருந்தது. 6 வயது தொடக்கம் 14 வயது வரைக்கும் பாலவிகாஸ் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஆசிரியர்களுக்கு குருவாக ஞானசேகரம் அவர்கள் விளங்கினார். அந்த நேரம் பாலவிகாஸ் மாணவர்களுக்குப் பல சிறிய நாடகங்களை எழுதிப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார்.

பாலவிகாஸ் பிள்ளைகளுடைய கல்வியில் ஞானசேகரம் அவர்களின் பங்கைப்பற்றி சற்று விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். விவேகமுள்ள, முன்னேறி

வரக்கூடிய பிள்ளைகளைத் தெரிவுசெய்து, அவர்களுடைய வீடுகளுக்குத் தானே சென்று அவர்களுக்கு விசேட பயிற்சி கொடுப்பார். பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, அவர்களின் பெற்றோருக்கும் பயிற்சியளிப் பார். அப்பேற்பட்ட பிள்ளைகள் இப்போது நல்ல நிலையில் இருக்கிறார்கள். பிள்ளைகள் படிக்கவேண்டிய சுலோகங் களை தானாகப் பாடிக் காட்டி, அதன் கருத்துக்களையும் கூறி, அவற்றை ஒலிநாடாவில் பதிந்து வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சத்யசாயி சேவா சமித்தியில் இப்போது கிரமமாக பகவானின் போதனைகளைப் பற்றிக் கல்விவட்டம் நடைபெறுகிறது. இந்த சமித்தியின் தலைவராக நான் இருந்தபோது ஸ்ரீ ஞானசேகரம் அவர்கள் இந்தக் கல்வி வட்டத்தை நடாத்திவந்தார். ஒரு நண்பருடைய வீட்டு விறாந்தையில் நடந்து கொண்டு வந்தது. ஒருநாள் கல்வி வட்டத்தின் முடிவில் ஒரு செய்தியைச் சொன்னார். சுற்றாடலின் அதிர்வுகள் (Vibration) நல்லவையாக இல்லாதபடியால் அடுத்த வாரம் தொடக்கம் சமித்தி மண்டபத்திற்கே கல்விவட்டத்தை மாற்றும் படி கேட்டார். அவ்வாறே செய்யப்பட்டது.

அவர் யாகங்கள் செய்வதில் மிகவும் ஆர்வமுள்ளவர். ரத்மலானையில் அவர் வசித்துவந்தபோது அங்கு நடைபெற்ற ஒரு யாகத்திற்கு என்னையும் அழைத்திருந்தார். யாகம் முடிந்தபின்பு ரத்மலானையில் உள்ள தாளையன் சுவாமியின் (ஒரு இஸ்லாமிய ஞானி) சமாதிக்கு என்னை அழைத்துச் சென்று காண்பித்தார். இதே போன்று கொக்குவிலில் உள்ள தனது வீட்டிலும் யாகங்கள் நடாத்தியுள்ளார். அவைகளிலும் நான் பங்குபற்றியுள்ளேன்.

திருகோணமலையில் 1968ம் ஆண்டு தொடக்கம் 1971ம் ஆண்டு வரைக்கும் நான் மேலதிக அரசாங்க அதிபராக கடமை ஆற்றியுள்ளேன். அப்போது ஞானசேகரம் அங்கு கடமை ஆற்றிக்கொண்டிருந்தார். என்றும் மறக்கமுடியாத ஒரு பக்தர்கூட்டம் அங்கு உருவாகியது. அதில் இளைப் பாறிய Customs officer குணசேகரம், பண்ணிசைப் புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம், ஞானசேகரம், ஏகாம்பரம் போன்றவர்கள் பங்குபற்றிக் கொண்டிருந் தார்கள். திருகோணமலையில் உள்ள ஞானசேகரம் வீட்டிலே பல பஜனைகள் நடைபெறும். அவருடைய பெண் பிள்ளை கள் இனிமையாகப் பாடுவார்கள். குணசேகரம் அவர்களுடைய வீட்டிலும் அடிக்கடி கூடுவோம். பஜனையின்போது குணசேகரம் மத்தளம் வாசிப்பார்கள். முடிவில் அவருடைய பாரியார் எங்கள் எல்லோருக்கும் எண்ணெய்ப்புட்டு வழங்கு வார்கள்.

ஞானசேகரம் அவர்கள் நல்ல சாயி பக்தனாக இருந்தும் பிரசாந்தி நிலையத் திற்குச் சென்று பகவானுடைய தரிசனத் திற்கு முயற்சி எடுக்கவில்லை. நான் அதுபற்றிக் கேட்டதற்கு தனக்கு அது தேவைபோலத் தெரியவில்லை என்று கூறிவிட்டார். நான் வற்புறுத்தியதன் பிரகாரம் ஒருமுறை சென்றார். திரும்பி வந்தபோது என்ன நடந்தது என்று கேட்டேன். "போனேன் பார்த்தேன் வந்து விட்டேன்," என்று கூறினார். விளக்கம் கேட்டபோது பகவான் தன்னை தொலைவில் இருந்து பார்த்துக் கையினை உயர்த்தி ஆசிர்வதித்தார். அவ்வளவும் போதும் என்று நான் திரும்பிவிட்டேன், என்று கூறினார். யாழ்ப்பாணம் வந்தபின்னர் பகவானோடு தான் ஒரு காறில் பயணம் செய்த கனவினை என்னிடம் கூறினார்.

பிற்காலத்தில் அவருடைய வாழ்க்கை ஒரு சன்னியாசியினுடைய வாழ்க்கையாக மாறிவிட்டது. தனக்கு எல்லாவற்றிலும் கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டார். உணவிலும் பின்பு உடையிலும் மற்றும் நாளாந்த தேவைகளிலும் கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டார். இருசோடி உடை களை மட்டும் வைத்துக்கொண்டார். அதைத் தானே தோய்த்து அணிந்து கொள்வார். பூரண பிரமச்சரியம் அநுஷ்டித் தார். யாழ்ப்பாணத்தில் எல்லாப் பயணங் களையும் துவிச்சக்கர வண்டியிலேயே மேற்கொண்டார்.

சித்தங்கேணியில் தீராத நோய்வாய்ப் பட்டிருந்த ஒரு இளைஞனை அடிக்கடி போய்ச் சந்தித்து, அவனை ஒரு உண்மை யான ஆத்மீக முன்னேற்றம் உள்ள இளைஞனாக மாற்றினார். அப்பையனுக்கு கை, கால்கள் குறண்டிப்போயிருந்த வேளையில் அவனுக்குப் பகவானைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அதனை ஒருவராலும் தணிக்க முடிய வில்லை. பல கஷ்டங்களுக்கு மத்தியில் அவன் பிரசாந்தி நிலையத்திற்கு சென்றுவிட்டான். அங்கே பகவானின் பொற்கமல பாதங்களை அடைந்துவிட்டான். ஈமக்கிரிகைகளும் அங்கேயே நடை பெற்றது. அந்த இளைஞனின் ஆத்மீக சாதனைகளை ஞானசேகரம் புத்தக ரூபத் தில் வெளியிட்டிருக்கிறார்.

சத்யசாயி நிறுவனத்தில் ஞானசேகரம் ஒரு பதவியும் வகிக்கவில்லை. வகிக்க விரும்பவுமில்லை. ஆனால் பகவானின் அடிப்படைக் கொள்கைகளுக்கு விளக்கம் கொடுக்கக்கூடிய தத்துவஞானியாக விளங் கினார். அவருடைய ஞாபகசக்தி அபார மானது. அவருக்குப் புத்தகங்கள் கொடுத்தால் எல்லாவற்றையும் உடனே ஏற்றுக்கொள்ளமாட்டார். சில பக்கங்களைத் தட்டிப்பார்த்து அவை நல்லதெனத் தன் மனதிற்குப்பட்டால் மாத்திரமே ஏற்றுக் கொள்வார். கண்டதெல்லாம் வாசிப்பதில் பயனில்லை என்பது அவருடைய கொள்கை. அனேகமாக இரு வாரங்களுக்கு ஒருமுறையாவது எனது வீட்டிற்கு வந்து பகவானின் போதனைகளைப்பற்றிக் கலந்து உரையாடுவார்.

ஒருமுறை யாழ்ப்பாணம் சத்யசாயி சமித்தியில் நடைபெற்ற பகவானின் பிறந்ததின விழாவிற்கு உபயகாறன், ஒரு புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவானை மங்கள இசைக்காக அழைத்திருந்தார். நாங்கள் அனுமதி கொடுத்தோம். அதற்கு ஸ்ரீ ஞானசேகரம் அவர்களும் வந்திருந்தார். முடிவில் ஞானசேகரம் என்னைப் பார்த்து "அடுத்தமுறை கடலைக்காறியும் வருவா போலை கிடக்கு" என்று கூறினார். அதாவது ஆத்மீக நிலையத்தில் ஆடம்பரங் களுக்கு இடங்கொடுக்கக்கூடாது என்பது அவரது கொள்கை.

யாழ்ப்பாணம் சத்ய சாயி சமித்தியில் "பாகவத முற்றோதல்" நிகழ்ச்சியை அவர் தொடக்கிவைத்தார். இப்போதும் அது தொடர்ந்து நடைபெறுகிறது.

வனவளப் பாதுகாப்பு இலாகாவில் (Forest Department) அவர் பிரதம லிகிதராக கடமையாற்றியபோது நேர்மைக்கு எடுத்துக்காட்டானவர் என அவரை எல்லோரும் பாராட்டுவார்கள்.

ஸ்ரீ ஞானசேகரத்தின் வைராக்கியம் (detachment) அவருடைய மகன் குகஞானி உத்தியோகத்தைத் தூக்கியெறிந்த சம்பவத்தில் நன்றாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குகஞானி ஹற்றன் நஷனல் வங்கியில் 2nd officer ஆக இருந்துவந்த காலத்தில் நல்ல இடத்தில்

கலியாணமும் பொருந்தி எல்லாம் ஆயத்தமாக இருந்தது. ஒருநாள் ஞானசேகரம் என் வீட்டுக்கு வந்து சொன்னார் "குகஞானி வங்கியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டதாக. என்ன செய்வது? சிறிதுநேரம் யோசித்தோம் இராஜினாமாவின் காரணம் துறவறம் - என்று அறிந்துகொண்டோம். குகஞானி யின் தீர்மானத்தை மாற்றவேண்டும் என்றும், அதற்கு வளிவகைகளையும் ஆராய்ந்தோம். முடிவில் ஞானசேகரம் உடனே கொழும் புக்கு போகவேண்டும். இராஜினாமாக் கடிதத்தை வாபஸ் பெறச்செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். அப்படியே நடந்து முடிந்தது. ஆனால் இராஜினாமாவை வாபஸ் பெறுவதில் சிக்கல். ராஜினா மாவை நிர்வாகம் ஏற்றுக்கொண்ட பின் அதை வாபஸ் பெறுவதானால் இயக்குனர் சபையின் அங்கீகாரம் பெறவேண்டும். அது இலகுவான காரியம் அல்ல. அப்பொழுது Personnel Manager ஆக இருந்த திரு.வன்னியசேகரத்தை நாடி னோம். அடுத்த இயக்குநர்சபைக் கூட்டத்தில் இதைத் தீர்மானிப்பதற்கு திரு.வன்னியசேகரத்தின் உதவியுடன் (இவர் இலங்கை சத்ய சாயி நிறுவனங்களின் தற்போதய மத்திய இணைப்பாளர்) ஒழுங்குகள் செய்யப்பட்டது. இராஜினாமா கடிதத்தை வாபஸ் பெறுவதற்கு அனுமதி கொடுத்து மீண்டும் வங்கியில் அதேவேலை செய்த இடத்திற்கு நியமனம் கொடுக்கப் பட்டது. சிறிது காலத்தின் பின் ஸ்ரீ ஞானசேகரம் என் வீட்டிற்கு வந்து மகன் குகஞானி திரும்பவும் இராஜினாமா செய்துவிட்டதாகவும் அந்த விடயத்தில் தான் இனிமேல் தலையிடுவதில்லை என்றும் ஒருவித பரபரப்பும் இல்லாமல் அறிவித்தார்.

குகஞானி யாழ்ப்பாணம் வந்தபின் சத்யசாயி நிறுவனத்தின் ஒரு முக்கிய தமிழ் மொழிபெயர்ப்பாளராக விளங்கினார். குகஞானியினுடைய மனப்பாங்கு எங்க ளுக்கு நன்றாக விளங்கிற்று. சொற்ப காலத்தின் பின் பிரசாந்தி நிலையத்திற்குச் சென்று பகவானின் ஆச்சிரமத்திற்கருகே இருக்க விரும்புவதாகக் கூறி பிரயாணத் திற்கு ஏற்பாடுகள் செய்தார். பிரசாந்தி நிலையத்திற்குக் கிழக்கேயுள்ள சித்திரா வதி நதிக்குச் செல்லும் றோட் அருகே ஒரு வாடகை அறையில் வசித்து வந்தார். இலங்கை சத்யசாயி நிலையங்களின் மத்திய இணைப்பாளர் என்ற முறையில் நான் வருடத்திற்கு இரண்டு முறை (ஆடி, கார்த்திகை மாதங்களில்) பிரசாந்தி நிலையத்திற்குச் செல்வது வழக்கம். குகஞானி என்னுடைய அறைக்குத் தவறாமல் ஒவ்வொரு நாளும் வருவார். புதிதாக வெளியீடு செய்யப்பட்டிருக்கும் நூல்களைப்பற்றிப் பேசுவார். மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டார்.

ஒருமுறை பிரசாந்தி நிலையம் சென்றபோது எங்கள் இருவருக்கும் பொதுவான ஒரு நண்பர் சொன்னார் "குகஞானி உடுத்த உடுப்புடன், தான் இருந்த அறையை விட்டுக் காசிக்குச் சென்றுவிட்டார் என்று. அது ஒரு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது. ஒரு வட இந்திய நண்பர் இதை ஊர்ஜிதம் செய்தார். தான்தான் தன்னுடைய காறில் குகஞானியை புக்கப்பட்டணம் புகையிரத நிலையத்திற்குக் கொண்டு சென்று விட்டதாகவும், தானே காசிக்குப் பயணச் சீட்டு எடுத்துக் கொடுத்ததாகவும் கூறினார். இவை ஞானசேரம் காலமாகியபின் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். இதுவரை குகஞானி பற்றி எதுவித தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை. இந்த நினைவு உரையில் ஞானசேகரம் அவர்களின் பற்றற்ற தன்மையினை விளக்குவதற்காகவே இதனைக் கூறினேன்.

ஞானசேகரம் அவர்களின் மறைவுக் குப் பின் அவருடைய நெருங்கிய பக்தர்கள் தங்களுடைய குருவாக அவரை ஏற்றுக்கொண்டு "சாயி ஞானசேகரம்" என்ற பெயரையும் கொடுத்து தங்களுடைய பஜனை நிலையத்தில் அவருடைய படத்தையும் வைத்து வணக்கம் செய்வார்கள்.

அவர் பல கட்டுரைகள் எழுதியி ருக்கிறார். நூல்களையும் எழுதியுள்ளார். "Twards Devinity with sai" என்ற நூல் வேறு புத்தகங்களோடு பகவானுடைய திருக்கரங்களால், ஒரு பிறந்ததின விழாக்கொண்டாட்டத்தின்போது வெளியீடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சாயி நிலையங்களில் பகவான் சத்யசாயி பாபாவின் போதனைகளை சரியாக தூய்மையுடன் விளக்கம் கொண்டிருப்ப வர்கள் பலர் என்று சொல்லமுடியாது. ஞானசேகரம் அவர்களுடைய விளக்கங்கள் பூரணமாக இருந்தது. அந்த விளக்கத்தை மனதில் பதித்துக்கொண்டு ஆத்மீக சாதனைகள் செய்யும் பக்தர் குளாம் தாவடியில் இயங்கிக்கொண்டு வருகிறது. ஸ்ரீ ஞானசேகரம் அவர்கள் பகவானின் அடி சேர்ந்த 12ம் வருட பூர்த்தியை ஒரு பெரும் சாதனை நிகழ்ச்சியாக செய்ய விரும்பி ஞாபகார்த்த நூல் ஒன்றையும் வெளியிட முன்வந்துள்ளார்கள். அவர்களுடைய முயற்சி நல்ல பலனைத் தரவேண்டும், பகவானின் ஆசீர்வாதங்கள் நிறையக் கிடைக்க வேண்டும் என்று வேண்டி எனது சிறிய நினைவுக் குறிப்பினை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

சாயிராம்

செ.சிவஞானம்,
முன்னைநாள் இலங்கை
சத்திய சாயி நிறுவனங்களின்
மத்திய இணைப்பாளரும்
தற்போதைய ஆலோசகரும்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சரியை, கிரியை, யோகம், ஞானம்

தாயினும் நல்ல தலைவர், கோயிலும், சுனையும், கடலுடன் சூழ்ந்த கோணமாமலை நகரில்..... அலைபாயும் எண்ணங்கள் வந்து மனஉறுதி என்னும் மாமலையை அசைக்க முடியாமல் திரும்பும் அற்புதமான இயற்கையின் காட்சி. அந்த உறுதியின் உச்சியில் ஏற்படும் மன அமைதியில், இறைவனின் வாசம். ஆம் தென்கைலாயம் எனப்படும் இராவணனின் செருக்கை ஒழித்ததலம். திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் அகக்கண்ணால் கண்டு பாடல் பெற்ற தலம். சுவாமி சிவானந்தரின் ஆசியுடன் பிரதிஷ்டை செய்யப்பெற்ற மூலலிங்கம். இப்படி எத்தனையோ எத்தனையோ முற்கால, தற்காலச் சிறப்புகளைத் தாங்கி நிற்கும் கோணேஸ்வரரின் முன்னால்..

பொன்னார் மேனியனாய், புனித நீறும், மஞ்சள் சந்தனமும் பூசி மேலும் பொலியும் வண்ணம் திருவாசகமும், யோகசுவாமி களின் நற்சிந்தனையும் பாடிய வண்ணம் கையில் இறைவனுக்குச்சாற்றும் படியானமாலையுடன் நிற்பவர் தான் ஞானசேகரம் ஐயா.

பெயர் கூட எப்பவோ முடிந்த காரியம் தான். வேலை செய்யும் இலாகா காட்டிலாகா. பிற்காலத்தில் அதுவே தெய்வீகவழி காட்டும் இலாகா ஆகியதும் எப்பவோ முடிந்த காரியம் தான். சரியை, கிரியைகளில் ஈடுபடும் நேரம் அக்காலம்.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை திருமலை நகரின் மத்தியில் அமைந்துள்ள சிவன்கோயிலின் முன்னால் சின்னத்துரைப் பரியாரியார் வீட்டில் திவ்விய ஜீவன சங்கத்தினரின் பஜனை, "நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" என்று திருவாசகம் சிவஞானம் ஐயாவின் பாட்டு காதில் விழுகின்றது. ஆண்டு1968. பொருள் விளங்கப் பாடியதால் புகுகின்றது அகத்தினுள். வீதியால் சென்றவர் வீட்டிற்குள் வருகிறார்.

மறுநாள் சிவஞானம் ஐயாவின் வீடு தட்டப்படுகின்றது. கதவு திறக்கப்பட, வேட்டி, நஷனலுடன் நெற்றி நிறைய வீபூதி. சிவஞானம் ஐயா வரவேற்கின்றார். உள்ளே வந்தவர்..... வ்ணக்கஞ் சொல்ல சிவஞானம் ஐயாவிற்கு புரிந்து விட்டது. பாம்பின் கால் பாம்பறியும்.

தன்னை அறிமுகப்படுத்துகிறார். அன்று திருவாசகம்தான் விருந்துப் பரிமாற்றம். முதற்பரிமாற்றமே தேனாய், இன்னமுதமாய் தித்திக்கின்றது. காரணம் பெயர் ஒற்றுமை. பாடலும், கருத்துமாக அன்று ஒன்றியது தான். பல அன்பர்களை மேலும் மேலும் ஒன்று கூட்டியது.

சிவஞானம் ஐயாவின் வீட்டு விறாந்தையில் பத்மினி சந்தனக் குச்சிகள் வாசனை பரப்ப, இரண்டு ஞானங்களும் சேர்ந்து ஒரு ஞானத்தைப்பற்றி, பலரும்

கனவுகாணும் இரவை விழிப்பு நிலையில் கழிப்பர். களிப்பர்.

அவர்கள் இருவரினதும் நெஞ்சங்களில் வராத ஞானிகள் இல்லையெனலாம். புத்தகங்களும் கைமாறும், பஜனைப் பயிற்சி நடக்கும்.

அப்படி சிவஞானம் ஐயாவால் கொடுக்கப்பட்ட புத்தகங்களிலொன்று ஹாவார்ட் மார்பெட் எழுதிய "சாயி பாபா அற்புத புருஷர்" அதையும் தான் வாசித்துப் பார்ப்போமே என்று கொண்டுபோனவர் தான் பிற்காலத்தில் அதேமயமானார்.

ஒவ்வொரு வெள்ளி அதிகாலையும் முத்துக்குமாரசுவாமி கோயிலிலிருந்து புறப்படும் நகர சங்கீர்த்தனத்தில் ஆரம்பத்தில் பங்கு பற்றிய ஏழு பேர்களில் ஞானசேகரம் ஐயாவும் ஒருவர். பின்னர் அதுவே சாயி பஜனையிலிருந்து தேவார பஜனையாகுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்களில் எங்கள் சாயி சிவஞானம் ஐயா, ஞானசேகரம் ஐயா அவர்களுக்கும் பங்குண்டு. அதனால் அடியார்கள் பெருகினர். இறைநாமத்தைப் பருகினர்.

அன்னை காளியின் கோயில் அப்பன் கோணேசரைப் பார்த்தபடி அமைந்திருக்கும் கோலம். அவள் சந்நதியை வந்தடையும் நகர சங்கீர்த்தனம் முற்றவெளி கடந்து கோட்டைக்குள் புகுந்து கோணேசரை அடையும் வரை தனிய "ஓம் நமச்சிவாய" என்ற நாமம் மட்டுமே திரும்பத் திரும்ப ஒலிக்கும். அதில் ஞானசேகரம் ஐயாவும் பலத்த குரலில் நாமத்தைச் சொல்லித் தருவார்.

"பரவெளியெங்கும் நாமம் வியாபித்துள்ளது. அது இதயமாகிய கோட்டைக்குள்ளும் புகுந்து அங்கு ஆத்மாவாகிய இறைவனை உணரவைக்கின்றது" என்பார் ஐயா.

இதெல்லாம் மீண்டும் கோணேசரின் பூசை கண்டு திரும்பி மலையிலிருந்து வருகின்றபொழுது சாயி சிவஞானம் ஐயாவின் உத்தியோக பூர்வவாசஸ் தலத்தில் தேநீர் அருந்தி வீடு திரும்பும் வரை தெய்வீகக் கருத்துக்கள் அலைபாயும். இப்படியாக, சரியை, கிரியையிலிருந்து யோகம் பிறந்தது. கேட்கின்ற எங்களுக்கும் யோகம் தான்.

திருவாசகத்தில் சேர்ந்த அன்பர்கள் சாயியையும் சார்ந்தவர்கள் ஆகினர். பகவானின் 40வது பிறந்ததின விழாவை ஞானசேகரம் ஐயாவின் வீட்டில் காலையிலிருந்து மாலைவரை சாதனையாகக் கொண்டாடினர். அதுவே ஞானசேகரம் ஐயாவின் முதல் முழுநாள் சாதனை நிகழ்ச்சி.

இந்தக் காலங்களில் வாரத்தில் இரண்டு நாள் பஜனை. ஒன்று வியாழக்கிழமைகளில் சாயி பஜனை. மற்றது வெள்ளிக்கிழமைகளில் திவ்விய ஜீவனசங்க பஜனை. பௌர்ணமி தினங்களில் காளி கோயில் பஜனை. மற்றும் திருவாசகம் சிவஞானம் ஐயா பங்கு கொள்ளும் பஜனை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார்.

அந்தக் காலங்களில் அவ்வப்போது இந்தியாவிலிருந்து விஜயஞ்செய்த சிவபால யோகிமகராஜியை சந்தித்தார். திவ்விய ஜீவன சங்க ஸ்வாமிகள் சச்சிதானந்தா, சிவானந்தா, சாந்தானந்த மற்றும் சுத்தானந்தா பாரதியார் ஆகி யோரின் தர்ஷன், சம்பாஷன் ஆகியனவும் கிடைத்தது.

எனினும் ஒன்றைப் பிடிக்க வேண்டும். ஒன்றிப் பிடிக்க வேண்டுமென்ற நிலைக் கமைய சத்தியசாயீசனைப் பிடித்தார். நெஞ்சில் வடித்தார்.

அந்த வடிப்பே பின்னர் தேவார சாதனைகளாகப் பரிணமித்தது.

தேவார, திருவாசகங்களினூடாக சாயியின் கருத்தைச் சொல்லவைத்தது. இத்தகைய யோகமே பின்னர் ஞானமா கியது.

அந்த ஞானமே திருவாகி இன்ற எவும், பல சாயி அன்பர்களுக்கு சாயியின் உண்மைநிலையை உணர வழிகாட்டு கின்றது.

நாமமே உருவாக்கும், நம்மையே திருவாக்கும்.

இது அவன் திரு உரு இவன் அவன் எனவே எங்களை ஆண்டு கொண்டு இன்னருள் புரியும்...

*பண்ணிசைப் புலவர் வே. சிவஞானம் குடும்பத்தினர்.*

அன்பே சாயி. கருணையும், இரக்கமுமே வடிவானவர் அவர். உங்கள் அனைவரின் இருதயங்களின் உள்ளும் என்றும் அவர் வீற்றிருக்கின்றார். அவரை நம்புவதென்பதன் அர்த்தம், பதற்றம், பயம், சந்தேகங்கள், அனைத்திலிருந்தும் விடுபட்டிருத்தலே. உங்களுடைய அனைத்தும் நீங்களும் அவரே. தங்கியிருப்பதற்கு இத்துணை ஈஸ்வனே உங்களிடம் இருக்கையில் எதனைப்பற்றியேனும் நீங்கள் ஏன் பதற்றமுற்று அஞ்ச வேண்டும்? அவரது பேருத்தரவாதம் என்றும் உங்களைப் பேணிக்காத்து உறுதி, பலம், சாந்தி, சந்தோஷம் என்பனவற்றை உங்களுள் புகுத்தும். "பாருங்கள்! பிறிதெதனையும் சிந்தியாது என்னேயே வழிபடுவோருக்கு நான் பூரண பாதுகாப்பளிக்கின்றேன்." என்று அவர் கூறுவதை, அனைத்தையும் உங்கள் நன்மைக்காகவே அவர் செய்கின்றார் என்ற இவ்வுண்மை மீது பூரண நம்பிக்கை நீங்கள் கொண்டிருப்பின் எந்த சூழ்நிலையுமே இருதயங்களில் வீற்றிருக்கும் கடவுளே உலகின் அதிவல்லமை கொண்ட ஒரேயொரு கர்த்தா. வெறும் பொம்மைகளே நீங்கள். தனது சங்கல்ப்பத்திற்கேற்றவாறு உங்களை அவர் ஆட்டுவிக்கின்றார் எதற்காகவென நீங்கள் வினவமுடியாது. கடவுளிடம் சரண்புகா மனத்தினாலேயே கஸ்டங்களும், கவலைகளும் உருவாகின்றது. புறக்காரணிகளாளன்று.

-பாபா

ஆதாரம்:-பிரேமதாரா

ஓம் ஸ்ரீ சாயிராம்

# திரு.ஞானசேகரம் குகஞானி அவர்கள் 01.06.1993 அன்று சாயி இல்லத்தில் நிகழ்த்திய சத்சங்க உரை

இந்த உலகமெல்லாம் சூரியனுடைய கடுமையான வெக்கையினால் வறண்டு போய், தாவரங்கள் உயிரினங்களெல்லாம் காய்ந்து போய் தாகத்துக்காக ஏங்கி நிற்கிற நிலைமையை சமுத்திரத்தில் இருக்கிற ஒரு துளி அவதானித்தது. அது அந்த உயிர்களினுடைய தாகத்தைத் தணிப்பதற் காக, அந்த சமுத்திரத்தினுள் உள்ள அத்துளி கருணையான அன்பினால் மேகமாக வானத்தில்ப் போய் மழையாகப் பொழிந்து ஆறுகளும் சிற்றோடைகளுமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. எங்கும் எல்லோர்க்கும், ஜீவராசிகள், உயிர்கள், மரம், செடி, கொடி, மிருகங்கள் எல்லாவற்றினதும் தாகத்தைக் தணித்துக் கொண்டு, தான் எங்கிருந்து வெளிப்பட்டு வந்ததோ அந்த சமுத்திரத்தை நோக்கி அது செல்கிறது. அந்தச் சமுத்திரத்தினுள் உள்ள துளி தான் எங்கிருந்து பிறந்து வெளிக்கிட்டு வந்ததென்பதை அது மறக்க வேயில்லை. தான் பிறந்த இடத்துக்குப் போய்ச் சேருவேன் என்ற பூரணமான நம்பிக்கை அத்துளிக்கிருந்தது. எனவே எல்லாவற்றினுடைய தாகத்தையும் தணித் துக் கொண்டு தான் போகும் வழியில் வந்த தடைகளையெல்லாம் தாண்டி கடைசியில் அந்த சமுத்திரத்திலேயே இரண்டறக் கரைந்து விடுகிறது. அந்தச் சமுத்திரத்துளி தான் சாயி ஞானசேகரம் ஐயா. சேகரம் என்றால் சமுத்திரம் ஞானம் என்றால் அந்தப் பரமாத்மா என்ற சமுத்திரத்தைப் பற்றிய விழிப்புணர்வு - அனுபவம். தான் எங்கிருந்து புறப்பட்டு வந்ததோ அங்கு போய்ச் சேர்ந்து கொண்டது.

இயேசுகிறிஸ்துநாதர் சொல்லியிரு க்கிறார் தான் கடவுளினால் அனுப்பப்பட்ட தூதுவன் என்று. ஆனால் இந்தத் துளியோ அப்படிச் சொல்லவில்லை. ஏனென்றால் அந்தக்கடவுளே பகவானாக இன்று மனித வடிவெடுத்து வந்திருக்கிறார். ஆனபடியால் சொல்ல வேண்டிய தேவை அதற்கு இருக்க வில்லை. எந்தக் கடவுளை இயேசு கிறிஸ்துநாதர் காட்ட வந்தாரோ அந்தப் பரமபிதாவை, சுவாமியை தன்னுடன் அருகிலிருந்து எல்லோர்க்கும் காட்டித்தந்த பின் திரும்பவும் அந்த சமுத்திரத்திலேயே அவர் ஐக்கியமாகிவிட்டார்.

இயேசு கிறிஸ்துநாதருடைய தாய் தந்தையரைப் போலவே இவருடைய தாய் தந்தையரும், ஆத்மீகத்தில் நாட்டமுடைய வர்கள். இவர் ஒரு ஞானியினுடைய அனுக் கிரகத்தால்ப் பிறந்து சிறு வயதிலேயே தெய்வீகத் தன்மையுடன் காணப்பட்டார். தாய் தந்தையர் ஏற்கனவே தெய்வீக ஒளியுடன் கூடிய இவருக்கு ஆத்மீகத்தைக் கற்றுக் கொடுத்தமையினால் மேலும் தெய்வீக இயல்பு இவரில் பிரகாசித்தது.

இயேசு கிறிஸ்து நாதர் மனித சமுகம் முழுவதற்கும் தன்னுடைய கருணையைப் பொழிவதற்காக எவ்வளவோ காலமாக கடும்தவம் செய்து "நான் யார்?" என்ற

விசாரணையில் பன்னிரண்டு வருடங்கள் ஈடுபட்டார். சாயி ஞானசேகரம் ஐயாவும் சின்ன வயதிலிருந்தே, உத்தியோகம் பார்க்கும் போதும், குடும்ப வாழ்க்கையில் இடுபட்டிருந்த போதும் இவருடைய இலட்சியம் தீவிரமாக தான் யார் என்ற விசாரணையிலேயே இருந்தது. எவ்வளவோ சாதுக்களையெல்லாம் இவர் சந்தித்து இந்த விசாரணையைப் பற்றி கலந்துரையாடி இருக்கிறார்.

இவர் திருகோணமலையில் இருந்த பொழுது, இவருடைய வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு காளி கோவிலுக்கு இவர் போய் வருவது வழக்கம். ஏனென்றால் அவ்வூர் மக்கள் அந்தக் காளியை மிகுந்த பயத்தின் நிமித்தமே வழிபட்டு வந்தார்கள். அந்தக் காளிஅம்மன் இரவு நேரங்களில் நடமாடுவதாகவும், அக்கோயிலுக்கு அருகில் மா இடித்தல், மிளகாய்த்தூள் இடித்தல், பெண்கள் தலையை விரித்துக் கொண்டு கோயிலுக்கருகால் செல்லுதல் என்பன காளி அம்மனுக்கு கோபத்தை தோற்றுவிப்பதாகவும் அவ்வூர் மக்கள் பயந்து வந்தனர். சாயி ஞானசேகரம் ஐயாவுக்கு தான் அப்படிப்பட்ட காளியை தரிசிக்க வேண்டும், காணவேண்டும் என்று அந்தக் கோயிலுக்குப் போய் வரலானார். அக்கோயில் முற்றத்தில் பல மணிநேரங்கள் தியானம் இருப்பார். ஆனால் அவருக்கு மக்கள் பயப்படுவதற்குரிய காரணங்கள் எவையும் தென்படவில்லை. இதனை அவதானித்த அவர் அவ்வூர் மக்களுக்கும், காளியைத் தரிசிக்க வருபவர்களுக்கும் மெதுவாக உண்மையான கடவுள் யார்? என்பதையும் காளி என்ற கடவுள் கருணையுள்ளவ, அன்புள்ளவ நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் செய்யமாட்டா மக்களுக்கிருந்த பிழையான அவிப்பிராயங்களைப் போக்கினது மட்டுமல்லாமல் வெள்ளிக் கிழமைகள் தோறும் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனைகள் என்பன முதன் முதலில் இவரால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இயேசு கிறிஸ்துவினுடைய வாக்கியங்களையெல்லாம் பரிசுத்த வேதாகமத்திலிருந்து படித்து அதற்கு போதிய தரமான விளக்கங்களை சாயி ஞானசேகரம் ஐயா கொடுத்துமிருக்கிறார். கிறிஸ்தவத் துறவிமார் எவ்வளவோபேர் இங்கேயும், வெளிநாடுகளிலேயும் இருக்கிறார்கள். இவர் கொடுத்த விளக்கத்தைப் போல் விளக்கம் கொடுத்ததேயில்லை. இவருடைய விளக்கங்களைக் கேட்ட கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எல்லாம் ஆச்சரியமடைந்தார்கள். அதில் உண்மை இருப்பதையும் அறிந்தார்கள். கிறிஸ்துவினுடைய போதனைகளினால் மிகவும் சந்தோஷப்பட்ட சாயி ஞானசேகரம் ஐயா கிறிஸ்துவின் வாக்கியமான "Judge not evil" என்பதை மிகவும் முக்கியமானதாக வலியுறுத்தி வந்தார். அதாவது பிறருடைய குற்றம், குறைகளை எடைபோட்டு, நியாயம், நீதி, கூறக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் அது எங்களையே எடைபோட்டு தீர்ப்புக் கூறுவதைப் போன்றதாகும். இதேபோன்று கிறிஸ்து வினுடைய "நம்பிக்கை" என்ற சொல்லில் அவருக்கு பெருவிருப்பம். நம்பிக்கை ஒன்றே கரை சேர்க்கும் என்று கூறுவார். இவருடைய வீட்டிற்கு கிறிஸ்துவ துறவிகள், பாதிரிமார்கள் வருகை தந்து பலமணிநேரம் ஆத்மீக சம்பாசனையில் இவருடனும், இவரது குடும்பத்தினருடனும் இணைந்திருப்பார்கள். குடும்பமாக இணைந்து ஆத்மீகம் பேசுவது தற்காலத்தில் மிகவும் அரிது என்று சில துறவிகள் எடுத்துக் கூறுவார்கள்.

ஒரு முறை இலங்கைக்கு போப் பாண்டவர் வருகிறபோது, அவர் ஒரு விஷேசமான போப்பாண்டவர், (இப்போதி

ருப்பவருக்கு, முதல் இருந்தவருக்கு, முதல் இருந்த போப்பாண்டவர்) கிறிஸ்துவினுடைய போதனைப்படி அனேகமாக நடந்தவர். அவருக்கு சுகததாச கலையரங்கத்தில் பெருவரவேற்பு அளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. பெருந்திரளான மக்கள் போப்பாண்டவரை வரவேற்பதற்காக காத்திருந்தனர். அவரை அழைத்துவர இருந்த பாதைகள் அனைத்திலும் பெரும் சனக்கூட்டமாக இருந்தது. இந்த சன நெரிசல்களுக்கு மத்தியில் போப்பாண்டவரைப் பார்ப்பதென்பது மிகவும் சங்கடமாக இருக்கும் என எண்ணிய சாயி ஞானசேகரம் ஐயா, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுக்குச் சென்று, தியான மண்டபத்தில் கண்ணை மூடி தியானத்திலிருந்தார். சிறிது நேரத்தின் பின் அவர் கண்களைத் திறந்து பார்த்தபோது யேசுகிறிஸ்துவினுடைய உருவத்தை, சரியாகப் போப்பாண்டவர் கட்டுநாயக்கா விமானநிலையத்திலிறங்கி தரையில் கால் வைக்கும் நேரத்தில் கிறிஸ்துவினுடைய முழுத்தோற்றத்தை சாயி ஞானசகரம் ஐயா கண்டு அனுபவித்தார்.

இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைஞ்சதற்கு புதிய ஒரு விளக்கத்தை சாயி ஞானசேகரம் ஐயா கொடுத்திருந்தார். எந்தப் புகழ் பூத்த அடிகளும் இன்றுவரை அப்படியொரு விளக்கத்தைக் கொடுக்கவில்லை. கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு எந்தவிதமான பாவமும் அவர் செய்யவில்லை. அவர் ஏதாவது பாவம் செய்திருந்தால் அப்படி அறைந்திருப்பார்கள். ஆனால் ஒருவிதமான பாவமும் செய்யாத அவரை சிலுவையில் அறைந்தார்கள். அது ஏனென்றால் தன்னுடைய வாக்கியங்களையெல்லாம் மக்களெல்லோரும் இப்ப கேட்பார்கள் பின்னர் மறந்து போய்விடுவார்கள், "நான் பரமாத்மாவில் இருந்து வந்தனான் அந்தக் காரியத்தை இவர்களுக்கெல்லாம் பரப்ப வேண்டும். அந்தக் காரியம் பிழைத்துப் போய்விடக் கூடாது. ஆனபடியினால் இந்த வாக்கியங்களெல்லாம் இவர்களுடைய மனத்தில் வாழ்நாள் பூராவிதைக்கப் பட்டிருக்க வேண்டும், முளைச்சு மலரவேண்டும், அப்படியானால் அதற்கு ஒரேயொரு வழி சிலுவையில் நான் மடிவது தான்". "அதை நினைத்து நினைத்து இருதயம் கசிந்து மக்களெல்லாம் கசிவில், நான் சொன்ன வாக்கியங்களை மனதில் இருத்தி அதன்படி வாழ்வார்கள்" அதற்கான தன்னுடைய சொந்த சங்கல்ப்பத்தில் இயேசுகிறிஸ்து இதைச் செய்வித்தார். மற்றும்படி அவர் எந்தப் பாவமும் செய்யவில்லை. இது தான் ஐயா கொடுத்த விளக்கம்.

இயேசுகிறிஸ்து நாதர் இந்த உலகம் என்ற ஆட்டு மந்தையை எப்படி வழிநடத்திக் கொண்டு சென்றாரோ அவ்வாறு தன்னைச் சூழ இருந்தவர்களை யெல்லாம் சாயி ஞானசேகரம் ஐயா தான் இறைபதம் அடையும் வரை அவதானமாக வழிநடத்திச் சென்றார். அவர் பெரும்பாலான நேரத்தை ஆத்மீக சாதனைகளிலும், தன்னுடைய அடியார்களுடனான ஆத்மீக சம்பாஷனைகளிலும் செலவழித்தார்.

சாயி ஞானசேகரம் ஐயா சுவாமியுடன் (பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவுடன்) வைத்திருந்த தொடர்பில் எதையுமே சுவாமியடம் கேட்டது கிடையாது, ஆத்மீக ஞானத்தைக் கூட கேட்டது கிடையாது. அவர் 1974ம் ஆண்டு சுவாமியிடம் புட்டபர்த்திக்குப் போயிருந்த போது சுவாமி அவருடைய நெற்றியில் தன்னுடைய கைகளினாலேயே விபூதி பூசியிருந்தார். கடைசியாக சாயி ஞானசேகரம் ஐயா சுவாமியிடம் சென்றிருந்த பொழுது ஒரு மாதம் புட்டபர்த்தியில் தங்கியிருந்தார். எந்த விதமான எதிர்பார்ப்புகளுடனோ,

பலன்களோ, வரங்களோ கேட்க அவர் போகவில்லை. சும்மா ஒரு அன்புக்காக, சந்தோஷத்துக்காக அவர் போயிருந்தார். அங்கு வாழ்ந்த அவருடைய ஒரு மாத கால வாழ்க்கை ஒரு அற்புதமானது, கிடைத்தற் கரியது என்றே சொல்ல வேண்டும். அங்கு சுவாமிக்கும், ஐயாவுக்கும் இடையில் எந்தவிதமான வெளித்தொடர்பும் கண்ணுக் குத் தெரியத்தக்க வகையில் இருக்க வில்லை. சுவாமியும் தன்னுடைய பாட்டில் வந்து பக்தர்களுடன் கதைத்து விட்டுப் போவார். இவருடன் எந்தவிதமான வெளிப் பேச்சும் இல்லாமல், இவரும் எந்தவிதமான வெளித்தொடர்பும் அவரோடு வைக்க வில்லை. மௌனத்திலேயே இரண்டு பேருடைய உறவாடலும் சம்பாஷனையும் இருந்தது. மௌனத்திலேயே இருவரும் தங்களுடைய ஒன்றான தத்துவத்தை அனுபவித்துக் கொண்டார்கள். அவர் தன்னுடைய பிரயாணத்தை முடித்துக் கொண்டு வந்து இங்கு எல்லோருக்கும் இதையே சொன்னார். அவருடைய நாட்குறிப்பிலும் இது எழுதப்பட்டிருந்தது. தான் புட்டபர்த்தியில் கண்ட அனுபவம் அற்புதமானது, ஆனந்தமானது என்று எழுதியிருக்கிறார். ஆனால் ஒருவிதமான பேச்சும் அவருக்கும் சுவாமிக்கும் இடையில் இருக்கவில்லை. எந்த விதமான தொடுசலும் வெளியில் இருக்கவில்லை. அப்படியி ருந்தும் தன்னுடைய அனுபவம் அதிச யமானது, ஆனந்தமானது என்று எழுதி யுள்ளார்.

மேலும் சுவாமி தன்னுடைய அறுபதாவது வயதில் தனக்கும் நிறுவனங் களுக்கும் இடையில் எந்த விதமான தொடர்பும் கிடையாதென்று சொல்லி யுள்ளார். ஆனால் சாயி ஞானசேகரம் ஐயா 1967ம் ஆண்டு திருகோணமலையில் சாயி சமித்தியொன்றை தானே தொடங்கி தலைவர், காரியதரிசி ஏனைய அங்கத்தவர் களையும் நியமித்து பின், தான் வெளியால் வெறும் ஆலோசகராக இருந்து கொண்டு பஜனை, சத்சங்கம், பேச்சுக்கள் என்ப வற்றை வழிநடத்தினார். அன்று தொடக்கம் இன்றுவரை அவர் அவ்வாறே செயல் பட்டார்.

யார் அப்ப அந்த சாயி ஞானசேகரம் ஐயா? ஒரு இயேசுகிறிஸ்துவைப் போல கடவுளினுடைய தூதுவராக அவர் இருந்திருக்கிறார். அவர் யோகர் சுவாமியிடம் சென்றிருந்த போது யோகர் சுவாமிகள் இவருடைய பெயரை வினவ, ஞானசேகரம் என்று இவர் பதிலளிக்க யோகர் சுவாமியவர்கள் சொன்னார் "இல்லை நீ நல்ல சேகரம்" என்று. பிறகும் சுவாமி பல தடவைகள் திரும்பத் திரும்ப "நீ நல்ல சேகரம், நீ நல்ல சேகரம்" என்று சொன்னாராம். கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார் உலகத்தில் "There is no good, There is neither good nor bad, only absolute good reveals" என்று. உலகத்தில் absolute good ஒன்று தான் உள்ளது. அது தான் கடவுள் என்று, அந்த நல்ல சேகரம் தான் நீ என்று யோகர் சுவாமிகள் சொன்னார். நல்லது கடவுள் ஒன்று தான். சாயி ஞானசேகரம் ஐயாவினுடைய உடல் இப்போ இல்லை, பெயர் இருக்கிறது, சப்தம் இருக்கிறது. கிறிஸ்து நாதருடைய உடல் இல்லை. பெயர் இருக்கிறது. ஆனால் எம்மால் அவரோடு உறவாட முடியாமல் இருக்கிறது. சாயி ஞானசேகரம் ஐயாவுடன் உறவாடுவதென்றால், அவருடைய உடல் இருக்க வேண்டும். உடல் இருந்தால் உயிர் இருக்க வேண்டும். ஆனால் உடலும் இல்லை, உயிரும் இல்லை. அவருடைய படம் இருக்கிறது, கிறிஸ்துவினுடைய படமும் இருக்கிறது. உயிரில்லை. சுவாமி பகவான் இருக்கிறார். அவருடன் நாங்கள் போய் உறவாடலாம். ஆனால் அவருடைய உடலும் இறக்கத்தான் போகிறது, உடலும் போகும். அதற்குப் பின் அவருடைய படம்

இருக்கும். பெயர் இருக்கும். அப்ப யார் இவர்கள், இயேசு கிறிஸ்து யார்? சுவாமி யார்? ஞானசேகரம் யார்? இந்த உடலுக்கும் பெயருக்கும் பின்னால் என்ன இருந்து பேசியது? கதைத்தது? பாடியது? இன்று காணாமல் போயிற்று? அது எங்கே இருக்கிறது? அதைப்பற்றித் தான் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் வாழ்ந்து உபதேசித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். சுவாமியும் அதைத்தான் திரும்பத்திரும்ப 67 வருடங்களாக சொல்கிறார். இன்னுமொரு அவதாரம் எடுத்தும் அதைத்தான் சொல்லப்போகிறார். புதிதாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. எனவே நாங்கள் செய்யவேண்டியதொன்று. அவர் எங்களுக்கு என்ன சொல்லியிருக்கிறார்? அவர் சொன்ன முக்கியமான கருத்துக்கள் "தீதும் நன்றும் பிறர்தர வாரா" இது ஏற்கனவே வேதங்களில் சொல்லப்பட்ட சங்க இலக்கியங்களில் இருந்து அவர் எடுத்துச் சொல்லியுள்ளார். மற்றயது "துன்பத்தின் வித்து விடுதலை" என்ற ஒரு புதுக்கருத்தை அவர் சொல்லியுள்ளார். இதை எந்த ஆத்மீக புத்தகங்களிலேயும் பார்க்க முடியாது.

எனவே சாயி ஞானசேகரம் ஐயாவிற்கு நாங்கள் செய்கின்ற நன்றி என்னவென்றால் அவருடைய போதனைகளின் படி ஒழுகுவதொன்றேயாகும்.

குருவினுடைய சப்தம் மறுமொழி சொல்லுகின்றது, "என் மகனே! கடவுளைக் கூவி அழை. எப்பொழுதும் கடவுளைக் கூவி அழை. அவரை நினை. அவரை மாத்திரம் நினை. அப்பொழுது அளவற்ற சக்தி உன்னைச் சூழ்ந்திருக்கும். அளவற்ற அன்பு உன்னைக் கட்டித்தழுவும். அவர் உன்னுடைய ஆன்மாவுக்கு உண்மை அனுபவம் நிறைந்த சொற்களைச் சொல்லுவார். கடவுள்மேல் உண்மையாகத்தங்கி இருத்தலே சகல தொந்தரவுகளையும் விடுவிக்கும். ஒருவன் பேரன்புக்குத்தன்னை முற்றாக ஒப்படைத்தவிடத்திலேயே உண்மையான சுவானுபூதி மார்க்கம் கைகூடுகின்றது. ஓயாத தியானத்திலேயே அது வெளியாகின்றது. வாழ்வு பொய்யெனத் தோற்றும் பொழுதும், மரணம் வரும் பொழுதும், இருதயம் உபாதியால் உழலும் போதும், மானிடக்கவலைகள் அதிகமாக வருத்தும் பொழுதும் அவை சடத்தைச் சார்ந்தன என்றும், நீ ஆன்மா என்றும் நினைப்பாயாக. நினைக்க முயல்வாயாக. ஒவ்வொரு நாளையும் உன் வாழ்க்கையின் கடைசி நாளாகக் கருதி நடப்பாயாக உன்வாழ்நாளில் ஒவ்வொரு கணமும் அதனைச் சிந்திப்பாயாக. நாள்தோறும் உனது வாழ்வைக் கடவுளுக்கு அர்ப்பணஞ்செய். அவர் சித்தம் எத்தனை நீதியுடையது என்பதைக்காண்குதி. அப்பொழுது கொல்லும் புலியின் பொல்லாத வாயிலும், கூற்றத்தின் சீற்றத்திலும், நரகத்தின் நடு வாயிலிலும் கூட எல்லாம் வல்ல இறைவனைக்காண்பாய்."

ஓம் ஸ்ரீ சாயிராம்

# எங்களை எங்களுக்கு அறிவித்தான்

**பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் அவதாரப் பணிக்கு அல்லும் பகலும் தன்னை அர்ப்பணித்திருந்த செ. ஞானசேகரம் ஐயா அவர்களின் நினைவாக வெளியிடப்படுகின்றது**

மகாபாரதத்தில் ஒரு வித்தியாசமான பாத்திரம் கர்ணன். அவனுக்கு தான் யார் என்று தெரியாது கௌரவர்களிடையில் அவர்கள் அவனை அரசனாக்கியபடியால், அந்தக் கொடியவர்கள் கூட்டத்தில் தன்னுடைய இயல்பான தன்மைகள் இருந்தாலும் ஒப்பற்ற கொடை வள்ளலாக இருந்தாலும், ராஜலட்சணங்கள் குல ஆற்றல்கள் இருந்தாலும் ஒரு தேரோட்டி மகனாக, குதிரைலாய மணம் உடம்பிலுள்ளவன் என்று சிலர் சொல்லத்தக்கதாக அவன் இருக்க வேண்டி இருந்தது.

**"தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டும்"**

அது எப்படிக் கர்ணனால் முடியும். அசடர் நட்பை அகற்றிவிட அவனால் முடியாதே. அதுதானே அவனுக்கு ஆதாரம். எப்படி அவனால் அவனது நிஜ சொருபத்தைத் தெரிந்து கொள்ள முடியும். ஒரு அன்னப்பறவையான அவன் ஒரு ஊத்தை வாத்தாக கொடியவர்கள் மத்தியில் வாழ்ந்தான்.

எம்மில் அநேகர் கர்ணன்களாக, தன்னை யார் என்றுதெரியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எப்படி கர்ணன் தனது உடன்பிறப்புகளான பாண்டவர்களைக் கொல்ல, சிறுமைப்படுத்த சகல முயற்சிகளையும் ஆயுதங்களையும் தயார்படுத்தியதைப் போல், நாமும் நாமேயான அயலவர்களைச் சிறுமைப் படுத்த, பொறாமைப்படுத்தத் தக்கதாக எங்கள் காமக் குரோதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் எங்களுக்கு எங்களை யார் என்று சரியாக, விளங்கத்தக்கதாக ஒருவர் சொல்லித்தந்தால் சிலராவது புரிந்து கொள்ள முயலலாம்.

திரௌபதியை கௌரவர்கள் அவமானப் படுத்தியபோது தன்னை யாரென்று தெரியாததால் கர்ணன் மற்றவர்களுடன் சேர்ந்து கொக்கரித்தான், ஆர்ப்பரித்தான்,

பார்த்தசாரதியான கண்ணன், கர்ணனுக்கு அவனையார் என்று காட்டிக் கொடுத்தான். கர்ணன் தன்னை அறிந்தான், தனது மகிமையை அறிந்து அடங்கினான்.

ஆனந்த சொருபிகளான நாம், உண்மை என்ன என்று புரிந்து கொள்ளாமல், எங்களை எங்களுக்கு ஒருவரும் அறிவிக்காத படியால் அசடர்களிடையே அசடர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

"இன்ன தன்மை என்று நம்மை எடுத்துச் சொல்வாருண்டோ?"

அன்று பார்த்த சாரதியான கண்ணன் கர்ணனுக்கு அவனது நிஜசொரூபத்தைக் காட்டிக் கொடுத்தான் இன்று எங்களுக்கு சனாதனசாரதியான பகவான் சிறீ சத்ய சாயிபாபா எங்களை எங்களுக்கு யார் என்று சொல்கிறார். "நான் கடவுள், நான் சத்தியம் உன்னைப் பற்றிய உண்மை, நீ ஆனந்த சொரூபி அதைநம்பு. உன்னிட முள்ள ஆனந்தத்தின் திறவுகோலை உனக்குத் தருவதற்குத் தான் வந்திருக் கிறேன்" என்று சொல்கிறார்.

நம்மில் எத்தனை பேர் அதை நம்பினோம் அதைப் புரிய வைப்பதற்காக அதையே தமது பிரதான நோக்கமாகக் கொண்ட வலைப்பின்னல் போன்ற பல நிறுவனங்களை அமைத்தார். "ஒவ்வொரு தனிநபரும் தனக்குள் இருக்கும் தெய்வீகத்தை (ஆனந்த தத்துவத்தை) உணர்ந்து செயலாற்றுதல் இதன் முக்கிய குறிக்கோள், அப்படியும் பகவானின் நோக்கம் நிறைவேறியதா?

பகவான் ஆற்றிய உரை தமிழ் சனாதன சாரதி மாசி 1990இல் பக்கம் 7இல் பகவான் தெளிவாக தமது எதிர்பார்ப்பைச் சொன்னார்.

**"கிருஷ்ணா, கிருஷ்ணா என்று சொல்லிக்கொண்டிருந்தால் போதாது அதனாலேயே கிருஷ்ணனின் அருள்வந்து விடாது. பாபா பாபா என்று கூறிக் கொண்டிருந்தால் பாபாவின் அருளைப் பெற்று விடமுடியாது அவருடைய பணிகளில் எவ்வளவு தூரம் பங்கு கொள்கிறீர்கள், அவருடைய போதனை களை எவ்வளவு தூரம் பின்பற்றுகிறீர்கள்"..**

என்றார் பகவான்.ஞானசேகரம் ஐயா அவர்கள் பாபா பாபா என்று சொன்னவர் மட்டும் அல்ல, அவருடைய பணிகளில் தம்மை பூரணமாக ஈடுபடுத்தியவர். அவருடைய போதனை களை அப்படியே பின்பற்றியவர் சத்திய சாயி பேசுகிறார் புத்தகம் 7Aல் 27ம் அத்தியாயத்தில்

"நீங்கள் ஏராளமானவர்களைப் பட்டாளத்தில் வைத்திருக்கலாம் அவர் களைச் சரியான படி வழி நடத்த ஒரு தளபதி வேண்டும் ஏராளமானவர்கள் பாடுகிறார்கள், ஜபிக்கிறார்கள், வணங்கு கிறார்கள், பூஜிக்கிறார்கள், புகழ்கிறார்கள், புரள்கிறார்கள் அவர்கள் பட்டாளத்துச் சிப்பாய்கள். நம்பி, விசுவாசத்துடன், கட்டுப்பாடுகளை அனுசரித்துப் போபவர்கள் தான் தளபதிகள். அவரிடம் தான் தலைவன் தனது பணியை ஒப்படைக்கிறான்."

Hoardes of people sing, recite, adore, worship praise, prostrate, but these are the soldiers those who believe, who have faith and who practice the disciplines, these are the GENERALS to whom the master confides'

கண்ணன் குந்தியை அனுப்பி கர்ணனுக்கு அவனின் உண்மை நிலையை எடுத்துரைத்தான், இன்று கர்ணன்களான எங்களுக்கு பகவான் அனுப்பிய குந்தியாக, பகவானின் தளபதியாக ஐயா இருந்தார். பகவானின் போதனைகளை ஐயா தமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டி தேர்ந் தெடுத்த சிலருக்கு தெளிவாக அவர்களின் நிஜ சொரூபத்தைக் காட்டினார்.

சத்திய சாயிபேசுகிறார் புத்தகம் 7A அத்தியாயம் 27ல் மேலும் பகவான்.

**"நிலையான நம்பிக்கையையும் கட்டுப் பாட்டையும் பற்றித் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன் இதில் சிலர் சலிக்கலாம். நானும் சில சமயங்களில் நிறையப் பேசி**

**விட்டேன். உங்களுக்கு ஆறுதல் கொடுக்கலாம் என்று யோசித்தால் எனது கருணை எனது தீர்மானத்தை வென்று விடுகிறது நான் திருப்பியும் உங்களிடையே இந்த ஆத்மீகத்தைச் சொல்கிறேன்"....**

என்கிறார்.

ஞானசேகரம் ஐயாவும் பகவானின் ஆசீர்வாதத்துடன் ஆத்மீக நாட்டமுள்ளவர்களை இனம் கண்டு தேடிப்பிடித்து இங்கிருந்து (கொக்குவிலில்) சித்தங்கேணி போன்ற இடங்கள் வரை 72 வயது காலத்திலும் துவிச்சக்கர வண்டியில் சென்று, எனக்கு ஒருவர் என்றாலும் போதும் அவர் விரும்பினால் அவரிடத்திற்கே சென்று ஆத்மீக விஷயங்களைச் சொல்லிக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறேன் என்று சொல்லிச் செய்தவர். பகவான் எதிர் பார்த்தது போல் ஆத்மீகக் கட்டுப்பாடுகளை அனுசரித்து, இந்த ஆனந்தத்தை அனுபவித்து அதற்கு முன்மாதிரியாக இருந்து பிரசாந்தியை ஏற்படுத்தி மற்றவர்களையும் அப்படி நடக்கவைத்து, தனது (பகவானின் அவதாரப் பணிக்கு உதவி) சேவையைத் தொடர அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து தயார் செய்திருக்கின்றார்.

ஐயா அவர்கள், கர்ணன் போல் தங்களைத் தெரியாமல் தங்கள் மகிமையை உணராமல் இருந்தவர்களுக்கு அவர்களை அவர்களுக்கு உணர்த்திய குருநாதனாக இன்னதன்மை என்று அவர்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிய குருநாதனாக தனியாக இயங்கி ஒரு கூட்டத்தையே ஏற்படுத்தினார்.

இந்தக் கூட்டத்தவர்கள் ஐயா சொல்லித்தந்தபடி பகவானின் சொற்படி நடப்பவர்கள் மட்டுமல்ல அந்த ஆனந்தத்தை அனுபவிப்பவர்கள். மற்றவர்களுக்கும் அவர்களின் தன்மையை எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள்.

பகவானின் ஆவதாரப் பணிக்கு ஒரு கூட்டம் படைத்தளபதிகளையே ஏற்படுத்தி விட்டு பகவான் என்ற தெய்வீக சமுத்திரத்தில் சங்கமமாகிவிட்ட ஞான சாகரமான அவர் பகவானின் பிரதம தளபதிகளில் ஒருவராக விளங்கினார்.

"என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்" (ஐயா கோத்த பகவானின் முத்துக்கள் - முகவுரை முதற்பந்தி) என்று சொன்ன பகவான், ஐயாவின் சேவையை பலரால் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களின் ஊடாக வெளிப்படையாகவும் அங்கீகரித்து அவரது சேவையை ஊக்கப்படுத்தினார்.

அவருக்கும் பகவானுக்கும், ஏனெனில் இருவரும் வேறல்ல (அதுதானே பகவான் போதிக்கும் அத்வைதத்தின் உட்பொருள்) நாம் செய்யக் கூடியது பகவானின் அவதாரப் பணியில் சிரத்தையுடன் ஈடுபடுவதுதான்.

*போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே*

*புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர் கொண்டு....*

என்று பாடிமுடித்து விட்டு "பெரியவன்" என்று என்னை எழுப்பி அடுத்த பாட்டை படி என்று தந்தையார் சொல்ல அடுத்த பாட்டை நித்திரை கலையாமலும் படித்து துயிலெழுந்தவன் நான். எனது தம்பியின் வீட்டில் தேவாரம் படித்துக்கொண்டிருந்த பொழுது தம்பியின் மைத்துணர் திரு.சரவணபவன் தமது வீட்டில் திருநீற்றுப்பதிகம் சாதனையாகப் படிக்கப் படுகிறது வாருங்கள் என்றார்.

*ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல*

*அடியார் அவர்க்கு மிகவே*

என்று திரும்பத்திரும்பப் படித்த பொழுது "சாமியை" நம்புவோம் சாத்திரத்தை விட்டு விடுவோம் என்று கோளறு பதிகம் படித்த பொழுது மனதில் படிந்து விட்டது. சாமியை நம்பின என்னை சாயியை நம்ப வைத்தவர் எம்மிடையே ஞான சாகரமாக வாழ்ந்த ஞானசேகரம் ஐயா அவர்கள்.

1998ல் நடந்த அகில உலக சத்திய சாயி சமித்திகளின் தலைவர்கள் மகாநாட்டில் அதன் தலைவர் ஸ்ரீ இந்துவால்ஷா அவர்கள் சொன்னபடி ஞானசேகரம் ஐயா அவர்கள்

"சாயி கருத்துக்களை இங்கே ஓட்ட வைக்கவில்லை. இந்த யாழ்ப்பாண மண்ணில் முளைக்க வைத்தவர்."

'I quote the Divine message:-

Bhagavan has dirrected' Do not take Swami's teachings and try to graft it on to a tree in your own country. Instead, take the seed of the teaching and plant the seed in the soil of your country. So that it will grow into your own sai tree".

இந்த முக்கியமான செய்தியை 1998ல் தலைவர்களுக்கூடாக பக்தர்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியை 1968லேயே ஐயா உய்த்துணர்ந்து விபூதியின் மகிமையை திருநீற்றுப்பதிக சாதனையினாலும், என்னுடைய அனுக்கிரகம் இருந்தால் எந்தக் கிரகம் உங்களை என்ன செய்ய முடியும்? (when my anugraha is there what the graha can do) என்பதை கோளறுபதிக சாதனையினாலும் எங்கள் மனதில் நன்றாக வேர்விட்டுப் பதியவைத்தார்.

"ஞானசேகரம் சொல்கிற சாயியை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்" என்று பலர் சொன்னார்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

I Don't want your devotion I Want your Transformation என்றார் பகவான் ஐயா இதையும் பதிய வைத்தார்.

*"அவனுக்கே பிச்சி ஆனாள் அகன்றாள் அகலிடத் தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே"*

என்று நாவுக்கு அரசர் பாடியபடி தமது வழிபாட்டு முறைகளில் வளர்ந்து அதன் வழிகாட்டலை உணர்ந்து அதன்பயனாக தமது இலக்கைப் பற்றிய தெளிவைப் பெற்றுக்கொண்டவர் ஐயா .

இதன் பயனாக பகவானின் வழியில் பழமைகளின் பரிணாம வளர்ச்சியில் தெய்வீகத்தை தரிசிக்கக்கூடியவர்களாக தன்னுடன் சேர்ந்தவர்களை பரிணமிக்க வைப்பதற்கு ஐயாவால் முடிந்தது.

"ஒவ்வொருவரிலும் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்தவே வந்துள்ளேன்"

இந்த அவதார நோக்கத்திற்கு தானும் உதவி செய்து தன்னைச் சார்ந்தவர்களையும் அதற்குத் தயார் ஆக்கினார். வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களையும் ஆராய்ந்து அவற்றில் தெய்வீகத்தை எப்படிப்புகுத்தலாம் என்று ஒவ்வொருவருக்கும் பயிற்சி கொடுத்தார். எண்ணத்தை, சொல்லை, செயலை எப்படித் தெய்வீகமயப்படுத்தி வாழலாம் என்பதில் ஒரு நடைமுறை சாத்தியமான, விளைவை உணரக்கூடிய, காத்திரமான, சாதனைகளை அறிமுகப்படுத்தினார்.

உலக வாழ்க்கையில் இவையும் தேவைதான் என்று ஆசை ஆசையாகச் சேர்த்து வளர்த்து வைத்து வைத்து வந்த தேவையற்றவைகளை விட்டு இவையெல் லாவற்றையுமே தரக்கூடிய தேவையா னவற்றை இலக்காகக் கொள்வதற்கு பயிற்றுவித்தார்.

உங்களுடைய வாழ்க்கை என்னு டைய செய்தியாக வேண்டும் என்று பகவான் கேட்டுக்கொண்டபடி தன்னுடைய வாழ்க்கையையும் தன்னைச் சார்ந்தவர் களின் வாழ்க்கையையும் பகவானின் செய்தியாக மாற்றினார்.

"பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி" என்றபடி பொய்யை, அசத்தை அடையாளம் கண்டு மெய்யை, சத்தை வரவேற்கத்தக்கவர்களாக மாற்றினார்.

சாதனைகளால் வேதனைகளைப் போக்குவதற்குப் பயிற்றுவித்தார்.

பகவானின் கீழ்க்கண்ட வார்த்தை களுடன் இதனைப்பூர்த்தி செய்வோம். பல்கலைக்கழகங்கள் உங்களுக்கு (வெளிக்)கல்வியில் பட்டங்களைத் தருகின் றன. நான் உங்களுக்கு எடியூகேர் (உட்கல்வி) இல் பட்டம் தருகிறேன். நான் தரும் இந்தப் பட்டம் ஆத்ம ஆனந்தம் தொடர்பானது இதுதான் எடியுகேர். உங்கள் கடமைகளை நீங்கள் மனப்பூர்வமாகச் செய்யும் பொழுது உங்கள் தேவைகளை நான் கவனித்துக் கொள்வேன்.

The University gives you a degree in Education where as I give you a degree in Educare. The degree I Confer on you is related to atmananda. That is Educare. Discharge your duty sincerely and I shall take care of your requirements.

ஐயாவின் - இருதயர்.

தெய்வ அன்பைப்பெறாதோர் பிறவி உண்மையில் பிறவியே அல்ல. எனவே ஆன்மீகப்பாதையில் சென்று அவசியமான சாதனையை மேற்கொண்டு சாயியின் அன்புக்கும், அனுக்கிரகத்திற்கும் பாக்கியவானாகுங்கள். சாயி இலட்சியங்களைப்பயின்று ஆத்மானந்தத்தை அனுபவியுங்கள்.

எவரையும் காப்பாற்றவல்லது கடவுளின் நாமம் ஒன்றே. இச்சாயி மந்திரத்தை ஏற்று தமது வாழ்நாள் முழுவதும் அதனில் வாழுமாறு அனைவரிடமும் கூறுங்கள். வழிப்படுத்திக்காக்கும் ஒன்றே "நாமம்" ஆகும்.

-பாபா

பிறோமதார

ஓம் ஸ்ரீ சாயிராம்

# என் வாழ்வில் குருஜி ஸ்ரீ சாயி ஞானசேகரம் ஐயா

மாத்ருரு தேவோ பவ;
பித்ருரு தேவோ பவ;
ஆச்சார்ய தேவோ பவ;
அதிதி தேவோ பவ;

ஆச்சார்ய தேவோ பவ என்பது பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் தரப்பட்ட அளப்பரிய பொக்கிஷமாகும். இந்த வகையில் எங்கள் மாதா என்னை எங்கள் குரு ஸ்ரீ சாயி ஞானசேகரம் ஐயா அவர்களைக் கண்டு கொள்ளச் செய்தார். என் வாழ்வில் முதல் நாள் குருபாத வந்தனம் கிடைத்தது அன்று தான். பயம், பீதி, கவலை இவற்றால் கட்டுண்ட என் மனது, தாயை அணுகி மனதை திறந்து அளவளாவிய பொழுது, நீ இன்றே என்னுடன் வா என்று ஆறுதல் சொல்லி தன்முன்தானையுடன் அணைத்துச் சென்று நல்லவழி தோன்ற குருஜி ஞானசேகரம் ஐயாவைக் காட்டினார். முதன் நாள் சந்திப்பின் போது சத்சங்கத்தில் குருஜியின் பிரசங்கம் "நான்" என்ற தலைப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது இடையே குறுக்கிட்ட அடியேன் "நான்" என்பது ஒன்றானதாக இல்லையே என்றேன். மேலும் பணம், வீரியம், உடம்புக்கட்டு இவற்றிற்கேற்ப "நான்" என்பது வேறுபடும் அல்லவா என்றேன். இதற்கு விளக்கம் கொடுக்கும் வகையில் உடம்புக்கட்டு கூடிய ஒருவன் மெலிந்த ஒருவனை அடித்துத் துன்புறுத்தும் பொழுது ஒருவருடைய "நான்" கூடவும், மற்றவருடைய "நான்" குறை வாகவும் இருக்கின்றதல்லவா என்றேன். இவற்றை உற்றுக்கேட்ட ஐயா அவர்கள் புன்முறுவல் பூத்த முகத்துடன் இது போகப் போகத் தெளிவாகும் என்றார்கள்.

ஒரு நாள் என்தனையுற்று நோக்கி ஓர் பொல்லாப்பும் இல்லையென்று கூறியது போல் அவரது பார்வை இருந்தது. அவர் அன்று கூறியதை இன்றுவரை சாதனை செய்து அறிய அவருடைய அருளாசியை வேண்டிக்கொண்டிருக்கிறோம். அவர் காட்டிய வழியில் எங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கிறோம். அவர் அடிக்கடி சுயசோதனை செய்து கொள்ளுங்கள் என்று சொல்லுவார். எங்களுக்கு பயம், கவலை, கோபம் போன்றவை வரும் பொழுது அது ஏன் வந்தது? எப்படி வந்தது? எந்தச் சந்தர்ப்பத்தில் வந்தது? நாங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் நடந்து கொண்டவிதம் சரியா? இப்படியாக எங்களை நாங்கள் பார்த்துக் கேட்பதே சுய சோதனையாகும்.

தெய்வ நம்பிக்கையில் தளராத உறுதிவேண்டும் என்று ஐயா அடிக்கடி போதித்து வந்தார். இந்த வைராக்கியம் தான் சரணாகதி நிலைக்கு வழி கொடுக்குமென்று ஐயா கூறுவார். இதற்கு ஒரு கதையும் அடிக்கடி அவர் கூறுவதுண்டு. பிராமணரொருவர் ஒரு ஆடு வளர்க்க விரும்பி அயல் ஊருக்குப் போய், ஆட்டுக்குட்டி ஒன்றை வேண்டி வந்தாராம்.

வரும் வழியில் எதிர்ப்பட்ட இளைஞர் கூட்டமொன்று பிராமணரைப் பார்த்து கேவலம் பிராமணரொருவர் நாய்க்குட்டியை அணைத்துக் கொண்டு செல்கிறாரே! வெட்கம்! வெட்கம்! என்றார்களாம். பிராமணர் தன்கையில் இருப்பது ஆட்டுக் குட்டி தான் என தனக்குள் கூறிக்கொண்டு மேலும் நடக்கலானார். இன்னுஞ் சிறிது தூரம் நடந்து சென்ற போது வேறு ஓர் இளைஞர் கூட்டம் பிராமணரொருவர் நாயைக் கொண்டு போகிறாரே, இது வெட்கமில்லையா என உரத்துக் கூறி கேலி செய்தார்களாம். அப்போது பிராமணர் மனதில் ஓர் தளர்வு ஏற்பட்டு தன் கையில் இருப்பது நாய்க்குட்டிதானோ என்ற சந்தேகம் தோன்றியதாம். மேலும் நடந்து செல்லும் போது வேற ஓர் இளைஞர் கூட்டமும் இதேபோல் கேலி செய்தார் களாம். உடனே பிராமணர் தன்கையில் இருப்பது நாய்க்குட்டி தான் என எண்ணி அதை வீசி எறிந்துவிட்டு ஓடினாராம். இந்த இடத்தில் அவருடைய உறுதி எவ்வாறு குலைந்ததோ, அப்படியே எங்களுக்கும் பயம், கவலை, துன்பம் போன்ற சோதனைகள் வரும் பொழுது பகவான் மீதுள்ள உறுதி குலையாது வைராக்கியமாக நிற்க வேண்டும் என அறிவு புகட்டினார்.

சிறுவயதில் கேள்வி ஞானத்தின் மூலம் தியானஞ் செய்தால் மன அமைதி கிட்டும், படிப்பது சுலபம் என அறிந்திருந் தோம். அதன்படி மாலையில் சுவாமியின் படங்களுக்கு முன் இருந்து கண்களை மூடி ஒவ்வொரு கோயில்களின் பெயரையும் மனதில் சொல்லி அங்குள்ள பிள்ளையார், முருகன், அம்மன் போன்ற தெய்வ ரூபங்களை மனதில் நினைத்துப் பார்ப்பது வழக்கம். ஐயா அவர்களைச் சந்தித்த பின் தான் தியானம் என்பது என்ன என்பதனை அறிய வாய்ப்புக் கிட்டியது. அவர் அடிக்கடி சொல்லுவார். கண்களை மூடி எண்ணம் இல்லாத இடத்தைப் பாருங்களென்று. அதுவே தியானம் ஆகும் என மிக சூட்சுமமான வழிமுறையை சொல்லித் தந்தார். "ஓம்" கார சாதனை தான் எண்ணம் இல்லாத இடத்திற்கு மனதை இட்டுச் செல்லும் மிக குறுகிய மார்க்கமாகுமென ஐயா அவர்கள் அடிக்கடி கூறுவார். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் புத்தகத்தில் ஊமை எழுத்தறியென்றான் எங்கள் குருநாதன்; ஓம்கார வழியென்றான் எங்கள் குருநாதன் போன்ற அடிகள் அவரால் அடிக்கடி நினைவு கூரப்படும்.

எங்கள் இல்லறவாழ்வில் எட்டு ஆண்டுகளின் பின் கருவுற்ற என் மனைவி நான்கு மாதங்களில் அதனை இழந்து துன்பத்தின் எல்லையை தொட்டு நின்று கலங்கிய வேளை குருஜி மருத்துவ மனைக்கு வந்து பகவான் செய்வதெல்லாம் நன்மைக்கே, உனக்கும் உலகத்திற்கும் நன்மை பயக்காத பிள்ளையென்றால் வாழ்நாள் முழுவதும் அல்லவோ நீ அழவேண்டும் என ஒரே வார்த்தையில் மீண்டும் எங்களை பழைய நிலைக்குத் தூக்கிவிட்டார். மேலும் நீ பெற்றெடுத்தால் தான் பிள்ளையா? உங்கள் ஊரில், நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் உங்கள் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளலாமே எனக்கூறி எங்க மனதை விசாலமாக்க அருள் செய்தார். அவருடைய அருளாசியால் எங்கள் கிராமத்து பிள்ளைகள் அனைத்தும் எங்கள் வீட்டில் கூட்டி சுவாமியினதும், ஐயாவினதும் போதனைகளைச் செய்து வந்தோம். அதனால் ஐயா கூறிய மனதை விசாலமாக்கும் வழிமுறையையும் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொண்டிருக் கிறோம்.

ஐயா அவர்களின் போதனை வகுப்புக்களில் எத்தனை முறை தான் தன் நேரத்தையும் பார்க்காது ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் பகவத்கீதை போன்ற அரிய நூல்களை வாசித்துக்காட்டி, விளக்கம் தந்து எங்கள் அறிவை வளர்த்தார். ஐயா அவர்கள் சொல்லித் தந்த திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம் எங்கள் அன்றாட வாழ்க்கையில் அருமருந்தாகத் திகழ்கின்றது. ஐயா கூறுவார் சாதனை செய்யச் செய்ய சித்துவரும் ஆனால் சித்து தான் முடிவென சாதனையை நிறுத்தக்கூடாது என்று அறிவுரை கூறுவார். அவர் கூறிய திருநீற்றுப் பதிகமும், பாபாவின் விபூதியும் எத்தனையோ வருத்தங்களைக் குணமாக்குகின்றது. இதை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்பதே ஐயாவின் விருப்பம். ஐயா, அவர்கள் எங்களை ஆத்மீக வழிக்கு இட்டுச் செல்ல எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. ஒரு நாள் ஐயா அவர்களை அணுகி, அடியேன் வீட்டில் வந்து போசனம் செய்ய வேண்டும் என அழைத்த பொழுது, நீர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாது சமூகம் தருவேனென்று உறுதி தந்தால்தான் உம் வீட்டிற்கு போசனம் உண்ண வருவேன் என எவ்வளவு கருணையோடு எங்களுடைய எதிர்கால முன்னேற்றம் குறித்து ஐயா கேட்டதற்கிணங்க முழு சம்மதம் தெரிவித்ததால், அவருடன் கடைசிவரை ஒன்றாக இருக்க கிடைத்ததே என சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்கள் வாழ்வில் நல்வழி காட்டிய சாயி ஞானசேகரம் ஐயா ஓர் அணையா விளக்காகும். அவர் காட்டிய தன்னலமற்ற சேவையை நாமும் தொடர்வதற்கு ஐயாவினதும், பகவானினதும் அருளாசியை வேண்டி நிற்கின்றோம்.

**லோகு + வசந்தி**
**கொழும்பு - 06.**

ஓம் ஸ்ரீ சாயிராம்

# 'சத்தியம்' சற்குரு சாயி ஞானசேகரம் ஐயா வடிவில் வழிகாட்ட வந்தது

கடவுள் என்றால் யார்? என்பதை விட உண்மை என்றால் என்ன? நல்லது எது? நல்ல மனிதனாக இருக்க எப்படி வாழ வேண்டும்? இந்த உலகில் எத்தனை விதமான குணம் படைத்தவர்கள் இருக்கி றார்கள். இவர்களிடம் எப்படி பழகுவது? எப்ப அமைதியாய் வாழலாம் என்று எங்களை எங்களால் விளங்கிக் கொள்ள கூடிய மாதிரி, மிக எளிதான வழியில் தான் அனுபவித்துப் பெற்ற உண்மை அனுபவங் களை, எங்களுக்கு ஊட்டி விளக்கி வழிப்படுத்தியவர் ஐயா அவர்கள். எப்படி வாழ வேண்டும் என்றும், எப்படி வாழலாம் என்றும், எங்களிற்கு என்னவெல்லாம் நடக்கும் என்றும், எப்படி வாழ்க்கை போகப்போகின்றது என்றும், ஒன்றுமே விளங்காமல் இருந்த காலத்தில் தான் வாழ்க்கையில் ஓர் நம்பிக்கையை, மனதில் உறுதியை ஏற்படுத்தும் வகையில் 1987 ஆம் ஆண்டு சற்குரு ஞானசேகரம் ஐயா அவர்களின் தரிசனம் கிடைத்தது.

இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக நாம் ஒன்று சேர்ந்து இருந்த இடத்தில் ஒரு நாள் என் வாழ்கையில் பெரியதொரு மாற்றம் நடந்தது. அந்த நாள் மிகவும் ஒரு புனிதமான நாள்.

வீட்டிற்கு பெரியவர்கள் வந்தால் அவர்கள் இருந்து கதைக்கும் இடத்தில் சிறியவர்கள் தேவை இல்லாமல் இருக்க கூடாது, அதுவே எங்கள் பண்பாடு. இருந்தாலும் அன்று அங்கு வந்த பெரியவரை பார்த்த போது என்னவோ தெரியவில்லை அவரின் உண்மைத் தத்துவம் என்னை விலகிப் போக விடாமல் சற்றே தள்ளி அவ்விடத்தில் இருக்க செய்தது. அவருடன் இருவர் இருந்து உரையாடல், பொதுவிடயங்கள் கதைப்பது மாதிரி அல்ல, அந்த பெரியவர் கூறுவதை அந்த இரண்டு அன்பானவர்களும் இருந்து கிரகித்துக் கொண்டு இருக்கும் விதம், என்னை கவனிக்காத விதம், அவர்களது உரையாடலில் உள்ள "உண்மையின் அதிர்வு" (Vibration) அவர்களது பார்வை ஓர் போதும் என் பக்கம் திரும்பவில்லை. அவ்வாறு பார்த்திருந்தால் நான் எழும்பி போக நேர்ந்திருக்கும். நான் ஓர் புத்தகத்தை வைத்துக் கொண்டு அவர்களிற்கு கொஞ்சம் தூரத்தில் தான் இருந்தேன். என்னுடைய மனம் அவர்கள் பக்கம் தான் ஈர்த்துக் கொண்டு இருந்தது. இடையிடையே அவர்களைப் பார்த்தேன். அவர்களோ என்னைப் பார்க்கவில்லை. அவர்களின் உரையாடலின் ஆழம் என் பக்கம் திரும்பவிடவில்லை என்று இருக்கலானேன். அங்கு இருந்து கொண்டி ருந்த (Vibration) தூய உணர்வு அலைகள் என்னையும் அவர்களுடன் இழுத்து ஒன்றாக்கிவிட்டது. மொத்தத்தில் என்னை அறியாமலே நான் சுவாமியால் ஆசீர்வதிக்

கப்பட்டு நல்லதொரு அருமை யான குருவை என் கண்ணில் காண வைத்தார். அவரே சாயி ஞானசேகரம் ஐயா.


சிறு வயதில் இருந்து கடவுள் எங்களை காப்பாற்றுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அன்று நடந்த சம்பாஷனை என்னுள் ஆழமாக பதிந்துவிட்டது. சுவாமியைப் பற்றி தெரியாத எனக்கு ஐயா ஆட்கொண்டு தெரிய வைத்தார். அவரின் தோற்றம், முக பாவனை, வெள்ளை உடை, தூய்மையான இதயத்தில் இருந்து வந்த வார்த்தைகள் எனக்கு ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தது. இதற்கு 6 மாதங்களிற்கு பின்தான் எனக்கு அவரின் சத்சங்கங்களில் பங்கு பெற வாய்ப்பு கிடைத்தது. திரு. மகேஸ்வரனின் ஊக்கத்தினால் எனது பாக்கியம் அங்கு வரக் கிடைத்தது. சத்சங்கத்திற்கு ஒழுங்காக பங்குபற்றிக் கொண்டு வரும் போது ஒரு நாள் சத்சங்கத்தில் ஐயா கூறினார்:- இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக குடிமக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சம் புகுந்தனர். அங்கேயும் ஏற்பட்ட செல் வீச்சுக் காரணமாக மக்கள் பீதியுற்று தெய்வங் களை வேண்டி பிரார்த்தனை செய்தார்கள். அந்த நேரத்தில் இது யாருடைய செயல் நடக்கிறது! என்று தனக்குள்ளால் எழுந்த உணர்வை கண்டு சாந்தியுற்று அங்கு ஏற்பட்ட அனார்த்தங்களினால் காயமுற்றவர்களுக்கு வைத்தியம் செய்ய முடியாத சூழ்நிலையில் ஏற்ற முதல் உதவிகளை செய்து கொண்டிக்கும் போது காயப்பட்டவர்களிற்கு தன்னுடைய வேட்டியைக் கிளித்துக் கொடுக்க முடியாத நிலையை கண்டு மனம் வருந்தியதாகவும், சுவாமி எப்படி ஓர் அன்பருக்கு "லிங்கத்தை" எடுத்துக் கொடுத்து அவர் அந்த லிங்கத்தைப் பாதுகாப்பாக வைக்க தடுமாறிக் கொண்டு இருக்கம் பொழுது (சுவாமி எல்லாம் அறிந்தவர் தானே) தனது அங்கியில் ஓர் துண்டு கிளித்து அவருக்கு கொடுத்ததையும் சொல்லி, தனக்கு அந்த இடம் வரவில்லையே என்று வருத்தப்பட்டார். அதே நேரத்தில் ஐயாவும், மகன் குகஞானியும் இறந்தவர்களை அங்கேயே விளையாட்டு மைதானத்தில் ஓர் பெரிய அகழிவெட்டி (நின்றவர்களின் உதவியுடன்) திருநீற்றுப் பதிகம் பாடி அடக்கம் செய்தனர். அத்துடன் அங்கு இருந்த மக்களிற்கு உணவு கொடுக்க, தண்ணீர் கொடுக்க ஐயா முன் நின்று செய்த ஒழுங்குகளை யாவரும் அறிவர். அவர் அங்கு செய்த பெரிய உதவிகளை எல்லாம் மறந்து இந்த வேட்டியைக் கிளித்துக் கொடுக்கவில்லையே என்று தன்னிடம் "லோபம்" இன்னும் இருக்கிறது என்று அதைக்கண்டு அதை நீக்கும் காரியத்தில் தனது முயற்சிகளைக் செய்ய தொடங்கினார்.

அப்பதான் யோசித்தேன். இந்த வயதில் இப்படி எவ்வளவு பெரிய தியாகங்களைச் செய்து, இன்னும் செய்திருக்கலாம் என்று ஏங்குபவர்களை ஓர் இடமும் காணவில்லை. அந்த இக்கட்டான நேரத்தில் இப்படியெல்லாம் எண்ண வருமா? சும்மா சாதாரண மனிதனால் இவைகளை செய்ய முடியாது. இவர் ஒரு பெரியவர். அந்த சத்சங்கத்திற்கு பின்னர் அவரது வழிநடத்தலில் தாகம் வரத் தொடங்கியது. சத்சங்கத்தில் ஐயா கூறுவார், அவதாரத்தின் ஒரு வார்த்தையை எடுத்து முதலில் அதில் நம்பிக்கை வைத்து ஒன்றையாவது பின்பற்ற வேண்டும் என்றும், நீங்கள் எல்லோரும் ஆனந்த சொரூபிகள் என்றும், பிரேமை சொரூபிகள் என்றும், எங்கள் மீது அக்கறை காட்ட இப்படியொரு தயாளரை அந்த சுவாமியை அவரின் வழியில், எப்படி

செல்வது என்பதை ஓர் கஸ்ரமும் இல்லாமல், எல்லாவற்றையும் மிக சுலபமாக விளங்கப்படுத்தி, உண்மை வழியை எப்பவும் எந்த சூழ் நிலையிலும் தன்னம்பிக்கையுடன் வாழ சுவாமியை விட வேறு ஒருவராலும் எங்களை பக்குவமாக வழி நடத்த முடியாது. அவரே பரப்பிரம்மம். வேறு ஒன்றும் இல்லை எல்லாம் ஒன்றுதான் என்ற அனுபவத்தை, ஐயா முயற்சிப்பட்டு தேடியதை எங்களிற்கு தந்தவர். ஐயாவைப் பற்றி என்ன சொல்வது. அவர் தந்த வழி, நடத்திய விதம், எங்களை எப்பவும் நல்ல வழியில்தான் வைத்திருப்பார். அவர் என்னவெல்லாம் எங்களிடம் எதிர்பார்த் தாரோ அவைகளை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக என்றாலும், உடனே என்றாலும் விடலாம். (தீய குணங்கள்) என்னை பொறுத்தவரை சத்சங்கத்தின் மூலம் இலகுவாக அடையலாம். சுவாமியின் அருள் இருந்தால் எல்லாம் சுகம். ஆனால் மெதுவாக சென்றாலே அவர் காட்டிய இலக்கை அடையலாம். இந்த சத்சங்க கூட்டம் இது ஓர் பெரிய கூட்டம். சனத்தொகை, ஆட்கள் எண்ணிக்கை இல்லை. இது ஓர் பெரிய உண்மையான கூட்டம். "சற்குரு" தரிசனம் சகல பாக்கிய சுகம் அவர் தாளினை பணிவோம் தினம்.

ஸ்ரீ சாயிசத்சரித்திரம் என்ற நூலில் இருந்து:- "குருவின் கைத்தீண்டலில் ஏற்படும் விளைவு (பயன்) எங்கே 'உண்மை' அல்லது 'சற்குரு' வழிகாட்டி யாக இருக்கிறாரோ அங்கே இவ்வுலக பெரும் கடலுக்கு அப்பால் நம்மை பத்திரமாகவும், எளிதாகவும் அவர் நிச்சயம் அழைத்துச் செல்வார்".

\- பிரபா



When I sprinkle your face with rain,
And wash the earth, the dry brown leaves,
The first smell of clean rain,
I am cleansing you.
THINK OF ME !!

When the pain dissolves,
And tears disappear.

THINK OF ME !!

# ஸ்ரீ ஞானசேகரம் ஐயாவினால் எழுதப்பட்ட முகவுரைகள் மற்றும் சத்சங்கம், ஓங்கார சாதனை விளக்கங்கள்

'Towards Divinity with Sai" - "சாயியுடன் தெய்வீகத்தை நோக்கி" என்ற ஆங்கில நூலிற்கு ஸ்ரீ ஞானசேகரம் ஐயா அவர்கள் வழங்கிய முகவுரையின் தமிழாக்கம் :-

"குருவானவர்கள் யாவருள்ளும் அவர்களில் எவருள்ளும் மிக உன்னதமான அதிகருணாமூர்த்தியான ஒரு குரு மனிதனுக்குக் கிடைத்துள்ளது. அவர் இறைவனின் திருவவதாரமேயன்றி வேறெவருமில்லை". இவ்வாறு பாபா தனது அவதரிப்பைப் பற்றி தன் பெயர் தாங்கிய வாஹினியான சத்திய சாயி வாஹினியில் பிரகடனப்படுத்துகிறார். "தனது" சங்கல்பத்தை சும்மா வெறுமனே வெளிப்படுத்துவதன் மூலம் ஆத்மீக வாழ்வின் அதியுயர்ந்த இறுதி நிறைவை மனிதனுக்கு அருளமுடியும்" என்று அவர் உறுதி கூறுகிறார். இக்கடினமான லட்சியத்தை தேடவும், பெறவும் தங்களிடம் தகுதியுண்டா என்று பக்தர்களைச் செல்லரிக்கும் சந்தேகங்களை மேலும் துடைத்து தெளிவாக்குவதற்காக பின்வருமாறு அறிவிக்கிறார். "அதியுயர்ந்த இறுதி நிறைவை என்னால் மனிதனுக்கு அருள முடிவதுடன் அதனை அவன் பெற்றுக் கொள்ளவும் செய்ய முடியும்". "அருகதையற்றவர்களிலும் கீழான அருகதையற்றவர்கள் தானும் க்ஷண நேரத்தில் இவ்வதியுயர்ந்த ஞானத்தை உரிமையாக்கிக் கொள்ளலாம்". "குருவாகத் திகழ்பவர்களில் அவர் சத்குரு", "மனித உருவிலேயே இறைவனை மனிதனால் தரிசிக்க முடியும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

சத்தியஸ்வரூபியான பகவான் எம்முள்ளுறையும் அறியாமையை அடித்தளமாகக் கொண்ட எமது நாமரூபங்களை அங்கீகரிப்பதில்லை. ஆனால் "பிரேமஸ்வரூபிகளே" "ஆனந்த ஸ்வரூபிகளே" "ஆத்மஸ்வரூபிகளே" என்று எப்போதும் எம்மையழைப்பதனால் எமதுண்மையியல்பை எமக்கு நினைவூட்டுகிறார்.

இத்தகைய எமது உண்மை இயல்பை அறிந்துணருவதற்கு சிறுபராயம் தொடங்கி தனது சம்பாஷணைகள், எழுத்துக்கள், உரைகள் மூலம் தேவையான வெள்ளப் பிரவாகமாக அவர் இறைத்துக் கொண்டிருக்கிறார். வரங்களில் மிகச் சிறப்பு மிக்க பிரதான லட்சியமான விடுதலையை எமக்கு ஈந்தருளுவதற்காக தன்னிடம் எம்மை அவர் ஈர்க்கிறார். இதுவே அவரது அவதரிப்பின் பிரதான நோக்கமாகும். லௌகீகப் பரிசுப்பொருட்களெல்லாவற்றையுமே அவர் நிராகரிக்கிறார். கறைகளிலிருந்து விடுபட்ட இதயத்தையே தனக்குப் பரிசாக அளிக்குமாறு அவர் எம்மிடம் வேண்டுவது.

முன்னர் அவர் எமக்களித்த அதே சுதந்திரத்துடனும் தூய்மையுடனும்

தன்னிடம் அவற்றை மீண்டும் தருமாறு வேண்டுகிறார். எமது பற்றுக்களைப்படிய வைப்பதையே அவர் விரும்புகிறார். வாழ்வின் மாபெரும் லட்சியத்தை நோக்கி அவதார புருஷர் எம்மை இட்டுச் செல்லும், வழிநடத்தி உந்திச் செய்வதற்குமான சாலச்சிறந்த வழிகளில் சிலவே இவை.

தனது வருகைக்காக ரிஷிகள், முனிவர்கள், ஞானிகள் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். தான் பிறப்பெடுத்ததற்கான காரணங்களில் இதுவு மொன்று என்று பகவான் கூறுகிறார். இவர்களில் நாமும் ஒருவராயிருக்கலாகாதா என்று ஏன் நாமும் சிந்திப்பதில்லை. எம்முன்னர் தோன்றியுள்ள இவ்வுன்னத சந்தர்ப்பத்தை ஏன் கெட்டியாகப் பிடிக்காமல் இருக்கிறோம்.

அவதார புருஷர் வழங்கும் மாபெரும் பரிசு எமக்கெல்லாம் அவர் விடுத்துள்ள செய்தியே. அவரது சர்வவல்லமை, மஹிமைமாட்சி, திருவருள் ஆகியவற்றை அவரது நூல்களைக் கற்றறியாது எவ்வாறு தெரிந்து கொள்வது? எமக்கவர் கூறுவதை அறிவதை விட எது அவரிடம் அதிக விருப்பத்தை ஏற்படுத்தும்?

தனது அவதரிப்பினது உண்மையான நோக்கத்தினைப்பற்றிச் சரிவரப் புரியாதவர் களுக்கும் அல்லது அதனை அறியத் தவறியவர்களுக்கும் பகவான் கட்டிய மொன்றை வெளிக்கொணர்ந்துள்ளார். "மானிடனுள் உறையும் தெய்வீகத்தின் மீது விழிப்புணர்வைத்தட்டி எழுப்புவதே" சாயி அமைப்புக்களின் மிக அடிப்படை நோக்க மாகும் என அக்கட்டியத்தில் மிகத்தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக இந்நோக்கத் தை விரிவுபடுத்தும் குறிக்கோளாக சுவாமியின் எழுத்துக்கள், உரைகள், உரையாடல்கள் ஆகியவற்றின் சுருக்கங் கள் உள்ளடக்கிய இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது. குறுகிய கால இடைவெளி யினுள் இந்நூலினை ஒருவர் பார்வையிட்டு இந்நோக்கத்தை அறிந்துணருவதற்குரிய அடிப்படை அறிவுடன் ஒன்றுபட்டுவிடலாம். சுருக்கமான இப்பிழவுகளின் ஒவ்வொரு பொருட்களையும் பற்றி நல்ல விளக்கங் களைக் கொடுக்கும் சுவாமியின் அறிக்கைகள், செய்திகள், விளக்கவுரைகள் காணப்படுகின்றன. குறிப்பான தனி விடயங்களில் அவதார புருஷரின் அதிகார பூர்வமான கருத்துக்களை இவற்றினுள் பல கொண்டுள்ளன.

சுவாமியின் நூல்கள் முழுவதையும் தொழில்களுக்கு மத்தியில் கற்பதில் நேரிடும் கஷ்டங்களை இந்நூல் நிவர்த்தி செய்ய உதவுவதுடன் பகவானின் பல்வேறு போதனைகளைச் சுருக்கமாகவும் வெளிப் படுத்துகின்றது. ஆத்மீக சாதகருக்குப் பொருத்தமான அநேக பொருட்களைப்பற்றி சுவாமி கூறும் போதனைகளை இந்நூலின் பக்கங்களைப் புரட்டி ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

"அறியாமைத்தளையிலும் மரணம் இனிமையானது" என்று கூறுவதுண்டு. "நீ சத்தியத்தைக் கண்டுகொள் சத்தியம் உன்னை விடுவிக்கும்" என்று கிறிஸ்துநாதர் கூறுகிறார். தனது உண்மையான இலட்சியத்தையும் தன்னைத்தானே அறிந்து கொள்ளாமையுமே மனிதனுக்குரிய பிரச்சனையாகும். வாசகர்களிடமும் அவர் களின் உண்மையான ஒரு இலட்சியத்தின் கீற்றையும், எம்மத்தியிலுள்ள குருவின் சொற்களில் நம்பிக்கை கொள்ளின் நம்மை அந்த இலட்சியத்திற்கு இட்டுச் செல்லத் தயாராயிருக்கும் அக்குருவின் மேன்மை யையும் இந்நூல் வழங்குகிறது.

கிருஷ்ணனுடனிருந்த அருச்சுனனைப் போல நாமும் அவரது தோற்றத்திலும் மேலாக பகவானது போதனைகளில் எமது சிரத்தையை பதிக்க வேண்டும்.

பகவானின் பக்தர்களிடமிருந்து அவரது அறுபதாவது பிறந்ததின ஞாபகார்த்தமாக வெளியீடு ஒன்று வெளியிட கட்டுரைகளை அகில இலங்கை சத்தியசாயி சேவா அமைப்புக்களின் இணைப்புக்குழுவின் தலைவர் வரவேற்றி ருந்தார். இதற்கு இத்தொகுப்பாளனின் பங்கு இந்நூலே என்று பகவான் சங்கல்ப்பித்துள்ளதுடன் குறைந்த முயற்சியோடு இதனை வெளிப்படுத்தி யுள்ளார். அவரது நியமிப்புப் போலும் 12, 14 வருடகாலமாக இவ்வுரைச் சுருக்கங்களை தொகுப்பாளர் தனது குறிப்பேட்டில் குறித்துள்ளார். அவருக்கு சுவாமியின் போதனைகள் தான் மாபெரும் அற்புதம். சுவாமியின் மகிமைகளை முன்னர் ஏற்கனவே அவர் படித்திருந்தும் அவற்றினால் ஈர்க்கப்படாது சத்தியம், சிவம் சுந்தரத்திலிருந்து அவரது போதனைகளில் ஒரு வாக்கியத்தை 18 வருடங்களின் முன்பு ஓரன்பர் படிக்கச் செவியுற்றதுமே சுவாமியின் பால் இவர் ஈர்க்கப்பட்டார்.

சாயியின் 60வது பிறந்ததின கொண்டாட்டங்களையொட்டி பக்தர்கள் எதிர்நோக்கும் மாபெரும் மகிழ்ச்சிப் பெருக்கில் இணைத்துக் கொள்வதற்காக இவ்விதழ்களை மிருதுவாக நாமுயர்த்தி பக்தி சிரத்தையுடனும், நம்பிக்கையுடனும் அவற்றை எம் இருதயத்தை நோக்கி எடுத்துச் சென்று அவை வீசும் பிரேமை என்னும் நறுமணத்தைச் சுவாசித்து அவற்றிலிருந்து சிதறும் தெய்வீகப் பிரேமையைத் தியானிப்பதால் சற்றுத் தகுதி வாய்ந்தவர்களாக எம்மை ஆக்கிக் கொள்வோம்.

"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

**"பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருளுரைகளிலிருந்து சில முத்துக்கள்" என்ற புத்தகத்திற்கு ஸ்ரீ ஞான சேகரம் ஐயா அவர்கள் வழங்கிய முகவுரை :-**

"ஒவ்வொருவரிடமும் சென்று ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் தெய்வீக உணர்வைத்தட்டி எழுப்புவ தற்காக, முழுமையான தெய்வீகசக்தி சத்தியசாயியாக மனித சமுதாயத்திற்கு நடுவே வந்திருக்கிறது. நீ தூங்காமல் இருப்பதாலோ, தூக்கம் அதிகம் இருப்பதா லோ, உறுமினாலோ, முனகினாலோ, உதைத்தாலோ, குறை கூறினாலோ, சண்டையிட்டாலோ, அழுதாலோ அப்பொழு தும் நான் கைவிடமாட்டேன். உனது தெய்வீகத் தன்மை உறங்கும்படி நான் விடமாட்டேன். குழந்தை தன் கோபத்தை யும், ஆத்திரத்தையும் தாய்மேல் செலுத்தி னாலும், தாய் தான் தூக்கிச் செல்லும் குழந்தையைக் கைவிடுவதும் இல்லை. கீழே விழுவதற்கு விடுவதும் இல்லை. உன்னைச் சுமந்து செல்லவும், உன் கூடவரவும், உனக்கு உதவிசெய்யவும் வந்திருக்கிறேன். உன்னை என்னால் கைவிடமுடியாது. என் குழந்தைகளுக்கு நான் செய்யவேண்டிய கடமையில் தவறமாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்" என்கிறார் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா.

இப்படியும் ஒரு அன்பை, இப்படி ஒரு துணையை, இப்படி ஒரு உறுதியை, இப்படி ஒரு தாயாரை உலகம் என்றும் கண்டதுண்டா? நல்லவர், தீயவர் என்று கூடப் பாகுபடுத்தாமல், எல்லோரையும் மீட்கவந்து, பிரபஞ்சம் என்னும் சேற்றில்

அமிழ்ந்து போன நம்மை மீட்க கை நீட்டுகிறதே. இதையும் எவரும் வேண்டா மென்பாரா? திக்கற்றுத் தவிக்கும் மக்களுக்குக் கற்பக விருஷம் போல் வந்து நம்முன் நிற்கிறதே! இதை அறியாத அறிவும் அறிவா? காணாத கண்ணும் கண்ணா? பக்கத்தில் நின்று மீள வழியறியாமல் கிடப்பவருக்கு ஆயிரக் கணக்கான வருடங்கள் காணாத விமோசனத்தை ஏற்றுக் கொள்ளாதிருப்பது நமது பாபமா? இந்தச் சாயி எதை நமக்குத்தர இருக்கிறது? "ஸ்வாமியிடம் (என்னிடம்) உள்ள ஐஸ்வரியம் எவரிடமு மில்லை. அது என்னவெனில் நிலையான தூய்மையான மாசுமறுவற்ற பிரேமை ஒன்றே. இதுவே சாயியின் பெருமதிப்புள்ள நிதி. இதுமட்டுமிருந்தால் பிரபஞ்சமே நமக்கு அடிபணியும்" என்கிறார் அவர்.

அவருடைய தெய்வீகத் தகைமையை அவரே அறிவார். "நான் சாதுக்களுக்கும், சாதகர்களுக்கும் வழிகாட்டி, அவர்களுக்கு அருளுவதற்கே வந்திருக்கிறேன். நான் அனைத்துமாவேன், என்னை ஸ்துதி செய்யவேண்டாம். நீ உனது தந்தையை முகஸ்துதி செய்தா உனக்கு வேண்டுவன வற்றைக் கேட்கிறாய்? உரிமை கொண்டாடியே கேட்கிறாயல்லவா? அங்ஙனமே என்னிடத் திலும் தைரியமாகக்கேள். நான் இவ்வுலகத் திற்கு அழைக்கப்படாமல் வந்தேனில்லை. எல்லா நாட்டையும், மதத்தையும் சேர்ந்த முனிவர்களும், துறவிகளும், நல்லோர் களும் என் வரவை வேண்டினர். ஆகையால் தான் நான் வந்தேன். உங்கள் யாவரையும் அன்றும், இன்றும் என்றும் நான் அறிவேன். நான் சங்கு, சக்கரம், கதை பத்மங்களுடன் வந்திருந்தால் என்னைக் கண்டவுடன் நீங்கள் அஞ்சி ஓடிவிட்டிருப்பீர்கள். அல்லது கண்காட்சியில் ஒரு காட்சிப்பொருளாக வைத்திருப்பீர்கள். உங்களில் ஒருவரைப் போல் சாதாரண மனிதனாக இருந்தாலும் என்னை நீங்கள் பொருட்படுத்தியிருக்க மாட்டீர்கள். அதனால் தான், ஒரு மனித வடிவை எடுத்து மகிமைகளைச் செய்து வருகிறேன். ஆன்மீக மறுமலர்ச்சியே எனது குறிக்கோள். தர்ம மார்க்கம், பிரம்ம மார்க்கம் என்ற இரண்டையும் உங்களுக் குக் காட்டுவதற்கே வந்திருக்கிறேன்".

இந்தச் சாயி அவதாரம் தன் ஒவ்வொரு சொல்லாலும், செயலாலும் உலகெங்கும் தெய்வீகத்தைப் பரப்பி வருகிறது. மக்கள் உள்ளங்களிலே நல்ல தன்மையை மலரச் செய்கிறது. "சாயிதத்து வமே பிரேமை தத்துவந்தான். எவ்வளவு தூரம் பிறர் உங்களை நிந்தனை செய்து உங்களுக்குக் கோபம் வருமாறு இகழ்ந்து பேசினாலும் நாங்கள் சிறிதும் பாதிக்கப் படாமல் எப்பொழுதும் புன்முறுவலுடனே இருத்தல் வேண்டும். போலியான சிரிப்பை வரவழைத்துக் கொள்வதை நான் குறிப்பிடவில்லை. உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து இந்த நேச உணர்வை எழுப்பி உண்மையாகவே மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாக இருக்க வேண்டும் உங்கள் புன்னகை. இதயம் பரிசுத்தமாக இருந்தால் தான் இப்படிப்பட்ட இயல்பான மகிழ்ச்சி எப்பொழுதும் நிறைந்து இருக்கும்" என்கிறார் பாபா.

அவர் சொல்வதைக் கேட்காமல், அவருடைய பிரேமையை எப்படி அறியமுடியும். மக்களைப்பற்றி அவர் சொல்லும் உண்மைகளையும் அதை அடையும் மார்க்கத்தையும் அறியாமையை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் எங்ஙனம் அறியமுடியும்? அவரை அடைந்த வர்களாகப் பலர் எண்ணிக் கொண்டும் அவர் அளிக்கும் பேருபகாரத்தைப் பெறாது வாழ்வது அவருடைய கருத்துக்களைக் கேட்க முயலாத துர்ப்பாக்கியமே!

வேதங்களும், சாஸ்திரங்களும் கடவுளை எட்டக்கூடிய அளவு விவரித்தாலும் அதை மக்கள் எட்டாத பொருளாகவே எண்ணி வந்தனர். ஆனால் இந்தத் தெய்வஸ்வரூபம் தான் தெய்வம் என்று பிரகடனம் செய்து தன்னை நாடிய பக்தர்களுக்கு ஐயந்திரிபற தன் தகைமையைப் புரியவைப்பதோடு, அவர்கள் வாழ்வின் போக்கையே மாற்றி உயர்த்திவிடுகிறது. சாஸ்திரங்கள் மூலமும், சம்பிரதாய முறைப்படியும் அறிந்தவற்றில் உள்ள குறைபாடுகளை நோகாமல் வெளிப்படுத்தி சரியான வழிமுறைகளைத் தந்து வருகிறது இந்த சாயி அவதாரம். பிடிவாதமான கொள்கைகள் வைத்திருப்பவர்கள் இவற்றைக் கண்டு இளகுவார்களோ என்னவோ? ஆனால் உண்மை உள்ளவர்கள் எவரோ அவர்களுக்கு இந்த நூலில் உள்ள தொகுப்பு தேவா அமிர்தம். அவர்களின் ஞானக் கண்ணைத் திறக்கும். அவர்கள் வாழ்வு ஒளிமயமானதாயும், நாள்வீதம் தெய்வீகம் வளர்வதாகவும் இருக்கும் என்பது சத்யம்.

நாம் இதுகாறும் பஜனை, தியானம், பூஜை இவற்றால் தான் மோக்ஷம் பெறலாம் என்றிருந்தோம். ஆனால் பகவான் சொல்வதைக் கேளுங்கள். "பஜனை, தியானம், பூஜை இவைகளினால் மோக்ஷம் பெறமுடியாது. இவைகள் மனதைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளேயாகும். அவைகள் எண்ணங்களைத் தூய்மையாக்க உதவுகின்றன. அதன்பிறகு கடவுளை நாடும் மோக்ஷ சாதனையில் ஈடுபட வேண்டும். இவைகள் யாவும் பேரானந்த நிலையடைய வகுக்கப்படும் பாதையே. பாதையைச் செப்பனிட்டபின் பயணத்தைத் தொடங்க வேண்டும். இந்தப் பயணமே சமுதாய சேவை. இந்தச் சேவை செய்யும் போதே ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவிலும் ஒரே தெய்வம் உள்ளது என்றும் இவையாவும் ஒரே தெய்வத்தின் பல்வேறு உருவங்கள் என்றும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

"பவித்திரமான சேவை மாத்திரமே மனிதனைக் கடவுளிடம் கொண்டு செல்கிறது. கடவுளை அடைவதே வாழ்க்கை என்னும் யாத்திரையின் குறிக்கோள்". சாயி அளிக்கும் சேவை மார்க்கம் உலகத்தில் நாம் காணும் சேவைகளைப் போன்றதன்று. அது, தியாகத்தின் மூலமாக, "எனது" "எனது" என்றும் "நான்" என்றும் பொய்மையாய் வளர்ந்திருக்கும் அகங்காரத்தைத் தியாகம் செய்யும் மார்க்கமே. விடவிட, விடுதலை என்னும் மகிமை மிக்க லட்சியமே.

பல்வேறு பாகுபாடும், குணமும், கொள்கையும், பிரிவும் நிறைந்திருக்கும் எம்மிடத்திலே ஒன்றாகக் காணுவதையே வலியுறுத்தி "நீங்கள் ஒருவருக்கொருவர் வேறானவர் என்று கொள்ள வேண்டாம். நீங்கள் வேறு பெயரால் உங்களை அழைக்கலாம். ஆனால் யாபேரும் பல உடல்களில் காணப்படும் ஒரே ஆத்மாவின் பிரதிவிம்பங்களே. கண்ணாடியை எடுத்து விட்டால் பிரதிபிம்பங்கள் மறைகிறது. ஆனால், அந்தப் பொருள் மறைவதில்லை. அதுபோல உடலாகிய கண்ணாடியை நீக்கிவிட்டால் அந்தப் பிரதிபிம்பம் மாத்திரமே மறைகிறது. ஆனால் ஆத்மா (கடவுள்) மறைவதில்லை. கடவுள் உங்கள் ஒவ்வொருவரிடத்தும் உள்ளார் என்ற உண்மையைக் கண்டு கொள்ளுங்கள்" என்கிறார் பாபா.

"பவித்திர சேவை மாத்திரமே மனிதனைக் கடவுளிடம் கொண்டு செல்கிறது. கடவுளை அடைவதே வாழ்க்கை என்னும் யாத்திரையின் குறிக்கோள்" என்று சேவையே விடுதலைக்கு அதி உயர்ந்த

ஒரே சாதனை என்று தெளிவுபடுத்தி "விஞ்ஞானத்தோடு கூடிய விவேகம் உங்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த மேலான தெய்வநிலைக்கு எழுவதற்கு முயலவேண்டும். இதுவே உங்களுடைய மேலான விதியாகும்" என்று சேவையின் மகத்துவத்தைப் பெரிதும் புகழ்ந்து சொல்கிறார்.

"இவ்வுலகில் ஒரு பரம உண்மை உள்ளது. காணப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் மறை பொருளான ஒரு ஆதாரம் உண்டு. மாற்றமுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் மாறாத ஒன்று அதன் ஆதாரமாயுள்ளது" என்று எங்கள் வாழ்வின் உண்மையைத் தெளிவுபடுத்தி எமது க்ஷேமத்திற்காகவும் லோக க்ஷேமத்தை வளர்க்கவும் மூன்று நியதிகளைத் தந்திருக்கிறார். அதாவது "கடவுள் மேல் அன்பு வைத்திருங்கள்" (தெய்வப் பிரீதி). பாபத்திற்கு அஞ்சுங்கள் (பாபப்பீதி) சமூகத்தில் நல்ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் (சமூக நீதி). இம் மூன்றையும் மந்திரங்களாகக் கொண்டு, இவற்றை மனசாரக் கடைப்பிடித்துத் தத்தம் வாழ்க்கையைப் பவித்திரமாக்கிக் கொள்ளுங்கள் என்கிறார் பகவான். ஏனெனில் இறைவன் மேல் அன்புவைக்கும் பொழுது தீய எண்ணங்கள் தாமாகவே ஓயும். நல்லொழுக்கம் வளரும். நல்லவர்கள் சமூகத்தில் நிறைய, நிறைய மக்களிடையே ஆத்ம சமன்பாடும், சுபீட்சமும் நின்று நிலவும்.

நல்லோர் இணக்கம் இனிமையைத் தரும். மகான்களுடன் சகவாசம், வைராக்கியம் ஞானமாகியவற்றை அளிக்கும். இவை பெரும் புண்ணிய வசத்தால் மட்டுமே கிட்டும். அங்ஙனமானால், "தெய்வ நிலை" என்ற பெரும் பரிசை மக்களிடையே வளர்க்க வந்திருக்கும் சாயி அவதாரத்துடன் உண்மையான தொடர்பு கிடைப்பதானால் அது அநேக ஜென்ம புண்ணியத்தால் மாத்திரமே கிட்டும். இந்த நூலில் உள்ள கருத்துக்களை நீங்கள் வாசித்துத் தெளியும் போது, உங்களுக்கு மேலான ஒரு தெய்வ தத்துவத்தின் துணை கிடைத்து விட்டதாக அறிந்து மகிழ்ச்சியும், சாந்தியும் அடைவீர்கள். உங்கள் கவலைகளுக்கும், துன்பங்களுக்கும் நிவர்த்தியும், தெய்வ வாழ்விற்கோர் அத்திவாரமும் கிடைத்து விட்டதாகவும் உணர்வீர்கள்.

**ஸ்ரீமத் பாகவதம் பற்றி 'ஸ்ரீமத் பாகவத்திலிருந்து சில அற்புதச் சிந்தனைகள்' என்ற புத்தகத்திற்கு ஸ்ரீ ஞானசேகரம் ஐயா அவர்கள் வழங்கிய முகவுரை :-**

எல்லையற்ற தகைமை வாய்ந்தது இந்த மனிதப்பிறவி. விடுதலையான இந்நிலை எய்தியவர்கள் தகைமையை வள்ளுவர் பெருமான் பின்வருமாறு மதிப்பிடுகிறார்.

"துறந்தார் பெருமைதுணைக் கூறின்
வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

இதன் பொருள், "பற்றுக்களைத் துறந்தவர்களுடைய பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவது போன்றது" என்பதாகும். மேற்சொல்லிய பெருந்தகைமையை லட்சியமாக வைத்து வாழ்பவர்க்கே ஸ்ரீமத் பாகவதம் அளவிலா மகிமை வாய்ந்ததாய்த் தோன்றும்.

இன்பமென்று, அற்ப சிற்றின்பத்தைத் தேடும் மனிதன், அதை நிழல்போல் தொடரும் துன்பத்தை நினைப்பதில்லை. உலகம் இந்தச் சிற்றின்ப நாட்டத்தில் மூழ்கியிருப்பதால், எங்கு பார்த்தாலும் (அதன் விளைவான) துன்பமே மலிந்து

கிடக்கிறது. மக்கள் துன்பம் வந்தபோது தீக்குழியில் வீழ்ந்தாற்போல் தவித்துத் துடிக்கின்றனர். அறிவுடையோர் இதைக் கண்டு சிற்றின்பத்தை விலக்கும் மார்க்கத்தில் செல்கிறார்கள். அதனால் அவர்கள் துன்பத்தினாலும் பாதிக்கப்படுவதில்லை.

வெளிநோக்கான இந்திரியங்களுடன் மனதும் கூடிப் புறத்தேயுள்ள பொருள்களில் பாசம் வைப்பதனால் வரும் விளைவே இன்ப-துன்பம். இவ்வுண்மையைக் கண்ட பெரியோர் இன்ப-துன்ப இருமைகளுக் கப்பால் சென்று, நம் உண்மை இயல்பான பேரின்பப் பெருநிலையைத் தேடி எய்துகின்றனர்.

இந்த உலகம் கடவுள் மயம். இங்கே காண்பது இறைவனின் திவ்விய ஸ்வரூபமே. எல்லா ஜீவராசிகளும் அவன் வடிவே. எல்லாம் நாராயணனே.

மேற்கூறிய உண்மைகளையெல்லாம் ஐயம்திரிபற எடுத்து விளக்கும் நூல்களில் ஸ்ரீமத் பாகவதத்திற்கு ஒப்பானதோ, உயர்வானதோ கிடையாது.

எல்லாம் இறைவன் செயல் என்று வாழ்வதே உண்மை வழி. இது தான் தர்மமும். இப்படி வாழும் பொழுது பாபமோ, கன்மமோ விளைய இடமில்லை. "நான்", "நீ", என்செயல், உன்செயல், என்பது முழுப் பொய்மை என்பது சிறிது ஆராய்ந்து பார்த்தால் புரியும். பலவாகத் தோன்றும் இப்பிரபஞ்சம் உண்மையில் அங்ஙன மில்லை. இதை பாகவதம் அற்புதமாக விளக்குகிறது.

இன்னொரு மகிமை பாகவதத்திற் குண்டு. இறைவன் மனித ரூபமெடுத்து, மாயையால் கட்டுண்டிருக்கும் மக்களை மாயையினின்று விடுவிக்கத்தானும் மாயவனான கிருஷ்ணனாக உருக்கொண்டு மக்களைத் தர்மவாழ்வில் ஈடுபடுத்தினார். பந்தங்களினின்றும் விடுவித்தார். பிரேமையை மக்களிடத்தில் (விசேஷமாய்க் கோபியரிடத்தே) வெளிப்படுத்தி அமர வாழ்வை வாழும் வழியைக் காட்டினார். பாகவத நூலின் உயிர்நாடி இது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## 'அற்புதத் திருப்பதிகங்கள்' என்ற சாதனைக்குரிய பதிகங்கள் பற்றி ஸ்ரீ ஞான சேகரம் ஐயா அவர்கள் வழங்கிய முகவுரை

மானிடப்பிறவியின் அதி உயர்ந்த இலட்சியம், விடுதலை அல்லது முக்தி. இந்த இலட்சியத்தைக் கைக்கொள்ளாதவர் எவ்வளவு தான் கற்றிருந்தாலும், முக்தி நிலையிலுள்ள தெய்வப் புருஷர்களின் தன்மையையும், அவர்கள் மக்களுக்கு அளித்திருக்கும் செய்தியையும் அறிந்து கொள்ள மாட்டார்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் ஒரு அவதாரம் (ஆதிசங்கராச்சாரியாரே திருஞானசம்பந்தரை திராவிட சிசு என்று போற்றியுள்ளார்) சேக்கிழார் அவரை "வானவர் நாயகர் மகனார்" "நஞ்சணி கண்டத்தர் தம் திருமகனார்" (அதாவது இறைவனின் புத்திரர்) என்று அழைக்கிறார். இன்னும் "வையம் ஏழுடன் மறைகளும் நிறை தவத்தோரும் உய்யவந்தனர்" என்றும், "தாவில் சராசரங்களெல்லாம் சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்றும், "புவிகை மாறின்றிப் போற்றி நின்றவர்" என்றும் அவருடைய தெய்வத்தகைமையை எடுத்துரைக்கிறார்.

உலக மாதா தன் புத்திரன் என்று உரிமை பாராட்டிப் பால் கொடுக்க

உலகநாதன் பொற்றாளமும், முத்துச் சிவிகையும் கொடுத்துத் தம் புத்திரன் என்பதை உலகத்திற்குத் தெரிவிக்கின்றார். குழந்தை ஞானசம்பந்தனும் தான் மறை ஞானஞான முனிவன், நான்மறை கற்றவன், காழியர் மன்னன் என்று தன் தெய்வத்தகை மையைச் சிறிதளவு தெரிவிக்கிறார். அற்புதங்கள் பல இயற்றி சாம்பரைப் பெண்ணாக்கி தன் தெய்வத் தகைமையை எடுத்துரைத்தது ஏன்? இறைவன் செயலை நம் செயல் என்று கொண்டு வாழ்நாளை வீழ்நாளாக்கி வாழும் நம்மைத் துன்பம், பயம், கவலை, மரணம் ஆகிய இழிமையிலிருந்து மீட்கவே.

தெய்வத்தகைமையுடையவருடைய சொற்களை மக்கள் கேட்பார்கள். இருந்தும் அவர்களுக்கு மேலும் உறுதி கூறுவான் வேண்டி "இறைவன் என் உளமேபுகுந்த அதனால் கோள்களும், நாள்களும் யமனும், அரக்கரும், இடியும், மின்னலும், கோபமும், பகையும் நோயும், பகையும் எல்லாம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல என்று எம்மை இறைவன் பால் செலுத்தி வினையை நீக்க முற்படுகிறார் திருஞான சம்பந்தர். மேலும் இறைவனுடைய அடியார்களைக் கிரகங்களும், நட்சத்திரங்களும் என்றும் துன்பப்படுத்தாதவாறு பாடியிருக் கிறேன். இந்தப் பதிகத்தை ஓதுகின்ற அடியார்கள் வானில் அரசாள்வர் "இது நமது ஆணை" என்று கோளறு பதிகத்தில் நமக்கு காவல் தந்திருக்கிறார் அரசன் மக்களிடத்தில் ஆணை செலுத்துவான். கோள்களையும், நாள்களையும், காலத்தை யும், நியதிகளையும் ஆக்ஞை செய்ய இறைவனால் தான் முடியும். திருஞான சம்பந்தருடைய குரல் இறைவனுடைய குரல் அவருடைய பாடல் இறைவன் நேரடியாக மனித உருவத்தில் வந்து நமக்களித்த பாடல். இவருடைய பாடல் களை அப்படிக் கருதிக்கொண்டு பயில வேண்டும். கருத்து நினைந்து உணர்வில் ஊன்றிப் பயில வேண்டும். இறைவனை அணைத்தவரை முன்வினை தீண்டாது என்று அவர் தந்த உறுதியைச் சத்தியவாக்கென்று ஏற்க வேண்டும்.

ஒரு பாட்டைப் பாடும் பொழுது கருத்தில் மனதை ஈடுபடுத்துவதை முற்றாக மறந்து பண்ணிசையில் சங்கதி, ஆலாபரணங்களிலும் நாம் வீணே விரயம் செய்து வரும் வழியை விட்டு கருத்தே காரியமாகப்பாட வேண்டும். கருத்தை நினையாது பாடும் பாட்டு வெறும் அர்த்தமற்ற சொற்குவியலே. இப்படிப்பாடு வதன் மூலம் இறைவனுக்கு நாம் என்ன கேட்கின்றோம், விரும்புகின்றோம் என்பது தெரியவராது. நாம் பாடினது என்னத்தைப் பற்றியென்பது நமக்கே தெரியாமலிருக்க இறைவன் எதை அனுக்கிரகிப்பது? "உற்றனவல்லவர் உம்பராவரே" என்று பாடலை நாம் அணுக வேண்டிய முறையைப் பற்றிச் சொல்கிறார் திருஞானசம்பந்தர். இது கவனிக்கப்பட வேண்டியது.

பந்த பாசங்களை நீறாக்கி அதாவது சித்தமலம் அறுவித்து நம்மைச் "சிவமாக் கும்" பதிகம், திருநீற்றுப் பதிகம். இது முக்தியை நேரடியாக நாடச்செய்யும் பாடல். இந்தப் பதிகம் பாடத் தொடங்கும் பொழுது சிறிது விபூதியை எடுத்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு பாடலும் தொடங்கும் பொழுது சிறிது திருநீற்றை வலது கைப்பெருவிரல் நடுவிரல்களால் கிள்ளி அந்தக் கையை மார்பளவில் உயர்த்தி வைத்து அந்தத் திருநீற்றின் மகிமையைக் கருத்து நினைத்திருந்து மகிழ்ந்து படித்து "ஆலவாயான் திருநீறே" என்று முடிக்கும் பொழுது நெற்றியில் பூசிக் கொள்ள வேண்டும். பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் இப்படியே பாடுவது ஒரு சிறந்த சாதனையாகும்.

"கைவினை செய்து பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம் செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்" என்பதற்கிணங்க மற்றைய பதிகங்களைப் பாடுவதையும் ஒரு சாதனையாக்கிக் கொள்ளலாம். மலர் பறித்து வைத்துக் கொண்டு பாடல்களின் கருத்தை நன்றாக அறிந்து வைத்து, அந்தக் கருத்தின் நினைவில் நம்மை நிறுத்திக் கொண்டு பதிகத்தின் ஒவ்வொரு பாடல் முடிவிலும் சில தடவையாகிலும், பல தடவையாகிலும் பஞ்சாட்சரப் பொருளாகிய சிவனின் மகிமைகளை நினைந்து "சொல்லு நா நமச்சிவாயவே" என்ற பணிப்பின்படி "ஓம் நமச்சிவாய" என்று நா உச்சரிக்க ஒவ்வொரு மலரையும் இறைவனை நினைந்து ஒரு இலையில் வைக்கலாம். மனம் இறை நினையில் இருப்பது தான் இங்கே வேண்டியது. நா ஜெபித்துக் கொண்டிருக்க மனம் திசைதிசையாய் அலைந்து திரியப்பாடும் பாடலுக்குப் பயன் உண்டோ?

இன்று நம் வாழ்க்கை, பொருள், பண்டம், அந்தஸ்து இவை நிலையாதவை என்பதை நாளுங் காணக்கூடியதாய் இருக்கிறோம். இறைவனிடத்துத் தன்னல மான வேண்டுகோள்கள் (அதுவும் இந்த நிலையற்றவைகளைத்தான்) வேண்டி வந்தோம். நாம் மீளவழி நிச்சயமாய் உண்டு. திருஞானசம்பந்தர் வாக்கு நம்மிடம் உண்டு. அதை உரிய முறையில் எடுத்து எல்லாத் தீங்கையும் நீக்கலாம்.

தமிழ் மக்களுக்கு உலகெங்கிலும் கிடைக்கமுடியாத ஒரு பொக்கிஷம் ஞானசம்பந்தர் பாடல்கள். இவர் தரும் செய்தி இது தான். கொல்வாரேனும் குணம் பல நன்மைகள் இல்லாரேனும் இறை நாமமாகிய "பஞ்சாட்சரத்தை இயம்பு வாராயின் எல்லாத் தீங்கையும் நீக்குவர்" என்பதே.

பிறர் நலம் நம்மிடத்துக் காண்பது மிக அரிது. எமது உண்மையான நலம் பிறர் நலமே. பிறர் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் நமக்குச்சுகம் தரும். பிறர் நலமும் அவர்களுக்காக நாம் செய்யும் தியாகமும் "நான்" "எனது" என்னும் அறியாமையைக் கரைக்கும். நம்மிடத்தே சிவத்தை வளரவைக்கும். உலக சுகத்தையே நமது சுகமாகவும் பிறர் வாழ வேண்டும் என்ற விருப்பமே நமது தர்மமாகவும், வாழ வேண்டும் என்ற கருத்தை நமக்கு உண்டாக்கி அவ்வழியில் நமக்கு உய்வுதரவே திருஞானசம்பந்தர் "வாழ்க அந்தணர்" என்னும் பாடலை நமக்குத் தந்திருக்கிறார். இதை எப்பொழுதும் நினைந்து வாழ்ந்து உய்வோமாக.

தனியாகப் பாராயணம் செய்வதிலும் குடும்பத்தோடு செய்வது மேல். வீடுகளி லோ, திருத்தலங்களிலோ அநேகர் சேர்ந்து செய்வது மிக உயர்ந்த பலனை அளிக்கும்.

இந்நூலிலுள்ள பதிகங்களைக் காலையிலும் மாலையிலும் மலர்க ளெடுத்துக் கருத்தை நினைந்து மகிழ்ந்து நாட்டிலுள்ள எல்லோரும் ஓதித் துன்பம் நீங்கி இன்பம் பெறுவீராக.

**ஸ்ரீ ஞானசேகரம் ஐயா அவர்கள் வழங்கிய 'சத்சங்கம்'**

**இதயத்தை விரிவாக்குவது எப்படி?**

**இதயத்தை விரிவாக்குவது என்றால் என்ன?**

இதயம் இப்பொழுது எங்களிடம் எப்படியுள்ளது? இது ஆத்மீக இதயம் - இந்தப் பிரபஞ்சத்தையே அடக்குமென்று ரமணமகரிஷி கூறுகின்றார். ஏனெனில்

பிரம்மத்தையுணருவது இவ்விருதயத்தில் தான், வேறு எக்கருவியும் அதனையுணராது. பற்று, பந்தம் என்பன அகன்று இருதயம் பரிசுத்தமடைகையில் ஆத்மாவைப் பிரதிப லிக்கும் தத்துவம் அதில் தோன்றுகிறது. அன்பை இருதயத்தில் தான் அனுபவிக்க முடியும். புத்தியாலோ மனதாலோ முடியாது. எல்லாமற்ற பின்னர் உண்டாவது அன்பு. அன்பு வழியில் நோக்குவதும் ஒரு பார்வையே. அக்கண்ணினால் பார்க்கையில் எல்லாம் ஒன்றாக அன்பாகத் தெரியும். ஆனால் இவ்வூனக்கண்ணால் நோக்குகை யில் பன்மையாய் புலப்படும். அன்பெனும் கண்ணினால் பார்க்கையில் எல்லாம் தானாக, எல்லையில்லா ஆனந்தமாக, ஒன்றாகத் தெரியும். அதுவே பரம தரிசனமாகும்.

ஆதலினாலே இவ்வன்பெனும் ஒன்றான தரிசனம் வருமட்டும் இருதயத்தை விரிவாக்க வேண்டும். இப்பொழுது எம்மிடம் இருதயம் எப்படி உள்ளது? ஒடுங்கி, நெருங்கி, நசுங்கி, பெரியகாமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், பயம், கவலை, சோகம் என்பன நெருங்கிப் பெரிய கேவல நிலையிலுள்ளது. இவ்விதயம் உயிர்ப்பற்றுள்ளது. சோகமாய் திகழ்கிறது. அதனில் ஆனந்தமில்லை. அன்பில்லை. இதுவே எமது நிலை. ஆகையால் பிறரை யெல்லாம் பேதமாய் பார்த்து, துன்பமாய் நடந்து, பாவத்தையேற்படுத்தும் ஒரு நிலை தான் எங்களிதயத்திலுள்ளது. இவ்விதயம் விரிவடைய வேண்டும். விரிவடையச் செய்ய வேண்டும்.

எங்களிடம் தற்பொழுது "நான்" "எனது" என்பதைக் கொண்ட இதயந்தா னுள்ளது. "நான்" "எனது பிள்ளைகள்" என்பதே எம்மிதயத்தினுள் உள்ளது. கதவைப் பூட்டிவிட்டு எங்களுக்குள்ளேயே நாம் வாழ்கிறோம். இது சோகமான நிலை.

இதயம் விரிவாக வேண்டும் என்பதன் பொருளென்ன? மற்றவர்களுக்கும் இடம் கொடுப்பது தான் இதயத்தை விரிவாக்கு வதாகும். மற்றவர்களை நேசிக்கிற போதெல்லாம், எம்மிதயத்தில் அவர்களு க்கும் இடம் கிடைக்கிறது. "நான்" என்பதை விட்டே அவர்களை நேசிக்கிறோம். அவரிடம் அன்பு செலுத்துகையில் நான் என்னைப்பற்றி நினைத்தால் அவரிடம் அன்பு பூண முடியாது. இவ்வாறு பிறரையெல்லாம் அன்பாக நாம் பார்க்கையில் இதயம் விரிவடைகிறது. இதயத்திற்கு எல்லையற்ற தகைமையுள்ளது. இவ்விதயம் விரிவடைகையில் எமது பகை, குரோதம், லோபம் நீங்கி இவை எல்லாவற்றுடனான எமது பிடிப்பு நீங்குகி றது. நாம் சேவை செய்யச் செல்கிறோம். அப்பொழுது சாதாரணமாக வருத்தக் காரனை நாம் திரும்பிப் பார்ப்பதில்லை. மூக்கைப் பொத்தியவாறு நாம் போக வேண்டிய இடத்திற்குச் செல்கிறோம். வெறுப்பாக எங்களையே, மூடி போட்டுக் கொண்டு, வேலி போட்டுக் கொண்டு, நாம் சென்று, எங்களைச் சுற்றி மூடியுள்ள வெறுப்பு எனும் வேலியை சற்றே திறந்தால், மற்றவர்களை ஒரு அரவணைப்போடு பார்க்க ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இதயம் விரிவடைகிறது.

அவ்விரிவு எமக்குச் சுகமளிக்கிறது. துன்பம் கிடையாது. இதனை நாம் அவதானிக்க வேண்டும். நாம் சேவை செய்கையில் அருவருப்பு நீங்குகிறது. அருவருப்பு என்றால் சந்தோஷமா? எங்களிடம் அருவருப்பு தோன்றும் பொழுது எப்படியிருக்கிறது? சுகமாயிருக்கிறதா? அருவருப்பை நீக்கி அன்பாய் எல்லாவற் றையும் பார்க்கையிலேயே அன்புடன் நோக்கும் வாய்ப்பு எம்மிடம் தோன்றுகிறது. விகாரமாய், பகையாய், பேதமாய், குரோதமாய், ஊதாசீனமாய்ப் பார்ப்ப தெல்லாம் மாறி, நாங்கள் அன்பாய்

நோக்கின் எங்கள் நெஞ்சில் உள்ள இனிமையான அனுபவம் அன்பாகத்தான் இருக்கும். இல்லையேல் கோபத்துடன் அவர்களை நோக்கின் எரிவும், பொறாமையாய்ப் பார்க்கையில் எரிவும், பெருமையுடன் பார்க்கையில் ஏதோ ஒரு உணர்வும் இவ்வாறு அவை கேடு செய்யும் காரியமாக உள்ளன.

அதனால்,

"இதயம் விரிவடைய வேண்டும்" என்று சுவாமி சொன்ன சொல்லை நன்கு கவனிக்க வேண்டும். இதனாலேயே நமக்கு நயமுள்ளது.

ஏதோ மற்றவர்களுக்காக இதயம் விரிவடைகிறது; மற்றவர்களுக்குச் சேவை செய்து அவர்களை வளர்த்து விடுகிறோம் என்றெண்ணுவது தவறு. ஒருவரை இன்னொருவர் இங்கு வளர்க்க இயலாது. ஒவ்வொரு கணமும் கண் பார்க்க, காது கேட்க, எங்களுடைய மூச்சு இயக்கம் முழுவதையும் கவனித்து மற்றவர்களையும் பார்க்கிறது யார்?

நீங்கள் ஒன்றுமே செய்கிறதில்லை. ஒரு காரியமும் நீங்கள் செய்ய இயலாது. அப்படி என்றால் இதயத்தை விரிவாக்குவது எப்படி?

சுவாமி சொல்கிறார்,

தன்னுடைய வீடு, வாசல், பிள்ளை குட்டி என்று நாங்கள் வட்டம் போடுகின் றோம். மற்றவர்களுக்கு என்ன நேரிட்டாலும் பரவாயில்லை என்று விருப்பும், வெறுப்பு மாய் இருப்பது அன்பல்ல. ஒன்றில் விருப்பும், அதே விருப்பம் பின்பு வெறுப்பாகவும் மாறுகிறது.

ஒரு தாய் தன் மூத்த பிள்ளையை செல்லமாய் வளர்த்து எவ்வளவோ எல்லாம் சீதனம் கொடுத்து கலியாணம் செய்து விட்டு, மற்றப் பிள்ளைக்குக் கொஞ்சம் கூடக் கொடுத்தவுடன், மூத்த பிள்ளை "நான் சாகும் வரையில் உன்னைக் காணமாட்டேன், நான் சுடலைக்கும் வர மாட்டேன்" என்று சொல்கிறது. பாசம் தான் அப்படிக் கூறுகிறது. அன்பு ஒருபோதும் அவ்வாறு கூறுவதில்லை. எங்கள் இதயத்தில் எங்கள் பிள்ளைகள் குட்டிகள், எங்கள் இனத்தவர், புருஷன் இவற்றைத் தானே கவனிக்க வேண்டும். மற்றவர்களைப் பொருளாய் மதித்துக் கவனிப்பின் நாங்கள் வாழ இயலாதா? ஏதோ வாரிக் கொடுப்பவர் போல நாம் நினைக்கிறோம்.

இங்கு வேறொன்றும் செய்வதற் கில்லை. ஆக எங்களுக்கு வேண்டியபடி நாங்கள் வாழ்கிற பொழுது மற்றவர்களிடம் அன்பாய்ப் போட்டியில்லாமல், பொறாமை யில்லாமல், பெருமையில்லாமல் இருக்க வேண்டும். அடுத்த வீட்டுக்காரன் என்ன செய்கிறான், என்று நாங்கள் நினைத்து அதனால் நாம் தூண்டப்பட்டு அவனைப் போல உடுக்க வேண்டும், செய்ய வேண்டும் என்னும் போட்டிகளைவிட்டு, பொறாமைகளை விட்டு, நாங்களும், அவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டும். எங்களால் ஏதும் செய்யமுடியு மென்றால் செய்து சந்தோஷப் படுத்தலாம். இல்லாவிட்டால் சுவாமி ஒரு வழி சொல்கிறார் - துன்பமின்றி இருக்கும் வழி.

பிறர் சந்தோஷமாயிருப்பதைக் கண்டு சந்தோஷப்படு. பிறர் துன்பத்தைக் கண்டு இரங்கு. துக்கமுறாதே. அவ்விரக்கம் அன்பிலேயேயுள்ளது. எவ்விததீங்கும் நெஞ்சிற்குநேராது. இவ்விதபார்வையில் நெஞ்சில்இனிமை தோன்றுமேயன்றி காமம், குரோதம் இவையொன்றும் தோன்றா.

ஆதலினால் இதயம் விரிவாக வேண்டுமாயின் ஒரு மார்க்கம், பிறர் எல்லாம் நல்லாயிருப்பதைக் கண்டு மகிழ்வதே. அவர்கள் சந்தோஷமாய் பெரிதாய் இருந்தால், "ஓம் நல்லது நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்கள். உங்களுக்குச் சுவாமி எல்லாம் தந்துள்ளார். ரொம்ப சந்தோஷம்" என்று மனசார வாழ்த்தி, வாயினால் சொன்னால், சந்தோஷப்ப டுத்தினால் அந்தச் சந்தோஷம் எங்களி டத்தில் தோன்றும். நாங்கள் பொறாமைப் பட்டு ஒரு கடுமையான வார்த்தையைச் சொன்னால், எங்களிடம் கடுமைதான் வரும். ஆனதினால் இக்கடினம் எங்களிரு தயத்திற்கு கேடு. எமக்கு துன்பத்திற்கு வழி. இது எங்கள் சுகத்தைச் சீரழிக்கிறது.

அத்தகைய இடத்தைத் தவிர்த்து நாங்கள் இன்பமாகச் சந்தோஷமாக இந்த இருதயத்தை வைத்திருக்க இதயம் விசாலமாகும்.

விசாலமாவதற்குத்தான் சுவாமி, தியாகம், சேவை என்கிறார். இங்கு பூஜை, தவம், எல்லாம் செய்கிறாய். உனக்காகச் செய்கிறாய். எனக்கு எனக்கு என்று செய்கிறபொழுது எல்லாம் உண்மையாக நலமாவதில்லை. கொஞ்சம் சித்த சுத்தி வருமேயொழிய, உண்மையான விடுதலை பிறருக்கென்கின்ற பொழுதுதான் வரும். அப்பொழுதே "நான்" "எனது" என்பதை விடுகிறோம். எனக்காகப் பூஜை, எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று செய்கிறபோது "எனக்கு" என்பது பெருகிக் கொண்டு தான் இருக்கின்றது.

ஆகவே, இதயத்தை விரிவாக்குவது எப்படி? சுவாமி சொல்கிறார், தேகத்தின் மீது நாட்டம் வைப்பதை விடுத்து ஆசைகளை அடக்கி அன்பைப் பெருக்கினால் தான் இதயத்தை விசாலமாக்க முடியும். எப்படி ஆசைகளை அடக்கி அன்பைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறார்? எப்படி அன்பைப் பெருக்குவது? அன்பு இருக்கின்ற பொருள் என்றால், மோர் மாதிரித் தண்ணீரை ஊற்றிப் பெருக்கலாம். இங்கே யென்ன இருக்கிறது? அன்பே இல்லையே. அவ்வாறெனில் அன்பைப் பெருக்குவது எப்படி? பிறரிடத்தில் தான் அன்பைக் காட்ட முடியும். எனக்குள்ளே அன்பைக் காட்ட முடியுமோ? நான் அன்பாய் இருக்கிறேன் என்று நினைத்தாற் போல் அன்பு வருமா? அது வராது.

பிறரிடத்தில் அன்பு, விருப்பம், நல்ல நினைவு, அவருக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நினைப்பு, இவற்றினால் தான் அன்பு வெளிப்படுகிறது. தன்னைவிட்டு வெளிவருகிறபோது இந்த ஆத்மதத்துவம் எப்படியுள்ளதென்றால், இரண்டு ஒன்றாயும், நீ நானாயும் உள்ளது. யோகர் சுவாமி சொல்கிறார் - "நீயே நானென்று சொன் னான் எங்கள் குருநாதன்". எல்லாம் நீ என்று சொன்னான் எங்கள் குருநாதன். அப்படித்தான் சொன்னார். அதுவே உண்மை. எல்லாம் நீயே. அந்த உண்மைக்கு வரும்போது ஆனந்தம் தான். அப்பொழுது தான் பிரம்மானந்தம் வரும். அவ்வெல்லையற்ற ஆனந்தம் மனிதனிட முள்ளது. நாங்கள் எப்படி அதனை மறைத்து வைத்திருக்கிறோமென்று இப்பொழுது எங்களுக்குத் தெரிகிறது. எப்படி? எதனால் மறைந்திருக்கிறது? "நான்" என்ற ஆணவத்தினால்.

"நான்" என்று ஒன்றில்லை. எனக்கு எனக்கு என்று எதை வைத்திருக்கிறோமோ, அது தான் நானாக இருக்கிறது. நான் என்று ஒன்றில்லை. "என்னுடையது" "உன்னுடை யது" எப்பொழுது நீங்கியதோ அப்பொழுது "நான்" இல்லை. விறகுக் கட்டைகளைக் குவித்துவிட்டால், அது குவியல்.

அக்குவியல் எப்படி வந்தது? இக்கட்டைக ளெல்லாம் சேர்ந்த பொழுது தான். கட்டைகள் நீங்கினால் பின்னர் என்ன இருக்கின்றது? குவியல் என்ற பெயர் இல்லை. ஆதலினாலே இந்த ஆசை, பற்று எனது என்பவை தான் "நான்" என்பதை யுண்டாக்கியிருக்கிறது. எனது என்று சொல்லாமல் இருப்பதைவிட "இறைவனது" என்ற உண்மையைச் சொல். எனது செயல் எல்லாம் இறைவன் செயல் என்று சொல். எல்லாம் சுவாமி உன்னுடையது தான். நீ தந்தாலும் சரி, எடுத்தாலும் சரி எல்லாம் உன்னுடையது தானே என்று எண்ண வேண்டும். அப்படியென்றால் இழப்பு ஒருவனுக்கு வருத்தமாகாது. அது வரும் பொழுது அது அவனுக்கு பெரிதாயிராது. ஏற்றமும் இறக்கமுமற்ற சாந்தமான நிலை எப்போதும் இருக்கும். ஆனதனாலே அதற்கு ஒரு வழி உண்டு. இதயத்தை விசாலமாக்கும் வழி!.

இதயத்தை விசாலமாக்கினால் என்ன உண்டாவது? அன்பு வளரும். அசுகம் எல்லாம் போகும். எது அசுகம்? காம, குரோத, மோக, மத மாச்சர்யம், பெருமை, பயம் இவற்றையே நாங்கள் வளர்த்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நன்றாகக் கொண்டாடுகிறோம். நாங்கள் மெல்ல மெல்ல ஆராய்வோம். அது என்ன? எப்படி வந்தது? எங்களுக்கு துன்பம் வந்துள்ளதே, பயம் வந்திருக்கிறதே எதனாலே வந்தது, என்று பார்க்க வேண்டும். அதுதான் ஆத்மீக மார்க்கம். நாங்கள் அதனைக் கண்டு அவ்வழியையடைய வேண்டும். அந்தப் பயம் வருகிற மார்க்கம், அந்தத் துன்பம் வருகிற மார்க்கம், பயம் வருகிற மார்க்கம் எங்கேயிருந்து வந்தது, என்ன பிழை செய்தேன், என்று சொல்லிப்பார்த்து அப்பிழையை நிவர்த்தி பண்ணி இனிமேல் அது போன்று செய்யாது இருக்க வேண்டும். அதை நீக்க மார்க்கமுண்டு. அதனையும் தேடிச் சும்மாயிருக்கலாம். நாங்களோ இதில் என்ன வரப்போகிறது இதைக் கேட்டாற்போல் இப்போது என்ன சுகம் வரப்போகிறது என்று எண்ணுகிறோம். பாருங்கள் இப்பொழுது சுவரெல்லாம் அசுத்தமாகவுள்ளது. இதை இனி எங்கே செய்வது என்று விட்டால் விடலாம்; ஆனால் நன்றாகக் கொஞ்சம் சிரமப்பட்டு கழுவி நல்லாய்ப் புதிதாய்ப் பெயின்ற் பண்ணி நல்ல அழகானதாக்கலாம். அப்படிச் சோம்பல் என்று எண்ணுகிறவர்களுக்கு இயக்கம் ஒன்றுமே வராது. அவர்கள் அப்படியே தான் இருக்க வேண்டுமென்றால் அப்படி இருக்கலாம். ஆனால் இதிலிருந்து மீள்வதற்கு மார்க்கம் இருக்கிறது என்று சாதாரண மனிதர்கள், பணக்காரர்கள் சொல்லவில்லை. மகான்கள் என என்றைக் கும் உலக மக்கள் வாழ்த்தி வணங்கிப் போற்றி, அவர்களால் ஈடேறி அவர்களை நினைத்து, அவர்களை நினைத்ததும் பயம் தீர்ந்து - அப்படிப்பட்டது மகான்களின் சொல். ஆனதினால் அதனை நாங்கள் கவனிக்க வேண்டும்.

சுவாமி சொல்கிறார், - "இந்தப் பண்டிதன் எழுதிய சோதிடம், அவன் ஏதோ கணக்குப் போட்டு எழுதிய சோதிடத்தில், அமாவாசை, பறுவம், அட்டமி என்று போட்டால் அதை அப்படியே நம்புகிறீர்கள்". ஆனால் உபநிடதத்தில் "நீ கடவுள்" "நீ பரம்" என்று சொன்னால் நம்புகிறீர்களில் லையே. இந்த மகான்கள் பெரிய வேத விற்பனர்கள், அறிவாளிகள், ஞானிக ளெல்லாம் கண்ட உண்மையை உதாசீனம் செய்துவிட்டிருக்கிறீர்களே. சோதிடன் சொன்னதைப் பெரிதாய் ஏற்றுக் கொள்கிறீர் களே, உங்கள் புத்தியை என்ன என்று கூற" என்று கேட்கிறார்.

ஆதலால் எதை நாங்கள் கருத வேண்டும். எதனை நாங்கள் ஏற்க

வேண்டும்? அந்தக் காலத்தில் அதைப் பற்றிப் பெரிதாய்ப் பேசவில்லை. சுவாமியோ அதனைத்தான் பெரிதாய்ப் பேசிக்கொண்டு வருகிறார். "சனாதன சாரதியில்" வெளி வந்துள்ளது சுவாமியின் சொல்லுத்தானி ருக்கிறதே, அதை வைத்துக் கொண்டுதான் விளங்கப்படுத்துகிறேன் இப்பொழுது இதயத்தை விரிவாக்குவது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

அதுவே எங்களுக்கு மீட்சி. அதுவே எங்களுக்குச் சுகம் தருவது. அதுவே பாபம் போகிறவழி. பாபம் போகும், போகாதென்று ஒருவரும் சொல்லவில்லை. ஒளவையார் கூடச் சொல்கின்றார். "வருந்தி அழைத் தாலும் வாராத வாரா; பொருந்துவன போ" என்று சொன்னால் போகா". பாடுபட்டு அழுதாலும் வராதது வரமாட்டாது. போ என்று சொன்னால் வந்தது போகாது. ஒருவன் எங்களைச் சுட வருகிறான் என்று சொன்னால் போ என்று சொன்னாலும் போகான். அவன் சுட்டுத்தான் தீருவான். ஆனதினாலே "இருந்தேங்கி நெஞ்சும் புண்ணாகி நெடுந்தூரம் தான் நினைந்து துஞ்சுவதே மாந்தர் தொழில்". சும்மா இருந்து நினைத்துப் பெருமூச்சுவிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பது தான் எது? எதற்கு வராதது வராது என்று சொல்லிக் கவலைப்படுவது? போனது முடிந்தது அதனை எண்ணி ஒப்பாரி சொல்வது வீணான காரியம். ஆனால் இன்னொரு பாடலில் அவர் சொல்கிறார். "சிவாய நம என்று சிந்தித்து இருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை. உபாயம் இதுவே மதியாகும்" இதுதான் புத்தி "மற்றல்லாதன வெல்லாம் விதியே மதியாய் விடும்" அந்த விதியோடுதான் அப்புத்தி போகும். அழுகிற புத்திதான் வரும். ஐயோ என்று, முடிந்ததற்கு நெடுக ஒப்பாரி வைக்கின்ற புத்தி தான் வரும். ஆனால் சிவாயநம என்று சொல்லலாம். ஞானசம்பந்தர் அதைத் திடமாகப் பெரிய வெற்றியாயுதமாக எங்களுக்குத் தந்திருக் கிறார். இது பெரிய வஜ்ராயுதம். எந்தப் பெரிய ஆயுதமும் அதற்கு நிகரில்லை. ஏனென்றால், கன்மத்தை யெல்லாம் தூளாக்கும் ஆயுதம் தான் அந்தக் கோளறு பதிகம்.

இந்த ஆத்ம வழிக்கு வருபவர்க ளெல்லாம் ஆத்மவிடுதலை பெற்றவர்க ளல்லர். பல நிலையிலுள்ளவர்கள், பல துன்பங்கள், கஷ்டங்கள், தேவைகள் உள்ளவர்கள். அவர்களுக்கு அவையெல் லாமிருந்து வருத்திக் கொண்டேயிருக்கும். ஆனால் சுவாமியை நம்பி, உண்மையை நம்பி வருகிறவர்களுக்கு கட்டாயம் அதில் விடுதலை வரும். அத்தகைய உறுதி விசுவாசம் வேணும். ஒரு மஹானை ஒரு அவதாரத்தின் சொல்லை நம்பவேண்டும். அச்சொல் விளங்கவில்லையென்றால், அதை யார் விளக்குவார்கள், அவர் என்ன சொல்கிறார் என்று கேட்க வேண்டும்.

"ஆனந்த சொரூபிகளே" என்று சொல்கிறாரே, "நீ அழியாத வஸ்து, ஆத்மா நீ," என்று எப்போதும் சொல்கிறாரே! எல்லோரும் இறந்து போகிறார்கள். இங்கு ஒருவரும் இருக்கவில்லை.

"அழியாதது" என்று எதை சொல்கிறார். எங்களுக்கு விளங்கவில்லை, சொல்லுங்கோ என்று கேட்கவேணும். நாங்கள் அதைக்கூட நம்புவதில்லை. சுவாமியும் இதையே சொல்லி முடிந்தா யிற்று. எங்களின் கவலை, துன்பம் இருந்தபடியே இருக்கிறது. இவ்வவதாரமோ இவ்வளவு தூரம் வந்து, கை நீட்டுகிறது. என்னை நோக்கி நீ ஒரு அடிவை - நான் நூறு அடி வைக்கிறேன், என்று சொல்கிறதே. இவ்வளவு தூரம் அவர் வருகையில் நாம் முயற்சித்தால் எங்கள் கஷ்டங்களெல்லாம் தீரும்.

சுவாமி என்ன சொல்கிறார். முன்பெல்லாம், "உனது துன்பங்களை யெல்லாம் என்னிடம் கொண்டுவா, என்னிடத்திலிருந்து ஆனந்தம் பெறு" என்றார். எவ்வளவு காலம் எத்தனையோ வருஷம் ஆயிற்று. அவ்வளவு காலம் உபதேசம் செய்து, இப்பொழுது 60 ஆவது ஆண்டிலிருந்து சொல்கிறார். "அத்வைதத் தையே போதிக்கிறேன்" என்று.

அத்வைதம் என்றது ஒன்று தான். கடவுள் தான் எல்லாமென்றும் அவை என்றும் ஆனந்தப் பொருள் தான் என்றும் அதைவிட வேறொன்றுமில்லை, என்று முள்ள பொருள் தான் நீங்கள் ஒவ்வொரு வரும் என்பதையும் தான் அவர் உபதே சிக்கிறார். சமீபத்தில் அவர் சொல்லி யுள்ளார், பரமாத்மாவோ, அவதாரங்களோ யாருடைய புண்ணிய பாவங்களையும் பொருட்படுத்துவதில்லையென்று. இதுவே கீதையிலும் சொல்லப்பட்டுள்ளது.

யாருடைய துன்பங்களையும் நிவர் த்தி செய்ய அவதாரங்கள் வருவதில்லை. பிரேமையை வளர்க்க வந்தேனென்கிறார் சுவாமி. ஏனென்றால் துன்பங்களெல்லாம் பிழையாக நடந்து, நீங்கள் உண்டாக்கிக் கொண்டவை. இன்று நீங்கள் யாரையோ வருத்தித் துன்பம் செய்கிறீர்கள். அதன் விளைவாகத் துன்பம் வரும். "ஐயோ" என்று ஓடுவீர்கள். அப்பொழுது சுவாமி அதை நீக்கிவிட்டால் அடுத்ததரம் போய் இன்னும் ஒன்றைச் செய்துவிட்டு, பின்பும் வருவீர்கள். இப்படி நெடுக பிழையான வழிகளில் வாழ்ந்தால், துன்பம் வந்து கொண்டி ருக்கும். எதனால் துன்பம் வருகிறதென்று உங்களுக்குத் தெரியாது. நீங்கள் வந்து அதைத் தீர்த்துக் கொள்வது, நாயின் வாலை நிமிர்த்த நிமிர்த்த எப்படி இருக்குமோ, அதுபோல் தான். இதனை ஒரு அறிவாளிகளும் செய்யார்கள். அப்போ அவர்கள் என்ன செய்வார்களென்றால், உங்களுக்குத் துன்பம் ஒரேயடியாக வராத வழியைச் சொல்லுவார்கள். அதாவது இதயத்தை விசாலமாக்கிக் கொள்ளுங்கள் என்று. இதயத்தை விரிவாக்குவதெப்படி?

விரிவாக்கினால் துன்பம் போய்விடும். துன்பம் எப்படி வரும்? எங்களுடைய நெஞ்சில் வருத்தமாய் வரும், சோகமாய் வரும், பயமாய் வரும், அப்படியெல்லாம் வரும். இன்னுமொருவருக்குச் சேவை செய்து அவருக்குக் கொடுத்து இன்பப்ப டுத்துவதால் எங்களிடம் பெருமை, பொறா மை எல்லாவற்றையும் விட்டுவிடுவதென்பது பொருள். இப்பொழுது நாம் அவற்றுடனே தான் வாழ்கிறோம். அதிலிருந்தே எங்களுக்கு துன்பம் உண்டாகிறது. எங்கள் மனதில் மற்றவர்களைப் பற்றி தீயதாகக், குறைவாக நினைப்பதெல்லாம் எங்களுக்கு மனவருத்தமாய் வந்து குவிந்துள்ளன. இல்லையேல் துன்பம் வருவதற்கில்லை. இங்கு ஒரு வித்தின்றி மரம் முளைப் பதில்லை. எக்காலத்திலும் இதனைக் கேள்விப்பட்டதில்லை. வித்தின்றி திடீரென மரம் முளைத்து காய் காய்த்ததில்லை. பழுத்ததில்லை. ஆனதினால் இங்கு எண்ணம், சொல், செயல் என்று எங்களிடமிருந்துண்டான வித்துக்களிலி ருந்து தான் எங்கள் கன்மம், பாபபுண்ணியம் என்ற மரம் முளைத்து பழம், காயெல்லாம் நிறைய வருகிறது. நாங்கள் தான் சாப்பிட வேண்டும். பாவமானதைச் செய்தால், அந்தப் பாவக்காயெல்லாம் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

கருடபுராணத்தில் ஒரு கதை. பிச்சைக்காரன் வருகிற பொழுது ஒரு அம்மா பழைய சாதம் கொடுத்தா. அவ மெழுகிக் கொண்டிருந்தா. அவசரமாகக் கையைச் கழுவியபின் பழையசாதம் எடுத்துக் கொடுத்தா. அதைப் பிச்சைக்

காரன் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டான். நீண்ட காலத்திற்குப் பின் அவ இறந்தபோது அவவின் ஆவியை இயமதூதர்கள் கொண்டு போகிறார்கள். வழியில் ஒரு எருமலை இருந்தது. அவ என்ன என்று அவர்களிடம் கேட்டா. அதாவது ஏன் வழியில் இருக்கிறதென்று. "இதை நீ சாப்பிட வேண்டும்" என்றார்கள். "கடவுளே ஏன்? நான் என்ன செய்தேன்?" என்று கேட்டா. "அந்தப் பிச்சைக்காரனுக்கு உணவுடன் சேர்த்துக் கொடுத்தாய். பெருகிவிட்டது" என்றார்கள். இங்கேயும் பெருகுகிறது. ஒரு வித்து எத்தனையாய் வருகிறது. நாங்க ளெல்லாம் மாமிசத்தை சுவையாய்ச் சாப்பிட்டுவிட்டுத் தப்பலாம் என்றெண்ணக் கூடாது. பலமுள்ள எத்தனையோ பேரை நாங்கள் தாக்கலாம், அடிக்கலாம். நாங்கள் இறந்து போய் விடுவதுடன் காரியம் முடிவதில்லை. பிறகு சொத்தியாய், முடமாய், ஒன்றுக்கும் வழியில்லாத வர்களாய், பெரிய துன்பமாய் பொல்லாத ராட்டினத்தில் இருந்து ஆடவேண்டியி ருக்கும். அப்பொழுது முன்பு செய்தது தெரியாது.

அதனாலே விவேகமுள்ளவர்கள் தன்னிடத்திலிருந்து தான் எல்லாமுதிக் கின்றன. பாவ புண்ணியம் மற்றவர்களிட மிருந்து உதிக்கவில்லை; எங்களிடமிருந்து தான் வருகிறது என்று எண்ண வேண்டும்.

*தானே தனக்குத் தலைவன்*
*தானே தனக்கு எதிரி*
*தானே தனக்கு நண்பன்*

என்று கீதை சொல்கிறது. தனக்கு நல்லதைத் தேடிக் கொள்ளலாம். தனக்கு நல்லதையே உலகம் தேடுகிறது. தனக்கு நல்லதென்று வீடு கட்டுகிறது. தனக்கு நல்லதென்று பணம் தேடுகிறது. தனக்கு நல்லதென்று பிறரிடமிருந்து அபகரித்துச் சேர்க்கிறது. தனது பிள்ளைகளுக்கு தனக்கென்பது உண்மையான பந்தம். தேவைக்குரியது, தர்மத்துடன் சம்பந்தப் பட்டது பந்தமில்லையேயொழிய மற்றதெல் லாம் பந்தம். பிறருக்கென்று செய்வது தான் வைப்பு. நாங்கள் எந்தப் பெரிய வங்கியில் போட்டாலும் அதையும் ஒரு நேரத்தில் எடுக்கக்கூடும். ஆனால் பிறருக்கு கொடுத்த ஒரு பொருள் இருக்கிறதே - அந்த வைப்பு என்றைக்கும் போகாது. (கொடுத்தது என்ற வைப்பு) பாருங்கள், நாங்கள் ஒரு கொஞ்ச நெல்லை மண்ணில் போட்டோம். மண்ணில் தான் எறிந்தோம். அது தொலைந்தா போயிற்று. எத்தனை மடங்காக வருகிறது. இந்த மண் திருப்பி இப்படித் தருமென்றால், மனிதனுக் குக் கொடுத்தால் எப்படி வரும்? இவ்வளவு துன்பங்களும் எல்லாவிதமான துன்பங்க ளுக்கும் அந்த வங்கியிலிருந்து எடுக்கக் கூடியதாயிருக்கும். அப்படிப்பட்ட காரியங் கள் இருக்கின்றன.

நாங்கள் பாவத்தைப் பொறாமை யால், போட்டியால் வளர்க்கிறோம். வாழ்க்கை முழுவதிலும், எங்களிடையே போட்டி, மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் தான் வாழ்கிறோம். அவர்களைப் போல் நாங்கள் இருக்க வேணும் என்று சொல்வதில்லை. ஆனால் உள்ளார அது தான் உங்களுடைய காரியம். எங்களுடைய உழைப்பு முயற்சியெல்லாம் அவர்களைப் போல நாங்களும் செய்ய வேண்டு மென்பதே. அது தேவையில்லாதது. எங்களது சுகத்திற்கு அது உரியதல்ல. நாங்கள் எங்களுக்குச் சுகமானதைச் செய்ய வேண்டும். எங்களுக்கு எது சுகம்? இதயம் விசாலமானதால்த்தான் எங்களுக்குச் சுகம். இன்னும் விசாலமானால் நாங்களே எல்லையற்ற ஆனந்தம். பிரம்மானந்தம் எங்களுடையது. ஆனதனால் அது இலகு வானதல்ல. ஏனென்றால் ஜென்ம, ஜென்மமாய்ப் பிழையாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பகையாக வாழ்ந்து

கொண்டிருக்கிறோம். கொடுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குரோதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனதினாலே இவை எங்கள் நினைவில் கன்மமாக இருக்கிறது. அதை நாங்கள் நீக்க வேண்டும். ஏதோ புண்ணிய வசமாய் இந்த அவதாரம் வந்திருக்கிறது. எங்களுக்கும் அந்த நாட்டம் வந்து, இந்த ஆத்மீக சாதனைக்கு வரக்கூடியதாய் இருந்தது. ஆகையினால் அச்சந்தர்ப்பத்தை விடக் கூடாது.

நாங்கள் பஜனை பாடுகிறோம். எப்படிப்பாட வேண்டுமென்று எண்ண வேண்டும். சும்மா ஏதோ பாடிவிட்டுப் போகிறோம். ஏன் பாடுகிறோம்? சுவாமி சொன்னார், பாட வேண்டுமென்று, ஆனால் சுவாமி மற்றதையும் சொன்னாரே, அதைக் கேட்டோமா? சுவாமி பஜனை பாடச் சொல்லி மட்டும் சொன்னாரா? அவர் சொன்ன மற்றதைக் கேட்க எவருக்கும் விருப்பமில்லை. சுவாமி எப்பவோ பஜனை பாடச் சொன்னார். அதைக் கேட்டோ மொழிய எப்படிப் பாடச் சொன்னார், என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை.

நகர சங்கீர்த்தனம் எப்படிச் செய்யச் சொன்னார். நீ எதனை அறிய வேணும், நீ இந்த சத்சங்கத்தில் இந்த உபதேசங்களை எப்படிப் படிக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும், என்னென்ன சாதனை செய்ய வேண்டும், எப்படி நினைக்க வேண்டும், அவற்றையெல்லாம் நாங்கள் செவிசாய்க்க வில்லை. அதுதான் எங்களுக்குச் சுகத்தைத் தருகிற வாழ்க்கை! எங்களை ஆனந்த சொருபமாக்குவதற்குரியது! அப்படிப்பட்ட அறிவை நாங்கள் ஊதாசீனம் செய்தால் எங்களுக்கு எப்படிச் சுகம் வரும்? சுவாமியோடு சேர்ந்தும் புண்ணியமில்லை. சுவாமிக்கு கெட்ட பெயராகத்தான் இருக்கும். தகைமை குறைவானவர்களாய்த் தான் இருப்போம். சுவாமியோடு இருந்து கொண்டு கொஞ்சமாவது எங்களுக்குப் பயமில்லை, கவலையில்லை, துன்பமில்லை, குறைவில்லை என்று சொல்ல வேண்டாமா?

“உங்களிடமுள்ள தீயகுணங்கள் யாவையும் அகற்றி விட்டால்” - யார் கூறப் போகிறார்கள் எங்களிடம் தீய குணம் இருக்குதென்று. எல்லோருமே நல்லவர்கள். எப்படித் தெரியும் தீய குணமில்லையென்று? தீய குணம் இருக்கிறது. இல்லாவிட்டால் ஆனந்தமாயிருப்போமே. தீய குணங்களினால் தான் எங்களுக்குக் கோபம் வருகின்றது; கவலை வருகின்றது; துன்பம் வருகின்றது; போட்டி வருகிறது; இதற்குக் காரணம்: தீய குணத்தின் விளைவு இருப்பதனாலேயே. தீய குணத்தினை நீக்குகிற முயற்சி இன்னும் எடுக்காததனாலேயே.” உங்களிடமுள்ள தீயகுணம் யாவற்றையும் அகற்றி விட்டால்”, யாவற்றையும் அகற்ற வேண்டும்; கொஞ்சம் கஷ்டம்; மெல்ல மெல்லமாகத் தானே யாவற்றையும் அகற்ற வேண்டும். ஓரிடத்தை நாம் கூட்டிப் பெருக்க வேண்டுமென்றால் கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்ட வேண்டும். கூட்டத் தொடங்கினால் தான் ஒரு நாளைக்கு முடியும். கூட்டவேணுமென்று நினைத்தால் மட்டும் முடியாது.

“உங்களிடமுள்ள தீயகுணம் யாவையும் அகற்றிவிட்டால் நீங்கள் உங்களுக்கு நன்மையளிப்பவர்களாகலாம், என்பதே. தனது தீய உணர்வுகளையும், எண்ணங்களையும், ஒழுக்கங்களையும் நீக்கி நல்லுணர்வுகளுடனும் நல்லெண்ணங்களுடனும், நல்லொழுக்கத்துடனும் என்று ஒருவர் விளங்குகிறாரோ, அன்றே அவர் ஈஸ்வரனுக்கு ஒப்பானவராவர்!.

சுவாமி சொன்ன சொல்லைப் பாருங்கள்! ஈஸ்வரனுக்கு ஒப்பானவர் ஆவர்! அதற்கு ஒரு தடையேயில்லை.

இப்போ இவ்வளவு நேரமும் நான் விளக்கியதில், கவனித்திருப்பீர்கள் தீய குணங்களெல்லாம் போனால் என்ன ஆகும் என்பதை. எங்கள் இதயத்தில் அன்பு, பார்க்க ஆனந்தம் தான் வரும். ஆனந்தமே எங்கள் சொரூபமாக வரும். அப்பொழுது இறைவனுடைய தத்துவம் அதுதான். உடனே ஈஸ்வரனுக் கொப்பாக வரும்படி யல்ல, கொஞ்சம் கொஞ்சமாக ஒரு சுகம் வரும். அந்தச் சுகம் எங்களைத் தூண்டும். எங்களுக்கு ஆதரவு தரும். உற்சாகம் தரும் அந்த வழியை நாட வேண்டும். நாங்கள் இதைக் கேட்டுவிட்டு இன்னுமொரு உலகத்தில் போய் இருந்து உலகப் பிரச்சனைக்குள் தலையைக் கொடுத்தால் அதை அடையமுடியாது.

இவ்வாத்ம வழியிலுள்ளவர்கள் கூடிய அளவு அதைச் சிந்திக்கிறவர்களுடைய கூட்டத்தை விடக்கூடாது. மற்ற இனசனத்தி னுடைய கொண்டாட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக கட்டுப்படுத்த வேண்டும். இனசனத்தையும் எங்கள் உதாரணத்தால் தான் வழிக்குக் கொண்டுவரலாம்.

ஒரு ஆத்மீக வழியில் உறவு புருஷன் மனைவிக்கு இருந்ததென்றால் அந்த உறவுக்கு நிகரில்லை. தெய்வீகமாகத் தானிருக்கும். பிள்ளை குட்டிகளுக்கு இவ்வாத்மீக வழிதெரிந்தால் பிள்ளைகள், தாய், தகப்பனுக்கு அமிர்தமாய் வந்து விடும். சுவாமி எங்களை ஒன்று சேர்த்தது பெரிய அற்புதமென்று எண்ணக் கூடியதாய் வந்துவிடும். எங்களைக் கொண்டு வந்து பிள்ளைகளாய், தகப்பனாய், தாயாய்ச் சேர்த்து விட்டானே என்று எண்ணக்கூடியதா யிருக்கும். சுவாமி கொண்டுவந்து சேர்த்தது அதற்காகத்தான். இப்பொழுது பெரிய மனவருத்தத்தோடு சுவாமி பார்த்தபடி இருக்கிறார். தான் கொண்டுவந்து சேர்த்து விட்டதையெல்லாம் அலங்கோலமாக்கி விட்டார்கள். சரியாய்த்தானே சேர்த்து விட்டேன் என்று.

ஆகவே, “தங்களது தீயஉணர்வு களையும், தீயகுணங்களையும், தீய ஒழுக்கங்களையும் நீக்கி நல்லுணர்வு களுடனும், நல்லெண்ணங்களுடனும், நல்லொழுக்கத்துடனும் என்று ஒருவர் விளங்குகிறாரோ அன்றே அவர் ஈஸ்வரனுக்கு ஒப்பானவர் ஆவார்.

ஈஸ்வரனென்றால் நாலு தலை, பத்துக்கை, அப்படியில்லை. அது எமது கற்பனை. கடவுள் என்றால் சிவபெருமானின் ரூபம் வருகின்றதேயென்றால், அது எங்களுக்குப் பழக்கம். ஈஸ்வரனென்று மனிதனைத்தான் நினைக்க வேண்டும். எங்கும் வியாபகமாக நடமாடும் தெய்வ மாக! நாங்கள் செய்த விக்கிரகம் எங்களைப் போலப் பார்த்துச் செய்தது. கல்லிலே அதனை நாங்கள் உருவாக்கி வகுக்கப் பார்க்கிறோம். இங்கு மனித உருவோடு இருக்கின்றது. அந்த இடத்தில் தான் எங்கள் பாவ புண்ணியமெல்லாம் வருகிறது. அங்கு போய்ப் பூசை செய்வதால் அவ்வளவு வரவில்லை. அதைப் பற்றி ஒரு குறையுமில்லை. ஆனால் இதை விட்டுவிட்டு அதனைச் செய்வதால் ஏதும் பயனில்லை.

அதாவது மனிதருடன் நாங்கள் பழகுகிற பொழுது தான் எங்களுக்கு பாவம் வருகிறது. நாங்கள் சரியாக ஒரு ஏழையைக் கொண்டு வேலை செய்வித்து விட்டு காசு குறையக் கொடுக்கிறோம். சும்மா ஒரு மாதிரி குறைத்துக்கொடுத்து நாங்கள் வெற்றி எடுத்திட்டோம் என்று நினைக்கிறோம். அந்த ஆண்டவன் விடுவானா? அந்தப் புத்தி எங்களுக் கில்லை. அதாவது, நாங்கள் எப்படி எப்படி எங்கள் உறவுகளில் பாவத்தைத் தேடிக்

கொள்கிறோம் என்ற புத்தி. பின் அதனைத் துன்பம் என்கிறோம். நாங்கள் உத்தி யோகம் பார்க்கிறபோது, வீட்டில் பிறரோடு உறவாடுகிற போதெல்லாம் என்னென்ன செய்கிறோமென்று கவனமாக இருக்க வேண்டும். வருங்காலத்தைப் பார்த்து ஒரு பிரயோசனமுமில்லை. அந்த நேரத்தில் வருகிற எண்ணங்களைப் பார்க்கவேண்டும். சுவாமி சொல்கிறார், ஒரு பாவத்தைச் செய்தால் வரப்போகிற விளைவு அளவில் லாதது. அப்படித்தான் உலகில் நடக்கிறது. எண்ணம், சொல், செயலில் இருந்த விளைவு அதுவே தான். நல்லதும், தீயதும் கூட அப்படியே.

ஆதலால் ஒரு பாடத்தை சும்மா, அதிகம் நான் கூறி ஒரு பிரயோசனமு மில்லை. ஏதாவதொன்றை நாங்கள் பிடித்துக் கொள்ள வேண்டும். சுவாமி சொல்கிறார், இதயத்தை விரிவாக்குவ தெப்படியென்று! அதை நீங்கள் வடிவாக விளங்கிக் கொள்ளுங்கள். அதன் காரியம் மனதில் பதிய வேண்டும். எங்களுக்கு இது காரியம் தான். நாங்கள் செய்வோம். ஏதோ செய்யத்தான் வேண்டும். இப்போது நாங்கள் எங்கள்பாட்டில் இருந்து கொண்டு பிறருக்குச் செய்ய இயலாது. நாங்கள் இனி ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டும். எங்களுடைய வருவாயில் 1/10 பங்கல்ல, 1/20 பங்கையாவது ஒரு தரமான அன்பாக நாங்கள் யாருக்கும் ஏதாவது செய்கிற காரியத்துக்கு ஒதுக்கி வைக்க வேண்டுமென்பது தான் அது.

ஒவ்வொரு மாதமும் அவர்கள் ஒதுக்கிவைக்க வேண்டுமென்று நிச்சயித்து விட்டார்கள். ஏன்? அப்படிச் செய்தால் உடனே ஒரு பெரிய காரியம் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் யாருக்கும் ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பினாற் கூட, உங்களுடைய தேவைகளெல்லாமுண்டே என்னென்று கொடுப்பதென்று விட்டு விடுவீர்கள். கொடுத்தால் அதனைப் பெற்றவர்களுக்கும் உங்களுக்கும் இருக் கின்ற சந்தோஷம் அதற்குக் கணக்கில்லை. நினைத்து நினைத்து நெடுக சந்தோஷம் தரும் உறவு, பெரிய ஒரு அன்பான உறவு வரும். கொடுத்துப் பழகியிருந்தால் நாங்கள் மற்றவர்களிடம் அபகரிக்கிற பழக்கம் போய்விடுகிறது. பொறாமைப் படுவது போகிறது. நாங்கள் ஒரு காரியத்தில் கைவைத்தவுடன் தீயதெல்லாம் ஒரேயடியாக நிற்கும். ஏனென்றால் அப்படி நாங்கள் செய்யமாட்டோம். தீய தன்மையி ருந்தால் தர்மம் செய்ய வராது. ஏதோ ஒவ்வொருவரும் தமக்குள் எது செய்ய முடியுமோ, அதைச் செய்து சந்தோஷப்பட வேண்டும். காசு சேர்த்து ஒரு காரியம் செய்வதில்லை. பிறருக்கென்று ஒன்றைச் செய்கையில் அதில் இன்பம் கண்டு அப்படி ஆத்மவிரிவு விசாலமாகிற காரியமி ருக்கிறதே, - இதயத்தை விசாலமாக்கிற தென்பது ஆத்மவிரிவு! அதாவது ஆத்மா தானெல்லாம்! பிறருக்கு ஒன்றைச் செய்கின்ற போது அந்த இன்பத்தைக் கண்டு ஆத்ம பாதையிலே ஓர்சுகம் கண்டு, அந்த ஆத்ம விரிவு- விசாலமாக்குகின்ற காரியமாகிய அந்த ஆத்ம விரிவை - இது தான் இதயத்தை விசாலமாக்குகின்ற காரியம்! ஏனென்றால் ஆத்மா தான் எல்லாம் "நாங்கள்", "நான்", "எனது" என்ற அழிகின்ற பொய்த் தோற்றத்தை நாம் வாழ்வாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதிலிருந்தும் விடுபட வேண்டும். ஒரு நாளைக்கு விடுபடும். ஆனால் பற்றுக்களை யெல்லாம் விட்டுக் கொண்டு போனால் "எனது" என்பனவெல்லாம் நீங்க, அந்த பற்றுக்களெல்லாம் நீங்கிடும். ஆனந்தம்! அந்தப்பரம தத்துவம்! நான் இல்லை யென்றால் எல்லாம் ஆனந்தமாகத்தான்

இருக்கும். "நான்" என்ற பற்றில்லை யென்றால் "நான்" "அவர்" என்றெல்லாம் இல்லாமல் எல்லாம் ஆனந்தமாகவே இருக்கும்.

ஆகையினாலே, நாம் நினைக்க வேண்டியது சுவாமி சொல்லித்தந்துள்ள இந்தப் பாடத்தை, இதயத்தை விசாலமாக் குவது என்பதை. ஒரு சேவையைச் செய்யும் போது நான் தான் முதல் செய்ய வேண்டும் என்று பிறரைத் தள்ளிக் கொண்டு முன்னுக்குப் போகின்றோம். ஒரு பாட்டுக்கு நான்கு பாட்டுக்கள் படிக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். நான் தான் செய்ய வேண்டும் என்கின்றோம். இவை தான் ஆத்மவழிக்கு விரோதமானவை. பிரசாதம் கொடுக்கப்படும் போது கூட முதலாவதாகப் பெறவேண்டும் என்று அடிபிடிப்படுகிறோம். ஆத்ம வழியில் உள்ள நாம் கடைசியாக பெறுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். முதலாவதாகப் பெறுவதற்காக நிற்கக் கூடாது. "நான்" "எனது" என்பவை நீக்குதல் எல்லா இடத்திலும் செய்யப்பட வேண்டும். சுவாமி பார்த்துக் கொண்டு இருக்கிறார். எங்கள் தாழ்மைக்குத்தான் உபகாரம். தட்டிப்பறிப்பதற்கல்ல. தேவைப்பட்டவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். நாங்கள் பேசாமல் இருக்க வேண்டும். அதில் எங்களுக்கு நயம். முன்னுக்குப் போனால் கெட்டித்தனம் என நினைப்பதுண்டு. கெட்டிக்காரனின் காரியம் அபகரிக்கப்படும். கிறிஸ்துநாதர் அழகாகச் சொல்கிறார்.

*"எவன் கொடுக்கிறானோ அவன் பெறுகிறான்!"*

எவன் கொடுக்கிறானோ அவன் பெறுகிறான் என்பது எப்படி? ஆனால் நாமோ கொடுத்தால் போய்விடும் என நினைக்கிறோம். முன்னர் விளக்கினேன். நெல்லை மண்ணுக்குள் போட்டால் ஆறு மாதங்களில் எத்தனை விளைச்சல்! அப்போது பிறருக்கு அன்போடு கொடுத்தால் எத்தனை மடங்காக வரும்! அன்பாக வரும்! அதில் நிறைய உண்டு. ஆகவே "கொடுத்தவன் பெறுகிறான்; எடுத்தவன் இழக்கிறான்" என்கிறார் யேசுநாதர். எடுத்தவன் என்றால் இன்னொருவனுக்குச் சேரவேண்டியதை எடுத்தவன். நிச்சயமாக இழக்கிறான். அத்தகைய இழப்பு பெரிய துக்கத்தோடு வரும். ஆகையினாலே ஆத்ம வழியிலுள்ள நாம் பின்னுக்கு நிற்க வேண்டும். அமைதியாக இருந்து எல்லாவற்றையும் பெறவேண்டும். இடமிருந்தால் முன்னால் போகலாம். மற்றவர்களைச் சங்கடப்படுத்தி முன்னால் போய் எதையும் பெறமுடியாது. அது தவறானது. சுவாமி அத்தகைய தாழ்மைக்குத் தான் இடம் கொடுக்கிறார். "நான்" "நான்" என்பது ஆத்ம விரோதம். ஆத்ம விரிவுக்கு இவை முக்கியமானவை என்பதனாலே சொல்கிறேன். தாழ்மை தான் நலம் தரும். பிறருக்கு இடம் கொடுக்கும் போது தான் - தன்னைப் பின்னால் வைத்து பிறருக்கு இடம் கொடுக்கும் போது தான் ஆத்மவிரிவு உண்டாகிறது. இதயம் விசாலமாகிறது. "எனக்கு" "எனக்கு" என்று எண்ணும் போது ஒடுங்கி ஒடுங்கிக் கருகிப்போகிறது. துன்பம் தான் மிஞ்சும்.

இக்கருத்துக்களை மனதில் பதிக்க வேண்டும். சரியாகக் கருத வேண்டும். உலகம் என்ன கருதுகிறது எனப் பாருங்கள். நான் எடுத்தது தான் எனக்கு நயம்; கொடுத்ததெல்லாம் இழப்பு என்பது உலக கொள்கை. இச் சமூகத்திற்கு துன்பம் மீண்டும், மீண்டும் ஏன் வந்தது என எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லோரும் கொடுமை தான் செய்தோம். என்ன கொடுமை? லோபம்! பிறரைப் பற்றிய நினைப்பேயில்லாத கொடுமை. கீதை கூட காம, குரோத, லோபம் மூன்றுவித நரக வாயில்கள் என்கிறது. நான் கூட காமக்

குரோதத்தைத் தான் பெரிதாக எண்ணி னேன். லோபத்தையல்ல; இந்த லோபம் ஆத்மாவை எப்படிப்பந்தித்து விசாலப்படுத் தாமல் வைத்திருக்கிறது என்பது பிறகு தான் தெரியவந்தது. "லோபம்" என்பது "எனக்கே எல்லாம்" எதைப்பற்றி? அழிகிற தோற்றத்தைப் பற்றித்தான். இறக்கும்போது கூட ஒருவன் தேடுகிறான். "நான் வைத்திருப்பேன்" என்ற பைத்தியமான எண்ணம் தான். தோற்றமோ அவன் காணக்கூடியதாகவே மாறிக்கொண்டு போகிறது. பொருளெல்லாம் சுவாமியுடை யவை. கீதவாஹினியில் சுவாமி ஓர் இடத்திலே, சொல்கிறார்! அர்ஜுனன் ஒரு நிலையில் சொன்னான், "கிருஷ்ணா! எனக்கு ஒன்றும்தெரியவில்லை. உனக்கு தஞ்சம்; நான் உன்னுடைய சிஷ்யன்; என் உடல், பொருள், ஆவி எல்லாம் உனக்கு அர்ப்பணம் செய்கிறேன். நீ எனக்கு உகந்ததைச் செய்" கிருஷ்ணன் சிரிக்கின்றார். என்ன? உடலா! பொருளா! ஆவியா! இவையெல்லாம் உன்னுடையனவா? நீ, உன்னுடையதைத் தா" என்றார். நாங்கள் எந்நிலையில் இருக்கிறோம் என்று பார்த்தீர்களா?

ஆத்மவழியென்பது "நான்" "என்னு டையது" என்னும் பொய் வழியைக்கண்டு நீக்குவது "நான்" "எனது" என்பவற்றை நீக்கினால் அந்த தெய்வீகம் ஆனந்தம் தரும். பிறருடைய நினைப்பினால், பிறருக்கு நல்லனவற்றைச் செய்வதனால் சேவை செய்வதனால் இவற்றை விரும்பி செய்தால் அதில் அந்த சுகம் வளரும். பின்பு அது எங்களைத் தூண்டும். ஒரு முறை செய்தால் புண்ணியமாக வந்து பழைய பாவத்தை நீக்கும். ஒரு தீயவன் கூட நல்ல காரியத்தைச் செய்தால் புண்ணியம் அவனது தீயனவற்றையெல்லாம் நீக்கும். நல்லவன் ஒரு பாவத்தைச் செய்தால் அந்தப் பாவம் நல்லனவற்றையெல்லாம் நீக்கிவிடும். அப்படியாக ஒரு சிறிய செயல்கூட பெரியதைச் செய்யும்.

எல்லாம் இறைவன் செயல். எல்லாம் அவன் சொரூபம். எல்லாம் அவன் வியாபகம். இங்கே "நான்" "எனது" என்பன தான் வெறும் பொய்த் துன்பத்திற்கிடம். இதனைவடிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போ "நான்" என்பது நீங்கினால் கடவுள் தான். அந்த தெய்வீகம் தான் எத்தனை இலகுவானது. கஷ்டமான தல்ல. இவற்றை விரும்பிக்கேட்க வேண்டும். அத்தனை சுகம் தரும். எத்தனையோ சாதனைகள் உண்டு. கஷ்டமான, துன்பமானவற்றையெல்லாம் தூளாக்கக் கூடிய சாதனைகள் உண்டு. தெய்வீகத்தில் அவை உண்டு. ஆனால் பெரியகாரியம். அவ்வளவு இலகுவானதல்ல. இப்படி வாழக்கிடைப்பது. விடுதலையை விரும்பு கிறவர்களுக்குத் தான் இவை விளங்கும். சாஸ்திரங்களைப் படித்து மாத்திரம் வாழ முடியாது பாருங்கள். ஆத்ம தத்துவம் இத்தோடு முடிந்தது. இனி இதனைச் சிந்தித்து செயலாற்றத்தான் தெய்வீகம் வரும். இதைவிட நயம் உலகில் இல்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## "ஓங்கார உபாசனை" பற்றி ஸ்ரீ ஞானசேகரம் ஐயா......

இந்த ஓங்கார சாதனை லட்சியத் தைத் தருகிறது.

என்ன லட்சியம்?

ஒன்றுமில்லாத ஒன்றான தத்துவமாக நாங்கள் இருக்கவேண்டும். அது தான்

எங்களுடைய உண்மை. நான், எனது என்னும் கேடு எங்களைப் பிடித்திருக்கிறது. பலவாகக் கண்டு சலனப்படுகிறோம்.

இவையெல்லாம் போக வேணும்.

இந்த ஓங்காரத்தில் ஓ... ... ஓ... ... என்னும் சப்தம் எங்கும் பரவி விரிந்து நான் எல்லாமான ஒரு தத்துவமாக வரவேண்டும், என்னும் வேண்டுதலோடு ஒரு பெருவிருப் பத்தோடு "பிரம்மமே: நான் நீயாக வேணும், உன்னோடு லயப்பட வேண்டும்" என்னும் பாவனையோடு இந்தச் சாதனை செய்யப்படவேண்டும்.

இந்த ஓங்காரம் எல்லாச் சாதனை யிலும் மேலானது. லேசானது.

கூடிச் செய்யும் பொழுது இன்னும் தத்துவமாகிறது. நேரடியாக இதை நாங்கள் காணலாம்.

நாங்கள் ஓங்கார உபாசனை செய்கிற பொழுது யார் செய்கிறது?

அந்தத் தெய்வீகத் தத்துவம் தான் சப்தம் செய்கிறது. அந்தத் தெய்வீகம் தான் ஓங்காரம் செய்கிறது. அதை அனுபவிக் கிறது.

நான் என்பதே இல்லை என்னும் அறிவோடு செய்தால் அது மிகவும் மேலான ஒரு இடம்.

எந்த லட்சியத்தை நாங்கள் தேடுகி றோமோ அது வந்து விடும்.

இந்தச் சப்தம் செய்கிறபோது எங்களுடைய நினைவோ பிறருடைய நினைவோஇருக்கலாகாது. இந்தச் சப்தத் திலே ஈடுபட்டு அது பரந்து போகிறதைப் பார்த்துக் கொண்டு இருக்கவேண்டும். அந்த நிசப்தம் முக்கியமானது; ஆழமானது. அதைக் கவனித்து அதனுடைய சுகத்தை இனம் கண்டு கொள்ள வேண்டும். அதை வளர்க்க வேண்டும்.

வேதங்கள் உயர்ந்த ஒரு சாதனையாக இந்த ஓங்காரத்தைச் சொல்லி இருக் கின்றன.

இது பிரம்ம உபாசனை
பிரம்மம் எஞ்சாத பூரணம்
பிரம்மம் ஒன்று
பிரம்மம் எல்லையற்றது

நாதம் பிரம்மமாயிருக்கிறது. நாதம் பிரம்மத்தின் ஒரு தன்மை. அது பிரம்மம் போல் எங்கும் ஊடுருவியிருக்கிறது. அந்த நாதத்தை எழுப்பி அது எங்கும் ஊடுருவியிருக்கிறதைக் கண்டு

பிரம்மம் போல் பிரம்மமாவதற்கு நாதம் போல் எங்கும் நிறைந்து வளர அந்தப் பிரம்ம தத்துவம் எங்களிடத்தில் தலைப்படும்.

இந்த ஓங்காரத்தை உபாசிக்கின்ற பொழுது அந்த சப்தம் எங்கும் பரவுவதாகப் பாவனை இருக்க வேண்டும். அந்த நிசப்தம் முக்கியமான இடம். அதில் ஒன்றுமில்லாத ஒரு இடம் உண்டு.

அது சுகமானது
அது எல்லையற்றது

அங்கே எண்ணமில்லாமல் தோன்றி மறையும்.

ஒன்று மேயில்லாத இடம்... ...
... ... அந்த இடத்தைக் கண்டு
இனம் கண்டு

அப்பேர்ப்பட்ட தன்மையை எங்களிடத் தில் வளர்க்க வேண்டும்.

எல்லோரும் ஓங்காரம் செய்கிற பொழுது இணைகிற பொழுது ஒரு சப்தம் தான் கேட்கிறது. எல்லோரும் அந்தச் சப்தத்தைத்தான் கேட்கிறோம்.

அது... ... ஒன்றுபடுகிற இடம்.

இவ்வளவு ஆரவாரமும் நினைவுகளெல்லாம் உள்ளவர்கள் அந்த ஓங்காரம் முடிந்த

..... ..... அந்த இடைவெளியான ..... .....
..... ..... நிசப்தத்தில் ..... .....
ஒன்றுமில்லாமல் எல்லோரும் இருந்து விடுவார்கள்.

இந்தச் சுகத்தை ... ... இந்த இடத்தை ... ... இனம் கண்டு

வளர்க்க விரும்ப வேண்டும். மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

இது
ஆத்ம வழி
உபநிஷதங்கள் எல்லாம் மிக உயர்ந்த சாதனை என்று முழங்குகின்றது.

மாண்டுக்கிய உபநிஷதம் முழுவதும் ஓங்காரத்தைப் பற்றியே.

எல்லா உபநிஷதங்களையும் படிக்கா விட்டாலும் மாண்டுக்கியம் ஒன்றே விடுதலைக்குப் போதும் என்று சொன்னால், அது இந்த ஓங்காரத்தின் தகுதிதான். அந்தச் சரியான பாவத்திலே அதைச் செய்ய வேண்டும்.

இல்லையென்றால் அது... ...
... ... வெறும் சப்தம்தான்.

இவ்வளவு ஒரு உயர்ந்த ஒரு சாதனையை பிரசாந்தி நிலையத்தில் சுவாமி எப்போதும் செய்ய அமைத்திருக்கிறார்.

"My Life is my message" என்னுடைய வாழ்க்கையே எனது செய்தி என்று சொன்னவர்.

முதலாவதாக காலையில்
தியானம், அதன் பிறகு
ஓங்காரம்.

என்று வைத்திருக்கிறாரே மிகவும் பெரிய சாதனை என்று தான் அதனை வைத்திருக்கிறார்.

இந்த உபாசனையை ... ...
... சித்தம் அழகியவனே - என்று விழித்து - சித்தத்தில் பற்றுக்கள் பந்தங்கள், குறைந்தால் தான் சித்தத்தில் அழகுண்டாகும். அப்பேர்ப்பட்டவரை விழித்து

"உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரம் என்னும் தனுசை எடுத்து உபாசனையால் கூர்மையாக்கப்பட்ட ஜீவனாகிய அம்பைத் தொடுத்து..."

உபாசனை செய்து செய்து ஜீவன் கூர்மையடைகிறது. அதாவது தனது லட்சியத்தை அறிந்து கொள்வது தான்.

இந்தப் பிரம்மத்தில் நாம ரூப மற்று கலந்துவிட வேண்டும்.

என்பது தான் ... ... லட்சியம்.

அங்கே ... ...

பிரம்மமாகிற பெரிய எல்லையற்ற தகைமை உண்டாகும்.

"உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரம் என்னும் தனுசை எடுத்து

உபாசனையால் கூர்மையாக்கப்பட்ட ஜீவனை...

... அம்பாகத் தொடுத்து ... பிரம்ம பாவனை நிறைந்த சித்தத்தால் - இழுத்து

அக்ஷரப் பிரம்மமாகிய இலட்சியத்தில் லயமடையச் செலுத்துவாய்.

இந்த ஜீவனை அந்தப் பிரம்மனோடு ஒன்றுபட்டு தன்னை இழந்து பிரம்மமாகிற இந்தச் சாதனைக்கு இந்த ஓங்காரம் தான் இழுக்கிறது.

அம்பிலே வில்லைப் பூட்டி ...
.......அந்த நாண் கயிறு

அது தான் இந்த அம்பை வெகுதூரம் கொண்டுபோய் அந்த லட்சியத்துக்கு அனுப்புகிறது.

நாண் கயிறு இழுக்கிற.....
...... ஓசைதான் ஓங்காரம்.

ஓங்காரம் எவ்வளவு பக்குவமாய்ச் செய்யப்படுகிறதோ அந்த ஜீவன் அந்தப் பிரம்மக் குறியை சரியாக வைத்துக் கொண்டு இருக்கிறதோ அந்தப் பிரம்ம மாகிய லட்சியத்தில் ஜீவன் போய்ச் சேர்ந்து

ஜீவன்....
அந்தப் பிரம்மத்தில் கரைந்துவிடும்.

"அப்பில் உப்புச் சேர்ந்தாற்போல்
ஆண்டவனில் கரைந்துவிடு"

"கருவாம் பரவெளியில்
கரைந்தொன்றாய்ப் போனேனே"

இந்தக் ....
கருத்துக்களை வைத்துக் கொண்டு

ஓங்காரம் செய்கிறபோது தான் அது பெரிய பலனை உண்டாக்கும்.

எங்களிடத்திலுள்ள

அகங்காரம்
மமகாரம்
எல்லாம் ...
.....கரைந்து போய்விடும்.

லோகா சமஸ்தா
சுகினோ பவந்து

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமுந் துயர் தீர்கவே**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!







## ஐயாவின் நாட்குறிப்பிலிருந்து
## 12.04. 1988

ஓ ! சாயி நாராயணா!! உமது பாகவத சப்தாகம் நடக்க சங்கல்ப்பம் செய்திருக்கிறீர். இந்தப் பாத்திரத்தைப் பாவித்து உமது தெய்வீகத் தகமையோடு நடத்தி அடியார்களை பக்தி வெள்ளத்தாலும், ஆத்ம ஞானத்தாலும் நிரப்பிவிடுவீர். உம்முடைய பவித்திரமான தெய்வீகக் கூட்டம் பலம் பெற்று வளர வேண்டும் அதனால் உலகத்திற்கு பெரும் ஆத்ம நன்மை ஏற்படவேண்டும்.



ஓம் ஸ்ரீ சாயிராம்

# யாரீ இந்த ஐயா?

ஒரு கம்பீரமான, நிமிர்ந்த தலை குனியாத, வெண்ணிற முடியும், வெள்ளை நஷனலும், வேட்டியும் அணிந்த ஒருவர் தினமும் காலையும், மாலையும் சாயி இல்லம் வருவார். அவர் வரும் காட்சியே ஒரு கம்பீரம். ஒரு தனித்தத்துவம். எல்லோரையும் போல் அல்லாது இவரை மட்டும் விஷேடமாக யாபேரையும் ஈர்த்துக் கவனிக்க வைக்கும் தோற்றம். அந்த கம்பீரத்திற்கும், வெண்மைக்கும் கட்டியம் கூறுவது போல் எண்ணம், சொல், செயலில் ஒத்ததன்மை, மாசற்ற அன்பு, ஞானம் போன்றதன்மைகளை தன்னகத்தே கொண்ட பெரியவர் தான் ஐயா, என பெரியவர், சிறியவர் யாவராலும் அன்பாக அழைக் கப்படும் ஞானசேகரம் ஐயா.

இந்த ஐயாவை 1987-88களில் முதன் முதலில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இவர் பெயருக்கேற்றாற்போல அறிவுமயமானவர். தெய்வீகத்தை உண்மை, சத்தியம், ஞானம் அறிவு என்றும் கூறுவார்கள். இந்த (ஞானசேகரம்) ஐயாவும் இப்படியானவர் தான். இப்படியானவரைச் சந்தித்தவர்கள் பாக்கியசாலிகள். அவதாரங்களின் காலங் களில் பிறந்தவர்கள் பாக்கிய சாலிகள். அந்த அவதாரத்தை இனம் கண்டு கொண்டவர்கள் முன்னவர்களைவிடப் பாக்கியசாலிகள். அதே அவதாரத்தை தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் இவர்கள் எல்லோரையும் விடப் பாக்கியசாலிகள். இதேபோல் ஞானசேகரம் ஐயாவை சந்தித்தவர்கள், தெரிந்தவர்கள் பலர். ஆயினும் அவரின் தகைமையை விளங்கி அவர் நிழலில் நின்று ஆத்ம தாகத்தையும், சுகத்தையும் அனுபவித்து பயன் அடைந்த வர்கள், அடைந்து கொண்டிருப்பவர்கள் இப்பிறவியின் பயன் என்ன என்பதை உணர்ந்துள்ளார்கள்.

சாயி இல்லத்தில் ஆரம்பகாலத்தில் ஒரு சில சாயி குடும்பத்தினரின் விருப்பத்தின் பெயரில் முன்புறமாக உள்ள அறையில் பிரதி வியாழனில் பஜனையும் மற்றும் நாட்களில் பகவத்கீதையின், மகிமையும் அதன் பயனையும் மிகவும் பக்குவமாகவும், எம்மெல்லோருக்கும் விளங்கும் முறையிலும் வாசித்து தெளிய வைப்பார் ஐயா. இப்படியே சில வாரங்கள் சென்றதும் ஐயா தாமே சில குடும்பங்களை (சாயி வழிபாட்டில் ஈடுபாடானவர்கள்) முத்துப்போல் பொறுக்கி பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை ஏழு மணி முதல் மதியம் பன்னிரண்டு மணிவரை ஆத்மசாதனை செய்து, பங்குபற்றியவர்கள் எல்லோரையும் ஆத்மவழியிலும், ஆத்மா னந்தத்திலும் நுழைய வைத்தார். அவர் வளர்த்த ஆத்ம குடும்பங்கள் ஐயா காட்டிய வழியில் சிறப்பாகவும், ஆத்ம திருப்தி யுள்ளவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். ஐயா அடிக்கடி சொல்வார். சாதனையில் ஈடுபடுவதற்கு நிறைய ஆட்கள் தேவையில்லை. உண்மையை, உண்மை யாக விரும்புபவர்கள் மட்டும் வந்தால்

போதும் என்று. இப்படியே ஞாயிற்றுக் கிழமை தோறும் ஆரம்பமான சாதனை, பௌர்ணமி நாட்களிலும், விஷேட தினங்க ளிலும், அரசவிடுமுறை நாட்களிலும் எல்லோருடைய விருப்பங்களின் மூலம் மாபெரும் ஆத்ம சாதனையாக வளர்ந்து இன்று பெரிய விருட்ஷமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஐயா தன்னை நாடி வருபவர்களின் தகைமையினை சில நிமிடங்கள் பழகியதுமே கண்டுகொள்வார். எந்தச் சாதனைகளிலும் ஈடுபடாதவர்கள், ஆனால் ஆத்மபாதையில் திரும்பக்கூடிய வர்கள் என்றால் ஐயா விடமாட்டார். அவருடைய ஆத்மீகக் கருத்துக்கள் மற்றவர்களை ஈர்த்துவிடும். ஏனெனில் அவர் வெறும் கருத்து மட்டும் சொல்லவில்லை. சொல்வது போல் வாழ்ந்தும் காட்டினார். அவர் உண்மையாக இருந்தமையினால் தான் அவர் கூறிய உண்மைகள் அவரை விரும்பி நாடியவர்களுள்ளும் செறிந்தது. இதேபோல் நாமும் அவரைச் சந்தித்த போது எம்முடனும் நல்ல கருத்துக்களைக் கூறிவிட்டுச் சொன்னார். நீங்களும் சும்மாவந்து சாதனையில் இருந்து பாருங் களேன் என்று. இந்தச் சும்மா என்ற சொல் அப்போது எனக்கு சாதாரண வாக்கு நடையில் உள்ள சொல்லாகத்தான் இருந்தது. காலப்போக்கில் அந்த ஞானியின் சும்மா என்ற வார்த்தை எம்மை (சும்மா) வெறுமையாக்கி ஆத்ம தத்துவங்களை விளங்கி எம்முள் நிறைத்து நாமும் அந்த பாதையில் வாழ்ந்து வளர்வதற்கு உதவிக் கொண்டிருக்கிறது. அந்த ஞானியை நாடும் போது அவர் சொல்லாலும், பார்வை யாலுமே எம்மை வெறுமையாக்கி தனது தெய்வீக ஒளி (அறிவு)க் கீற்றுக்களை எமக்கு விதையாக நாட்டி விட்டார். அவர் இதேபோல் தேர்ந்தெடுத்த விளைநிலங்களும் வித்துக்களும் வீண்போகவில்லை.

ஐயா, தமது சத்சங்கத்தில் எமக்கு அடிக்கடி ஆரம்பகாலத்திலிருந்து போதித்து விளக்கம் அளித்த வாக்கியம் தீதும் நன்றும் பிறர்தரவரா" இது ஆத்ம சாதகர்களுக்கு மகா மந்திரம் போல் இருக்கும் தெளிவாகப் புரிந்தவர்களுக்கு ஐயாவின் சாதனைகளில் திருநீற்றுப் பதிகமும் மிகவும் வலிமை வாய்ந்தது. இச்சாதனை எம் பிறவிக்கு மூலகாரணமாக உள்ள கர்மவினைகளையே நீறாக்கும். நீக்கவல்லதும், இதைசெய்து அனுபவப்பட வேண்டும்.

இதேபோல் பாகவதசப்தகமும் ஒரு மகிமை பொருந்திய சாதனை. இச்சாதனை ஏழு நாட்களில் (7) செய்ய வேண்டிய சாதனை. இச்சாதனை ஆரம்பிக்குமுன் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்விதி முறைகளை எமக்கு அறியத்தந்து பாகவத சாதனையையும் முதன் முதலாக சாயி இல்லத்தில் ஆரம்பித்து எம் எல்லோரையும் ஏழு நாட்கள் தொடர்ந்து சொல்லமுடியாத ஒரு ஆனந்தத்திற்குள் மூழ்க வைத்திருந்தார் ஞானசேகரம் ஐயா. ஏழாவது நாள் சாதனை முடிவில் அக்கினி ஹோமம் வளர்த்து அதில் ஆகுதிகளை யிட்டு சாதனை பூர்த்தி செய்யப்படும். இப்படியான சாதனைகள் உண்மையான பக்தி விசுவாசத்துடன் தெய்வீகத்தை நோக்கிச் செய்யப்படுமானால்; செய்யப் பட்டது உண்மையானால் இதை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக எம்மை மகிழ்விப்பதற்காக வர்ணபகவான் தன் ஆனந்தத்தை வெளிப்படுத்துவார் என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். இப்படியாக அன்றும் சாயிஇல்லத்தில் பாகவத சாதனையின் ஏழாம்நாள் முடிவில் வர்ணபகவான் தன் மகிழ்ச்சியை நம் எல்லோருக்கும் வெளிப்படுத்தி எம்மையும் மகிழ்வித்தார். இவையெல்லாம் அந்த ஞானியின் பக்குவத்தாலும் தூய்மையாலும் தானே நாம் காணக்கூடியதாக இருந்தது.

"அறம் செய்ய விரும்பு" அறம் செய்ய முடியாத நிலைமையில் இருந்தாலும்,

செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பம் எமக்கு இருக்குமானால் இவ் விருப்பம் காலப்போக்கில் கைகூட தெய்வீகம் வழிவகுக்கும் என்று ஐயா உறுதிதருவார். இது மட்டுமல்ல எம்மிடத் தில் நல்ல செயல்களுக்கு ஆசை என்று சொல்லக்கூடாது. விருப்பம் என்று சொல்லுங்கள் என்பார்.

ஒரு நாள் மாலைநேரசாதனை முடிந்து, சாயி இல்லத்தின் வராந்தாவில் ஐயாவும் எம்மில் சிலரும் கூடி இருந்து ஆன்மீகமான கருத்துக்களில் கலந்து கொண்டிருந்தோம். அச்சமயம், ஐயா எதிரே இருந்த வேப்பமரத்தைக் காட்டி எம்மெல் லோரையும் பார்த்து என்ன தெரிகிறது என்று கேட்டார். இது எமது சாதனை ஆரம்ப காலத்தில் நடந்தது. அவர் கேட்டது எமக்கு விளங்கவில்லை. நாமும் மரத்தை மரமாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து ஐயாவே எமக்கு விளங்கப் படுத்தினார். தெய்வீகம் அந்த வேப்பமர வடிவில் எவ்வளவு அழகாக, ஆனந்தமாக தன்னை வெளிப்படுத்துகிறது என்று. எம் பார்வைக்கும் குருவின் பார்வைக்கும் எவ்வளவு வித்தியாசம். ஐயா அப்போதே எல்லாவற்றிலும் தெய்வீகத்தையும், எல்லாவற்றையும் தெய்வீகமாகவும் காணத் தொடங்கிவிட்டார். நாமும் அதுவாக மாறிநின்று பார்த்தால் தான் (பாவனை) அதனதன் உணர்வுகள், இயல்புகள் எமக்கு புரிந்து எம் இருதயமும் விரிவடையும். இருதயம் விரிவடைந்தால் தான் துவைத நிலை போகும். துவைத நிலையிலிருந்து விடுபட்டால் தான் எல்லாவற்றிலும் ஒன்றைக் காணமுடியும். ஒன்றாகலாம். இதே போல் சகல ஜீவராசிகளையும் பார்க்கும் போது அதுவும் நான்தான் என்ற பாவனையை வளர்த்து வந்தால் நாம் யாராவோம்? நாமும் அதுவாகிவிட மாட்டோமா? நாம் கடவுள். அன்புமயமா னவர்களாக மாறிவிடுவோம். இப்படி சாதனைகள் மூலம் எம்மை பண்படுத்தியவர் ஐயா.

இல்லறத்தில் இருந்து சமூகத்தில் இருந்து கொண்டேதான் தெய்வீகத்தை தேடவேண்டும். சமூகத்திலும், இல்லறத்தி லும் இருக்கும் போது தான் எம்மை எதிர்நோக்கிவரும் கர்மவாசனைகளை கண்டு கொள்ளமுடியும். ஒவ்வொருவர் மூலமாக தூண்டுதல்கள் வரும் போது தான் எம்முள்ளே இருக்கும் குறைகளை குணங்களை இனம் காணமுடியும். அவைகளை இனம் கண்டு எம்மிலிருந்து அவற்றை நீக்கினால்தான் எமக்கு விடுதலை கிடைக்கும். இப்படி, இப்படி யெல்லாம் பெரிய பெரிய விஷயங்கள் எமக்குள்ளே இருக்கிறதென்பதை விளங்க வைத்தவர் ஐயா. ஐயா தம் வாழ்க்கை யையே ஒரு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர். ஐயாவின் சாதனைகள் மூலம் நாம் பண்பட்டு வருகின்ற ஆரம்பகாலத்தில் நம் நாட்டில் குழப்பங்கள், பிரச்சனைகள் எல்லாம் ஏற்பட்டு ஒவ்வொருவரும் எனது, எனது என்று பற்றிக் கொண்டிருந்த இடங்களை கூட விட்டு, விட்டு திரிகின்ற நிலை ஏற்பட்டது. ஐயா, எமக்கு நிறைவான ஆத்ம போதனைகளை ஊட்டியிருந்தமை யினால், அக்காலகட்டத்தில் ஏற்பட்ட கஷ்டதுக்கங்களை எல்லாம் ஏன் வருகிறது? எப்படி வருகின்றது? என்று பார்த்து சலனப்படாமல் பதைபதையாமல் எதிர் கொள்ளக்கூடிய ஆத்ம பலத்தை எமக்கு தந்திருந்தார். நாம் ஐயாவிடம் கற்ற பாடங்களை அனுபவத்தில் எதிர் கொள்ளும் ஒரு சூழலாகவும், அவையெல்லாவற்றையும் வெல்லக்கூடிய ஆத்மபலத்தை எம்முள் காணக்கூடியதாகவும் இருந்தது. ஞான சேகரம் ஐயா என்ற ஞானகுருவை நாம் சந்தித்ததிலிருந்து இந்த நிமிஷம் வரை அவர் தோற்றத்துடன் இருந்த போதும்

தோற்றம் விடுபட்ட பின்பும் சூட்சுமமாக இருந்து எமக்கும் எம்மோடு தொடர்புடையவர்களுக்கும் அவரை நம்பி நாடியவாகளுக்கும் ஆத்ம பலத்தைக் கொடுத்து நிறைவாக பக்குவமாக எல்லோருடைய காரியங்களையும் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். உண்மை, உண்மைதான். உண்மைக்கு தோற்றம் மறைவு. என்ற நிலையில்லை. அது என்றும் எங்கும் எல்லாவற்றினுள்ளும் ஊடுருவியிருக்கிறது. அதற்கமைவாயுடையவர் தான் குருநாதர் ஐயா.

மேலும் ஐயா தம்மை நம்பி நாடியவர்களுக்கு ஒரு பிடிப்பையும் வலுவையும் கொடுப்பதற்கு பின்வரும் மகிமை பொருந்திய நூல்களையும், பதிகங்களையும், முதுமொழிகளையும் கூறி விளக்கமளித்து அதனை சாதனையாக செய்து அதன் பலாபலன்களை ஒவ்வொருவரையும் அனுபவிக்கவைத்து திடம் கொள்ளச் செய்தார்.

1. திருஞானசம்பந்தர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள்
2. யோகர் சுவாமி அருளிய நற்சிந்தனைப் பாடல்கள்
3. பகவத்கீதை
4. பாகவதம்
5. காலத்திற்கு காலம் தோன்றிய அவதாரங்களின் கூற்றுக்கள், உபதேசங்கள்
6. தீதும் நன்றும் பிறர்தரவரா.

யோகர் சுவாமிகளை இனம்காட்டி அவரின் மகிமைபொருந்திய ஆத்மதத்துவம் நிறைந்த பாடல்களை பாடிப் படித்து அதனுள் பொதிந்தியிருந்த அற்புதமான தத்துவங்களை எமக்கு தெவிட்டாத இனிப்பாக தந்தவர் ஐயா. உண்மையிலேயே இலகுதமிழில், தாம்பெற்ற ஆத்மானந்தத்தை எல்லோரும் அனுபவிக்க வேண்டுமென விரும்பி அற்புதப் பாடல்களாக யோகர்சுவாமி கூறியிருக்கிறார். எமது ஆத்ம வளர்ச்சிக்கும் பக்குவப் பாட்டிற்கும் ஏற்ப சுவாமியின் பாடல்கள் படிக்கப் படிக்க அற்புதமாக புதுபுது அனுபவங்களையும் விளக்கங்களையும் கொடுத்து ஆத்ம பாதையில் வளர்வதற்கு உறுதிதந்து கொண்டிருக்கும். உலகத்திற்குள் இருந்து கொண்டு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்வது தான் ஆத்மவாழ்வு. வாழ்பவர்களைப் பார்த்தால் கஷ்டம் போல் இருக்கும். ஏனெனில் நாம் முழுக்க உலகமாயை வசப்பட்டிருப்பதால் ஆத்ம பக்கம் திரும்புவது கஷ்டம். திரும்பி விட்டால் அதைவிட சுகமில்லை. என்பது அனுபவத்தில் தான் கண்டு கொள்ள முடியும். இந்தப் பாதையில் நாம் வளர முன்னேற சில சில கோட்பாடுகளை எமக்கு நாமே கடைப்படிக்கத் தொடங்கிவிட்டால் பாதை லேசாகிவிடும்.

1. மனதை வெல்ல வேண்டும்
2. நாவடக்கம் பேணப்பட வேண்டும்
3. எம் பார்வையை நேரியவழியில் செலுத்துதல் வேண்டும்.
4. புலன்களை சீரிய வழியில் செயற்பட வைக்க வேண்டும்.
5. தோற்றப்பற்றை விட முயல வேண்டும்

ரூப, நாமமற்ற இறைவனை நாம் அடையவேண்டுமானால் நாமும் ரூப நாமத்தில் இருந்து விடுபட்டே ஆக வேண்டும். இறைவன் நாத வடிவானவன். இந்தப் பிரபஞ்சநாதத்தை நாம் உணர முற்பட வேண்டும்.

*ஜெய்சாயிராம்*

மேற்கூறிய சுகங்களையும் ஆனந்தத்தையும் எமக்குள் நாம் அனுபவிக்க ஞானகுருவாக வந்து, ஞானம் தந்து, மெய்யின் மகிமையை மெய்யாக விளக்கிய,

விளங்கிய ஞானசேகரம் ஐயா அவர்களை என்றும் எம் சித்தத்தில் நிலை நிறுத்திக் கொண்டு இச்சுகங்களையெல்லாம் அனுப வித்த யோகர் சுவாமி அவர்களின் பாடல்களில், எம்மை தினமும் விழிப்புடன் மெய்யை விளங்கவைக்கும் எமக்குப் பிடித்த ஒரு பாடலை இங்கு தந்து நிறைவு செய்கின்றேன்.

மண்ணினாசை மறந்திட வேண்டுமே
மதியிலேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணி னோசை விளங்கிட வேண்டுமே
வேறொன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி யாடிப் பணிந்திட வேண்டுமே
என்னுள்ளே அருள் காட்டிய அண்ணலே
என் குருபர புங்கவசிங்கமே

**ஸ்ரீ க.நகுலேஸ்வரன்**
**கனடா.**

**அனைவரும் தெய்வம்:**

இந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ளத்தான் அனேகர் தேவாலயம் செல்கின்றனர். எதற்கு? தேவதரிசனம் செய்ய. ஆனால் தெய்வத்திருவுருவத்தின் முன் கண்மூடிக்கொள்கின்றனர். காணச்சென்ற நீங்கள் கண்ணை மூடிக்கொள்வதேன்? இறைவா! நான் என் ஊனக்கண்ணால் உன்னைக் காணப்போவதில்லை எனது ஞானக்கண்க ளால்க் காண்கிறேன் என இதற்கு அர்த்தம். தெய்வத்துவத்தில் எத்தனையோ இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. இதையெல்லாம் எந்தப்பண்டிதரும் விளக்குவதில்லை, புனித நூல்களும் விளக்குவதில்லை, மனிதர்களும் தனக்குத்தானே அர்த்தம் செய்துகொள்ள முடியவில்லை, அதனால் தெய்வத்துவத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலாமல் போகிறது. அனைவரும் தெய்வம் என்கிற கருத்தை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

-பாபா

ஆதாரம்: சனாதன சாரதி
டிசெம்பர் 1997

*ஓம் ஸ்ரீ சாயிராம்*

# ஓர் அன்னையின் கடிதம்

*திருநெல்வேலியிலிருந்து ஸ்ரீ ஞான சேகரம் ஐயா அவர்களுடைய சாதனைகளில் கலந்து கொண்டுவந்த திருமதி. கதிரேசன் பத்மாவதி அவர்கள் (எல்லோராலும் திருநெல்வேலி அம்மம்மா என அன்போடு அழைக்கப்படுபவர்) தற்பொழுது இங்கிலாந்தில் மகன் குடும்பம் பேரப்பிள்ளைகளோடு வாழ்ந்து வருகின்றார். இவருக்கு ஏற்பட்ட புற்றுநோயிலிருந்து அது மாறிய அந்த நன்றியுணர்வோடு சென்ற வருடம் (01.06.2002ல்) எழுதியிருந்த கடிதத்தைக் கீழே பிரசுரித்துள்ளோம்.*

*சாயிராம்*

லண்டன்
01.06.2002

என் அன்புக்குரிய ஐயா, சகோதரர், சகோதரி மற்றும் எல்லோருக்கும், இன்று கணேஸ் தொலைபேசியில் கூறினார். முதலாந்திகதி (இன்று) ஐயாவின் நாளென்று. எல்லாம் பகவானின் கருணையே, சுகமாயும் உள்ளேன். ஐயாவை நினைத்து மகிழ்ந்தபடியே இருக்கிறேன். 10 வருடத்திற்கு மேலாகின்றது. என்கையால் பிடித்துக் கொடுத்த பொரிமா ஐயா, சிவா, மகேஸ், றஞ்சனா, என் அன்பு உமாவுடன் என் குடும்பத்தையே இணைத்து பிசைந்து தாவடியில் இணைத்து விட்டார். அன்பே உருவான ஐயா, இன்று வீட்டில் தனித்திருக்கும் நேரம் வானொலியில் கசட் போட்டேன். திருநீற்றுப் பதிகம் கேட்டுக் கொண்டேயிருக்க தம்பி தொலைபேசியில் கூறினார், என் சந்ததியினர் கொண்டிருக்கும் ஈடுபாட்டை நினைக்க, நினைக்க எப்படிச் சேர்த்து வைத்தார். புத்தகம் தான் எழுதலாம். நான் அனுபவிக்கும் இந்த சுகத்தை பிள்ளைகளுக்கும் ஊட்ட வேண்டுமேயென்று அதையுந்தந்து விட்டார். எனக்கு இருந்த புற்றுநோய், நோவு விளையாட்டாகவே ஐயா கடத்தி விட்டார். டாக்டர் கேட்பார் எப்படி அம்மா என்று. உங்கள் தெய்வநம்பிக்கை உங்களை காப்பாற்றுமென்று சொல்வார். அப்படியே பகவான் காத்தார். பகவான் மாற்றியும் விட்டார். ஓங்கார சாதனை கட்டிலில் இருந்தே செய்வேன். திருநீற்றுப் பதிகம் படிப்பேன். இப்போது தலைமயிரும் வளர்ந்து சிறு குடுமியுமுண்டு. பேத்திக்கு பகவான் ஒரு டாக்டர் மாப்பிள்ளை அனுப்பினார். அதுவும் புலால் உண்ணாதவர். அவரைக் காணும் நேரத்திலும் பகவானே நிற்பது போலிருக்கும். உங்கள் எல்லோரையும் நேரில் கண்டு பேசுவது போல இருக்கின்றது. நினைவும் இப்போ ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்குப் போய் 11 மணிக்கு வருவதுபோல இங்கும் பஜனையும் சில குடும்பங்களோடு பங்குபற்றுவது. தமிழில் புத்தகங்கள் எல்லாம் கிடைக்கின்றது. உங்கே இருப்பது போல அன்பும், ஐயாவே, நீங்கள் போட்ட விதைகளெல்லாம் முளைத்து மரமாகி பூத்துக் குலுங்குகிறது. உங்கள் இசையில் கடவுளைக் காண்பேன். ஐயா தருகிற திருநீறு, நாங்கள் யாரென்று உணர வைத்ததே ஐயா தானே. எங்கள் மருமகன் எல்லோரும் கூடிக்கும்பிட்டு குணமாக்கியும் விட்டீர்கள். இன்பமே அல்லாமல் துன்பமில்லை, போக்கொடு வரவிலாப்பொருளே என்றீர்கள் ஐயா.

உங்கள் அன்பையும், அருளையும் பெற்றவர்கள்.

**அம்மா: திருமதி. கதிரேசன் பத்மாவதி.**

# நல்ல மருந்து

## ஞானசேகரம் ஐயா

*நல்ல மருந்தொரு குரு மருந்தை நான்*
*நல்லூரில் கண்டேனே (நல்ல)*

*எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து*
*இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து*
*இல்லை யெனாது கொடுக்கு மருந்து*
*ஏழை யடியார்க் கிரங்கு மருந்து (நல்ல)*

*வல்லவன் ஞானசேகரன் தந்த மருந்து*
*வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து*
*புல்லர்கள் கண்டும் புசியா மருந்து*
*புண்ணிய சாதகர் புசிக்கு மருந்து (நல்ல)*

'நான் என் இரு கால்களிலும் சொந்தமாக நிற்பேன்'

இது ஞானசேகரம் ஐயா தமது சீடர்களுக்கு வாழ்ந்து காட்டிய நல்ல மருந்து. இந்த மருந்தை நீங்களும் எடுக்க விரும்பினால் என்னுடன் வாருங்களென தனது சீடர்களுக்கு நம்பிக்கையை வளர்த்தவர் எங்கள் குரு. தலைவனோ, தாயோ, தந்தையோ, அதிகாரிகளோ வேறு யாரும் இவ்வாறான ஓர் தைரியத்தை, துணிந்து சொல்லமுடியாத உலகில், உறுதியாக தனது சீடர்களுக்கு கூறி ஆன்மீகப் பாதையைக் காட்டியவர் எங்கள் நல்ல குரு. இந்த ஒரு சொல்லில் நம்பிக்கை வைத்ததன் விளைவே தாவடி "சாயி இல்லம்" உருவானதும், ஓர் ஆன்மீக சாதகர்கள் கூட்டம் உருவானதுமாகும். குரு நம்பிக்கைக்கு ஓர் இலக்கணம் ஞானசேகரம் ஐயா.

**அலைந்து திரிந்த சாதகர்களை இருத்தி சாதனை செய்ய வைத்தவர்.**

தான் நிற்குமிடத்திலுள்ள புல்லை ஆற, அமர நின்று வடிவாக மேய்ந்து பின்னர் அவ்விடத்திலேயே படுத்திருந்து இரையை மீட்டு அதன் பலனையும், ஆனந்தத்தையும் அனுபவிக்கத் தெரியாது, அங்குமிங்கும் ஓடி, ஓடி கண்ணுக்குத் தெரிகின்ற நுனிப்புற்களை மட்டும் மேய்ந்து திரியும் ஆடுகளைப்போல இருந்த சாதகர் களை இனங்கண்டு இழுத்துப்பிடித்து அறிவூட்டி, ஆர்வமூட்டி, நம்பிக்கையை வளர்த்து தாவடி சாயி இல்லத்தில் ஆற, அமர இருத்தி சாதனை செய்யும் வழிமுறைகளைக் காட்டிப் போதித்து ஆன்மீக ஆனந்தப்பாதையில் நடந்து செல்ல வைத்த நல்லகுரு ஞானசேகரம் ஐயா. ஆன்மீக வாழ்வு சுகமானது, இன்பகரமானது, தொல்லைதீர்ப்பது என்றெல்லாம் இன்றைய காலங்களில் எல்லோராலும் பேசப்பட்டும், போற்றப்பட்டும் வருகிறது. கேட்டும், பார்த்தும், பேசியும் உதட்டளவில் ஆன்மீகவாதிகளாக இருப்பவர்களை ஞானசேகரம் ஐயா சேர்த்துக் கொள்வதில்லை. ஆன்மீக வழியை உண்மையாக நாடுபவர்களை

இனங்கண்டு அவர்களுக்கு ஆன்மீகத்தை ஊட்டி, சாப்பிடவைத்து, பின்னர் ஜீரணிக் காதுவிட்டால் ஜீரணிக்க மருந்துகள் கொடுத்து ஆன்மீகப்பயனை அனுபவிக்க வைத்து அதனைப்பார்த்து ஆனந்திப் பதிலேயே ஞானசேகரமையா திருப்தி யுற்றார். இதனை நிருபணமாக்க சாயி இல்லத்தையும், அதில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கும் சாதகர் கூட்டத்தையும் காணமுடிகி றது. ஜீரணிக்க அவர் அக்கூட்டத்தின ருக்கு கொடுத்த முதல் மருந்து ஓங்காரம்.

ஓங்காரம் பிரணவமந்திரம். மந்திரங் களுக்கெல்லாம் மூலமந்திரம். அது ஒரு ஒலி அதாவது நாதம். ("நாதவிந்து கலா அதீத நமோ, நம" - அருணகிரிநாதர் திருப்புகழ்), உருவமற்ற இறைவனுடைய நாத உருவம்தான் "ஓம்". இது சாதனை யில் இருக்கும் சாதகர்கள் எல்லோரையும் ஒன்றாக பார்க்கவைக்கும் ஒலி. இது ஒரு கலை. இது அகமுக பார்வையை நோக்கி நகரவைக்கும் கருவி. எல்லோரையும் ஒன்று என்ற தத்துவத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வீக ஒலி. இது ஓர் சர்வரோக நிவாரணி. மகுடி ஊதும் பொழுது பாம்பானது மகுடி இசையில் மயங்கி செயலிழந்து நிற்பது போல ஓங்கார ஒலியை முறைப்படி இசைப்பதன் மூலம் மனம் மயங்கி தன் செயலிழந்து அவ்வொலியில் ஒன்றிவிடுகின்றது என்ற தத்துவத்தை தனது சாதகர்களுக்கு விளக்கி தாவடி சாயி இல்லத்தில் அதை ஓர் முக்கிய சாதனையாக ஞாயிற்றுக்கிழமை தோறும் பயிற்சியில் ஈடுபட வைத்துள்ளார் ஞானசேகரமையா. யாழ்ப்பாணத்தில் சாயி இல்லத்தில் மட்டுமே பெரும் சாதனையாக இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். மனத்தை செயலிழக்கச் செய்யும் ஒரேயொரு சாதனை ஞானசேகரம் ஐயாவினால் ஸ்தாபிக்கப்பட்ட சாயி இல்லத்தில் நடந்து கொண்டிருக்கும் உயர்ந்த ஆன்மீகச் சாதனையாகும்.

## மதுர, மதுர சாயிகீதம்

எல்லா இடங்களிலும் பஜனை, சத்சங்கம் செய்யப்படுகின்றது. ஞான சேகரம் ஐயாவினுடைய பஜனை சற்று வித்தியாசமானது. எல்லோரையும் பஜனை சொல்லிக்கொடுப்பதற்கு அவர் அனுமதிப் பதில்லை. அவர் சில கட்டுப்பாடுகள் வைத்துள்ளார். அதாவது ஒருவர் தான் பஜனை பாடவேண்டும். மற்றவர்கள் சேர்ந்து பாடவேண்டும். பஜனை பாடுபவர் இனிமையாகப் பாடவேண்டும். பாடுபவர் பஜனையுடன் ஒன்றிவிடுபவராக இருக்க வேண்டும். சேர்ந்து பாடுபவர்களையும் ஒன்றிவிடச் செய்யக்கூடியதாக தெய்வீக அம்சம் பொருந்தியதாக அமையவேண்டும். அப்படிப்பட்டவர்களில் ஒருவரை மட்டும் பாட அனுமதிப்பார். அதனால் பாடுவதற்குப் போட்டியோ, பாடுபவர் பற்றிய விமர்சனமோ எழுவதில்லை. பக்திமயமாக இருக்கும் அதனால் அக்கீதம் மதுர, மதுர கீதமாக அமையும். **அதே போல சத்சங்கமும் ஞானசேகரமையாவினுடைய இன்னோர் மருந் தாகும்.** எல்லோரையும் சத்சங்கம் செய்ய அனுமதிப்பதில்லை. சுவாமியின் கருத்துக் களை, குருவின் கருத்துக்களை ஜீரணித் துக்கொண்டவர்களை மட்டுமே சத்சங்கம் செய்ய அனுமதிப்பார். அப்படிப்பட்டவர் வரு டக்கணக்காக தொடர்ச்சியாக ஓங்காரம், பஜனை, சத்சங்கத்தில் பங்குபற்றியவரா கவும் இருத்தல் வேண்டும். அவருடைய சத்சங்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களி லேயே தெரிந்து சத்சங்கம் செய்ய அனுமதிப்பார். வெளியில் இருந்து யாரையும் சத்சங்கம் செய்ய ஐயா விரும்புவதில்லை. சத்சங்கம் செய்பவர்

சுவாமியினுடைய அல்லது குருவினுடைய கருத்துக்களை சொல்வதற்கு ஐயா அனுமதிப்பதில்லை. அக்கருத்துக்களை எடுத்து அவர் கடைப்பிடிக்கும் போது அவர் பெற்ற அனுபவங்களைக் கூறும்படி தான் சொல்லுவார். அனுபவத்தைச் சொல்லாமல் அறிவுபூர்வமாக சொன்னால் உடனடியாக அவரைப் பேசவிடாது தடுத்துவிடுவார். ஐயா எல்லோரையும் தனது கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதில்லை. தனது கூட்டத் தில் ஆத்மீகதாகம் உள்ளவரையே சேர்த்துக் கொள்வார். இவ்வாறாக அவரால் தெரிவு செய்யப்பட்ட கூட்டத்தினருடன் தான் தாவடி சாயி இல்லம் சாதனை இல்லமாக அவரால் உருவாக்கப்பட்டது. ஒருவருக்கு ஆன்மீகதாகம் இருக்கிறதா என்பதையும் அவர் இலகுவில் எடைபோட்டு விடுவார். அதுமட்டுமல்ல இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட கூட்டத்தினருக்கு அவர் கொடுத்த மருந்துகளாவன:- ஓங்காரம், பஜனை, சத்சங்கம், தன்னை அறிதல் என்ற விசாரணை, தியானம் என்பன ஜீரணித்துக் கொண்டிருப்பதாலேயே இன்றும்கூட தாவடி சாயி இல்லம் உயிரோட்டமுடைய, கட்டுப்பாட்டுடன் கூடிய சாதனை இல்லமாக இருந்து வருகின்றது.

ஐயா தனது சத்சங்கத்தில் கூறிய உதாரணங்கள் அவரது கூட்டத்தினரை தெளிவடையச் செய்வதாக அமைந்தி ருந்தது. அவைகள் இன்றுங்கூட திருப்பத் திரும்ப கூறப்பட்டுவருகின்றது. கீழே தரப்பட்ட உதாரணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்:-

உயரம் பாய்தலில் தடியூன்றி உயரம் பாய்தலும் ஒருவகை உயரம் பாய்தலாகும். இரண்டு உயர்ந்த கம்பங்களைத் தொடுப்பது போல உயரமாக ஒரு பார் வைத்திருப்பார்கள். இப்பாரை முட்டி கீழே விழுத்தாது இதற்கு மேலாகப் பாய்ந்து செல்லுதலே இதன் ஒழுங்குமுறை. இதைப்பாய்ந்து கடப்பவர் சாதாரணமாகப் பாய முடியாது. ஏனெனில், மிக உயரத்திலிருக்கும். எனவே இவருக்கு நீண்டு உயர்ந்த முறியாத பலமான அலுமினியத்தால் செய்யப்பட்ட ஒரு கோல்(தடி) கொடுக்கப்படும். அதைப் பயன்படுத்தி அதன் உதவியுடன் அந்த உயரத்திலுள்ள பாரை கடக்கவேண்டும். கோலை இறுகப்பிடித்து ஊன்றி உயரே எழுந்து பாரைக் கடக்கும்போது தான் உயர்ந்து பாய்வதற்கு உதவியாக இருந்த கோலின் பிடியை தளர்த்தி அதனை பின்புறமாகத் தள்ளிவிட்டே பாரின் மறுபுறத்தில் அதனைக்கடந்து கீழே விழ வேண்டும். அப்போதுதான் குறுக்கே போடப்பட்ட பார் தட்டுப்பட்டு கீழே விழாது இருக்கும். அப்படிச் செய்தால் அவர் வென்றவராக பரிசில்கள் வழங்கப்படும். இங்கு,

பாரைக்கடந்து செல்லுதல்:- வாழ்க்கையின் இலட்சியம், இறைவனுடன் சேர்தல்.

ஊன்றுகோல்: - இவ்வுலகம்

இறுகப்பிடித்தல்:- நாம் உலகத்தில் வைத்துள்ள பற்று, பாசம்

உலகம் என்பது:- குடும்பம், சமூகம், பணம், பட்டம், பதவி, தொழில், உழைப்பு என்பனவாகும்.

மேற்கூறியவற்றை நாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சத்தியம், தர்மம், அன்பு என்பன கொண்டு நல்வாழ்வு வாழ்ந்தால் வாழ்க்கையில் உயரமுடியும். உலகத்தில் பற்றும், பாசமும் வைத்து அதர்மவழியில் வாழ்பவர் வாழ்க்கையில் உயரமுடியாது. இவ்வாறு தனது உலகக் கடமையைச் சரிவரச் செய்தவரே பாரைக் கடக்க முடியும். உலகக்கடமையை உதாசீனம் செய்பவர், அதர்மமாக வாழ்பவர் பாரைக்கடக்க முடியாது. இப்படிப்பட்ட வாழ்க்கையிலே உயரமுடியாதவர்கள்தான்

இவ்வுலகில் பெரும்பான்மையானவர்கள். இவர்களுக்கு ஆன்மீகம் விருப்பமான ஒன்றல்ல. இதைவிட வாழ்க்கையில் உயர்ந்தவர்கள், தான் உயர உதவிய உலகத்தை அதாவது ஊன்றுகோலை கைவிட விருப்பமின்றி உதவி செய்தவரை உதைத்து தள்ளுகிறதா! என்ற விளக்க மில்லாத "நன்றி" என்ற பெயரில் அதனையும் (ஊன்றுகோலை) சேர்த்து பாரைக்கடந்து பாய முயற்சித்து Foul விளையாட்டாக மாற்றிவிடுபவர்கள். இவர்கள் வாழ்க்கையில் உயர்ந்து மீண்டும் இந்த உலகத்திலேயே விழுந்துவிடுபவர்க ளாகும். இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுபவர் களில் பலர் இந்த வகையைச் சார்ந்த வர்கள்.

மிக, மிகச் சிலரே உண்மையான உலக வாழ்க்கையை வாழ்ந்து அதில் உயரே சென்று பின்னர் அவற்றையும் ஊன்றுகோலைத், (உலகம், அதாவது குடும்பம், பணம், பட்டம், பதவி, வீடு, சுற்றத்தார்) தள்ளிவிட்டு பாரைக்கடந்து வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்தவர் களாகும். இங்கு ஊன்றுகோலைத் தள்ளிவிடுதல் என்பது தான் விடுதலை. "விடுதல்" என்பது தான் விடுதலை எனப்படுகிறது. எதை விடுதல் உலகப்பற்று, பாசங்களை விடுதல் எப்போது விடுதல் உலகத்தைப் பயன்படுத்தி உயர்ந்த நிலையில் விடுதல். இந்த வாழ்வு ஆத்மானந்தத்தை வெளிப்படுத்துகிறது. மேற்கூறிய ஒழுங்கில் ஐயா வாழ்ந்து காட்டி அவர்களையும் வாழ வழிகாட்டிய நல்லகுரு. இந்த வல்லவன் தந்த நல்ல மருந்துகள் பின்வருமாறு:-

1) இருந்து சாதனை செய்
2) உன் இரு சொந்தக்காலிலும் நில் (ஆத்மாவில்)
3) குருவின் மீது சந்தேகமற்ற நம்பிக்கை வை.
4) ஓங்கார உபாசனை செய்து மனத்தை செயலிழக்கப் பயிற்சி செய்.
5) பஜனை செய்து ஐம்புலன்களையும் அடக்கப்பழகு.
6) சத்சங்கத்தில் பங்குபற்றி நேரிய சிந்தனையை வளர்த்துக் கொள்.
7) நேரிய சிந்தனையைக் கடைப்பிடித்து அனுபவத்தைப் பெற்றுக்கொள்.
8) பல இடங்களுக்குச் செல்லாமல் ஒரு இடமாக இரு.
9) ஆத்ம சேவையை செய்யப்பழகு. அதைச் செய்.

இந்த நல்ல குருமருந்தை (ஞானசேகரம் ஐயாவை) நான் தாவடி சாயி இல்லத்தில் காண்கின்றேன்.

**ஜெர் சாய்ராம்.**

**ஸ்ரீ அ. குணசிங்கம்,**
**ஆசிரியர்.**
**யாழ். இந்துக்கல்லூரி.**

ஓம் ஸ்ரீ சாயிராம்

# என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா (சுவாமி) ஓர் அவதாரமாக அவதரித்த இக் கலியுகத்தில் நாம் மனிதப் பிறவியெடுத்தது ஓர் அற்புதம். இதை விட மேலான அற்புதமாக நான் கருதுவது சாயி ஞானசேகரம் ஐயா எனக்கு ஆத்மீகக் குருவாக கிடைத்தது. எல்லாமே சுவாமியின் சங்கல்ப்பத்தினால் ஏற்பட்டதே.

"அவனருளாலே அவன்தாழ் வணங்கிச்" சுவாமியின் சங்கல்ப்பம் இல்லாமல் அவரை யாரும் அறியவோ, கடவுளாக ஏற்றுக் கொள்ளவோ முடியாது. 16 வயது முதல் சுவாமியின் கருணையால் பக்தியுடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் அவரை வணங்கி வந்தேன். சாதாரணமாக எல்லோரும் எதற்காக கடவுளை வணங்கி வருகிறார்களோ அதே எண்ணத்துடன் தான் சுவாமியையும் வணங்கி வந்தேன். 1985ம் ஆண்டில் சாயி மகேஸ்வரன் அவர்களின் அறிமுகம் கிடைத்த பிறகே அவர் மூலம் "சனாதன சாரதி" மற்றும் சுவாமியின் அருளுரைகள், ஈடேற்றுவதற்கு சுவாமி நிறைய நல்ல விஷயங்களைக் கூறி இருக்கிறார் என அறிந்து கொண்டேன். ஆனால் ஆழமாக அறிய வேண்டுமென்ற நாட்டம் ஏற்படவில்லை. சுவாமியின் மீது பக்தியும், நம்பிக்கையும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது.

"என்னை நோக்கி ஓரடி வைத்தால் உங்களை நோக்கி நான் நூறடி வைப்பேன்" என்ற சுவாமியின் வாக்கு பொய்யாகுமா? கருணையின் வடிவான சுவாமி மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கத்தை நான் அறிய வேண்டும் என சங்கல்ப்பம் கொண்டதால் சாயி மகேஸ்வரன் அவர்கள் மூலம் "சாயி ஞானசேகரம் ஐயா"வின் தரிசனம் கிடைக்கச் செய்தார். அவருடைய ஆத்மீக சாதனைகளில் பங்குபற்றிக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

சாயி மகேஸ்வரன் குடும்பம் ஐயாவோடு பக்குவமாக நடந்து கொண்ட விதமும், குருவாக ஐயாவை ஏற்று அவர் சொல்லில் வைத்த நம்பிக்கையும், தங்களது காரியங்களை ஆத்ம சாதனைகளுக்காக தியாகம் செய்த விதமும், என்னைப் போன்று அவர்களது இல்லத்திற்கு சாதனைகளுக்கு வரும் சாதகர்களை அன்போடு அழைக்கும் விதமும் எங்களை ஐயாவின் ஆத்மீக சாதனைகளில் பங்குபற்றும் நாட்டத்தை தூண்டியது. எந்த விதமான சலனங்களோ, சந்தேகங்களோ இல்லாமல் வெற்றுப் பத்திரமாக இருந்ததால், ஐயாவின் ஆத்மீக கருத்துக்கள் இலகுவாக உள்ளே சென்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஐயாவின் தரிசனம் அடிக்கடி கிடைக்க வேண்டும் என்றும், அவரிடம் ஆத்மீக கருத்துக்களை கேட்க வேண்டுமென்ற தாகமும், மேலான விருப்பமும் ஏற்பட்டது. இயல்பாகவே அவரை குருவாக ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் உண்டானது. சுவாமியின்

அவதாரத்தின் நோக்கம்? நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? நாம் மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் என்ன? என்பதை இலக்காக வைத்துத் தான் ஐயாவின் ஆத்மீகக்கருத்துக்கள் இருந்தன. ஐயாவிடமிருந்து கற்றுத் தெளிந்து கொண்ட ஆத்மீகக் கருத்துக்களை எல்லோரிடமும் பரிமாறுவது எனது மிகமுக்கிய கடமையாகும். எல்லாவற்றையும் ஐயாவின் பாதங்களுக்கே அர்ப்பணமாக்கி அவரின் ஆசீர்வாதத்துடன் கூறுகின்றேன்.

### 1. மனிதன்

சரீரம் (உடல்), மனது, ஆன்மா மூன்றும் கலந்ததே மனிதன்.

அ.சரீரம் :- கர்மம் செய்வது (Doing)

ஆ. மனது :- என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைத் தெரிந்து கொள்ளக் கூடியது (Knowing)

இ. ஆன்மா :- என்றும் நிலையாய், உண்மையாய் இருப்பது (Being)

### 2. எமது உண்மையான இயல்பு ?

ஓர் அவதாரம் (சுவாமி) எங்களை நோக்கி "உங்கள் உண்மையான இயல்பு சத் + சித் +ஆனந்தம்" எனக் கூறும் போது நம்பாமல் இருக்க முடியுமா?

1. சத் (Being) - என்றும் நிலையானது. எதனுடனும் சேர்ந்தாலும் முக்காலத்திலும் மாறாதது.

உ - ம்:-சீனியை கோப்பி, தேனீர், நீர் எதில் கலந்தாலும் அதன் இனிப்பு மாறாது இருப்பது போல.

2. சித் (Awareness) - விழிப்புணர்வு :- எல்லாவற்றிலும் ஒரே ஆத்மாவைத் தான் என அறிந்து கொள்ளும் தன்மை.

3. ஆனந்தம் - சத்தும், சித்தும் இணையும் போது தான் ஆனந்தம் உண்டாகும்.

உ - ம் நீரோடு சீனியை சேர்த்தால் தான் பானம் உண்டாகும்.

எமது இயல்பு சத் + சித் +ஆனந்தம் என்பதால் தான், இயல்பாகவே என்றும் உயிர்வாழ வேண்டுமென விரும்பு கின்றோம்.

3. உண்மையில் நான் யார்?

1. நான் இந்த உடம்பா?.......

உடம்பு : உடம்பு ஓர் நோக்கு டுக்கை பார்த்திருக்கவே தோன்றி, வளர்ந்து, தேய்ந்து, அழிந்து போகும் தன்மையுடையது. ஒரு வயதில் இருப்பது போல் 20 வயதில் இருப்பதில்லை. வளர்ந்து பெரிதாக காணப்படும். 20 வயதில் இருப்பது போல் 80 வயதில் இருப்பதில்லை. முதுமை கண்டு கூனிக்குறுகியிருக்கும். அப்படியானால் நான் இந்த உடம்பல்ல.

2. நான் இந்த மனமா?......

மனம் : எண்ணங்களின் கூட்டே மனம். எண்ணங்கள் இல்லாவிடில் மனம் இல்லை. மனம் ஒரு மாயை. இல்லாததை இருக்கிறது என நினைக்கும் தன்மை கொண்டது. நிலையில்லாதது. ஆகவே நான் இந்த மனமல்ல.

3. அப்படியானால் நான் யார்?

நான் ஆத்மா. ஆத்மா தான் எல்லாவற்றுக்குள்ளும் வியாபித்துக் கொண்டிருக்கும். ஆனால் புலப்படுவதில்லை. அதாவது பார்க்கப்படும் பொருள் இல்லை.

உ - ம் : இது கட்டில், இது கதவு, இது மேசை, இது வாங்கு என ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுச் சொல்கின்றோம். அநேக

பொருட்களுக்கு மத்தியில் கட்டில் எனச் சொன்னால் எது எனத் தெரியாது. "இது கட்டில்" என்றால் தான் எது கட்டில் எனத் தெரியும். "இது" பார்க்கப்படும் பொருள் அல்ல. ஆனால் எல்லாவற்றையும் பார்த்து அறிவிக்கின்றது. "இது" தான் ஆத்மா.

"நான் இந்த உடம்பு" என எடுத்துக் கொண்டால் உடம்பு எல்லோராலும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது தானே. பார்க்கப்படும் பொருளாக "உடம்பு" இருக்கும் போது புலப்படாமல் எல்லாவற்றையும் பார்ப்பவராக "நான்" இருக்கிறது. இந்த "நான்" தான் ஆத்மாவே ஒழிய "உடம்பு" அல்ல.

"நான் இந்த உடம்பு" என்பது தான் அறியாமை. ஐயாவின் மூலம் தான் இதை விளங்கிக் கொண்டேன். குரு என்றால் அறியாமையை அழித்து ஞானத்தை (ஆத்மாவை உணர்தல்) அளிப்பவர் எனப் பொருள்படும். "அறியாமை எனும் அடிமை விலங்கிலும் மரணம் கூட இனியது" என சுவாமி தான் கூறுகிறார்.

ஆத்மா ஒன்று தான். எல்லோருக் குள்ளும் ஒரே ஆத்மா தான் உள்ளது. என தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும். இது தான் உண்மை என ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்டால் தான் நாம் மனிதர். இல்லாவிடில் மனித வாழ்க்கைக்கு அர்த்தமில்லை.

இதை அறிந்து கொள்வதோடு நின்று விடாமல் எல்லோருக்குள்ளும் இருப்பது ஒரே ஆத்மாவே, எல்லாம் ஒன்று என்பதையும் உணர்ந்து உதாரண நடத்தையில் மனிதத்தன்மை மூலம் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்தவே மனிதப் பிறவி கொடுக்கப்பட்டது என்பதையும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

இது தான் "ஆத்மீகம்" இந்த உயர்ந்த ஆத்மீக கருத்துக்களை எமக்கு வெளிப் படுத்துவதோடு சாயி ஞானசேகரம் ஐயா நின்றுவிடவில்லை. இந்த பேருண்மையை நாம் ஏன் அறிய முடியாமல் இருக்கிறது என்பதைக்கூட எளிய உதாரணங்களோடு எமக்கு விளங்கித் தெளிய வைத்தார்.

1. "ஈஸ்வர சர்வ பூதானம்", "ஈஸா வாஸ்யம் இதம் ஜகத்" இறைவன் ஒன்று தான் இப்பிரபஞ்சமும் இறைவனே. இங்கு காணப்படுபவை எல்லாம் இறைவனின் தோற்றங்களே. தோற்றங்களெல்லாம் ஒன்றிலிருந்துதான் வந்தது என உணராமல் தோற்றங்களுக்குள் வேறுபாடுகளை காண்கிறோம்.

உ - ம் பவுணை உருக்கித்தான் பல்வேறு வடிவமான சங்கிலி, காப்பு, தோடு, அட்டியல், மூக்குத்தி செய்கிறோம். எல்லாத் தோற்றங்களும் பவுணிலிருந்து தானே வந்தது.

இது தான் உண்மை. மூக்குத்தி நினைக்கலாமா நான் சிறியவன் என. சங்கிலி நினைக்கலாமா நான் பெரியவன் என. வெவ்வேறான தோற்றங்கள் எனப் பார்க்கும் போது தான் "நான், நீ, அவன்" எனது என்ற இரண்டான பாவனை (துவைதம்) உண்டாகிறது.

துவைத பாவனையால் இன்று மனிதனுடைய வாழ்க்கையில் ஒருவருக் கொருவர் தீங்கு செய்து கொள்வதென்பது இன்று தவிர்க்கமுடியாததொன்றாகி விட்டது. இவன் நன்றாக வாழ்கின்றான். இவன் நன்றாகப் படிக்கின்றான், இவன் நன்றாக வேலை செய்கின்றான், இவன் மிக அழகாக இருக்கின்றான், இவனிடம் நிறைய பணம் இருக்கின்றது, இவன் புகழ் உள்ளவனாக இருக்கிறான் எனக்கண்டு அவர்களை

வீழ்த்துவதற்கும், ஒழித்துக் கட்டுவதற்கும் எமது உட்பகைவர்களான காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் போன்ற தீய குணங்கள் வெளிப்படும். ஒன்றான பாவனை (அத்வைதம்) இல்லாவிடில் எல்லோருள்ளும் ஒரே ஆத்மா என உணரமுடியாது.

2. எமக்கு இந்த உடல், மனம், புத்தி, இந்திரியங்கள் ஏன் தரப்பட்டது என அறியாமல் அவற்றை சிற்றின்பங்களுக்காக தவறான வழியில் பயன்படுத்துகின்றோம். உலக விஷயங்களில் கூடுதலான நாட்டத்தை ஏற்படுத்துகிறோம்.

உ - ம் பக்கத்து வீட்டுக்காரர் மரத்தில் வீட்டுக்காரரைக் கேட்காமல் மாங்காய் பறித்தல் போன்ற தவறுகள்.

புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வெளிநோக்காக இருக்கின்றதால் விளைவுகளைத் தெரிந்து கொள்ளாமல் தேவையற்ற விடயங்களை பார்க்கின்றன, சொல்லுகின்றன, செய்கின்றன. துன்பங்களை தேடிக்கொள்கின்றன. உடல், மனம், புத்தி, இந்திரியங்கள் எல்லாம் ஆத்மாவை உணர்ந்து கொள்வதற்காக மட்டும் தான் தரப்பட்டவை. ஆகவே, இவற்றை எப்போதும் ஆத்மாவை உணரவைக்கும் காரியங்களில் ஈடுபடவைக்க வேண்டுமென்பதை கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். சாதனைகளால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

உ-ம் : பஜனை, தியானம், ஓங்கார சாதனை, நாமஸ்மரணை, சத்சங்கத்தில் கலந்து கொள்ளல். (இவற்றில் கலந்து கொள்ளும் போது உள்நோக்கி பார்க்கும் பழக்கம் ஏற்படும்).

ஒரு தாய் தனது குழந்தை உணவு உண்ண வேண்டுமென்று தன்னுடைய சிரமங்கள் எதையும் பாராது நிலவைக் காட்டி, மரத்தைக் காட்டி, பூக்களைக் காட்டி உணவு ஊட்டுவாள். அவளுடைய இலட்சியம் பிள்ளை உணவு உண்ண வேண்டும் என்பதேயொழிய வேறில்லை. அதே போல் தான் சாயி ஞானசேகரம் ஐயாவும் எமக்கு எத்தனை விதமான உதாரணங்களைக் கூறி ஆத்மீகக் கருத்துக்களை கூறினார். ஏனெனில், அவருடைய நோக்கமும், சுவாமியினுடைய நோக்கமும் ஒன்றேயாகும். எங்களிடமுள்ள தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பதே அதுவாகும். எவன் ஒருவன் தனக்குள் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து வெளிப்படுத்துகிறானோ அவனே உண்மையான பக்தன் அவனே எனக்கு பிரியமானவன் என சுவாமி கூறுகிறார்.

பெற்றோர் எதிர்காலத்தில் தமது பிள்ளைகளுக்கு எதுவித துன்பமும் நேரக்கூடாது என பொருள் பண்டங்களைச் சேகரித்து வைப்பது போல, எங்கள் சாயி ஞானசேகரம் ஐயாவும் எமக்கு “திருநீற்றுப் பதிகம்” “கோளறு திருப்பதிகம்” “யோகர் சுவாமியின் நற்சிந்தனைகள்” “பாகவதம்” “பகவத்கீதை” “காயத்ரி மந்திரம்” போன்ற அமிர்தங்களை எமக்குச் சொல்லித் தந்திருக்கிறார். இவையே நாம் தேடிய சொத்துக்கள். எங்களை வாழவைப்பதும் இவையே.

பதிகங்களை கருத்து நினைந்து படிக்க வேண்டுமென ஐயா சொல்லி இருக்கிறார். “கோளறு திருப்பதிகம்” படிக்கும் போது “தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்” இந்தப் பதிகத்தை ஓதுகின்ற அடியார்கள் வானில் அரசாள்வர் “இது நமது ஆணை” என திருஞானசம்பந்தர் சொல்லியதையும் படிக்கும் போது எமக்குள் நம்பிக்கை தானாகவே வளர்ந்து விடுகிறது. யோகர் சுவாமியின் பாடல்களை பாடிக்

கொண்டிருந்தால் நாமும் இறைவன் என்பதை தெளிந்து கொள்வோம்.

ஐயாவோடு இறுதிவரை சீடராக அமர்ந்து ஆத்மீக கருத்துக்களை கேட்கும் பாக்கியத்தை சுவாமி எமக்கு அருளியி ருந்தார்.

ஐயா நாங்கள் எப்படி வாழ வேண்டும் என விரும்பினாரோ அவருடைய ஆசீர்வாதங்களுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அவரே வழிநடத்திச் செல்கிறார்.

எல்லாம் சுவாமி, எல்லாம் சுவாமியின் செயல் என அர்ப்பணமாக வாழும் போது எம்மால் யாருக்கும் தீமையோ, பிறரால் எமக்குத் தீமையோ ஏற்படாது. குறுகிய மனப்பான்மை அழிந்து எல்லோரிடத்திலும் அன்பு தான் பெருகுகிறது. ஆத்ம பலம் உண்டாகிறது. "யத்பாவம் தத்பவதி" நானே கடவுள், நானே சற்சித்தானந்த சொரூபி, நானே ஆத்மசொரூபி, நானே பிரேமஸ்வ ரூபி எனப்பாவனையுடன் செயல்பட்டால் அப்படியே ஆகிவிடுவோம். ஆனந்தம் இதேதான் விபரிக்க முடியாதது. ஆனந்தம் தான்.

ஆத்மீகத்தில் உயர்ந்த இலட்சியங் களை கைக்கொண்டுள்ள சாயி ஞான சேகரம் ஐயாவின் உடல் மறையலாம். அவரின் இலட்சியங்கள் அமரத்தன்மை என்றும் அழியாதவை. சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகின்றார். அவருடைய உயர் இலட்சியங்கள் இன்றும் "சாயி இல்லம்" தாவடியில் ஆத்மீக சாதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆத்மாவை உணருவதற்கு எத்தனை நூல்கள் படித்தாலும், எத்தனை ஞானிகள், மகான்களிடமிருந்து உபதே சங்கள் கேட்டாலும் சாதனைகளில் ஈடுபட்டு தன்னுடைய பார்வையை உள்நோக்கித் திருப்பினால் தான் ஆத்மாவை உணரலாம். நாம் எதிலிருந்து தோன்றினோமோ அதனை சென்றடைவதே எமது வாழ்க்கையின் இலட்சியமாகும்.

"சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம்
தாளினை பணி நீ தினம்"

சாயி ஞானசேகரம் ஐயாவே எப்பவும்
எமது சற்குரு"

**ஜெய்சாயிராம்**

**திருமதி. கிருபாகரி முரளீதரன்**
**திருகோணமலை.**

# 06.04.2003 ஞாயிற்றுக்கிழமை சாயி இல்லத்தில் நடைபெற்ற சத்சங்கம்

நாங்கள் யார் என்று பார்க்கத்தான் வந்திருக்கிறோம். நாங்கள் யார் என்று பார்த்து வந்ததன் முடிவு என்ன என்றால் நாங்கள் இறைவனுடைய குழந்தைகள். அதாவது இறைவனுடைய குழந்தைகள் என்று சொல்லும் போது பேத வித்தியாசம் ஒன்றுமே இல்லை. இறைவனைப் போன்ற குணமுடையவர்களாலே குழந்தைகள் என்ற பாவத்தோடு அந்த பாவத்தை எப்படி அனுபவிக்கிறது என்ற முயற்சியில் ஈடுபட்டு அந்த குழந்தைகள் எப்படி பெற்றோருடன் ஆனந்தத்தை அனுபவிக்கத்தான் நாங்கள் தேடி நாங்களும் குழந்தைகள் என்ற எண்ணத்தோடு வந்து தான் ஐக்கியமாகி இருக்கிறோம். குழந்தைகள் என்று சொல்லும் போது பேத வித்தியாசம் ஒன்றுமே இல்லை. தனிப்பட்ட ரீதியில் நின்று பார்க்கின்றபோது தான் தோற்றம் என்ற வித்தியாசம் தெரிகிறது. ஒரு வகுப்பறையில் ஆசிரியர் என்ற ரீதியில் பிள்ளைகளைப் பார்க்கின்றபோது அனைவருமே பிள்ளை களாகத்தான் தெரியும். அங்கே தனிப்பட்ட ரீதியில் தவறு விட்டாலும் கெட்டிக்காரப் பிள்ளை என்றாலும் பிள்ளைகள் என்ற ரீதியிலே பார்வை ஒன்றாகத் தான் தெரியும். கடமை, பொறுப்புணர்வுடன் தான் பார்க்க வேண்டும். பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டி, தட்ட வேண்டிய இடத்தில் தட்டி ஒரு சமநிலையில் நின்றுதான் அந்தப் பாதையை வழி நடத்தலாமே ஒழிய தனிப்பட்ட ரீதியிலே பாசத்தையோ, அன்பையோ வெளிப்படுத்தி வழிப்படுத்த இயலாது. பூரணமான இடத்தில் இருந்து கொண்டு செய்கின்ற போது தனிப்பட்ட இயல்புகள் வெளிப்படாது. முழுமையான அன்பிலே நின்று கொண்டு தான் செய்யலாம். செய்கின்ற போது சந்தோஷம் தான் வரும். சுவாமி சொல்கிறார் கடமைகளைச் செய்கின்ற போது வருகின்ற ஆனந்தம் தான் என்னாலே கொடுக்கப் பட்டுக்கொண்டு இருக்கிறது. அதனாலே ஆனந்தத்தை அனுபவிக்கின்றீர்கள். ஆனால் பூரணமான ஆனந்தத்தை என்னுடைய உண்மையான இயல்பை அனுபவித்து அதனை உங்களுடைய வாழ்க்கையிலே கண்டு கொள்ளுங்கள். அதற்காக வாழ்வதற்கான வழியைத் தேடுங்கள் என்று சுவாமி வந்திருக்கிறார். சுவாமி தன்னை நம்புங்கள் என்று சொல்கிறார். அதைக் கூட சொல்லித்தந்து தான் நம்பவைக்க வேண்டி இருக்கிறது. எங்களாலே நம்பமுடியாததனால் நம் பக்கத்தில் இருப்பவர்களை உறுதியாக நம்பி விடுகிறோம். ஆனால் உள்ளே இருந்து கொண்டு சொல்கிறவரை நம்பவே முடியவில்லை.

ஏன் என்றால் அவரை எங்களாலே காணவே முடியவில்லை. ஆகவே நம்ப முடியவில்லை. கண்ணாலே காண்கிறவர்களை நம்புகிறோம். பக்கத்தில் இருந்து கொண்டு சொல்கின்றவர்களை உறுதியாக நம்புகி றோம். அது தான் நான் சங்கு சக்கரம் ஆயுதம் என்பவற்றோடு வந்தாலும் நம்ப

மாட்டீர்கள். சாதாரண வடிவத்தில் வந்தாலும் நம்ப மாட்டீர்கள் என்று தான் மனித வடிவம் எடுத்து வந்திருக்கிறேன். எனவே மனித வடிவந்தாங்கி வந்தும் நம்புங்கள் என்று சொல்லியும் நம்புகிறீர்கள் இல்லை. எந்த மொழியில் சொல்லி எங்களிற்கு புரிய வைக்கிறது. புரியக் கூடிய தமிழிலே புரிகிறதில்லை. எப்படிப் புரியும். ஏன் என்றால் அது சொல்லித்தர வேண்டியது இல்லைத்தானே. இயல்பாகவே உண்மையான விசுவாசத்தோடு இருந்தால் எங்களால் புரிய முடியும். அதை சொல்லி நம்புங்கள் என்று முன்நின்று சொல்லத் தேவை இல்லைத்தானே. செயல்களைப் பார்த்து சாதாரணமாக இயல்பாகவே நம்புகிறோம். எங்களுடைய வாழ்க்கையில் இவர்களிடம் நல்ல பண்பு நல்லியல்பு இருக்கிறது என்று நம்பித்தானே இங்கு வருகிறோம். எங்களுடைய தீர்மானத் தினாலேயே இங்கே வருகிறோம். இங்கு வரச் சொல்லி ஒருவரையும் கூப்பிட வில்லை. இப்படி ஒரு காரியம் இருக்கிறது. ஆன்மாவைக் காண்பதற்கு என்று ஒருவரும் கூறவில்லை. நாங்கள் நம்பித்தான் வருகிறோம். எப்படி நம்புகிறோம் என்று சொன்னால் எங்களிற்குள்ளே இருந்து எங்களை வழிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அவருடைய செயலாலே தான் ஒவ்வொரு காரியமும் நடக்கிறதே ஒழிய எங்களிற்கு என்று தனிப்பட்டதாக எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட சக்தியாலே ஆற்றவில்லை. எல்லாவற்றிற்கும் பரப் பிரம்மமான ஒன்று தான் எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டு இருக்கிறது. அதை மறந்து போய் நான் என்ற அகங்காரம், பொறாமை, என்பவற்றை உற்பத்தியாக்கி வைத்திருக்கிறோம். உற்பத்தியாக்கி வைத்திருக்கிறோமே ஒழிய இறைவனாலே தரப்படவில்லை. நாங்கள் சாப்பிடுகின்ற சில சாப்பாட்டைக் கொண்டு பொறாமை, வெறுப்பு, கோபம் என்பவற்றை நாம் உற்பத்தியாக்கி வைத்திருக்கிறோம். அதனால் தான் சாப்பாட்டில் கவனமாய் இருங்கள் என்று கூறுகிறார். சாப்பாட்டினால் உற்பத்தியாக்கிவிட்டு எனக்கு வந்து கஷ்ரத்தை தருவீர்கள் என்று தான் உணவைப் பற்றியும் சுவாமி சொல்லி இருக்கிறார்.

நாங்கள் உண்மையானவர்கள் என்று காணவேண்டும் என்று சொன்னால் தோற்ற உணர்வை விட்ட இடத்தில் தான் உண்மை புலப்படும். உலகிலே எல்லோரும் சொல்லலாம் உண்மையைப் பேசுகிறோம் என்று ஆனால் தோற்றத்தை விட்ட இடத்தில் எது கதைத்தாலும் அது சத்தியம் தான் அவர்கள் புகழ்ந்தாலென்ன, இகழ்ந்தாலென்ன என்று தோற்றத்தோடு பொருந்தாமல் எதையும் ஏற்கின்ற பக்குவத்தோடு வாழ்வதே உண்மையான வாழ்வாக அமையும். இறைவனுடைய வழியில் நடக்கிறதென்றால் எது சொன்னா லும் ஏற்கிற பக்குவம் இருந்தால் அது தான் சத்தியம்.

சுவாமி எங்களைப் புரிய வைக்கிற திற்குத் தான் இன்பம், துன்பம், பகல், இரவு என்று வருகிறது. எங்களைப் பார்த்து நேரிய பாதையில் வழி நடப்பதற்கு இவைகள் தான் இட்டுச் செல்கின்றன. பகலைத் தூய்மை யாக அனுபவிக்க வேண்டுமென்றால் இரவு என்ற ஒன்று வரத்தான் வேண்டும். அதே போலத்தான் வாழ்க்கையிலும் ஒரே சந்தோஷமாக இருந்தால் பூரணமாக அனுபவிக்க இயலாமல் போய்விடும். துன்பம் வருகின்ற போது தான் எங்களை விழிப்பாகப் பார்த்து சரியான பாதையில் செல்வதற்கு வழி வகுக்கலாம். விசாரணை மூலமாக எங்களை எப்படி இருக்கிறோம் என்று பார்த்துத் தோற்றத்தோடு இருக்கின் றோமா அல்லது பிரச்சனை சிறிது ஆன்மா தான் பெரிது என்று பார்க்கத்தான் பிரச்சனை

வருகிறது. எங்களைப் பார்த்து தெளிந்து வாழ்க்கைப் பயணத்தை சரியாக வழிநடத்தத்தான் ஒவ்வொன்றும் வருகிறது. சரியாகத் துன்பத்தின் வடிவத்தைப் பார்க்கா விட்டால் அவை தடைக்கற்களாகத்தான் தெரியும். ஆன்ம உணர்வோடு நின்று பார்க்கின்றபோது அவை ஒவ்வொன்றும் படிக்கல்லாகத்தான் இருக்கும். எங்களிடம் உள்ள அகங்காரம் போன்று ஒவ்வொரு குணங்களை பார்த்து எங்களிடம் உள்ள குறைபாடுகள் எங்களிற்கே தெரியவரும். எங்களிடமுள்ள இயல்பு மறைந்து போய் இருக்கிறதாலே தான் பிரச்சனை போல வருகின்றது. அதைத் தெளிவாக பார்த்தால் அதிலிருந்து விலகிறது சுலபம்.

எங்களிற்கு மட்டும்தான் பிரச்சனை என்று நினைக்கிறபோது அதுவும் பூதாகாரமாகத் தான் தெரியும். எல்லோருக்கும் பிரச்சனை இருக்கிறது என்கின்ற போது சந்தோஷமாகத்தான் இருக்கும். ஏன் என்றால் எல்லோருக்குமே பிரச்சனை தான் என்று எங்களுடைய மனம் சமத்துவமாகப் பார்க்கின்றபோது எங்களைப் பற்றி குறைவாக நினைக்க வராது.

ஒரு நிகழ்வைக் கூறுகின்ற போது கூறினார். பிளேனில் போய்க்கொண்டிருக்கிறபோது அதிலே உணவு சூடாகத்தான் கொடுப்பார்கள். ஆனால் அன்று சூடாக்குகின்ற இயந்திரம் பழுதாகிவிட்டது. அதனால் உணவு குளிராக இருக்கும் என்று பணிவாகக் கூறப்பட்டது. அதில் ஒருவர் அதனை கவனிக்கவில்லை. நித்திரையாகிப் போய்விட்டார். அதனால் தனக்கு உணவு குளிராகத்தரப்பட்டது எனக் கோபப்பட்டார். ஆனால் அருகில் இருந்தவர்கள் கூறியதைக் கேட்டு அனைவருமே குளிராகத் தான் சாப்பிட்டார்கள் என்பதை அறிந்ததும் கோபங்குறைந்து அதனை ஏற்றுக் கொண்டார். அதே போலத்தான் அனைவருக்கும் இருக்கிற பிரச்சனை தான் நமக்கும் இருக்கிறது என்கின்ற போது அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இறைவன் சொல்கிறார். என்னை வெறுத்தாலென்ன, பேசினாலென்ன, குறைகூறினாலென்ன நான் உங்களைக் கைவிடப்போகிறதில்லை. தாய் குழந்தையை அரவணைப்போடு வைத்திருப்பது போல இறைவனும் எங்களை அரவணைப்போடு வைத்திருக்கத்தான் நான் வந்திருக்கிறேன். என்று, இவ்வளவு அன்பாகக் கூறி எங்களை சரியான பாதைக்கு வழிகாட்டத்தான் நான் வந்திருக்கிறேன். அப்படி வழிகாட்டுகின்ற அவதாரத்தை நம்ப இயலாது என்றால் யாரைத்தான் நம்புகிறது.

நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வதற்கு என்று காலம் தரப்பட்டிருக்கிறது. இறைவன் மேலே நின்று எல்லாக் காலத்தையும் கடந்து நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் சிந்திக்கிறோம். எங்களிற்கும் தான் கடமை இருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் நாங்கள் தான் பொறுப்பு என்று உலகில் உள்ள பொருட்களைப் பற்றி படித்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் சுவாமி சொல்கிறார் உங்களுடைய அனைத்து செயல்களிற்கும் நானே பொறுப்பு என்று. எங்களுடைய அனைத்தையுமே அவரே பார்த்துக் கொண்டிருக்கிறார். எங்களுக்குரிய கடமைகளை இறுக்கமாக நாங்களே வழிவகுத்து வைத்திருக்கிறோமே அல்லாமல் இறைவனால் வழி வகுத்து தரவில்லை. சுவாமியுடன் சேரவேண்டிய நேரம் வரும் போதும் கடமையைப் பெரிதாக நினைத்து இறைவனைக் கூட மறந்து விடுகிறோம். ஏன் என்றால் வாழ்ந்து பழகிய பழக்கம் எங்களை விடுகிறதில்லை. பிறப்பு இறப்பு பற்றி எதுவும் தெரியாது. முக்காலத்திற்கும்

பொறுப்பாக இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றையும் கடந்த நிலையில் தான் அவர் இருக்கிறார். ஆனால் நாங்கள் கடந்த நிலையில் இருப்பதாகக் கருதி எதிர்காலத்தையும் இறந்த காலத்தையும் நினைத்து தேவை யில்லாமல் கவலைப்பட்டுக் கொண்டு வாழ்கிறோம். அதற்காகத் தான் சுவாமி சொல்கிறார் நிகழ்காலத்தில் நின்று கொண்டு கடமையைச் செய்யுங்கள் என்று. நிகழ்காலத்தை எப்படி வழி நடத்துவது என்று மட்டும் சிந்தியுங்கள் என்று கூறுகிறார். நிகழ்காலத்தை சரியாகப் பயன்படுத்தாது விடுவதனால் தான் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டி வருகிறது. நிதானமாக நடக்க வேண்டிய பொறுப்பு எங்களுடைய கையிலே இருக் கிறது. பிழையாகக் காலத்தைக் கழித்து விட்டு ஏற்கிறதிற்கும் எங்களிற்குத் தைரியம் இல்லை. ஆன்மாவிற்கு இடத்தை கொடுத்து விட்டு பார்க்கின்ற போது உண்மையான இயல்பு மாத்திரம் தான் தெரியும். நிறைய அழுக்குகள் இருந்தாலும் எங்களுடைய கண்ணோட்டம் நல்லதொரு நறுமணத்தைத் தேடிப்போய்க் கொண்டிருந்தால் அதைச் சூழ உள்ளவை எவையும் எங்களிற்குத் தெரியாது. எங்களுடைய உள்ளத்தின் இயல்புதான் எங்களையும் உயர்ந்த இடத்தைநோக்கி போகிறதிற்கு வழிப்படுத்திக் கொண்டிருக்கும். அதற்கான பயிற்சியும் சாதனையும் செய்து கொண்டிருக்கின்ற தனால் தான் எங்களையும் உயர்த்திக் கொண்டே இருக்கலாம். பிரச்சனையையும் சந்தோஷமாக ஏற்கக்கூடியதாக இறைவனை கருணையோடு பார்த்து இப்படியெல்லாம் வழிப்படுத்துகிறாரே என்று தான் பார்க்க வரும்.

சில நடைமுறைகளை இயல்பாகப் பின்பற்றிக் கொண்டு வருகின்றோம். சுவாமி சொல்கின்றார் இவை பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்று. நடைமுறைகளை மாற்றி அமைக்கின்றபோது எதனை ஏற்கிறது யாரை நம்புகிறது பெற்றோருடைய வழியை நம்புகிறதா எல்லாவற்றிற்கும் மேலான இறைவன் காட்டுகின்ற வழியை நம்புகிறதா நாங்கள் நடைமுறையான தொடக்கு களைக் கருத்தில் கொண்டு இறைவனை நினைக்கிறதிற்கு இடம் கொடுக்காமல் வாழ்கிறோம். சுவாமி சொல்கிறார். பரிசுத்தமாக தூய்மையான மனத்துடன் எது செய்யப்படுகிறதோ அவை எல்லாவற்றையும் நான் ஏற்கிறேன் என்று கூறுகிறார். நாங்கள் செய்கின்ற செயலை விமர்சிக்கின்றபோது மனதிற்கு இடத்தை கொடுக்கிறதனால் எங்களிடம் மாற்றத்தை விரும்பினாலும் மற்றவர்களிற்கும் மனதிலே இடத்தை கொடுத்து விடுகிறோம். விமர்சனத்திற்கு ஆளாகுவோம் என்று நினைத்தால் இந்த வழியிலே வரஇயலாது. இந்த வழியை உறுதியாக பிடிக்க இயலாது. சத்தியத்தை அனுபவிக்க இயலாது. நல்லதிற்கும் விமர்சனம் தவறாக நடந்தாலும் விமர்சனம் இருக்கத்தான் செய்யும். ஆனந்தத்தோடு இருந்தாலும் குறையிருந்தால் விமர்சிக்கப் படத்தான் வேண்டும் ஏன் என்றால் உயர்வான பாதைக்கு செல்வதற்குத்தான் நாங்கள் விமர்சனத்தைப் பார்த்து வேற்றுமையாகப் பார்த்தால் அது எங்களிற் குள்ளே உள்ள தவறான செயலாகத்தான் இருக்கும். சத்திய பாதைக்கு போகிறதற்கு எத்தகைய விமர்சனத்தையும் ஏற்கத் தயாராக இருக்கவேண்டும்.

வாழ்ந்த பழக்கமும் வாழ்க்கையும் உலகத்திலே சொல்லப்படுகிறதே ஒழிய இறைவன் காட்டித்தருகின்ற வழியை ஏற்றுக்கொள்வதற்கு முன்வந்து உறுதி யாக நிற்கிறதில்லை. ஏன் என்றால் நிறையப்பேர் உள்ள பக்கத்தில் தான் பலம் பஞ்சபாண்டவர்களைப் போல கொஞ்சப்பேர் உள்ள பக்கத்தில் பலமில்லை. ஆனால்

இறைவன் அங்கே தான் இருக்கிறார் என்று அவர்களிற்கு தெரிவதில்லை. எங்களால் இயலாது என்கின்றவரையும் எங்களிற்கு உலகத்திலே தான் நம்பிக்கை இருக்கும். இறுதியாகத்தான் கடவுளிடம் நம்பிக்கை வரும்.

சுவாமி சொல்கிறார் கல்வி கற்கிறது என்றால் உண்மையானவற்றைப் பிரித் தறிந்து கற்கவேண்டும். தேவையற்றவற்றை விட்டு மெஞ்ஞானத்தைக் கற்கிறது தான், கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். சாதாரண உலகியல் கல்வி புகழுக்கும், பதவிக்கும் பெருமைக்கும் தான் கற்கப்படு கிறது. அறிவுக்கண்ணைத் திறப்பதற் குத்தான் கல்வி கற்கிறோம். நற்குண நல்லியல்பு களுடையவர்களாக வாழ்கின்ற எவர்களுமே நல்லியல்புகளை அறிந்தவ ர்கள்தானே. அதுவே அவர்கள் கற்ற கல்விக்குப் போதுமானதாகும்.

பஞ்சபாண்டவர்களிற்குக் கூட துன்பம் வரவில்லை என்று இல்லை. அவர்களும் துன்பத்தை அனுபவித்தவர்கள் தானே என்று பார்க்கிறதில்லை. ஒவ்வொரு இடத்தையும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு போகவேண்டும். தர்மர் சூதாடு கின்றபோது கிருஷ்ணர் வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டு ஆடுகின்றார். ஏன் என்றால் சூதாட்டத்தில் வைத்த விருப்பம் தான் காரணம். பின்விளைவாக பல துன்பங்களை அனுபவித்தாலும் இறைவன் அவர்களைக் கைவிடவில்லை. அவர்களிட முள்ள நல்லியல்புகளை அறிந்த படியினால் போராட்டத்திலும் அவர்களோடு கூட நின்று அவர்களை வழிப்படுத்தி அவர்களிற்கு ஐக்கியமாகவே வழியைக் காட்டிக்கொண்டு இருந்தார். பஞ்சபாண்டவர்கள் என்றாலும் ஏற்கின்ற பக்குவம் யாரிடம் உள்ளது என அறிந்து தான் உபதேசத்தை அர்ச்சுனனுக்கு செய்கிறார். எல்லாவற்றையும் அறிந்து செயல்படுத்துகின்ற இயல்பு இறைவனுக்கே உரியது.

கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு கூறுகி றார். உனக்கு வந்த பிறப்புக்களும் எனக்கு வந்த பிறப்புக்களும் எண்ணற்றவை. ஆனால் அவை எல்லாவற்றையும் நான் அறிகிறேன். நீ அறியவில்லை. அதே போலத்தான் அறியாத பிறப்பெல்லாம் பிறந்து வந்திருக்கிறோம். இறைவன் அறிவிக்காது அறியும் இயல்புடையவர். நாம் அறிவித்தால் அறியும் இயல்புடைய வர்கள். உலகத்தில் கொஞ்சம் அறிந்தா லும் அறிந்தவர்கள் போலக் காட்டிக் கொள்ளலாம். இறைவனுக்கு முன் நாம் ஒன்றுமே அறியாதவர்கள் தான். சுவாமி சொல்கின்றார். என்னிடம் உள்ள ஐஸ்வரியம் ஆனந்தம் ஒன்றுதான். ஆனால் உலகில் புகழ், பணம், பதவி தான் ஐஸ்வரியம் என்று எங்களுடைய அறிவிற்கு எட்டிய வரையில் அவைதான் ஐஸ்வரியம் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். நித்தியமான ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால் இறப்பு, பிறப்பு பற்றி எதுவும் தெரியாது. நித்தியமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் போது இறப்பு வந்தாலும் நித்தியமான ஒன்றோடு சேர்கின்ற போது எதுவுமே தெரியாது. ஏன் என்றால் இறைவனோடு ஒன்றாக இருந்தால் ஒன்று தான்.

இங்கு ஆன்மவழியை பின்பற்று வதற்கான பயிற்சி அளிக்கப்படுகின்றது என்றால் முன்னேற்றத்தை காணவேண்டும் என்றால் முயற்சியும் தேவை. பயிற்சி மட்டும் எடுத்துக் கொண்டே இருந்தால் முன்னேற்றம் இல்லை. எங்களையே நாங்கள் கேட்டு வழிப்படுத்திக் கொண்டு போக வேண்டும். நாங்கள் எல்லையை அடைகின்ற போது முயற்சி செய்தமா பயிற்சி செய்தமா என்பது தெரியும். எனவே

நாங்கள் எல்லையைப் போய் அடைந்த பின்னர் கேட்டு பிரயோசனம் இல்லை. இப்பவே எங்களைக் கேட்டு ஆமையைப் போல புலன்களைக் கட்டுப்படுத்தி நிதானமாகப் போகிறோமா முயலைப்போல வேகமாகப் போகிறோமா என்று கேட்டு வழி நடக்கவேண்டும். வழிகாட்டினாலும் பின்பற்ற வேண்டிய பொறுப்பு நம்முடைய கையில் தான் இருக்கு. பூமி எங்களை எல்லாம் பொறுமையாகச் சுமந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாங்கள் பொறுமையாக இருந்து இறைவனுடைய அம்சம்தான் என்று ஏற்க முடியாமல் இருக்கிறது என்றால் எங்களிடமுள்ள அறியாமை தான் காரணம்.

உலகம் அனைத்திலும் பெரியது பக்தன் தான் என்று நாரதர் கூறுகிறார். இறைவன் மீது வைக்கிற அன்பை விட மேலானது ஒன்றுமில்லை. நாங்களும் உண்மையான அன்பைத்தேடிப் போகின்ற பயணம் தான் எங்களிற்கு உயர்ந்தது. நாங்கள் வைக்க வேண்டிய இலட்சியம் என்னவென்றால் ஒவ்வொரு காரியத்திலும் ஆனந்தத்தைக் கண்டு அனுபவிக்க வேண்டும்.

எங்களிடம் தியாக மனப்பான்மையை வளர்க்க வேண்டும். தீய இயல்புகளை கண்டு அவற்றை விடுவதற்கு முயற்சி செய்வது தான் உயர்ந்த தியாகம். பொருட்களால் செய்கின்ற தியாகத்தை விட உயர்ந்த தியாகம் எங்களிடம் நல்லியல்பை வளர்க்கிறது.

நாங்கள் தங்கமாக மாறவேண்டும் என்றால் தங்கத்தை தூய்மையாக்கும் வரை எரிக்கப்படுகின்றது. அது போலத்தான் நாங்களும் எந்த இடர்பாடு வந்தாலும் உறுதியாக நின்று அதிலிருந்து வெல்வ தற்கான முயற்சியினை எடுக்க வேண்டும்.

உலகத்திலும் போராட்டம் நிகழ்கின் றது. எங்களிற்குள்ளும் போராட்டம் நிகழ்கின்றது. நிலையற்ற ஒன்றைப் பெறுவதற்காக நடக்கிறது வெளிப்போராட்டம். எங்களிற்குள்ளே ஆன்மாவிற்கும் மனதிற்கும் இடையிலே தான் போராட்டம் நிகழ்கிறது. மனதிற்கு கொடுத்துப் போராடினால் போராடிக்கொண்டே தான் இருக்க வேண்டும். தோற்றத்தை விட்ட இடத்தில் நின்று கொண்டு ஆன்மாவிற்காகப் போராடினால் உண் மையான வழி தான் காட்டப்படும். உலகிலே சமாதானம் நிலவுகிறது. ஆனால் எங்களிற்கு அல்ல. நாங்கள் மனமா? ஆன்மாவா? என்று தீர்மானிக்கும் வரையும் போராடிக்கொண்டு இருக்க வேண்டும். உயர்ந்த போராட்டம் ஆன்மபோராட்டம். ஆன்மாவிற்கு கொடுக்காத வரைக்கும் சமாதானம் எங்களிற்கு வராது. மற்றவர் கூறுகின்ற விமர்சனம் காதில் கேட்கும். ஆனால் ஆன்மா கூறுகின்ற விமர்சனம் எங்களிற்கு கேட்கிறதே யில்லை. உறுதிப்பாட்டை வளர்த்து கொண்டு தைரியமாக இறைவனிடம் சரணாகதி என்ற நிலையிலே இருக்கவேண்டும். ஆன்மா உறுதியான முடிவினைத் தந்தாலும் மனம் அதனை ஏற்றுக் கொள்ளவிடாது குழம்பி கொண்டே இருக்கும். ஆன்மா காட்டுகின்ற வழி சரியானதைத்தான் சொல்லும். எனவே ஆன்மாவை கேட்டுவாழ முயற்சி செய்யலாம். ஆன்மாவிற்கும் மனதிற்கும் இடத்தினை கொடுக்கின்றதனால் தான் குழப்பத்திற்கு இடத்தைக் கொடுக்கிறோம். உலகம் மனத்தின் வழியிலும் உயர்ந்தவர்கள் ஆன்ம வழியில் போகின்றபோது நாங்கள் இரண்டினுடைய செயற்பாட்டிற்கும் இடத்தை கொடுக்கின்றதனால் குழப்பத்தை நாங்களே எங்களிற்கு ஏற்படுத்திக் கொள்கிறோம். நாங்கள் மாறுவேடம் போடத்தயாராக இருக்கிறோம். உண்மையானவர்களாக வாழப்பழக வேண்டும்.

சுந்தரர் கூட இறைவனிடம் உலக பந்த பாசத்தில் நின்று விடுவிக்கச் சொல்லிக் கேட்டுத்தான் வந்தவர். ஆனால் இறைவன் வந்து தடுத்தாட்கொண்ட போது இறைவன் கூடப்பித்தனாகத்தான் தெரிந்தது. இறைவ னோடு வாழ்ந்து தொண்டு செய்தவருக்கே அறிவித்தால் அறியும் இயல்பிலிருந்து அறிய முடியவில்லை. நாங்களும் அறிவித் தால் அறியும் இயல்பிலா அறிவித்தாலும் அறியாத இயல்பிலா இருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். மற்றதெல்லாம் மூடியிருந்தால் அறிவித்தாலும் அறியாத இயல்பாகத்தான் இருக்கும். அறிவித்தால் அறியும் இயல்பில் நின்று நல்லவற்றை ஏற்கவும் கூடாதவற்றை விடவும் திடமான சித்தம் வேண்டும். இவர்களை நம்பி விட்டமே ஏற்றமே என்று குழப்பம் இருக்கக் கூடாது. மற்றவர்களை நம்பி விடவும் தேவை இல்லை. நாங்கள் எங்களை நம்பி விடவும் ஏற்கவும் தயாராக இருக்க வேண்டும். இதைவிட உயர்ந்த சத்தியம் வேறு எதுவும் இல்லை. காட்டப்படுகிற வழி சரி என்று ஏற்றுக்கொண்டு எதனையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். உறுதியில்லாமல் ஆன்ம காரியம் ஆற்ற இயலாது. எங்கு போனாலும் அசத்தியம் கலந்த சத்தியம் தான் இருக்கிறது. ஆனால் அதனை கண்டு கொள்கிற வகையில் எங்களுடைய அறிவிற்கு எட்டிய வரையில் சத்தியமாகப் பார்த்துக் கொண்டு போகி றோம். ஆன்மாவிற்கு இடத்தை கொடுத்து விட்டு காரியத்தை செய்கின்ற போது முழுமையும் நிறைவாகத்தான் தெரிகிறது. ஒரு குறையையுமே காணமுடிகிறதில்லை. தொடக்கம் முடிவு இல்லாத இடம் தான் இது. நித்தியமானதிற்கு தொடக்கமும் முடிவும் இல்லை.

இறைவன் எல்லாவற்றையும் இயக் கிக்கொண்டே இருக்கிறார். இறைவனுடைய இயல்பில் எது விதமான மாற்றமும் இல்லாமல் நிதானமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். நாங்கள் வெளியில் தெரிகின்ற மாற்றத்தை உண்மை என்று எங்களிற்குள் வளர்க்கின்ற நல்லியல் புகளை மாற்றங்களாகக் கருதுவதில்லை. வெளியில் தெரிகின்ற மாற்றங்கள் எல்லாம் உண்மையானவை இல்லை. எம்முள் ஏற்படுத்தி வளர்க்கின்ற நல்லியல்புகள் தான் உண்மையான மாற்றம். அதனை இறைவன் மட்டும் அறிந்தால் போதும் ஏன்என்றால் ஏற்கப்போகிறது அவர் தானே. உலகில் உள்ளவர்கள் ஏற்பவர்களை போலத்தான் இருக்குமே அல்லாமல் உண்மையாக ஏற்கப்போகிறவர்கள் அல்ல. மாயைதான் எங்களை ஏற்குமாப் போல காட்டுகிறது.

தேவையற்றசுமைகளை மற்றவர் களுக்காக சுமக்கக்கூடாது. உண்மையாக சுமை என்பதே இல்லை. எனவே அதனை விட்டு சந்தோஷமாக சுவாமியோடு காலத்தைக் கழிக்கலாம்.

உயர்ந்த இலட்சியத்தை அடையும் வரையும் எங்களைக் கேட்டு வழிப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். சுவாமி எனக்கு எதுவுமே தெரியாது என்று சரணாகதியிலே இருக்க வேண்டியது தான்.

இறைவன் தந்த பாத்திரத்தை பரிசுத்தமாக கொடுக்க வேண்டிய பொறுப்பு மட்டும் எங்களிடம் இருக்கின்றது.

சுவாமி சொல்கிறார் நீயார் என்று பார். தோற்றமில்லாத நான் தான் உண்மையான நான் உலகு பெயருக்கும் தோற்றத்திற்கும் பொருந்தி நிற்கிறது. இப் பரிசுத்தமான நித்தியமான அந்த நான் தான் வழிப்படுத்துவதால் எப்போதும் பரிசுத்த மாகவே இருக்கிறது.

செல்வி ப. சிவரூபி

சங்கானை.

# திரு.ஞானசேகரம் ஐயா அவர்களின் ஆன்மீக போதனை

**"தீதும் நன்றும் பிறர்தர வாராது"**

சாயிபாபா பரப்பிரம்மம். சர்வவியாபியின் திருவாயிலிருந்து மலர்ந்த வேதாந்தம் நிறைந்த கருத்துக்கள்.

1. மனிதப்பிறவி மிக உயர்வானது
2. குரு தத்துவம்
3. மாயை
4. ஐம்பூதங்கள், புலன்களினால் மனத்தை சஞ்சலத்தில் ஆழ்த்துகிறது.
5. சத்சங்கம்
6. குரு என்றால் யார்?

மாலை மங்கிய நேரத்தில் கீழே ஒரு கயிறு இருப்பதைப் பார்க்கிறீர்கள். அது வெறும் கயிறாக இருந்த போதும் மங்கலான ஒளி காரணமாக நீங்கள் அதைப் பாம்பு எனக் கருதக்கூடும். ஆனால் அதன் மீதுஒளி பாய்ச்சி பார்க்கும் பொழுது அது பாம்பல்ல, கயிறு தான் என்று உங்களுக்கு உறுதியாகிவிடும். உடனடியாக உங்களிடமிருந்து பயம் மறைந்து விடுகின்றது.

இதுவே மாயை. கடவுள், சத்தியம், உலகம், நித்தியம். சத்தியத்தில் அனுபவப் படும் பொழுது உலகம் உலகச் செயல் எல்லாம் பொய் (மாறக் கூடியது) என அறிவார்கள்.

**மனிதப் பிறவி மிக உயர்வானது**

மனிதப் பிறவி ஓர் உயர்ந்த பிறப்பு. ஏனெனில் ஒரு வாழ் நாள் அளிக்கப்பட்டுள்ளது. அந்த வாழ்நாளை பயனுள்ள தாக்கி இறைவனை அடைவதற்கு பயன் படுத்துவது தான் தர்மம்.

புருசார்த்தங்கள் என்றால் தர்ம, அர்த்த, காம, மோட்சமாகும். தர்மம் என்றால் நாங்கள் இறைவனை அடைவது தான். அதுவே விடுதலை இறைவன் அடி சேர்வது, அல்லது மோட்சமென பலவாறு அழைக் கப்படுகின்றது.

அர்த்தம் என்றால் செல்வம். உலகிலே பெருஞ்செல்வம் இறைவன். உலகிற்கு எல்லாம் அதிபதி இறைவன். அதைத்தான் நாங்கள் தேடவேண்டியது. அதுதான் ஆத்மா. இதுவே நாங்கள். பொய்மை விலகினால் நாங்கள் அதுவே. காமம், ஆசை எதற்கு? ஆசைப்பட வேண்டும் இறைவனை நாம் தேடுவதற்கு. அதுதான் SAI. S-See, A-Always, I-In. எப்பொழுதும் உள்நோக்கிப் பார். அதுவே ஆன்மா, சத்தியம், பிரம்மம் இப்படி பல சொற்கள் உள்ளன. தெய்வீகத்திற்கு ஆசைப்பட்டால் நாம் அதுவாகி விடுவோம்.

**"யத்பாவம் தத்பவதி**

எதை நினைக்கிறாயோ அதுவாகிறாய்"

மோட்சம் - விடுதலை. இதன் வழி ஒழுகும் பொழுது நாம் ஆத்மா ஆகிறோம்.

**குரு தத்துவம்**

குரு என்பவர் யார்? அறியாமையை நீக்குபவர். குரு கிடைப்பது அவர் அவர்களின் விதிப்படியாகும்.

பாவங்கள் குறைந்து எவன் இறைவனை அடைய வேண்டிய நேரம் வருகின்றதோ அப்போது இறைவன் குருவை அனுப்பு கின்றார்.

"குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர்தேவோ மஹேஸ்வர:
குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நம;

எங்களுக்கு ஞான உபதேசத்தை உபதேசித்து, தெய்வீகத்தை காத்து, அறியாமையை அழித்து எம்மை எமக்குள் இருக்கும் தெய்வீகத்திடம் அறியாமை அகன்றதும் நாங்கள் ஆத்மா ஆகிறோம்.

இப்படிப்பட்ட பாதையை நாம் தேட வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் உண்மை எது பொய் எது என்று அறியும் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

எமது முயற்சிதான் விதி. நாமே நமது விதியை அமைக்கின்றோம்.

"தீதும் நன்றும் பிறர்தர வாராது"

நாமே நமக்கு நண்பனும், பகைவனும்.

எண்ணம், சொல், செயல் இவைகள் தான் விதியை அமைக்கின்றது. நாம் ஒவ்வொரு ஷணமும் நிகழ்காலத்தில் இருந்து நான் என்ற முனைப்பு இல்லாது எனது என்ற மமகாரம் இல்லாது இறைவனுடைய செயலாகச் செய்ய வேண்டும்.

*உ-ம்*

ஒருவன் புண்ணியம் செய்யவேண்டு மென்று ஓர் கிணறு வெட்டினான். ஒருவர் அதற்குள் தவறி விழுந்து இறந்தால் அந்தப் பாவம் கிணறு வெட்டியவரை வந்து அடையுமென்று சுவாமி கூறுகின்றார். ஏனெனில், இவர் நான் செய்கின்றேன். எனக்குப் பலன் வரவேண்டும் என்று செய்யும் பொழுது பாவமும், புண்ணியமும் சேர்ந்து வரும்.

இறைவன் செயல் என்று கிணற்றை வெட்டினால் எல்லாம் இறைவன் செயல். நான், எனது இல்லாத இடத்தில் பாவமும் இல்லை, புண்ணியமும் இல்லை.

எந்தச் செயலையும் பேர், புகழ், பலன் கருதாது செய்யவேண்டும். அதுவே விடுதலைக்கு வித்து. இதனால் நாங்கள் எங்கள் சொந்தத் தன்மையாகிய ஆத்ம தரிசனம் பெறுகின்றோம்.

**மாயை**

உலகம் மாயை. பொருட்கள் மாயை. உற்றார், உறவினர் மாயை.

உலகம் எங்களை இரண்டாகப் பார்க்கவைத்து இன்ப துன்பங்களை ஏற்படுத்துகின்றது. பொருட்கள் எங்களைக் கவர்ந்து எங்களை இறைவனிடமிருந்து விலக்கி, தம்வசப்படுத்தி எங்களை பயம், கவலை, துன்பத்திற்கு உள்ளாக்கின்றது. உற்றார், உறவினரின் எண்ணங்களால் நாம் ஆட்கொள்ளப்பட்டு எங்கள் மனம் அவர்களை வளர்ப்பது, படிப்பிப்பது, பாராமரிப்பது போன்ற எண்ணங்களை உருவாக்கி அதிலிருந்து விடுபடமுடியாது

நாங்கள் கடவுளிடம் இருந்து விடுபட்டு அறியாமை என்ற மாயையில் சிக்குப்பட்டு முடியாது தவிக்கின்றோம்.

உ-ம்

ஒரு முறை நாரதர் பயணஞ்செய்து கொண்டிருக்கும் பொழுது வழியில் ஒரு சாக்கடை நீரில் ஒரு பன்றியின் குடும் பத்தைக் கண்டார். அவர் ஞானதிருஷ்டி மூலம் இந்திரன் சாபத்தினால் பன்றியாக இருக்கிறார் என்று அறிந்து கொண்டார்.

அவர் இந்திரனில் கருணை கொண்டு எனது வலிமையால் உனக்கு பழைய இந்திரப் பதவியைத் தருகிறேன் என்று கூறினார்.

பன்றியாக இருக்கும் இந்திரனுக்கு இந்த வார்த்தைகளை செவிமடுத்ததும் மிகவும் கோபம் ஏற்பட்டது. இந்திரனான பன்றி கூறியதாவது :-

"நாங்கள் இந்த சாக்கடை நீரிலிருந்து மலத்தை உண்டு இவ்வளவு ஆனந்தத்தை அனுபவிப்பது உமக்குப் பொறாமையாக இருக்கிறதா" என்று பன்றி கூறி எங்களின் ஆனந்தத்தைக் குழப்பாது உம்முடைய வழியே செல்லும்படி கூறியது.

மாயை மிகவும் சக்தி வாய்ந்தது. அதை வெல்வதற்கு ஞானத்தைப் பெற்று அதை எமது அனுபவம் ஆக்கினால் மட்டுமே மாயையிலிருந்து விடுபடலாம்.

**ஐம்பூதங்கள் புலன்களினால் மனதை கஷ்டத்தில் ஆழ்த்துகின்றது.**

மனதை ஆட்படுத்தி கஷ்டத்தில் ஆழ்த்து கின்ற இப்பொய்மைக்கு அடிப்படைக் காரணமாகவிருப்பது புலன்களே.

ஐம்பூதங்கள் ஒவ்வொன்றும் ஐம்புலன் களில் ஒன்றைக் கவர்ந்து இழுத்து மனதினில் பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை உண்டு.

**ஆகாசம் (ஒலி)**

காதினூடாக ஒலியைக்கேட்டு மனதை கவர்ந்து இழுக்கின்றது.

**காற்று (ஸ்பரிசம்)**

தோலினூடாக உணர்வு மூலம் மனதைக் கவர்ந்து இழுக்கின்றது.

**தீ (ரூபம்)**

கண்ணினூடாகப் பார்த்து மனதைக் கவர்ந்து இழுக்கின்றது.

**நீர் (சுவை)**

நாவினூடாக சுவையினால் மனதைக் கவர்ந்து இழுக்கிறது.

**பூமி (மணம்)**

மூக்கினூடாக மணம் மூலம் மனதைக் கவர்ந்து இழுக்கிறது.

மனம் ஐந்து புலன்கள் மூலம் கவர்ந்து இழுத்து உலக சுகதுக்கங்களை அனுப விக்கச் செய்கின்றது. இந்த உலக அனுபவங்கள் தான் எங்களை உலகத்தில் ஆழ்த்துகின்றது. இதனால் பிறப்பு, இறப்பு என்ற விளைவு ஏற்படுகின்றது.

உலகம் பஞ்சபூதங்களின் ஆதாரம் என்று அறிவதே மனம். மனதிலிருந்து வெளிப்படுவது (புத்தி) மதி. மதியிலிருந்து வெளிப்படுவது மதம் (சமயம்) மதம் என்றால் ஆன்மீகம், கட்டுப்பாடு, ஒழுக்கம், அர்ப்பணம் ஆகும். இவற்றின் வழி ஒழுகினால் விடுதலை அல்லது மோட்சம் அடைவதற்கு வழிவகுக்கின்றது.

**சத்சங்கம்**

சத்சங்கம் என்றால் ஞானசேகரம் ஐயா கூறுவார் சத்தியத்துடன் இணைந்திருப்ப தென்று. சத்தியம் என்றால் இறைவனுடன் இணைந்திருப்பது. உள்ளது ஒன்றானால் இரண்டாவது ஒன்றுமில்லை.

இரண்டு என்னும் போது உலகம் வெளிநோக்கி பிறப்பு, இறப்பிற்கு வழிவகுக் கின்றது.

இருப்பது ஒன்று அதை உள்நோக்கி விசாரித்து அறிய வேண்டும். எல்லாப் பொருட்களும் ஆத்மாவினால் இயக்கப் படுகின்றது. அதுவே எல்லாவற்றிலும் ஊடுருவி செயற்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்தவர் ஆகிறாரோ அதுவே சத்யம், ஆத்மா. இந்த உண்மையை அறிந்தால் பிறப்பு, இறப்பு, இல்லாத நித்திய வாழ்வு என்ற சுதந்திரம் பெற்றுவிடலாம்.

ஐயா இதற்கு உதாரணம் கடல் அலை, கயிறும் பாம்பும், என்பவற்றை அடிக்கடி சொல்லி விளங்கப்படுத்துவார்.

நல்லதைச் செய்ய வேண்டும் என்பதற்கு உதாரணம் - கருட புராணத்தில் வரும் பெண், தர்மம் கொடுக்கும் பொழுது கையை சுத்தஞ் செய்யாமல் எருக் கையுடன் சாதம் கொடுத்த கதை என்ன விளைவு வரும் என்பதற்கு உதாரணம்.

ஆசைக்கு ஓர் ஏழைத் தொழிலாளி மணிக்கூடு வேண்டிய கதை.

எண்ணம் தான் துன்பத்திற்கு காரணம் என்பதற்கு இரு சந்நியாசிகள் ஆற்றைக் கடக்கும் பொழுது ஒரு பெண்ணை தோளில் சுமந்து அக்கரையில் விட்ட உதாரணம். எண்ணம் தான் எல்லாவற்றையும் காவு கின்றது.

எல்லாம் இறைவன் செயல் என்று கருதுவது ஞானம். எல்லாம் எனது செயல் என்று கருதுவது அறியாமை..

ஐயா அடிக்கடி யோகசுவாமியின் போதனைகளை வலியுறுத்திக் கூறுவார்.

"ஒரு பொல்லாப்புமில்லை"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாமறியோம்"
"முழுதும் உண்மை"

மற்றும் அடிக்கடி யேசுகிறிஸ்துநாதர் கூறிய "Judge Not" என்பதையும் கூறிக்கொள்வார்.

உலகில் நடப்பவை எல்லாம் இறைவன் காரியம் என்றால் எப்படித் தீர்ப்புக் கூறமுடியும்.

ஒவ்வொருவரும் அவரவருக்கு அமைக் கப்பட்ட வேலை, கடமை இவைகளை இறைவனுடைய பிரசாதமாக எடுத்து வாழ்வது தான் விடுதலை.

**பாபாவின் மூன்று மகா மந்திரம்**

I. கடவுளிடம் அன்பு
II. பாவத்திற்கு அஞ்சு
III. சமூகத்தில் தர்மமாய் நட

ஐயா அடிக்கடி இவற்றைக் கூறுவார். நாங்கள் இந்த வழியில் நான் என்ற அகங்காரத்தை அழிப்பதற்கு எங்களை அர்ப்பணஞ் செய்தல் வேண்டும்.

யார் எங்களை இயக்குவிக்கின்றார். கைகள் எடுப்பது யாராலே? கால்கள்

நடப்பது யாராலே? காற்றடிப்பது யாராலே? சூரியன் வருவது யாராலே? இவைகள் எல்லாம் இறைவன் செயல்கள். ஏனையவை எங்கள் செயலா? என எங்களைச் கேட்க வேண்டும். எங்களை இப்படி விசாரித்தால் உள்நோக்கு வந்து விடும்.

உள்நோக்கு என்றால் என்ன? எல்லாம் இறைவன் செயல் என்று செயல்படுவது.

வெளிநோக்கென்பது உலகத்தில் பொருள் வழி, மக்கள் வழி நடப்பது. இது எங்களுக்குத் தளையை ஏற்படுத்தி பந்தத்திற்குள் மாட்டி பிறப்பு, இறப்பிற்கு வழி வகுக்கின்றது.

ஏன் நாங்கள் இறைவனை நாட முடியாது இருக்கின்றது. இது பழைய ஜென்ம வாசனைகள். இவற்றை அழிக்க வேண்டும். அழித்து இறை நாட்டத்தை ஊட்ட வேண்டும். நாங்கள் தான் எங்கள் விதியை அமைப்பது.

பரீட்ஷித்து மாதிரி இறப்பு ஏழு நாட்கள் என்று அறிந்ததும் தன்னைத் தயார் படுத்துவது போல் எங்களுக்கும் இறப்பு வருவது நிச்சயம் என்று இறைவனைத் தேட வேண்டும். இதுதான் மனிதப் பிறவியின் உண்மை நோக்கம். இதை உதாசீனம் செய்து துன்பத்தை தேடக்கூடாது. இன்பத்தையும் தேடக்கூடாது. விடுதலையைத் தேட வேண்டும்.

உலக பந்தம், பொருட்கள் எங்களை இறைவனை நினைக்கவிடாது தன்னை நிலைப்படுத்தும். மக்கள் பந்தமும் எங்களை கடவுளிடமிருந்து பிரித்துவிடும். ஆகையால் எப்பொழுதும் அவனைச் சரணடைந்து அவனுடைய செயலென்று எல்லாச் செயல்களையும் செய்ய வேண்டும்.

அளவு கடந்த இன்பம் நமக்குள்ளே உண்டு. அறிந்து செய் சிவதொண்டு. இதன் விளக்கம், முதல் எங்களை அறிய வேண்டும். அதை அறிந்தால் எல்லாம் அறிந்ததற்குச் சரி. அதன்பின் மற்றவர்களையும் தன்னை அறியும் படி செய்ய வேண்டும். அது தான் ஆத்ம சேவை. இதைத்தான் ஐயா எங்களுக்கு வலியுறுத்தி கூறிய சேவை.

குழந்தை பிறந்த உடனே அது அழுகின்றது. வாழ்க்கையில் பெற்ற அனுபவம் மூலம் மனிதன் சிரிக்க வேண்டும்.

குழந்தை தன் உண்மைத் தன்மையை அறியாத படியால் அழுகின்றது. இறக்கும் மனிதன் உண்மைத்தன்மை தெரிந்த படியால் சிரிக்கின்றான்.

மனிதன் தனது வாழ்க்கை என்னும் பணி நிறைவு பெற்றுவிட்டது என்ற உணர்வினால் சந்தோஷமாக இறக்க வேண்டும்.

கோஹம் (அதாவது நான் யார்?) உலகில் பிறக்கும் பொழுது சேர்ந்து வந்த இந்தக் கேள்விக்கு விடைகிடைத்து விட்டது. அவன் அதை தெரிந்து விட்டால் அது தான் (கோஹம்). நானே அவன். அறியாமையில் பிறக்கிறான். ஞானியாக இறக்கிறான். காரண காரியம் என்று ஒரு விதி உண்டு. நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பா விட்டாலும் சரி, நீங்கள் எதிர்பார்த்தாலும் சரி, எதிர்பார்க்காவிட்டாலும் சரி ஒவ்வொரு கர்மத்திற்கும் ஒவ்வொரு பலனுண்டு. ஒரு நல்ல கர்மம் ஒரு நல்ல விளைவைத் தருகின்றது. ஒரு தீய கர்மம் ஒரு தீய விளைவைத் தருகின்றது. இறப்பிற்கு முன் செய்த வினையே பிறப்பு.

நீங்கள் இவற்றின் உண்மையை அறிந்து வாழ்வதே தர்மம். உங்கள் தர்மம்,

நீங்கள் விரும்பி அமைத்த விதி என்பவற்றை இறைவன் வழி நடத்துவார்.

நம்பிக்கை, உறுதி, ஊக்கம் ஆகிய வற்றுடன் கூடிய நல்ல கர்மாக்களே பலனை எதிர்பாராது செயற்படக் கூடியவை.

ஏனெனில் வருங்காலம் உங்கள் கையில். முன் செய்தது இன்று; இனிச் செய்வது நாளை. இதுவே விளைவு.

நீங்கள் காலத்தை, விழிப்புடனிருந்து எண்ணம், சொல், செயல் முதலியவற்றை ஞானத்துடன் ஆற்றுங்கள்.

நாங்கள் சத்தியத்துடன் நின்று நிலை யுள்ளவற்றை பற்ற வேண்டும் என்று அடிக்கடி ஐயா கூறுவார். உலகம், பொருட்கள், உறவினர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு போக வேண்டிய காலம் மிக அண்மையில் உள்ளது. ஆதலால் இறைவனை நாம் இளமையிலேயே பிடித்துக் கொள்ள வேண்டும். ஐயா அடிக்கடி கூறுவார், "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றினை பற்றுக பற்று விடற்கு" என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

நிலையான இறைவனை நினைத்து நிலையற்ற உலகத்தில் நாம் எப்பொழுதும் சம நோக்குடன் நிற்கச் சாதனைகள் செய்ய வேண்டும்.

மனிதன் மூன்று விதமாக நோக்கு கின்றான். (உடல் அதன் செயற்பாடு)

1. உடல் நோக்கு
   1. ஆடை
   2. அணிகலன்
   3. உடலமைப்பு
   4. செயல்படும் விதம்
   5. பேசும் பாணி

2. மனதை மையமாக வைத்து மற்றவர் களை நோக்குதல்

**எண்ணங்கள்**

உணர்வுகள் - மனம் அதன் செயற்பாடு

மதிப்பீடு மற்றவர்களைப் பற்றி. இப்படிப்பட்ட புறநோக்கும் பார்வையை நாங்கள் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

3. ஆத்ம நோக்கு இது உள் நோக்கு (SAI) எங்களைப் பார்ப்பது எல்லாம் இறைவன் செயல். எல்லோரிடமும் ஒரு ஆத்மா உள்ளது என்று பார்த்து, உணர்ந்து அச் செயற்பாட்டுடன் இயங்குவது.

**குடும்ப வாழ்வின் கடமை**

1. சமூகக் கடமை
2. அலுவலகக் கடமை
3. வீட்டுக் கடமை

நாங்கள் சமூகத்தில் பிறந்து, சமூகத்தில் வளர்ந்து, அனுபவித்து, சமூகத்தில் இறப்பதால் சமூகத்திற்ச் சேவை செய்யும்படி இறைவன் சொல்கின்றார்.

**மூன்று வாக்குறுதி**

1. கேளுங்கள் கிடைக்கும்
2. தட்டுங்கள் திறக்கப்படும்
3. தேடுங்கள் கிடைக்கும்

1. நாங்கள் இறைவனிடம் என்ன கேட்கின் றோம்? செல்வம் சுகபோகங்களை. ஆனால் சாந்தியை மட்டும் கேட்பதில்லை. ஆனந்தம் வேண்டும் என்கிறோம். ஆனந்தத்தைக் குழப்பும் காரியங்களைக் கேட்கின்றோம்.

2. இறைவனுடைய கதவைத் தட்டுவதற்கு பதிலாக சாத்தானுடைய கதவைத் தட்டுகி றோம். இதன் விளைவு வெளிநோக்கு.

3. தேடவேண்டியது உலகமல்ல. கடவுளைத் தேடவேண்டும். எங்கே தேட வேண்டும்? எமக்குள்ளே தேடுவதற்குத் தடை தீய குணங்கள்.

1. காமம்
2. குரோதம்
3. லோபம்
4. மதம்
5. மாச்சர்யம்
6. மோகம்

இவற்றை அழித்தால் இறைவனை அங்கு காணலாம்.

**குரு என்றால் யார்?**

குரு என்பவர் அறியாமையைப் போக்குபவர். அப்படி உண்மைக் குரு வந்து வழிநடத்துவதும் எங்கள் விதி.

எங்கள் வாழ்க்கையில் சாயி ஞான சேகரம் ஐயா வந்தார். எங்களை வழிநடத்தினார். தான் சத்தியத்தில் நின்று சத்தியம் என்றால் என்ன என்று எங்களையும் அந்தப் பாதையில் வழி நடத்தி அதன்படி வாழ வழி காட்டினார். நாங்களும் வாழ்ந்தோம். அதன் விளைவாக சத்தியத்தை நாங்களும் அனுபவிக் கின்றோம்.

அவர் எதையும் எங்களிடம் எதிர் பார்க்கவில்லை. ஒன்றே ஒன்றை அவர் எதிர்பார்த்தார். சத்தியத்திற்காக வாழ்ந்து ஆத்மதரிசனத்தை நாங்கள் அனுபவிக்க வேண்டுமென்பதே.

ஞானசேகரம் ஐயா ஆத்ம லட்சியத் திற்காக வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும் என்று துடித்தார். அந்த துடிப்பும், உறுதியும் இப்பொழுது சாயி இல்லத்தில் நடந்து கொண்டி ருக்கின்றது.

மனிதன் அழிந்தாலும் அவனுடைய எண்ணங்கள் அழியாது என்று சாயி சொல்கிறார். அதன்படி சாயி ஞானசேகரம் ஐயாவின் எண்ணம் இன்று எங்களை வழிநடத்தி ஆசீர்வதித்துக் கொண்டிருக் கின்றது.

"பாத நமஸ்காரம் பாப விமோசனம்" தலையில் இருக்கும் அகங்காரத்தை அழித்து இருதயத்திலுள்ள அன்புத் தன்மையை மிளிரச் செய்து மனிதனை தெய்வீகமாக்குகின்றது.

உ-ம்

அசோகச் சக்கரவர்த்தி தன்னுடைய மந்திரி பரிவாரங்களுடன் வீதிவழியாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது வழியில் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த துறவியைக் கண்டு தனது தேரிலிருந்து இறங்கி துறவியின் பாதத்தில் தனது தலையை வைத்து வணங்கினான்.

இதனைக் கண்ணுற்ற அவருடைய மந்திரி மிகவும் வேதனைப்பட்டார். பெரும் மதிப்பிற்குரிய அரசன் ஒரு துறவியின் காலில் வீழ்ந்து வணங்குவதா?

இதை அரசனிடம், நீங்கள் இப்படித் துறவியின் காலில் தலையைவைப்பது உங்கள் மதிப்பை குறைப்பதாக என எண்ணி நான் வேதனைப்படுகிறேன் என மந்திரி கூறினார்.

அரசன் உடன் பதில் கூறாது ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார். ஒரு நாள் அரசன் மந்திரியை அழைத்து ஆட்டுத்தலை, சிங்கத்தலை, மனிதத்தலை மூன்றையுங்கொடுத்து இவற்றை சந்தையில் விற்று வரும்படி அனுப்பினார். மந்திரி சந்தையில் ஆட்டுத் தலையையும்

சிங்கத்தலையையும் விற்றுவிட்டு மனிதத் தலையுடன் வந்தார்.

அரசன் ஏன் மனிதத்தலையை விற்க வில்லையென மந்திரியிடம் கேட்டார். அதற்கு மந்திரி, ஆட்டுத்தலையையும், சிங்கத்தலை யையும் பணம் தந்து மக்கள் வாங்கி னார்கள். ஆனால் மனிதத் தலையை மட்டும் ஒருவரும் வாங்கவில்லையெனக் கூறினார். அரசனோ மந்திரியிடம் மறுபடி ஒருமுறை சந்தைக்குச் சென்று மனிதத் தலையை விரும்புவோர்க்கு இனாமாகக் கொடுத்து விட்டு வரும்படி கூறினார். மந்திரியோ சந்தைக்குச் சென்று மீண்டும் மனிதத் தலையுடன் திரும்பி வந்தார். அரசன் மந்திரியிடம் ஏன் மனிதத் தலையைக் கொடுக்கவில்லையெனக் கேட்டார். மந்திரியோ, இனாமாகவும் மனித்தலையை வாங்குவதற்கு ஆட்க ளில்லை எனக் கூறினார்.

அப்பொழுது அரசன் மந்திரியைப் பார்த்து இந்த மனிதத் தலை உடலில் இருக்கும் வரை தான் பெறுமதி. மதிப்புடையது.

அப்படிப்பட்ட தலையை பெரியவர்கள், மகான்கள், முனிவர்கள், துறவிகளின் பாததரிசனத்தைப் பெற்று அகங்காரத்தை (நான், எனது என்ற தீய தன்மை) அழித்து தெய்வீகமாக்கி ஆத்ம தர்சனத்தை பெறுங்கள் என மந்திரிக்கு அரசன் கூறினான்.

எங்களைப் பார்ப்பது தான் ஆன்மீக நோக்கு. மற்றவர்களைப் பார்ப்பது உலக நோக்கு வெளி நோக்கு. இரண்டையும் ஒன்றாக இணைப்பதே தெய்வீகம். எல்லாவற்றையும் தெய்வீகமாகப் பார்க்க வேண்டும். எல்லாம் கடவுளுடைய செயல். அவர் தான் சூத்திரதாரி.

ஆசையே துன்பத்திற்குக் காரணம். இதை நீக்கினால் துன்பமும் நீங்கும். இது பெரியோர் வாக்கு. இதனையே புத்தரும் கூறினார். மூப்பு, பிணி, சாக்காடு நிறைந்த உடல் இவற்றைப் புரிந்து நிலையான இன்பத்தைத் தேட ஆசைப்பட வேண்டும். அது தான் தர்மம். அதற்காகச் செயற்படும் பொழுது சத்தியமாகின்றது. அங்கே சாந்தி தானாக ஏற்படுகின்றது. இதுவே தெய்வீகம்.

*ஜெய்சாயிராம்*

**ஸ்ரீ சி.நவரட்ணராஜா**



ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாதனை, போதனை, அனுபூதி என்பன ஆத்ம இலட்சியத்திற்கான படிகள் ஆகும்

சாதனை என்றால் என்ன?

சத்சங்கம் என்றால் என்ன?

சத்தியத்தோடு இணைந்திருத்தல் என சுவாமி சொல்கிறார். நான்குவித வழிபாட்டு முறைகள் உள்ளன.

1. சத்யவதி
2. அங்கவதி
3. அன்யவதி
4. நிதானவதி

எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீகத்தை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறைதான் சத்யவதி. அங்கவதி பஞ்ச பூதங்களின் வழிபாட்டைக் குறிக்கின்றது. அன்யவதி தெய்வீகத்தைப் பல வகையிலும் கண்டு, பல பெயர்களிலும், வடிவங்களிலும் உணர்ந்து வழிபடுவதைக் குறிப்பிடுகின்றது. நிதானவதி நவவித பக்தி மார்க்கத்தைக் குறிக்கிறது.

சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு சாயி ஞானசேகரம் ஐயா அவர்கள் சாதனைகள், சத்சங்கங்கள், அமைத்து அனுபூதி அடைந்தார்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

என்றவாறு சிறு வயதிலிருந்தே இறைவனில் அன்புப் பற்றுக் கொண்டு அவரை நாடித் தேடி பல வழிகளில் முயன்றார். அதாவது உலகம் தேடுவதை அவர் தேடவில்லை. தான் எதுவோ, எங்கிருந்து வந்தாரோ அதை அடைய அதுவாகத் துடித்தார்.

*நம்பிக்கை எங்குள்ளதோ அங்கே அன்புள்ளது*
*எங்கே அன்புள்ளதோ அங்கே அமைதி உள்ளது*
*எங்கே அமைதி உள்ளதோ அங்கே சத்யம் உள்ளது*
*எங்கே சத்யம் உள்ளதோ அங்கே தெய்வம் உள்ளது*
*எங்கே தெய்வம் உள்ளதோ அங்கே ஆனந்தம் உள்ளது.*

இதன் அடிப்படையில் வாழ்ந்தார்; அனுபவித்தார். பிறரும் அனுபவிக்க வழிகாட்டினார்.

சுவாமி சொல்கிறார், பிரேமை தத்துவத்தின் அடிப்படையில் சத்சங்கங்கள் அமைய வேண்டுமென்று. இவற்றிற்கு அன்பு தான் அடிப்படையாக உள்ளது. ஐயாவின் பார்வை செயற்பாடு, வழிநடத்தல் ஆகியவற்றை நாம் கவனிக்க வேண்டும். எதை அறிந்து கொண்டால் இவ்வுலகில் அறிய வேண்டியது எதுவுமிராதோ, எதையுஞ் சாதிக்க முடியுமோ, எதை அறியாவிடில் பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுவாரோ அப்படிப்பட்ட மெய்யறிவைப் போதிப்பவரே உண்மையான குரு என சத்தியசாயிபாபா அறுதியிட்டுக்கூறும் உறுதியான வாக்கு.

நாம் நல்லவற்றை உருவாக்க வேண்டும். சரித்திர நாயகனாக இருக்க வேண்டிய மனிதன் உணர்ச்சிப் பிழம்பின் நிலைக்குக் நீழிறங்கி விட்டான். நாம் வரலாற்றை வளர்க்க வேண்டும். வரலாறு (history) என்பது அவன் (இறைவன்) கதையாகும். (His Story)

எண்ணம், சொல் செயல் ஒன்றாய் இருப்பவரே மகாத்மா ஆவார் என்ற சுவாமியின் வாக்குப்படி ஐயா அவர்கள் சத்தியத்தைப் போதித்து சத்தியத்தில் நின்று சத்தியமாக வாழ்ந்தார்.

தானே சத்தியமாக நின்று ஞான சம்பந்தர் அருளிய பதிகங்களை சுவாமியின் திருநீற்று மகிமை விளங்க சாதனையாக எடுத்துக் கையாண்டு, அனுபவித்து, பிறரையும் அனுபவிக்கச் செய்த மகிமை வார்த்தை களுக்கப்பாற்பட்டது. "சத்திய மாவது நீறு" என்பதற்கமைய பொய்மை யிலிருந்து விடுபட்டு, விடுபடச்செய்து ஒன் றாக அனுபவித்தார். பந்தபாசம் அறுக்கச் செய்யும் என்ற திடநிச்சயத்துடன் கருத்து ணர்ந்து இப்பதிகங்களைப் பாடினார்.

"கோளறு பதிகம்" எவ்வாறு துன்பங்களை துன்பங்களிலிருந்து விடுபடச் செய்து சாந்தியில் நிலைபெற வைக்கும் என்பதை ஞானசம்பந்தர் ஆணை இட்டுப் பாடியபடி அவ்வாறே பாடினார். சாந்தியை அனுபவித்தார். எத்தனையோ இக்கட்டான சூழ்நிலைகளில் பலரை இச் சாதனைகளில் ஈடுபடச் செய்து, வழி நடத்தி சாந்தியில் நிலைபெறச் செய்தார். இங்கே அடிய வராவதே அத்தியாவசியமானதாகும். விசுவாசமும், சரணாகதியும் தான் துன்பத்தி லிருந்து மீட்டு இன்பத்தில் நிலைபெறச் செய்ய வல்லது.

ஆத்மாவே குரு. குரு அறியாமையை நீக்குபவர். அறியாமையை அகற்ற ஆத்மதத்துவம் குருபாத்திரம் தாங்கி வருகிறது. வாழ்க்கையில் அத்தியா வசியமான எல்லாவற்றையும் பெற்ற பின்பும் அதிருப்தியும், அமைதியின்மையும் ஏற்படும் போது ஆன்மீகப்பசி ஏற்படுகிறது. ஆன்மீகப் பசி உனக்கு ஏதும் இருக்கிறதா? அப்போது ஆத்மா குருவடிவந்தாங்கி வருகிறது. அறியாமையிலுள்ளவன் ஆன்மீகப் பசி கொண்டு சரணாகதி அடைகிறான். ஒருமைப்பாடு ஏற்படுகிறது. ஒருமைப்பாடே தெய்வீகம். சத்சங்கம் மலர்கிறது. தெய்வீகம் மிளிர்கின்றது. "மனிதனிடத்தே இயல்பாகவுள்ள தெய்வதத்துவத்தின் விழிப்பை அவனிடத்தில் உதிக்கச் செய்வதே" பகவானின் அடிப்படைக் குறிக்கோளாகும். இக்குறிக்கோளின் அடிப்படையே சாயி ஞானசேகரம் ஐயாவின் "சத்சங்கம்" இந்த அமைப்பு பகவானின் அவதார நோக்கங்களில் ஒன்று.

ஆசிரிய-மாணவ புனிதஉறவு முறைக்கு பாரதபூமி பெயர் பெற்றது.

வசிஷ்டரைப் போன்ற ஒரு குரு, ஸ்ரீராம சந்திரரைப் போன்ற ஒரு சிஷ்யன்; சாந்தீபினி போன்ற ஒரு குரு, ஸ்ரீகிருஷ்ண பலராமனைப் போன்ற சிஷ்யர்கள்; தத்த கோவிந்தர் போன்ற ஒரு குரு, ஆதிசங்கரரைப் போன்ற ஒரு சிஷ்யர்; சுகமுனிவரைப் போன்ற ஒரு குரு, பரீஷித் மகாராஜா போன்ற ஒரு சிஷ்யர் இப்பேர்ப்பட்ட உறவு முறைகள் அந்நாள் முதல் இந்நாள் வரை ஒளிவீசும் எடுத்துக் காட்டுகளாக உள்ளன. இப்பேர்ப்பட்ட குரு சிஷ்ய உறவு முறையின் மகத்துவத்தையும், பெருமையையும், அருமையையும் பரிசுத்த மனத்துடனும், முழு இதயத்துடனும் ஏற்றுக் கொண்டால்த் தான் இது சம்பந்தப்பட்ட

சம்பிரதாயங்களை, நமது பாரம்பரியத்தி லிருந்து நாம் பெற முடியும். இவ் வாக்கியங்களின் பொருளை இந்நாளைய இளைஞர்கள் உணர வேண்டும்.

மாணவர்கள் மூன்று முக்கிய குணங் களைப் பெற்றிருக்க வேண்டும். அவை கடமை, கட்டுப்பாடு, பக்தி. இந்த மூன்று குணங்களும் பெற்றிருந்தால் தான் அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்படுபவர்களாக இருக்க முடியும்.

தன்னை அறியும் அறிவே பெற வேண்டிய அறிவாகும். சற்குரு சாயி ஞானசேகரம் ஐயா அவர்கள் தன்னை அறியும் அறிவையே இலட்சியமாகக் கொண்டு போதனை செய்தார்.

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா'**

**யாதும் ஊரே யாவரும் கேளீர்"**

என்ற மகா வாக்கியங்களே அவரது போதனையின் அடிப்படையாக இருந்தது. எங்களிடத்து தீதும், நன்றும் எதிர்நோக்கி வரும் போது அகங்கார "நான்" எழுச்சி கொள்கிறது. அதுவே மேலும் பிறவிக்கு வித்தை உண்டாக்கி விடுகின்றது. இந்த எழுச்சியை அந்த இடத்தில் வைத்து விழிப்பினால் கருக்கிவிடுதல் வேண்டும், என ஐயா கூறுவார். அவ்வாறு பழையன செயலற்றுப் போகச் செய்வதால் தானான தன்மை நிலைப்பட வாய்ப்பு உண்டாகிறது. பின்பு கர்மாக்கள் வந்தாலும் செத்த பாம்பை அடிப்பது போல் தான். பகவான் கீதையில் "என் நிமித்தமாக இரு" என்கிறார். அவ்வாறு ஒரு கருவியாக செயற்பாடு நடைபெறும்.

பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ அந்த ஞானத்தை அறிந்து கொள். உண்மையை உணர்ந்த ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப் பார்கள்.

குரு குலங்களில் நீதிபோதனையும், வாழ்க்கையின் நெறிமுறைகளையும் போதித்தனர். நல்லவற்றைக் கற்பித்தலும், உயர்ந்த இலட்சியங்களைப் போதித்தலுமே அவர்களின் அன்றாட செயலாக இருந்தது. குரு குலங்களின் நீதி போதனை கற்றுக் கொடுக்கப்பட்டது. ரிஷி குலங்களில் அந்தப் போதனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வாழ்ந்து காட்டப்பட்டன. இன்று அத்தகைய குரு குலங்களுமில்லை. ரிஷிகுலங்களு மில்லை. குருகுலம் என்ற வார்த்தையின் முதல் எழுத்து "கு" இரண்டாம் வார்த்தை யான ரிஷிகுலத்தில் முதல் எழுத்து "ரி" இரண்டையுஞ் சேர்த்தால் "குரு" உண்மை யான குருவின் தன்மை இந்த ஆசிரமங்களி லிருந்து நமக்குக்கிடைக்கிறது.

ஓம்கார உபாசனையின் மூலம் விடுதலைப் பாதையைத் தெளிவாக்கினார் ஐயா. விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம், துரியம் என்ற நிலைகளூடாக பயணஞ் செய்து பிரம்ம நிலையை அனுபவிக்கும் வகையில் ஓம்கார சாதனை மூலம் வழிநடத்தினார்.

சாயி ஞானசேகரம் ஐயா தான் தேடிக் கண்டு அநுபவித்த இன்பத்தை பிறரும் அனுபவிக்க வேண்டும் என்ற பெருவிருப்பங் கொண்டிருந்தார். சுவாமியின் போதனையின் சாரமே அது தானே. பல இடங்களிலும் போதனை, சாதனை எல்லாம் நடாத்தியும் அவருக்கு இதயபூர்வமான விடுதலை நாட்டம் கொண்டவர்களை காணாமல் துடித்தார். அந்தச் சிரத்தையில் அவருக்கு பூரணமான ஆதரவும், வரவேற்பும் தாவடியில் அமைந்துள்ள சாயி இல்லத்தில் கிடைத்தது. சாயி மகேஸ்வரன், ரஞ்சனா குடும்பத்தினர் அவரது ஆத்ம சேவைப் பணிக்கு பூரண ஒத்துழைப்பு நல்கினர். பூரண விசுவாசமும், பயபக்தியும், பேரன்பும் பூண்டு அவரை குருவாக ஏற்று பணிவிடை

செய்து, சுவாமி கூறுவது போல் குரு, சிஷ்ய பாவனையில் தான் அந்த தத்துவத்தை போதிக்க முடியுமென்ற உண்மையை அனுபவத்தில் வெளிப்படுத்தினார். இவ்வாறாக உண்மையை நாடும் அன்பர்கள் சாயி இல்லத்தில் படிப்படியாகக் கூடத் தொடங்கினர். சாயி ஞானசேகரம் ஐயா அறியாமையின் அம்சங்களான இன, மத, மொழி, கலாச்சார வேறுபாடுகளையும், அபிமானங்களையும் அக்குவேறு ஆணி வேறாகத் தெளிவுபடுத்தினார். உண்மையை நாடியவர்களை அறியாமையிலிருந்து விடுபட்டு பூரண சுதந்திரம் கொண்டவர்களாக வெளிப்படுத்துவதே இலட்சியம். அவ்வாறு அடிமைத்தளையிலிருந்து படிப்படியாக விடுபட்டு ஆனந்தம் வெளிப்படுவதைக் கண்டு கண்டு ஆனந்தப்படுவார். ஆசீர்வதிப்பார். இந்த அடிப்படையில் வேற்றுமையில் ஒற்றுமை மலரத் தொடங்கியது. ஒன்றான அனுபவம் உணரக்கூடிய இடமாக சாயி இல்லம் அமைந்தது.

சுவாமியும் ஒரு முறை சாயி ஞானசேகரம் ஐயாவை "அன்பர் ஞானசேகரத்தை" தாம் விசாரித்ததாக ஓர் அன்பரிடம் கூறி ஊக்கம் கொடுத்து ஆசீர்வதித்தார்.

தனது ஆத்மசேவைப் பணியில் பூரண நிறைவு பெற்று உடலை உதறி விடுதலை பெற்றார். அவ்வேளையில் தனது பணி தொடர்ந்து நடைபெற ஆசீர்வாதமளித்து நடத்திக் கொண்டேயிருக்கிறார்.

இதயபூர்வமான ஆர்வம் கொணடோரை வழி நடாத்துவதில் பெரும் ஆனந்தத் தோடும், ஊக்கத்தோடும் செயல்படுவார். அவரைப்பற்றி எழுத்தில் கொண்டு வருவதோ முடியாத காரியம்தான். அப்படிப்பட்ட எல்லையற்ற, அகண்ட தத்துவம்.

தீவினைப்பயன் காரணமாக இந்த மகத்தான உண்மைகளைக் கண்டுகொள்ள பலராலும் முடியவில்லை.

ஐயா என்றாலே ஒரு அற்புத ஆனந்த உணர்வு தான். இந்த உலகமே மறந்து போய்விடும். அப்படி ஒரு மகத்தான சக்தி வெளிப்பட்டு நடமாடுகிறது.

ஐயா என்றுமுள்ள பூரண தத்துவமே.

*ஜெய்சாயிராம்*

**திருமதி நிர்மலா நவரட்ணராஜா**

ஓம் ஸ்ரீ சாயிராம்

# குரு மகிமை

சுவாமியின் அளவற்ற பிரேமையும், அவதார மகிமையும்தான், நாம் சாயி ஞானசேகரம் ஐயாவைச் சந்தித்தது எனலாம். நாம் முதல் முதல் அவருடைய சத்சங்கம் கேட்டபொழுதே இவரைப் போல இருந்தால் உலகத்தில் சந்தோஷமாக வாழலாம் என்ற ஒரு நிறைவு கிட்டியது. உண்மையும், அன்பும், பரிசுத்தமும், கண்டிப்பும் நிறைந்தவர். அவருடைய கண்டிப்பான தன்மையே எண்ணங்கள் எழாதபடி சரணாகதியை அருளும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறவிப்பயனை அடையவேண்டும் என்ற உன்னத நோக்கிற்காக முழுமையாக உழைத்தவர். அன்னை, பிதா, குருவாயிருந்து நம்மை வழி நடத்தியவர். வாழ்க்கை என்னும் மாளிகைக்கு அடித்தளம் தன்னம்பிக்கை. சத்தியத்தைப்பேசி தர்மவழியில் நட. நீ பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் போன்று பிரகாசிப்பாய். உனக்கு சக்தியில்லை எனக் கருதாதே. தன்னம்பிக்கை வேண்டும். அத்துடன் செயற்படும் பொழுது (Self satisfaction) சுயதிருப்தி ஏற்படுகின்றது. சுயதிருப்தி சுயநலத்தியாகம் (Self sacrifice) செய்ய ஊக்கம் அளிக்கிறது. சுயநலத்தியாகம் மூலம் தன்னை உணர்தல் கைகூடும். உங்கள் தன்னம்பிக்கை என்பது எந்தவிதத்திலும் அசைக்கமுடியாததாய் இருக்கவேண்டும்,என்று சுவாமி சொன்னதற்கமைய ஞானசேகரம் ஐயா வாழ்ந்தார். பல சாதனை ஒழுங்குகள் மூலம் ஓம்காரம், காயத்திரி, ஞானசம்பந்தர் பதிகங்கள், யோகசுவாமி பாடல்கள், பஜகோவிந்தம், வைஷ்ணவஜனதோ போன்றவற்றின் கருத்தை உணர்த்தி ஆத்ம அடிப்படையில் சாதனைகள் செய்து அதில் ஈடுபடுத்தி ஆத்ம அனுபவங்களை அனுபவிக்க வைத்தார். ஆத்மாவினுடைய இனிமை தெவிட்டாத ஒன்று என்பதை அனுபவமாக்கி அதுவே சத்தியம், நித்தியம், கடவுள் என்ற ஞானத்தை அந்த ஒன்றே எங்கும் உள்ளது என்பதையும் தெளிவாக்கி, ஊக்கமளித்து, அன்புகாட்டி, கண்டித்து தூய ஒரு அன்பில் வாழவைத்தார். அவருடைய வாழ்வைப் பார்த்ததும் எங்களுக்கும் அப்படியான வாழ்வு வாழவேண்டும், அவருடைய சொல்லுத்தான் சொல்லு என்ற விஷயம் இயல்பான செயல்முறையாக காணக்கூடியதாயிருந்தது. கொஞ்சப் பேரையாவது ஆத்ம வாழ்வு வாழவைக்க வேண்டும் என்று குடும்பம் குடும்பமாக சாதனையில் ஈடுபடுத்தி உண்மையான நிறைவு கண்டார். அது இப்போ பெருகி வளர்ந்து கொண்டே இருக்கின்றது. உண்மை வாழ்வில் தங்களை ஈடுபடுத்தியவர்களெல்லாம் பிறருடைய குறை குற்றங்களைக் காண்பதில் காலத்தை விரயமாக்க மாட்டார்கள். அதனை தன்னை அறிவதில் அல்லது இறைவன் மகிமையை எண்ணுவதில் பயனுள்ளவகையில் பொழுதைப் பயன்படுத்துவார்கள்.

மறை பொருளுக்கெல்லாம் மறை பொருளாய் இருப்பதை உணர இடையறாத சாதனை மூலமும், நல்லோர் இணக்கத்தி னாலுமே சாத்தியமாகும். நல்லோர் என்பது இங்கே ஆத்ம நாட்டம் உடையவர்கள். இறைவனுடைய பார்வையில் நல்லவர், தீயவர் இல்லை. எல்லோரிடத்திலும் அவர் காட்டும் அன்பு ஒரே மாதிரியானதாய், இருந்தாலும்,

கீதையில் உள்ள ஸ்லோகம்

"அஹம் வைஸ்வானரோ பூத்வா
ப்ராணினாம் தேஹ -மாச்ரித;!
ப்ராணாபான ஸமாயுக்த; பசாம்யன்னம் சதுர்விதம்;!!

உதரக்கனலாக நான் உயிர்களின் உடலில் இருந்து கொண்டு பிராண அபான வாயுக்களுடன் கூடி நான்குவித அன்னத் தைச் செமிக்கிறேன்.

இதற்கு பொருள் கூறி இதனை விளங்க வைப்பதற்கு ஒரு சின்ன உதாரணத்தை கூறி அதை அனுபவிக்க வைத்தார். அக்கதை பின்வருமாறு.

ஒரு நாள் வியாசபகவான் கோபியர் கொடுத்த உணவை வயிறு நிறைய உண்டார். பின்னர் அவர்கள் தங்களுக்கு ஆற்றைக் கடக்க உதவும்படி கேட்ட பொழுது "நான் இன்று சாப்பிட வில்லை என்பது உண்மையானால் இந்த ஆறு வழிவிலகிக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டபொழுது ஆறு வழி விலகிக் கொடுத்தது. இதேமாதிரி இன்னுமொரு கதை சொல்லுவார். இரண்டு சந்நியாசிகள் ஒரு வழியில் போய்க்கொண்டிருந்த பொழுது ஆற்றைக் கடக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது ஒரு பெண் தனக்கு உதவி செய்யும்படி கேட்க ஒரு சந்நியாசி அப் பெண்ணை தனது முதுகில் ஏற்றி மறுகரையில் விட்டு வெகுதூரம் போன பின் கூட வந்த மற்றைய சந்நியாசி நீ அந்தப் பெண்ணை சுமந்து கொண்டு வந்தாயே? அது சரியா? என்று கேட்டபொழுது சுமந்து வந்த சந்நியாசி நான் அதிலேயே விட்டுவிட்டேனே நீ இன்னும் காவுகின் றாயா? என்று கேட்டதாக ஒரு கதை சொல்லி, எப்படி இந்த மனித சமூகம் பிறருடைய குற்றங்களைக் காண்பதில் அவதானமாயிருந்து தன்னுடைய முன்னேற் றத்திற்கான முயற்சியை கைவிட்டு விடுகின்றது என்ற சூட்சுமமான உண்மை களை சின்ன சின்ன கதைகள் மூலம் தெளிவாக்கி எங்களது அஞ்ஞானத்தையும் அகற்றிவிடுவார். சில சமயங்கள் குற்றங் குறைகள் உள்ளவர்கள் கூட தனது குற்றத்திற்காக வருந்தி வருந்தி தன்னை உயர்த்திக் கொள்வார்கள். நல்லவர் போல் இருப்பவர்கள் சிலர் பிறருடைய குற்றங் களைக் காண்பதில் திருப்தியுற்று தங்களை உணரத்தவறி பிறவிக்கு வழிவகுத்துக் கொண்டு போகின்றார்கள். இப்படியான தன்மைகள் சாதகர்கள் ஆகிய எங்களிடம் இருப்பின் ஆன்மீகப் பாதையில் நாம் முன்னேறிச் செல்ல முடியாது. அவரவருக்கு கொடுக்கப்பட்ட கடமையை அவரவர்கள் முழு விசுவாசத்தடன் செய்து முடிப்பதே தேவையானதாகும்.

ஆத்மவழி என்றால் அது ஆத்ம வழிதான். இப்படி ஒரு கருணையும் அன்பும் கொண்டு சுவாமியே சாயி ஞானசேகரம் ஐயா ஊடாக வழிநடத்தினாரென்றால் அதை அநுபவித்தவர்க்கே புரியும். கீதை யில் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் பொழுது இப்படி யான ஒரு இடம் காட்டுகின்றார். பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ அதை அறிவாய். உண்மையை உணர்ந்த ஞானியர் உனக்கு அந்த ஞானத்தை

உபதேசிப்பார்கள். அதேவிதமாக சாயி ஞானசேகரம் ஐயா இருந்தார். உண்மைக்கு ஒரு நம்பிக்கை கொடுக்க வேண்டிய அவசியமேயில்லை. சத்சங்கத்தில் உண் மையைப் பேசிக்கொண்டே இருப்பார். அப்போ சொல்வார், யேசுநாதருடைய ஒரு போதனையைப் பற்றி, அதாவது :-

"If you know the truth, the truth will make you free"

முதலில் நீ உண்மையைத் தெரிந்து கொள். அது உன்னை விடுதலைப்படுத்தும். உதாரணமாக, கடவுள் ஒருவர், அவர் எங்கும் நிறைந்தவர். அந்த கடவுளை ஓம்கார உபாசனை மூலம் அனுபவிக் கின்றோம். எப்படி அனுபவிக்கின்றீர்கள் என்று கேட்கலாம். வாழ்ந்து காட்டிய வர்களின் "சொல்" தான் அதற்கு வழி. மானிடர்களில் பெரும்பாலோர் பொய் பேசி பொய்யிலேயே வாழ்ந்து உண்மைபோல் நடக்கிறார்கள். இதனால் பொய்யினுள் மனம் தொலைந்து முறையானது காணப்படாமல், போய் விடுகிறது. அதற்கு வழி மகான்களை அணுகுவதே.

ஆரம்பத்திலிருந்து அத்வைதத்திற்குரிய பாடல்கள், புத்தகங்கள், வழிகாட்டிகளையே தேர்ந்தெடுத்து அதனூடாக வழி நடத்தி யமையால் இலகுவாக அத்வைத தத்து வத்தை புரியவைத்தார், தரிசிக்க வைத்தார். உதாரணமாக யோகசுவாமி, யேசுகிறீஸ்து, புத்தபகவான், ஞானசம்பந்தர் போன்றவர் களுடைய வெளிப்படுத்தல்கள், அதியு யர்ந்த கருத்துக்கள் மூலம் வழிகாட்டிய மையால் உயர்ந்த எண்ணங்களில் சஞ்சரிக்கவைத்தார். ஐயாவிடம் மிகுந்த ஒரு பிரத்தியேகமான தகுதி ஒருவரை, அவருடைய இடத்தை, நிலையை உண்மை யாகக் காண்பது. அதனாலே அவருடைய தொடர்பால் ஒரு பலம் பெற்ற மாதிரி. ஆத்மவழியில் செல்வதற்கு நிறைய பலமும் ஊக்கமுமாக இருந்தார். சுவாமி பகவானா லேயே அப்படிச் செய்ய முடியும் என்பதை பிரத்தியட்சமாகக் காணக்கூடியதாக இருந் தது. இலேசாக அஞ்ஞானிகளை அஞ்ஞானி கள் குழப்பலாம். ஆனால் ஒரு ஞானி யாலோ, கடவுளாலோ கூட ஒரு ஞானியைக் குழப்ப முடியாது. அப்படியான ஒருவராக இருந்தார். அவரைப் பற்றி தொடர்ந்து சொல்லலாம். குரு யார்? கடவுள் யார்? இரண்டும் ஒன்றே. இதனை ஆத்மவழியில் சென்று பார்க்கும் போது தான் உணரமுடியும். உண்மையான ஆன்மீகம் ஒரு புதையல். இடையறாத முயற்சி செய்து தான் பெற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் பிழையான பாதையை இனங்கண்டு கொள்ளும்படி ஒரு சிறிய கதை சொல்லு வார். குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது எப்படியென்றால் இரண்டு பேர் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவருக்குக் கண் தெரியாது. அப்போ அங்கே ஒரு பிள்ளை பால்விக்கி இறந்ததாக தெரிய வரும் பொழுது குருடன் பால் என்றால் எப்படி? என்று கேட்க மற்றைய குருட னில்லாத குருடன் அது கொக்கைப் போல் வெண்மையானது என்று கூற, அப்போ கொக்கு எப்படியிருக்குமென்று கேட்க கையைக் கொக்குப்போல் வளைத்துக் காண்பிக்க, அந்தக் கையைத் தடவிப் பார்த்த குருடன் ஓ! இது போனால் பிள்ளை சாகும் தானே என்ற நிலையில் தான் பெரும்பாலோர் விளக்கங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அப்படியான நிலையில் பெரியவர்களைப் பற்றி எழுதுவது மிகவும் கடினமான பணி. அவர்களைப் பற்றி எழுதப்போய் அவர்களுடைய பவித்திரத்தை குறைத்துவிடக்கூடாது என்பதொரு தயக் கம். காலதாமதமும் ஆகக்கூடாது என்ற ஏக்கம், எங்களுடைய கடமையைச் செய்யவேண்டுமென்பதே நோக்கம். ஐயாவிடம், பொய்கலப்போ, மிகைபடக் கூறுவதோ, அபிமானமாகப் பேசுவதோ

இப்படியாக யாதொன்றுமே காணமுடியாது. நல்ல தெளிவான நிலைப்பாட்டில் இருப்பார். அவருடைய சத்சங்கம் உண்மையைப் பற்றிப் பேசுவது, அறியாமையைப் பற்றிப் பேசுவது, கடவுளைப்பற்றி அதிகம் விபரிக்கமாட்டார். தெய்வீகம் அனுபவிப்பதற் குரியது. பேசுவதற்கு உரியதல்ல என்பதை அனுபவபூர்வமாக உணரவைத்தார். அவருடைய செயல்முறைகள் புதுமையானவை. அழைப்பிதழ்கள் இல்லை. ஆட்களை நிறைய சேர்க்கவேண்டுமென்ற நோக்கமில்லை. பவித்திரமான விஷயத்தை பவித்திரமாகச் சிலபேருக்காவது கொடுத்திடவேண்டும் என்பதே. அவர்கள் மூலம் அது பரவவேண்டுமென்பதே. அவர் விரும்பியமாதிரி ஆத்மவழியில் வந்து ஈடுபட்டவர்கள் எல்லோரும் பரப்பிக் கொண்டே இருக்கின்றார்கள். அவருடைய போதனைகளில் ஈடுபட்டதனால் சுவாமியின் பேச்சுக்களை விளங்கி வாசிக்கக்கூடிய ஆற்றலைத் தந்தது. சுவாமி ஜெகத்குரு அல்லவோ. ஐயாவின் வழிநடத்தலில் பங்குபற்றியவர்கள், தொடர்ந்தும் பங்குபற்றி வருபவர்கள், இறைபணியாக பூரண அர்ப்பணமாக ஈடுபட்டுவருவது மட்டுமல்லாது ஆத்ம அனுபவத்தையும் பெறுகிறார்கள்.

ஆரம்பகாலத்திலிருந்து ஸ்ரீஞானசேகரம் ஐயாவின் ஆத்மசாதனை சத்சங்கங்களில் சாயி நவரத்தினராஜா நிர்மலா குடும்பம் சித்தங்கேணியிலிருந்து வந்து பங்கு பற்றி சகல விதத்திலும் எல்லோருக்கும், ஊக்கமாகவும் ஐயா கூறியது போன்று ஆன்மீகக்காரியங்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும் இருந்துவருகின்றார்கள். அத்துடன் சித்தன்கேணி "சக்தி நிலையத்தில்" ஐயா செய்துவந்த ஆன்மீகப்பணியை மிகவும் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

சாதுக்கள் கால்வைக்க கூசுகின்ற இடத்தில் மடையன் குதித்துக் கூத்தாடி விட்டுப் போவான் என்று ஒரு விளக்கம் ஐயா சொல்லுவார். பெரியவர்களைப் பேணுகின்றவர்களிலும் பார்க்க அவர்களிடம் குறைகள் கண்டுபிடிப்பவர்களே அநேகம். சில பண்பானவர்கள் ஆத்மீகவழியில் செல்லாவிடினும் பெரியவர்களுடன் மிகவும் பக்குவமாகவும், அன்பாகவும் நடந்து கொள்வார்கள். "பவித்திரத்துவம்" எப்படி அணுகவேண்டும், எப்படிப் பேணவேண்டும் என்பதை அறியவைப்பதற்காக இப்படிச் சொல்வார். அதாவது, ஒரு பயிரை வளர்த்தெடுக்குமட்டும் அதற்கு கூடு அடைத்து பாதுகாப்பு வழங்குவது போல் கட்டுப்பாடுகள் நிறையவைத்துத்தான் ஆத்மவழியில் சாதகர்களை உருவாக்கினார். பயிர் வளர்ந்துவிட்டால் கூடு தேவையில்லைத்தானே. அவர் கட்டுப்பாடுகள் வைத்ததன் நோக்கம் பக்குவமாக ஆத்மவழியில் வளர்த்தெடுப்பதற்காகவேயாகும். பெரியவர்களின் நோக்கம் எப்பொழுதும் சரியான அர்த்தத்துடனேயே இருக்கும். அதை உணர்ந்து கொள்வதற்கு பூரண சரணாகதி தேவை. பேச்சு வாத பிரதிவாதம் செய்து கொண்டு போனால் அர்த்தம், நோக்கம் புரியாது போய்விடும். அதனாலே பெரியவர்களினது கருத்துக்களை வெற்றுப்பாத்திரமாயிருந்து சொல்வதைக் கிரகிக்க வேண்டும். இதனால் பற்று பந்தபாசங்களினின்றும் விடுபட்டு தூய அன்பில் உயர்ந்து போகும் அனுபவம் கிட்டும். மனிதன் தெய்வீகமானவன். உண்மையாகச் சொன்னால் மனிதனுக்கு ஒரு குறையுமே இல்லை என்பதையும் ஆனந்தமே அவனது இயல்பு என்பதையும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் வழியையும் மிகவும் சுலபமாகக்கண்டு விடுதலையின் சுகத்தையும் அனுபவிக்கலாம்.

சுவாமியின் அவதாரப்பணியில் செயற்பட்ட சாயி ஞானசேகரம் ஐயா குடும்பங்களை, சாதனைகள் மூலம் வழிப்படுத்தி தர்மமாக வாழவைத்ததோடு, குடும்பங்களின் ஒருமைப்பாடு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம், மன்னிக்கும் தன்மை இவற்றை வளர்த்து குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் பக்கம் சாராமல் உண்மைக்காகவே, தர்மத்திற்காகவே அபிப்பிராயம் சொல்லும் ஒரு உயர்ந்த அமைப்பைக் கொண்டு வந்து அந்த நிறைவை அனுபவிக்கவைத்தார். சாயி ஞானசேகரம் ஐயா சத்தியத்தைப் பேசி தர்மவாழ்வு வாழ்ந்து சாந்தியை அனுபவித்து அதுதான் அன்பு என்பதை உணரவைத்தார். இதை வெளியிலிருந்து பார்க்கமுடியாது. செயல்முறையால் அனுபவிக்கும் அனுபவமாகும். பகவானின் தெய்வீகச் செய்தியிலிருந்து,

"தூய்மையான இருதயத்துடன் எப்பொழுதும் இருந்தால் தனித்துவமான உங்கள் உயர்குணங்களால் மனிதகுலம் பயன்பெறும்.

நான் கவரும் பொழுது மற்றவர்களும் இந்தப்பணியில் சேர்ந்து கொள்ளலாம்.

மனிதகுலம் முழுவதும் ஒற்றுமையுடன் வாழும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. ஒருவர் எதிர்பார்ப்பதிலும் பார்க்க விரைவாக அந்தக் காலம் வந்துவிடும். அந்தக்காலம் வருவதற்குள் உயிர்வாழும் எல்லா ஜீவன்களும் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை தெரியவைக்கக்கூடிய எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளுங்கள். வாழுகின்ற எவரும் கற்பனை செய்துபார்க்கக் கூடியதல்ல அது. புரிந்து கொள்ளக்கூடிய எல்லா மனோசக்திகளுக்கும் அப்பாற்பட்டது. அபாரமான சௌந்தர்யம் என்றே சொல்லலாம். அமைதியான உங்கள் பணியை நிறைவேற்றும் பொழுது உங்கள் ஒவ்வொருவரையும் எனது இதயத்தோடு அரவணைத்துக்கொள்வேன்". மேற்சொன்ன சுவாமியின் வாக்கியத்திற்கமைய ஐயா வாழ்ந்து காட்டிய மகாத்மா.

*ஜெய் சாயிராம்*

திருமதி.ரஞ்சனா மகேஸ்வரன்

# தெய்வீகம் மிளிர சத்சங்கம் சாதனா

சத்சங்கங்கள் நடைபெறுகின்ற நேரங்களில், ஈடுபட்டு இருப்பவர்கள் எல்லோரிலும் அவரது கருத்து இருக்கும். அவரது சத்சங்கம் விசாரணையின் ஊடாக விளக்கப்பட்டு, எழுகின்ற எண்ணங்கள் எல்லாவற்றிற்கும் விளக்கம் தரப்பட்டு, எண்ணத்திலிருந்து விடுவிக்கப்படுகின்ற ஒழுங்கு, சாதகரை அடித்தளத்திற்கு கூட்டிச் செல்கின்றது. "எண்ணம்" என்று சொல்லும் பொழுது அந்த எண்ணம் எப்படி வரையறைகளை எற்படுத்தி பல எண்ணங்களை நினைவுப் பதிவுகளிலிருந்து வருவித்து எண்ணமயமாக அகங்காரத்தின் சாயல் எப்படி இருக்குமோ, அந்தச் சாயலிலிருந்து விடுவிக்கப்பட்டு கட்டுக்களிலிருந்து தளர்த்திவிட்ட ஓர் விடுதலை உணர்வு நாமரூபங்களான நான், நீ, அவர் என்ற எண்ண ஈடுபாடு அற்று, ஒன்றான உணர்வு வெளிப்படுகின்ற அனுபவம். இது கண்ணால் வெளியே பார்த்து ஏற்கனவே கண்ட நினைவுப்பதிவிலிருந்து கிரகித்து நோக்குகின்ற வெளிநோக்கிலிருந்து விடுவிக்கப்படுகின்றது. அதாவது புலன்கள் பொறிகளுடன் பொருந்தி விவகாரங்களை உண்டுபண்ணுகின்ற எண்ண அலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு தன்னைத்தான் பார்க்கின்ற அகமுக நோக்கு வெளிப்படுகின்றது. இதையே விழிப்புணர்வு (Awareness) என்று பகவான் கூறுகின்றார். அந்த நோக்கு இருமைகளைக் கடந்த நோக்கு, எண்ணம் எழுகின்ற மூலத்தை நோக்குகின்ற நோக்கு. இந்த நோக்கு தலையெடுக்க, தலையெடுக்க இனம், மொழி, சமயம், கலாச்சாரம் இப்படிப்பட்ட அபிமான எண்ணப்பதிவுகள், நினைவுகள், பொய்மையை பொய்மையாக காணுகின்ற அந்த நோக்கு அனுபவமாக, நான் யார்? என்கின்ற உண்மையை பகவான் விழித்து சொல்கின்ற ஆனந்த சொரூபிகளே! அன்பு சொரூபிகளே! என்ற சத்தியவாக்கு சத்தியமாகவே அனுபவமாகின்றது.

உன்னிடத்தே உள்ள தெய்வீகத்தை மிளிரச்செய்யவே இந்த சாயி அவதாரம் வந்துள்ளது என்ற பகவானின் அவதார சங்கற்பத்தை ஐயா அவர்களது சத்சங்கம் தங்களை பூரணமாக அர்ப்பணித்துவிட்ட சாதகர்களை அனுபவமாக ஆக்கிவிடுகின்றது. அந்த அனுபவம் நிலைப்பட ஐயா அவர்கள் கொடுக்கின்ற சாதனா ஒழுங்குகள் தான் காரணம்.

## ஓம்கார சாதனை

இந்த சாதனையை வேதங்களின் ஓர் அங்கமான உபநிஷத்துக்கள் விசேஷமாக சொல்லி இருப்பது மட்டுமல்லாது புட்டபர்த்தியில் அதிகாலையில் இந்த ஓம்கார சாதனை உபாசிக்கப்பட்டு வருகின்றது. இந்த சாதனையை ஐயா தானே, அதன் அநுபவங்களை அநுபவித்து கண்டு, வழிப்படுத்துகின்றார். ஓம்கார சாதனையில் எப்படி இருக்க வேண்டும், எப்படி மூச்சுப்பயிற்சி செய்ய வேண்டும்.

எப்படி ஓம்காரம் சொல்லவேண்டும், ஓம்காரம் உபாசிக்கும்பொழுது எப்படி "ம்" காரம் சொல்லப்படவேண்டும், அத்தோடு லயம் இல்லாமல் ஒரே குரலாக இல்லாமல் விட்டுவிட்டு சொன்னால் அவரது கண்டிப்பும், அத்தோடு எப்படிச் சொல்லவேண்டும் என்ற விளக்கமும் தந்து கொண்டிருப்பார். 21 தடவைகள் ஓம்காரம் சொல்லப்படும். அங்கே இரண்டு ஓம்காரத்திற்கு இடையே வருகின்ற நிசப்தம் மிகவும் முக்கியமானது. அதைப்பார்க்கச் சொல்வார். அங்கே வெளிப்படுகின்ற ஆழம், பரந்து விரிவடைகின்ற ஒழுங்கு இவற்றை கவனிக்கச் சொல்வார். அப்படி கவனிக்க, கவனிக்க எண்ணங்களை கவனிக்கின்ற ஒழுங்கு ஏற்படுகின்றது. படிப்படியாக எண்ணங்களிலிருந்து விடுபடுகின்ற அனுபவம் ஏற்படுகின்றது. எண்ணம் என்றால் என்ன என்ற விளக்கம் எற்படுகின்றது. இந்த எண்ணங்கள் எல்லாம் சேர்ந்துதான் நான் என்ற ஓர் பிரமையை ஏற்படுத்துகின்றது என்ற விளக்கம் தெரியவருகின்றது. படிப்படியாக எண்ணம் எங்கே உருவாகின்றது என்ற உண்மை தெரியவருகின்றது. எண்ணங்களின் பிடியிலிருந்து விடுபட்ட சுதந்திரம் தன்னைத்தான் பார்க்கின்ற புத்தியினுடைய பிரகாசம் அதனால் ஏற்படுகின்ற விவேகம், எல்லைகளற்ற, வரையறைகளற்ற நோக்கு, அதிசூட்சுமமாக வெளிப்படுகின்றது. அங்கே நான், நான் என்று அகங்கரிக்கின்ற எண்ண ஈடுபாடுகளுடன் கூடிய நானை காணவில்லை. மத்தி (Centre) இல்லாவிட்டால் விட்டம் இல்லை. விட்டம் (dia meter) இல்லாவிட்டால் எல்லை இல்லை. எல்லை இல்லாவிட்டால் ஆதி, அந்தம் இல்லை சொல்லமுடியாத, விபரிக்க முடியாத சுகம். இப்படியான அநுபவத்திற்கு ஐயாவின் ஓம்கார சாதனை அழைத்துச் செல்கின்றது.

**நாம ஜெயம் பற்றிய பகவானது விழக்கத்தை ஐயா சாதனையால் அனுபவமாக்குகிறார்.**

நாமஸ்வமரணை செய்யுங்கள். மலை போல் பாவத்தை தூளாக்கும். இடியேறு போன்றது நாமம். நாமத்தைப்பாடி அதன் இனிமையில் மூழ்குங்கள். உங்கள் தேகம்பூராவும் மெய்சிலிர்ப்பினால் ஊடுருவப்பட்டு அதனில் உங்களது அகங்காரமும், கீழான ஆசைகளும் பூரணமாக மறைந்து நீங்கள் முற்றாக தூய்மை அடைந்திருப்பதை உணர்வீர்கள். இந்த அனுஷ்டானத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பிர்களாயின் அந்த மகோன்னத நிலையில் நீங்கள் நிலைநிறுத்தப்படுவீர்கள். எனவே நடக்கும் போதும், இருக்கும்போதும் எந்த நிலைகளிலும் உங்களது உதடுகளில் நாமத்தை நிரந்தரமாக வைத்திருங்கள். படிப்படியாக நாமம் உங்களைத் தனது உடைமையாக்கும். நாமம் சொல்லும்பொழுது வாயால் சொல்கிறீர்கள். அந்த நாமத்தை உங்கள் காதுகள் கேட்கின்றது. உங்கள் கண்கள் மூடப்பட்டு இறைவனின் ரூபத்தில் லயித்திருக்கின்றது. இந்த அடிப்படையில் நீங்கள் நாமத்தை சொல்லும்போது உங்கள் மனமும் அங்குமிங்கும் அலைய மறுப்பதைக் காண்பீர்கள். நாமத்தின் தொடர்பு இறைவனின் தொடர்பே. நாமமே இறைவன். இறைவனே நாமம், நாமத்தை இடைவிடாது தொடருங்கள். இடையிடையே, நாமம் யார் சொல்வது? என்ற விசாரணையையும் செய்யுங்கள். இனிமையே உருவான இறைவனின் நாமம் உங்களிற்குள்ளேயே உறைந்து கிடக்கும், எல்லா இனிமைகளையும் தட்டி எழுப்பும். உங்களிடையே சரணாகதியை ஏற்படுத்தி விடும். அங்கே வாயால் சொல்லப்பட்ட நாமம் மனத்தினாலேயே சொல்லப்படுகின்ற

பயிற்சி ஆழத்தை நாடுகின்றது. அந்த ஆழத்தில் ஆனந்தத் தின் சுவையை நீங்கள் அனுபவித்ததும் அந்த இநிமையை விட்டு ஒரு கணமேனும் விலகிஇருக்க முடியாமல் போகும்.

சாதனையில் ஒன்றுகூடி நாமஸ் மரணை செய்யும்போது பங்குபற்றுபவர்கள் அத்தனை பேருடைய சக்தியும் சேர்ந்து ஒவ்வொருவருக்கும் ஆத்மவிழிப்பை ஏற்படுத்துகின்ற அனுபவத்தை அந்த அதிசயிக்கத்தக்க அனுபவத்தினூடாக விடுதலையின் சுகத்தை அனுபவமாக்கி கொள்கின்றார்கள்.

**தேவாரதிருப்பதிகங்கள், சிவபுராணம், பஜகோவிந்தம், ஸ்ரீமத்பாகவத சப்தாகம், யோகசுவாமிகள் நற்சிந்தனை பாடல்கள், அக்னி ஹோமம்.**

விடுதலை என்ற இலட்சியத்திற்கு உங்களுடைய சமயங்களிலே இருக்கின்ற மூலதனம் போன்ற மகாத்மாக்களுடைய, பெரியவர்களுடைய, உபதேசங்கள், சாதனைக்குரிய வழிபாட்டு நெறிமுறைகளோடு கூடிய பயிற்சிகள் போன்றவற்றை நீங்கள் உபயோகப்படுத்தலாமென்று பகவான் சொன்ன ஓர் கருத்தை ஐயா அவர்கள் எடுத்துக்கொண்டார். அதன் பிரகாரம் திருஞானசம்பந்தரின் பதிகங்களைத் தெரிவுசெய்து சாதனைக்கு ஏற்படுத்திக் கொண்டார். அந்தப் பதிகங்கள் அற்புதத் திருப்பதிகங்கள் என்ற பெயருடன் சாதனைகளில் பயன்படுத்தப்படுகின்றது. அதிகாலையிலும், மாலையிலும் 41 நாள் சாதனை, 21நாள் சாதனை என அமைத்து அந்த சாதனைகளிலே இந்த பதிகங்கள், சிவபுராணம், யோகசுவாமிகள் நற்சிந்தனைப்பாடல்கள் என்பன இடம்பெறும். ஐயா வழிப்படுத்தும் சாதனைகளோடு ஒவ்வொரு ஆண்டும் ஒரு தடவை பாகவதசப்தாகம் ஏழுநாட்கள் செய்வார். கிருஸ்ணாவதாரத்தின்போது அக்னி ஹோமம் இடம்பெறும். இதைத்தவிர பஞ்சாட்சர அக்னி ஹோமமும்(யாகம்) ஒரு இரவு முழுவதும் பதிகங்கள்பாடி செய்வார். பூரண கட்டுப்பாட்டோடும், சரணாகதி நிலைப்பாட்டோடும், ஒழுக்க நெறிகளோடும், குறித்த நேரங்களிற்கு அமையவும், சிரத்தையோடும், அவரது சாதனைகள் அமைவது வழக்கம். அந்த அமைவு தொடர்ந்து பேணப்பட்டு வருவது சுவாமியின் பெரும் கருணையே. இந்த சாதனைகளின் ஊடாக சிரத்தை உள்ள சாதகர்கள் தெய்வீகத்தை அதாவது ஆத்மாவை மறைத்துக் கொண்டு இருக்கின்ற எண்ண அலைகளில் இருந்து விடுபடுகின்ற அனுபவத்தின் ஊடாக ஏற்படுகின்ற விடுதலையான உணர்வு, இருமைகளற்ற உணர்வு எப்படியான வர்ணிக்கமுடியாத ஆனந்த அனுபவத்தில் சத்தியம் என்றால் என்ன? எப்படி தர்மமாக வாழ்வது? சாந்தியில் எப்படி நிலைப்படுவது? எது தூய்மையான அன்பு? அகிம்சையிலிருந்து கிம்சையினூடாக எப்படி நிலைப்படுவது என்ற அனுபவமும், வெளிநோக்கில் உள்ள புலன்வழித் தொடர்புகளில் இருந்து எப்படி விடுபடமுடியும்?, பார்ப்பது யார்? பார்க்கப்படுவது எது? பார்க்கப்படுகின்ற பொருள் எது? என்ற தெளிவு "பார்ப்பவன் தான் பார்க்கப்படுவது" என்ற உண்மை, சாதனையின் ஊடாக பெறப்பட்ட விழிப்புணர்வினால் புலனாகின்றது. "விழிப்புணர்வே" பார்ப்போனும், பார்க்கப்படுவதும் ஒன்றுதான் என்ற உண்மையை எண்ணங்களிலிருந்து விடுபடுகின்ற அனுபவம், தான் யார் என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது. இதனையே விழிப்புணர்வு என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இந்த விழிப்புணர்வு தன்னைத் தான் நோக்குகின்ற நோக்கினால் மனதிலே எழுகின்ற எழுச்சிகளின் மூலத்தை

நோக்குகின்றது. அந்த நோக்கு படிப்படியாக இடையறாத பயிற்சிகளின் ஊடாக கர்மா என்று சொல்லப்படுகின்ற மனதிலே உள்ள சம்ஸ்காரங்கள் கரைந்து வறுத்த வித்தாகி தானான தன்நிலை தலையெடுக்க ஆரம்பிக்கின்றது. இந்த விவேகம் தெய்வ அம்சம். அது நாமரூபம் என்ற வரையறைக்குள் இல்லை. புலன்களுடைய தொழிற்பாடு அங்கே சித்திக்காது. சுவாமி சொல்கின்ற நீயும், நானும் ஒன்று என்ற அனுபவம் கைகூடுகின்றது. இந்த பிரபஞ்சத்திலே காணப்படும் காட்சிகள் அதற்கு எது ஆதாரம்? அந்த ஆதாரத்தில் அந்த ஆதாரமே ஆகின்ற அனுபவம், மெல்ல மெல்ல தலையெடுக்கின்றது. இது ஓர்நாள் நிலைப்படும் என்ற சாந்தி தன்னை வெளிப்படுத்துகின்றது.

இந்த அனுபவங்களைப்பெற தொடர்ச்சியான சாதனை, சத்சங்கம், நல்லோரிணக்கம், பரோபகாரம் என்ற ஆத்மசேவை. இவற்றில் கூடிய சிரத்தை இருக்கவேண்டும். "பரோபகாரம்" பர-உபகாரம்: பரத்தை உணர உபகாரஞ் செய்தல். அதாவது தானங்களில் உயர்ந்த தானம், சேவைகளில் உயர்ந்த சேவை இந்த ஆத்மசேவை என்பதை பகவானும் ஏனைய மகாத்மாக்களும், சுவாமி விவேகானந்தர் உட்பட தெளிவுபடுத்தி உள்ளார்கள். ஐயா தானும் அதன்படி வாழ்ந்து சேர்ந்தவர்களையும் வாழவைக்க இந்த உயர்ந்த சேவையில் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்தார். அந்தச்சேவை தொடர்ந்தும் 12 ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ சாதகர்களை அனுபவமாக உருவாக்கி தொடர்ந்தும் நடைபெறுவது தான் ஐயாவின் உண்மையான வழி நடத்தலுக்கும், வாழ்விற்கும் பெரும் உதாரணமாகும். ஐயா, இன்றும் இருந்து நடாத்தி வருகின்றார் என்ற அனுபத்தை ஒவ்வொரு சாதகரும் அனுபவமாக காணுகிற மகிமையே பகவானின் அவதார மகிமை.

ஜெய் சாயிராம்

ஸ்ரீ க.மகேஸ்வரன்

ஓம் ஸ்ரீ சாயிராம்

# காயத்திரி மந்திரம்

Bhur - பூர் - பூலோகம்

Bhuva - புவ - புவலோகம்(பித்ருலோகம்)

Swaha -ஸ்வஹ-ஸ்வர்க்க உலகம்

Thath - தத் - அந்த

Theemahi-தீமஹி-தியானிப்போம்

சவிதுர்வரேண்யம் - பர்கோ தேவஸ்ய - நீக்கமற ஊடுருவி நிற்கும் அந்த மேலாம் தெய்வத்தை

தியய - எது புத்தியை (தீய)

ந - எனது

ப்ரசோதயாத் - பிரகாசமடையச் செய்வது.

"எது எனது புத்தியைப் பிரகாசமடையச்செய்கிறதோ - பூலோகம், புவலோகம், ஸ்வர்க்கலோகம் ஆகிய மூன்று உலகங்க ளிலும் நீக்கமற ஊடுருவி நிற்கும் அந்த மேலாம் பிரமத்தை தியானிப்போமாக"

*ஓம் பூர் புவ ஸ்வஹ : தத் சவிதுர் வரேண்யம்;*
*பர்கோ தேவஸ்ய தீமஹி: தியோ யோ நப்ரசோதயாத்*

(3 தடவை)

**கர்மத்தின் விளைவுகள்:~**

பலன்களிலிருந்து ஒருவன் தப்பித்துக்கொள்ள முடியாது. எந்தச்செயலும் அதாவது எந்தக்கர்மமும் தெரிந்தோ, தெரியாமலோ செய்திருந்தாலும் அதனுடைய பலன்களை அனுபவித்தே ஆகவேண்டும். நல்ல செயல்களோ, தீய செயல்களோ பலன்களிலிருந்து தப்பித்து ஓடமுடியாது. ஒரு நாள் அவற்றை மனிதன் எதிர்நோக்கவேண்டும். ஆகையினாலே ஒருவனின் வாழ்க்கையில், கர்மம் தான் முக்கியமான தொன்றாக உள்ளது. கர்மத்தினாலே பிறக்கிறான்; கர்மத்தோடு வாழ்கிறான்; கர்மத்தில் இறக்கிறான். துன்பமும், இன்பமும் கர்மத்தின் விளைவே யாகும். மனித வாழ்க்கையின் இரகசியம் என்ன? இந்த உடல் கர்மத்தை, கர்மபலனை அனுபவிப்பதற்காகவே கொடுக்கப் பட்டுள்ளது. இந்த உடலோடு வாழும் பொழுது கர்மத்தின் அடிப்படையில் தர்மத்தோடு வாழ்ந்தால் பிரம்மத்தை அடையலாம்.

**கீதை கூட சொல்கிறது:~**

தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும்பொழுது அவதாரம் எடுக்கின்றேன் என்று. தர்மத்தை நிலைநாட்டுதல் என்ற கர்மத்தை செய்வதற்காகவே பரமதத்துவமே உடலெடுத்து அவதாரமாக இறங்கி வருகின்றது. உடலோடு இருந்தாலும் அதுவும் தெய்வம் தான். படைப்புகூட, பிரகிருதி கூட "நான்" பலவாதல் என்ற சங்கல்பத்தினாலே உருவாகியது தான். பிரகிருதியிலே பிறந்த எவரும் பிரகிருதியின் தன்மைகளைச் சார்ந்தே இருக்கின்றார்கள்.

இந்தப்படைப்பிலே நடைபெறுவது, பிரகிருதியிலே நிகழும் கர்மங்கள் எல்லாம்

யார் யாருக்கு அர்ப்பணம் செய்வது என்று கேள்வி எழலாம். ஒருவனின் தன்னலத் துக்காகவா? அன்றி தன்னோடு நடமாடுபவர் களுக்காகவா? செய்யும் எந்தக் கர்மமும் எங்களைப் படைத்த, இந்தப் பிரகிருதியைப் படைத்த அதே இறைவனுக்கே, அதே இறைவனின் சந்தோஷத்திற்காகவே அர்ப்பணம் செய்யப்படவேண்டும். ஆகவே மனிதனின் முக்கிய குறிக்கோள் செய்யும் எந்தக் கர்மத்தையும் இறைவழிபாடாகவே செய்யவேண்டும் என்பதே. இதில் தான் கர்மத்தின் ரகசியம் உள்ளது.

காயத்திரி மந்திரத்தை உச்சாட னம் செய்யும் பொழுது சில கட்டுப்பாடுகள் உண்டு. காயத்திரி மந்திர சாதனையின் விளைவான மூன்றாவது நிலை தான் "விப்ரத்துவம்" எனப்படுகிறது. வேதங் களை, மந்திரங்களை சும்மா ஓதுவதில் எந்த பிரயோசனமும் இல்லை. அவற்றை விளங்கி அவற்றின் பொருளை உணர்ந்து அவற்றில் கூறியுள்ள உண்மைகளை, முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் வழிபட்டு வாழப்பழகிக் கொள்ளவேண்டும். இந்த விதமான முறையிலே தான் பிரம்மத்தை அடையலாம்.

பிரம்மம் என்பது என்ன என அறிந்து அந்த நிலையை அடையும் போதுதான் ஒருவன் பிராம்மணன் எனப்படுகிறான். பிறப்பினால்தான் ஒருவன் பிராம்மணன் என்பதில்லை. தனது செயல்களினாலேயே ஒருவன் பிராம்மணன் எனப்படலாம். பிரம்மத்தை அறிந்து, பிரம்மதத்துவத்தை அடையும் நிலையில் தான் ஒருவன் பிராம்மணன் என அழைக்கப்படலாம்.

காயத்திரி மந்திரம் பரிசுத்தமான திவ்விய மந்திரம். அநேகத்துவத்தில் ஏகத்துவத்தை காட்டுவது. பிரமதத்து வத்தைக் காண வழிவகுக்கின்றது. இது பலவாகக் காணும் எங்கள் வாழ்வையே தூய்மைப்படுத்துகிறது. உதாரணமாக, உலகிலே களிமண் உண்டு. ஆனால் களிமண்ணினாலாகிய பாத்திரங்கள் பல. பொன் ஒன்று ஆனால் ஆபரணங்கள் பல அதேபோலத்தான் ஆத்மா ஒன்றேயொன்று ஆனால் ஜீவன்கள் பல.

பால் ஒன்று ஆனால் பசுக்கள் பல. இங்கே மூன்றாவதென்று ஒன்றுமில்லை. நாமும் ரூபமும் தான் உலகில் உண்டு. பசு என்ற உருவம் காலப்போக்கில் அழிந்துவிடுகின்றது. ஆனால் பசு என்கின்ற நாமம் அழிவதில்லை. ஒரு நாமம் ஒரு உருவம். இவற்றிலுள்ள வித்தியாசம் என்னவெனில் உருவம் உருக்குலைந்து கொண்டே போகும். மறைந்து போய்விடும். ஆனால் நாமம் அப்படியல்ல, மாறாதது, குறையாதது, அழியாதது. நாமத்தினால் ஒருவரை விரைவில், இலகுவில் கண்டுபிடித்து விடலாம். அதேபோல் இறைவனை அவனது நாமத்தினால் அழைத்த மாத்திரத்திலே, உச்சரித்த மாத்திரத்திலே அவனது ஸ்வரூபம் நாமத்துக்குரிய உருவம் எம் நினைவிற்கு வருகிறது.

புகையிரத நிலையத்தின் பெயர் தெரியாமல் Ticket வாங்க முடியாது. புகையிரத நிலையத்தின் வர்ணனையைச் சொன்னாற் போல Ticket தரமாட்டார்கள். ஆகையினாலே தான் நாமம் முக்கிய மானது. உருவமல்ல.

எல்லா உருவங்களிலும் "நான்" என்ற நாமத்தை மாத்திரமே கொண்டு நடமாடும் இந்த ஒன்றேயொன்றான, ஆத்மதத்துவத்தை விளக்கி அறியவைத்து

உணரவும் வைக்கும் முக்கியமான மகிமையைக் கொண்டது காயத்திரி மந்திரம்.

இந்தப் பெண்தெய்வமாக உருவ கிக்கப்பட்ட வேதமாதா காயத்திரி எல்லா ஜீவன்களையும் பேணி, பாதுகாத்து வருபவள் ஆதலால் காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி எனவும் அழைக்கப்படுகின்றாள்.

ஒருவனின் ஆத்மதத்துவத்தை அறிய உதவும் முறையில், அவனைப் பேணும் வகையில் அவள் காயத்திரி எனவும், சாஸ்திரங்களில் கூறியுள்ளது போல் சத்யவானை சாவித்திரி பாதுகாத்ததுபோல் ஜீவன்களைப் பாதுகாக்கும் வகையில் அவள் சாவித்திரி எனவும் ஒவ்வொருவரது வாக்கையும் காப்பாற்றும் வகையில் அவள் சரஸ்வதி எனவும் அழைக்கப்படுகின்றாள்.

நீங்கள் யார் என்ற உண்மையை அறிந்ததும் நீங்கள் பிரம்மத்துடன் ஒன்றாகி விடுவீர்கள். பிரம்மமேயாகி விடுவீர்கள். இது எப்படிச் சாத்தியமாகுமென நீங்கள் கேட்கலாம். அதற்கு ஒரு சிறு உதாரணம்:-

தாலிகட்டுவதற்கு முன்பு ஒரு பெண் கணவனுக்கு அந்நியனாயிருந்தாள். தாலி கட்டியதின் பின்னர் தன் கணவனுக்கு கிடைக்கும் எதிலும் உரிமை கோரக்கூடி யவளாயும் பாதி உரிமையுடையவளாயும் உள்ளாள். அந்நியனாய் இருந்த இவளுக்கு இத்தனை உரிமை எப்போ?. எப்படி கிடைத்தது என்று கேட்டால் இதற்குக் காரணமே இந்த மஞ்சள்கயிறு தான். அதேபோலத்தான் இறைவனிடத்தில் சரணாகதி அடையும் வரையும் ஜீவன் அந்நியனாய் உள்ளான். சரணாகதி என்ற கயிறு நீங்கள் தரித்தவுடனேயே பிரம்மத் துடன் ஒன்றாகி விடுகின்றீர்கள். அதிகாரம் உடையவர்கள் ஆகின்றீர்கள். உரிமை யுடன் எதையும் கேட்கின்றீர்கள்.

இந்த நிலை உங்களுக்கு எப்போ எப்படிக் கிடைக்கும் என்றால், எப்போ நீங்கள் சரணாகதி என்ற கயிற்றைத் தரிப்பீர்கள் என்று கேட்டால், முழுச்சிரத்தை யுடன் காயத்திரி மந்திரத்தை செபித்து, செபித்து அதன் மகிமையை யறிந்து கொண்டு சாதனை, பண்ணும்போதுதான். படிப்படியாக இந்த சரணாகதி நிலையை யடையலாம். இப்படிப்பட்ட சாதனையின் போது நீங்களே அனுபவிப்பீர்கள். ஒரு திருப்தி ஏதோ எதையோ பெற்ற ஒரு ஆனந்தம் உங்களுக்கு கிடைக்கின்றது.

***சக்தி:~***

காயத்திரி மந்திரம் "ஓம் பூர் புவஸ்ஸுவஹ"- பூர் என்றால் Materiali sation (தேகம்), புவஹ என்றால் Vibration (பிராணசக்தி), ஸுவஹ என்றால் Radiation (ஆத்மா) எனது பார்வையில் பொருளோ, சக்தியோ தனிப்பட்டு, தனித்தனியாக இல்லை. பொருளே சக்தி, சக்தியே பொருள். இவை ஒன்றுக்கொன்று சார்புடை யவை. ஒன்றுக்கொன்று இசைவாக சொந்தமானவை. உண்மையில் இவ்வுல கில் தனியாக பொருள் என்ற ஒன்று எதுவும் இல்லை. அனைத்தும் சக்தியே.

முப்பெரும்தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் அனைவரும் நம்முள்ளேயேதான் நிறைந்திருக்கின்றனர், ஆகையால்த் தான் நான் (ஸ்வாமி) அடிக்கடி உங்களிடம் கூறுகிறேன். நீங்கள் நினைப்பது போல் ஒருவரல்ல, மூவர் என்று. இதுதான் பூர்புவஸ்ஸுவஹ என காயத்ரி மந்திரத்தில் எடுத்துச் சொல்கின்றனர். பூர்

என்பது பூலோகம் (பூமி). பூமி என்பது பொருட்களால் ஆனது. ஆகவே பொருட்களால் ஆன மனித உடலும், பூர் என்றே அழைக்கப்படுகின்றது. இதனை Materiali sation எனவும் அழைக்கலாம். புவஹ என்றால் பிராணசக்தி. இந்த சக்தி தான் உடலை இயக்குகின்றது. இதுவே Vibration ஸுவஹ என்பது ஞானம் Radiation. வேதங்கள் பிரக்ஞானம் பிரம்மா என அழைக்கின்றன. இந்த பிரக்ஞானம், Radiation ஐத் தவிர வேறெதுவுமில்லை. ஆகவே மனிதப்பிறவி என்பது Materiai sation, vibration and Radiation இவற்றின் ஒருங்கிணைந்த இணப்பே. இதற்காக கடவுளை நீங்கள் எங்கும் தேடவேண்டியதில்லை. உங்கள் பார்வையை உள்நோக்கித் திருப்புங்கள். அங்கே இறைவனைக் காணலாம்.

*சனாதன சாரதி சஞ்சிகையில் வெளிவந்த பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினுடைய அருளுரைகளில் இருந்து தொகுக்கப்பட்டது.*

இலக்கை நோக்கி ஜீவி புறப்பட ஆரம்பித்ததும் அது தனக்குள்ளிருந்தே திருப்தியை அடைவதுடன் ஆனந்தத்தின் கருவூலத்தை தனக்குள்ளேயே கண்டுபிடித்துவிடுகிறது. அதன் பின்னர் ஜீவியைக் கவலைக்காளாக்கும் இச்சைகள், ஆவல்கள், மயக்கங்கள், போலித்தன்மைகள், விலங்குத்தேவைகள், களியாட்டங்கள் என்பன மறைந்து விடும். சமமாகவும் ஒரே சீராயும் அனைவருள்ளும் ஆத்மா வியாபித்திருப்பதனால் ஜீவியுமே தனது மமகாரத்தை இழந்து தன்னுள் திகழும் தெய்வீகத்தகுதியில் மூழ்கிவிடுகிறது. அத்தகயவரே உண்மையான மஹாத்மா ஆவார். அவரே ஜீவன் முக்தராவார். பரிபூரணமே ஆனந்தம். சாந்தியே ஆனந்தம். விசாரணை மார்க்கத்தைக் கைவிடாதவர்கள் தெய்வ அனுக்கிரகம் அடைவார்கள். மேலும் அனுபூதியுமடைவார்கள். கனவு போன்ற உலக மயக்கங்களுக்குப்பின்னே விழங்கும் சாஸ்வதமான சத்தியத்தை என்றும் அவர்கள் நாடுவார்கள்.

ஆதாரம்:- பிறேமதாரா

*ஓம் ஸ்ரீ சாயிராம்*

# ஆத்ம சாதனைகளினூடாக மேன்மையான இறப்பை சந்தித்தவர்கள் வரிசையில்....

தாங்கொணா உடல் வருத்தத்தையும் சகித்து பொறுத்துக்கொண்டு ஆத்ம நாட்டம் மேலோங்கியிருந்த செல்வன் குலேந்திரன் தர்மேந்திரனுக்கு பல சாதனைப் பயிற்சிகளை ஸ்ரீ ஞானசேகரம் ஐயா கொடுத்து ஆத்ம உணர்வு மேலோங்கச் செய்தார். தர்மேந்திரனுடைய ஆத்ம நிலைப்பாடு அவருடைய பெற்றோருக்கும், அவருடைய சகோதரிக்கும் பெரியதொரு ஆத்ம விழிப்பை ஏற்படுத்தியது. இரண்டு தடவைகள் புட்டபர்த்தி சென்று சுவாமியிடம் நேரடி சம்பாஷனை பெற்று, அனுக்கிரகங்களையும் பெற்று வந்தார். கடைசியாக புட்டபர்த்தி சென்ற போது அவர் அங்கு தங்கியிருந்த காலங்களில் அவருடைய இறுதி மூச்சு பிரசாந்தி நிலைய வாசலில் பிரிந்தது. "அண்ணன்மாரே, தம்பிமாரே, ஆச்சிமாரே கேளீர் அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழீர்" என்ற யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடலை அடிக்கடி பாடும்படி ஐயாவிடம் கேட்பார். ஐயா பாடும் போது ஆனந்தப் பரவசமாய் இருப்பார். சாதகர்களுக்கும் தர்மேனுடைய நெருங்கிய உறவினர்களுக்கும் துன்பம் எப்படி விடுதலைக்கு வழிவகுக்கிறதென்று அமைந்த அவரது வாழ்வை ஐயா "துன்பத்தின் வித்து விடுதலை" என்ற புத்தகம் மூலம் வெளியிட்டார்.

சைவசித்தாந்த பண்டிதரும், இளைப்பாறிய அதிபருமாகிய திரு. இராசலிங்கம், ஐயாவின் சத்சங்கம் சாதனைகளில் ஒழுங்காக பங்குபற்றிய சாதகர். இவர் சைவ சித்தாந்த நெறிமுறைகளை முற்றும் கற்று பாண்டித்தியம் பெற்றவர். பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவினுடைய கருத்துகளை ஞானசேகரம் ஐயா தெளிவு படுத்திய ஒழுங்கு முறையில் ஈர்க்கப்பட்டு பூரணமாக பகவானை ஏற்றுக்கொண்டு தனது இறுதிக் காலத்தை சாந்தியாகவும், ஆனந்தமாகவும் கழித்தார். அவரது துணைவியாரும் அவ்வாறே. ஒரு நாள் பண்டிதர் இராசலிங்கம் ஐயாவைப் பார்த்து, "ஐயா! இப்ப ஒரு பத்து வருடங்களுக்கு முன்னம் உங்களைச் சந்தித்திருந்தால் இந்த வழியில் இன்னும் முன்னேற்றம் அடைந்திருப்பேன்" என்று கூற, ஐயா கூறினார், "இப்ப ஒன்றும் காலம் கடந்து விடவில்லை, சுவாமி எல்லாம் சரியாகத் தான் செய்கின்றார்" என்று. இது போன்று ஒரு நாள் திருமதி. பாக்கியம் இராசலிங்கம் தான் பங்குபற்றி வந்த திருநீற்றுப் பதிக சாதனையின் மகிமையை அனுபவித்து "ஐயா நீங்கள் எங்கள் குலதெய்வம்" என்று கூறினார். இவர்களது இறுதி மூச்சு நிற்கும் நேரம் ஐயாவின் திருக்கரங்களால் பகவானின் விபூதி பூசிய சம்பவம் அந்த சந்தர்ப்பத்தில் ஆத்ம அனுபவம் மேலோங்கி யிருந்ததை அனுபவிக்க முடிந்தது.

திரு. வரதராஜன் என்பவர் அரசாங்க சேவையில் ஓர் நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் ஐயாவின் அமரத்துவத்தின் பின்னர் சாயி

நவரட்ணராஜா நிர்மலா குடும்பத்தினருடன் அவரது துணைவியார் திருமதி. ஞானம் வரதராஜன் மூலமாக சித்தன்கேணி சாதனைகளுக்கு அறிமுகமானார். சுழிபுரத்திலிருந்து ஒழுங்காக சித்தன்கேணி சாதனை களிலும், தாவடி சாதனைகளிலும் பங்குபற்றி வந்தவர்கள். திரு. வரதராஜன் சாதனைக்கு வரத்தொடங்கியதிலிருந்து படிப்படியாக மாமிசம் புசித்தல், புகை பிடித்தல் போன்றவற்றை விட்டதுடன் அவர் தொடர்புபட்டிருந்த பொதுநல அமைப்புக் களில் அங்கம் வகித்திருந்த முக்கிய பதவிகளை விட்டு விலகி பூரணமாக சுவாமியினுடைய வழியில் ஒழுங்காக சாதனைகளிலும் தவறாது குறித்த நேரத்தில் பங்குபற்றி வந்தார். உயர்ந்த ஆன்மீக நெறிகளினூடாகவும், சாதனைகளி னூடாகவும் பெறுகின்ற ஆத்ம அனுபவத்திற்கு தடையாக இருக்கின்ற, எதனையும் விடலாம் என்று அனுபவமாக காட்டியவர். திரு. வரதராஜன் அடிக்கடி கூறுவார், ஞானசேகரம் ஐயா எப்படியொரு காரியத்தை செய்து வைத்திருக்கிறார் என்று சொல்லிச் சொல்லி ஆனந்தப்படுவார். இவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இந்தியாவுக்குச் சென்று சிகிச்சை பெற்று வரும் காலத்திலும் சுவாமியிடம் சென்று ஆசிகளைப் பெற்றுக் கொண்டார். சுவாமிகளின் நினைவு அவருக்கு எந்த நேரமும் இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக அனுபவங்களை கடிதங்களாக எழுதிக்கொண்டேயிருப்பார். கடிதங்களில் அவருடைய ஆனந்தம் வெளிப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும். தொலைபேசியிலும் ஆன்மீக அனுபவங்களை கதைத்து ஆனந்தப்படுவார். சாதனை நடக்கும் நாட்களை நினைவு கூர்ந்து இன்று சாதனை, இப்ப தொடங்குகிறது, இப்போ பஜனை நடக்கிறது, இப்போ சத்சங்கம் நடக்கிறது என்று அதே நினைவுடனிருந்து அந்த சாந்தியில் அவரது இறுதி மூச்சு சாயிராம் என்ற சொல்லுடன் சாயியுடன் சங்கமித்தது. பிள்ளைகள் வெளிநாடுகளில் சிறப்பாக இருந்தபோதிலும் திருமதி. ஞானம் வரதராஜன் இந்த சாயி குடும்பங்களோடு சாதனைகளில் கலந்து கொள்ளவேணும் என்ற உயரிய நோக்கோடு ஒழுங்காகவும் ஆனந்தமாகவும் சாதனைகளுக்கு வந்து போகிறார்.

ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாமொன்றை ஐயா நடாத்திய போது அதில் பங்குபற்றிய ஆசிரியர் ஸ்ரீ சோமஸ்கந்தன் அவர்கள் ஐயாவின் விடுதலைக்குப் பின் ஒழுங்காக எல்லா சாதனைகளிலும் பங்குபற்றி வரத்தொடங்கினார். மாமிசம் புசித்தல், புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்களிலிருந்து படிப்படியாக விடுபட்டு தனது ஆசிரியத் தொழிலிலும் பிள்ளைகளுக்கு கற்பித்தலோடு உயர்ந்த சீலங்களையும், நல்லொழுக் கங்களையும் சொல்லிக் கொடுத்து தனது தொழிலையும் வழிபாடாக்கிக் கொண்டார். தான் பெறுகின்ற ஆத்ம அனுபவங்களையும், சாந்தியான வாழ்வையும் தனது துணைவியாரும் அனுபவிக்க வேண்டுமென்று பெருவிருப்புக் கொண்டிருந்தார். "ஆத்ம தாகம் கொண்ட சாதகர்களுக்காக என்னுடைய அனுக்கிரகத்தை எந்த வழியிலும் செலுத்தி அவர்களுக்கு ஈடேற்றங்களைக் கொடுப்பேன்" என்று கஸ்தூரியவர்கள் எழுதிய சத்தியம், சிவம், சுந்தரம் என்ற புத்தகத்தில் பகவான் கூறியிருக்கிறார். சோமஸ்கந்தனது பிரார்த்தனை பழய கொள்கைகளில் ஊறிப்போறிருந்த திருமதி. மகாலட்சுமி சோமஸ்கந்தனை சாயி இல்லத்துக்கு ஈர்த்து பூரண சரணாகதி அடையச் செய்து, உயர்மனமாற்றம் பெற வைத்து இருவரும் ஒழுங்காக சாதனைகளில் பங்குபற்றி வரலாயினர்.

ஸ்ரீ சோமஸ்கந்தன் அதிகாலை நடைபெறுகிற சாதனைகளுக்கு நேரம் தவறாமல் ஒழுங்காக வருவார். ஒரு நாள் அதிகாலை ஓம்கார சாதனையின் போது ஓம்கார நாதத்தில் ஸ்ரீ சோமஸ்கந்தன் பூரணமாக லயப்பட்டு விட்டார். அவருக்குப் பக்கத்திலிருந்த சாயி துரைராஜா அவரை தன்மடியில் சாய்த்துக் கொண்டார். அந்த நேரம் சாதனையில் இருந்த சாயி குகஞானி பகவானின் விபூதிப் பிரசாதத்தை அவருக்கு நெற்றியில் பூசிவிட்டார். ஸ்ரீ சோமஸ்கந்தன் அமரத்துவம் எய்திய செய்தியை சாயி குகஞானி திருமதி சோமஸ்கந்தனிடம் சென்று பவித்திரமாக அவருக்கு ஏற்பட்ட உயர்ந்த நிலையை பக்குவமாக கூறிய தற்கு இணங்க திருமதி. சோமஸ்கந்தன் தனது ஆத்ம நிலைப்பாட்டில் அதனை இனங்கண்டு சாந்தி அடைந்தார். அந்த சாந்தியில் தன்னை ஈடுபடுத்தி தொடர்ந்தும் சாதனைகளில் நேரம் தவறாது ஒழுங்காகப் பங்கு பற்றி வரலானார். அமரத்துவம் எய்திய தனது கணவர் எப்படித் தன்னோடு இருக்கிறார் என்ற சூட்சும அனுபவங்களை பவித்திரமாக தனக்கு சரி என்று பட்டவர்களுக்குச் சொல்லி வருவார்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ பொன்னம்பலம் அவர்கள் ஒழுங்காக சித்தன்கேணி சாதனைகளிலும், முக்கிய தினங்களில் தாவடி சாதனை களிலும் பங்குபற்றி வருவார். ஆத்மீகக் கூர்மையும், நல்ல நிலைப்பாடும் கொண்டி ருந்த இவர் சுவாமியின் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். ஞானசேகரம் ஐயாவின் வழிநடத்தலை எண்ணி ஆனந்தப்படுவார். "சேவகனாக இருப்பவரே தலைவராகலாம்" என்று சுவாமி சேவாதள தொண்டர்களுக்கு வழங்கிய அருளுரையில் கூறியிருக்கிறார். அந்தக் கூற்றுக்கு ஒரு உதாரணமாக ஸ்ரீ பொன்னம்பலத்தை எடுத்துக் கொள்ளலாம். இவர் சித்தன்கேணி சத்திய சாயி சேவா சமித்தியின் தலைவராக இருந்து ஒரு உண்மையான பக்தனுக்குரிய இலட்சணங் களை வெளிப்படுத்தினார். அவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக சாதனை களுக்கு வருவது குறைந்திருந்த போதிலும் வீட்டில் ஒழுங்காக சாதனை செய்து, பஜனை செய்து சுகவீனத்தின் தாக்கம் தெரியாத அளவிற்கு நல்ல ஆத்ம நிலைப்பாட்டிலிருப்பார். சுவாமியின் நாமத்தி லும் காயத்திரி மந்திரத்திலும் அளவுகடந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். அவரால் கதைக்க முடியாத நிலையில் இருந்த போதும், கதைக்க முடியாமல் இருக்கிறதே என்ற சலனங்கள் ஏதுமின்றி பஜனைப் பாடல்களை ஒழுங்காகப் பாடும் அவரு டைய உயர்ந்த பக்தியை காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு இலேசான ஒளிவீசும் பார்வையுடன் ஆன்மீக தேஜஸ்உடன் காணப்பட்டார். அவருடைய இறுதிமூச்சு சுவாமியினுடைய நாமத்தோடு சங்கமித்தது.

ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோ கத்தர் ஸ்ரீ மகாலிங்கம் அவர்கள் ஞாயிற்றுக் கிழமை சாதனைகளிலும் இருபத்து ஒரு நாள் காலை சாதனைகளிலும் நேரம் தவறாது ஒழுங்காகப் பங்குபற்றி வருபவர். இவர் எப்பவும் தன்னை ஒரு ஆத்ம நிலைப்பாட்டில் சாந்தியாகவும், செந்தளிப் பாகவும் வைத்துக் கொள்பவர். இரண்டு நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சுவாமியினுடைய சிந்தனையிலேயே தன்னை விடுவித்துக் கொண்டார்.

தன்னை அறியும் சாதனைகளில் தம்மை ஈடுபட வைத்திருக்கின்ற சாதகர்களுக்கு எப்படி சுவாமியினுடைய அனுக்கிரகம் அவ்வப்போது கிடைக்கிறது. சுவாமியே குருவாக வந்து வழிப்படுத்து கின்றார் என்ற அனுபவத்தை எப்படிக் கொடுக்கிறார். உலகம் துன்பமென்று

கருதுகின்ற காரியங்களில் ஆத்ம சாதகர்கள் அத்துன்பத்தை எப்படி தெய்வீகத்துடன் இணைந்து துன்பமில்லாத நிலைப்பாட்டை தெய்வீகத்தினால் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அனுபவமாக காண்கிறார்கள். இந்த உயர்ந்த வழியில் குடும்பம் குடும்பமாக ஈடுபட்டு துன்பமில்லாத, கவலையில்லாத, பயமில்லாத, சாந்தியான பெருவாழ்வில் சத்சங்கத்தில் இணைந்து ஈடுபட்டு வருகிறார்கள். பகவான் சொல்வது போல் இது அவர்களுக்கு மட்டுமல்ல இந்த அதிர்வு உலகத்துக்கே சாந்தியைக் கொடுக்கின்றது. இந்த இடத்தில் ஐயா கூறிய உண்மைச் சம்பவமொன்றை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு நாள் சாயி ஞானசேகரம் ஐயா 1958ஆம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ரத்மலானையிலிருந்து ஒரு விமானத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு யாழ்ப்பாணம் வந்திறங்குகிறார். வந்ததும் யோகர் சுவாமிகளிடம் ஆச்சிரமத்திற்கு செல்கிறார். அங்கே சுவாமிகள், "வாரும் வாரும் உம்மைப்போன்ற ஒருவரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு ஒரு புத்தகத்தைக்காட்டி "அந்த புத்தருடைய புத்தகத்தை எடுத்து வாரும்" என்று சொல்லி அந்தப் புத்தகத்தை வாசிக்குமாறு பணிக்க, ஐயாவும் அரைமணி நேரத்திற்கு மேலாக சுவாமிகளுக்கு கேட்கக் கூடியதாக வாசித்துக் கொண்டிருக்கையில் சுவாமிகள், "நிப்பாட்டும் நிப்பாட்டும்" என்று பணித்துவிட்டு "இப்ப நாங்கள் என்ன செய்தனாங்கள்?" என்று கேட்டுவிட்டு "இந்த இடத்தில் ஒரு சாந்தியை உருவாக்கியிருக்கிறோம் இது பரவிப்பரவி இந்தத்தேசமெல்லாம் பிடிக்கும்" என்று சொன்னாராம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

ஓ... பர்த்திபுரிவாழ் சாயி
உந்தன் மகிமை சொல்லி முடியாது
உந்தன் மகிமை சொல்லிடங்காது
(ஓ... பர்த்தி...)

தர்ம உத்தாரண சாந்திப்ராதாதா
சர்வக்ஞ சர்வ வல்லப நாதா
ஜெகத்பாலன பக்திவிலாசா
சூரிய ப்ரம்ம ஞானப்பிரகாசா
(உந்தன் மகிமை)
(ஓ... பர்த்தி...)

நித்திய வஸ்துவே நீ நான் அவனே
சத்தியத்தின் தாதா ப்ரேமையின் மாதா
பக்தர்கட்கெல்லாம் ப்ராணனானாய்
மன சஞ்சல துக்க வினாசா
(உந்தன் மகிமை)
(ஓ... பர்த்தி...)

(இப்பாடல் சாயி ஞானசேகரம் ஐயாவினால் இயற்றப்பட்டு இசையமைக்கப்பட்டு பாடப்பட்டது.)

## ஸ்ரீ ஞானசேகரம் ஐயா அவர்கள் எழுதிவந்த தினசரி நாட்குறிப்பிலிருந்து (Diary) எடுக்கப்பட்ட சில முக்கியமான அனுபவங்கள்

### 24.08.1988

சாயீஸ்வரா! எல்லையில்லா மகத் துவமே, தவறாத குரு கடாட்சமே இன்று 1½ மணித்தியால நேரத்திற்கு மேல் என்ன அற்புத தரிசனம் தந்தாய். ஐயனே! இதை நிலை நிற்க என்றும் இந்த தரிசனத்தையே எங்குங்காண அருள்வீர். உண்மையிது, காண்பதும், காண்பானும் இல்லாத தரிசனமே. எப்படி நான் நினைக்கும் ஒவ்வொரு ருபமும், நினைவும் ஒன்றுமில்லா ததாகி இது இறைவனேயன்றி வேறல்ல என்ற உண்மையை நிலைநிறுத்தி என்னை, ஒன்றுமில்லாத ஒரு தரிசனத்தை நான் நினைத்த எல்லாப் பொருளிலும், எண்ணத்திலும் அந்த தேஜோமயமானதும், ஒன்றுமில்லாததுமான தரிசனத்தைத் தந்தீர். தொடர்ந்து இடைமறிக்காது தந்தீர். என்னுடைய அடிமனதில் இருந்த என்னு டைய இந்த விருப்பத்தை என் உள்ளத்தின் ஆழத்தில் உறையும் இருதயவாசியாகிய நீர் கண்டு இரங்கி இத்தரிசனம் தந்தீர். மறக்கமுடியாத உருவங்கள் அதை சுவாமி என்று பார்க்க பார்ப்பவனும் அவன் என்று பார்க்க, அந்த உருவத் தோற்றங்கள் ஒன்றுமற்று, ஒரு தேஜோமயமாகிக் கொண்டே இருந்தது. ஒரு மெல்லிய ஒளியில் நான் என்றதும் மறைந்து போனதை எனக்குக் காட்டினீர். இதுதான் முடிவான தரிசனமென்று காணவைத்தீர். எல்லா ஆசா, பாசங்களும் நீங்கும் இடத்தையும் காட்டினீர். இது நிரந்தரமாய் இனி நிற்க துணை புரிவீர். அதனால் எம் அடியார் கூட்டம் என்னைப் போல் அனுக்கிரகம் பெற முடியும். அவர்களுக்கு இந்த அற்புதத் தொண்டை செய்ய வாய்ப்புக் கிடைக்கும். சாயீஸ்வரா! எப்படி இதற்கு நன்றி சொல்வேன். நன்றியும் நீரல்லவோ.

### 12.09.1988

சாயிதேவா! உம்முடைய கருணை பொழிகிறது, தெரிகிறது. இது நிரந்தரமாய் நிலைக்க அருள்வீர். புத்தியை எது பிரகாசிக்கச் செய்கின்றதோ என்ற தியானம் சரியாகிறதால் அதை நிலைப்படுத்தி வளர்த்தருள்வீர். நான் பரிசுத்தப்பட வேண்டும். சில வெளிப்புகளை உண்டாக்கி யிருக்கின்றீர். ஞானசம்பந்தருடைய அனுக்கிர கத்தையும், திருநீற்றுப்பதிகத்தைப் படிப்ப தில் சிறந்த ஒருமைப்பாடும் கிடைக்க அருள் புரிந்தீர். இதனால் ஆத்மவெளிப்பு பெருமளவு தோன்றியிருக்கின்றது போலும். சுவாமி இது நிலைப்பட வேண்டும். புன்மை தவிர்க்கப்பட வேண்டும். போதம் வந்து நிலைக்க வேண்டும். அவதார சற்குருவே உமது மகத்துவம் முழுமையாய் என் நெஞ்சில் நிறைய வேண்டும். என்னை அண்டியவர்கள் பரிசுத்தப்பட்டு ஆத்மவழியில் உயர வேண்டும்.

### 26.02.1989

சாயீஸ்வரா! பரப்பிரம்மமே என் உள்ளத்திலிருந்து ஒளிர்கிறீர். நேற்று திரு. மகேஸ்வரன் வீட்டிலிருந்து இரவு 9.00

மணிவரை பஜகோவிந்தம் பாடியபின் சூட்சுமமான ஒரு சுகம் இருதயத்தில் தோன்றியது. நிலையானது. அது உடலி லும் அதனால் சுகமாச்சு. ஐயனே! இன்றிலிருந்து செய்யப்போகும் சாதனை மக்களை ஆத்மவழிக்கு தட்டி எழுப்பி நிலைப்படுத்தி அவர்கள் ஆன்மீகத் தகுதி பெற செய்ய வேண்டும். நீர் அதை நன்றாகச் செய்யும்.


## 01.06.1989

பரம கருணாகரி சத்திய சாயி உன் கருணை தாங்க முடியாது அளப்பரியதாய் வருகின்றது. சூட்சுமமான நிலையில் தியானத்தில் வைத்திருக்கின்றாய். என்னை மறந்து போகும் இடத்தில் வைத்திருந்ததால் நேரமும் தெரியவில்லை. வில்லங்க மில்லாமலே நீ அந்த இடத்திற்கு இட்டு செல்கிறாய். ஐயனே! இந்த உண்மையை அறிய வைத்திருக்கிறாய். ஐயனே! பிரபுவே! இந் நேரம் உன்னை அதாவது எழுதும் பொழுதுதான் என்னையும் சரியான வழியில் நிறுத்தி என்னைச் சேர்ந்தவரையும் வழிப்படுத்தி ஆனந்தப்பட வைக்கும் உன் தகைமை என் என்பது. ஐயனே இந்த நிலை இந்த உண்மையான நான் அற்ற நிலை யில், என்னை நிறுத்தி விட வேண்டுகிறேன் சுவாமி. உமது பெருமையை நினைத்து முழுமையாக விரிந்த நல்லடியார்கள் மெய்மறந்து ஆனந்தித்து தங்கள், தங்கள் மலங்களை அழிக்க, பாட அருள் புரிவீர். உமது அவதார கைங்கரியமே இது. சாயி பரமேஸ்வரி உன் அருட்கருணை எங்கும் பொழிய வேண்டும்.

*"ஜெய் சாயிராம்"*

"அர்ஜுனா! காணும் எல்லாப் பொருள்களிலும் இருப்பது ஒன்றுதான். அந்த ஒன்றுதான் அனைத்துமே என்ற உணர்வு எப்போதும் உன்னிடம் இருக்கட்டும். இந்த ஒருமைப்பாட்டிலிருந்தும் சமத்துவத்திலிருந்தும் புலன்கள் உன்னைப் பிரித்துவிட அனுமதிக்காதே; உனது இதயம், இன்பம் துன்பம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றிலிருந்து விடுபட்டு இருக்கட்டும் போற்றுதல், தூற்றுதலால்ப் பாதிக்கப்படாமல்; அனைவரையும் சமமாக நடத்து. படைப்பிலுள்ள ஒவ்வொரு பொருளும் தெய்வீகத்தின் வெளிப்பாடே என்பதில் உனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கட்டும்." எனது கட்டளைகளை நடைமுறைப்படுத்தி ஸ்திதப்பிரக்ஞனாவாயாக உன்னதமான ஞானமும் உனக்குக்கிட்டிவிடும்.

-கீதைப்பேருரைகளிலிருந்து



நீ எங்கு சென்றாலும் – உன்
கடமையைச் செய்,
உன்னுள் இருந்து நான்
வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன் – என்பதை
உணர்ந்து கொள்.
ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் – நான்
உன்னுடன் இருக்கின்றேன்.
வர இருக்கும் வருடங்களில் என்னைப்
பல வடிவங்களில் உன்னால் உணரமுடியும்.
நீ என்னுடையவன்.
எனக்கு மிகவும் நெருக்கமானவன்.
கண்இமைகள் விழியைக்
காப்பது போல – நான்
உன்னைக் காப்பாற்றுவேன்.
நான் உன்னை என்றும் விட்டு
விலகமாட்டேன். – நீயும்
என்னைவிட்டு விலகமுடியாது.
இந்த நிமிடத்தில் இருந்து நீயும் – எதையும்
எதிர்பார்த்து செயல்படாதே!
மாறா அன்புடன் – உன்
கடமையைச் செய்!
எல்லாவற்றிலும் இறைவனைக்
காணக் கற்றுக்கொள்.
பொறுமையுடன் இரு
சரியான நேரத்தில் உனக்கு
எல்லாம் அளிக்கப்படும்.
மகிழ்ச்சியாய் இரு.
எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்.
எது நடந்தாலும்
எதை அனுபவித்தாலும் – என்
சங்கல்பத்தினாலேயே நடைபெறுகிறது
என்பதைப் புரிந்து கொள்!
நான் இவ்வுலகிற்கு வந்துள்ள
அவதார நோக்கத்தைத்
தடுத்து நிறுத்தவோ, தாமதப்படுத்தவோ
எந்த சக்தியாலும் முடியாது.
கண்முன்னே விரிய இருக்கும்
பொற்காலத்தில்
புனித ஆத்மாவாகிய நீ
ஆற்றவேண்டிய பணிகள் இருக்கின்றன.
அதைப் புரிந்து கொள்.

– பாபா

Harikanan Printers, 424,K.K.S Road, Jaffna. T.P:021-2222717